

ஸ்ரீராமஜெயம்

# இரணியநாடகம்.

விநாயகர் துதி.

வெண்பா-இ-ம்-சங்கராபரணம்

உலகுதனைப் புனைந்தழிக்கும் வானவருக்காயதூணில்
இலகுநரசிம்மத் திருப்பதத்தினை — சலிகையுடை
மைந்தன்பிரகலாதன் மாகதையைக்கன்பானதனைத்
தந்திமுகத் தைந்துகரத்தாள்

விருத்தம்-இ-ம்-கலியாணி

திருவளர்மணிசேர்மார்பன் திருவடிதலைமேற்கொண்டு
பிரகலாதனன்றன்கதைப் பெருமையைப்படியேன்பாட
வரிமுலைக்குழந்தைச்செவ்வாய் மலைமகளீன்றமுகக்கண்
ணிருபதத்தொருகொம்பனை இணையடிகாப்பதாமே

விருத்தம்-இ-ம்-தோடி

அருமறைமுடிவுரண்ட அருள்பிரகலாதனென்னும்
பெரியவன்கதையைப்பாட பெறுமசடகோபிஞிழும்
வருணமாபுரியில்வாழும் மகரிமுத்தத்தோர்பெம்மான்
ஒருமகன்வெள்ளைப்பிள்ளை யுப்பதாளப்பணிகுவோமே

விருத்தம்-இ-ம்-மோகனம்

சீர்வளர்துளபமாயன் செழும்பதத்தினைப்போற்றும்
பேர்வளர்பிரகலாதன் பெருமைநாடகத்தைப்பாட
தாரணிபுகழ்ந்துபோற்றும் தருமசல்லூரில்வாழும்
வாரணமுகஞ்சேர்ந்த மணிக்குவன்மலர்த்தாள்காப்பே

விருத்தம்-இ-ம்-காம்போதி

திருவருள்தழைத்துநன்றாய் திங்கள்மும்மாரிபெய்து
அருமறைவேதவேள்வி மறையினோர்மிக்கச்செல்வம்

# இரணிய நாடகம்

பெருமிகுஞ்சாரங் கன்னிற் பிரியமாய்ப்பாரந்தமூர்த்திக
கரிமுகமுடையசெல்வக் கணபதிபாதம்போற்றி

சிவன்துதி-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி

ஆதிநூல்மறையெல்லாம்மறிவுமாறுளேபோதம்
நீதிசேர்பிரகலாதனென்னுமெய்ப்புகழ்தனைப்பாட
தாதவிழ்கொன்றைவேணி சதாசிவமூலா
பாதமும்அமுர்தவல்லி பங்கயம்பணிகுவோமே

## திருமால்துதி.

போற்றிப்பத்திருத்தம்

நாரணாபோற்றிபோற்றி நான்மறைப்பொருளேபோற்றி
காரணக்குருவாய்வந்தென் கவலைதீர்ப்பாய்போற்றி
வாரணந்தன்னைக்காத்த மாதவாபோற்றிபோற்றி
சீரணிந்திறங்கிவாழும் ஸ்ரீரங்கநாதாபோற்றி
வாமனரூபாபோற்றி மணிமச்சகூர்மாபோற்றி
ராமனேராமாபோற்றி நற்பதந்தருவாய்போற்றி
காமனையீன்றாய்போற்றி கபடநாடகனேபோற்றி
சேமமாயென்னையாளும் ஸ்ரீரங்கநாதாபோற்றி
செங்கண்மாலரியேபோற்றி திருமகள்கொழுநாபோற்றி
சங்கணிகரத்தாய்போற்றி தரணியையளந்தாய்போற்றி
இங்கெனக்கருள்வாய்போற்றி யெந்தையேபோற்றிபோற்றி
திங்கள்சேர்வரதாபோற்றி ஸ்ரீரங்கநாதாபோற்றி
அகலிகைக்கருள்வாய்போற்றி யாகசனைவதைத்தாய்போற்றி
முகினிறத்தோனேபோற்றி மூர்த்தியேபோற்றிராச
மகனெனவந்தாய்போற்றி மாயசெவ்வாயாபோற்றி
ஜெகமுண்டநாதாபோற்றி ஸ்ரீரங்கநாதாபோற்றி
பஞ்சவர்தூதாபோற்றி பாருலகளந்தாய்போற்றி
வஞ்சனைதீர்ப்பாய்போற்றி வாலியைவதைத்தாய்போற்றி
தஞ்சமென்றோர்க்காக்குஞ் சாரங்கபாணிபோற்றி
செஞ்சிலைக்கரத்தாய்போற்றி ஸ்ரீரங்கநாதாபோற்றி
அரிரகுராமாபோற்றி அடியவர்க்கெளியாய்போற்றி
சரிதனைக்காத்தாய்போற்றி சஞ்சனைவதைத்தாய்போற்றி
விகடற்றுயின்றாய்போற்றி விளங்கனியெறிந்தாய்போற்றி
செருவினைவென்றாய்போற்றி ஸ்ரீரங்கநாதாபோற்றி
மாயனேபோற்றிபோற்றி வரமதுதருவாய்போற்றி
ஆயனேபோற்றிபோற்றி அடியனுக்கருள்மிக்கொண்டு
தாயனேவருவாய்போற்றி தசரதராஜன்றன்
சேயனேபோற்றிபோற்றி ஸ்ரீரங்கநாதாபோற்றி

எந்தையேபோற்றிபோற்றி யிமையவர்க்கரசேபோற்றி
சிந்தையிற்குடியாய்கொண்ட செல்வமேபோற்றிபோற்றி
..ந்தம்வேராறுப்பாய்போற்றி பரப்பிரம்மவடிவேபோற்றி
..க்கிருமார்மாபோற்றி ஸ்ரீரங்கநாதர்போற்றி
..த்தனிமார்பாபோற்றி மூவுலகாக்தாய்போற்றி
இத்தலம்பின்றாய்போற்றி யேழைபங்காளாபோற்றி
பத்தர்கட்கரசேபோற்றிப் பாசமேவேரறுப்பாய்போற்றி
சித்தம்வைத்தென்னையாளும் ஸ்ரீரங்கநாதாபோற்றி
இருவினை துலைப்பாய்போற்றி வேகமாணவனேபோற்றி
இருவொருகருடனேறுந் தேவனேபோற்றிபுன்பா
வுருகிபாலுணாத்தசோதர மூலகளத்தவனேபோற்றி
திருவடியைனக்குநல்கும் ஸ்ரீரங்கநாதாபோற்றி

தாயார்துதி-கலித்துறை

தாயேயுனையன்றியெந்தனக்கோர்துணைசற்றுமில்லை
நீயேமனுவொன்றுந்தந்தருள்வாய்ஷ்டலட்சுமியே
சேயேனையாளவும்வேங்கடமாலுடன்சேதிசொல்லி
மாயாமற்காத்தருள்வா யலர்மேன்மங்கைமாமகளே

கலைமகள்துதி-விருத்தம்-இ-ம்-தோடி

அண்டர்நாயகனைத்தூணி லாயுருவாயழைத்த
தொண்டனும்பிரகலாதன் தொகுத்திடுங்கதையைப்பாட
வண்டலாபுனையுஞ்செல்வி மனத்திலும்வாக்கிலின்று
கண்டருள்மொழியும்வேதக் கலைமகள்காப்பதாமே

ஆழ்வார்கள்வணக்கம் விருத்தம்-இ-ம்-பந்துவராளி

இருநிலமன்னர்போற்று மிரணியனீன்றசெல்வன்
பெருமைசேர்பிரகலாதன்பெரும்புகழ்க்கதையைப்பாடத்
திருமறைநான்குஞான செந்தமிழ்புனைந்துப்பாடி
அருள்தரும்பனிரண்டாழ்வா ரடியிணைக்காப்பதாமே

விநாயகர்வருகிற

தருவு-இ-ம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி

பல்லவி

கணபதிராயர்நீரோ-கருணைமிகும்-கணபதிராயர்நீரோ

சரணங்கள்

கணபதிராயர்நீரோகடவுள்குமாரர்நீரோ
குணமுடன் அன்பர்பங்கில்கூத்தாடும்பிள்ளைநீரோ (கண
வேழமுகத்தானீரோ வேதப்பொருளுநீரோ
ஏழைக்கிரங்குவீரோயெங்கும் நிறைந்தவனீரோ (கண

# இராமநாடகம்

அஞ்சுகாத்தோனீரோ அல்லல்வினை தீர்ப்பீரோ
தஞ்சமென்றடைந்தோரைத் திறமாகத் தருள்செய்வீரோ (கண)
வெற்றிப்பெற்றவர்சீரோ வெகுசன இன்பமருள்வீரோ
ஒற்றைக்கொம்பானவரோ போற்றுமருள்வீரோ

தோடையம்-இ-ம்-நாட்டை-ஆதிதாளம்

ஸ்ரீதரகோவிந்த தேவதேவேசா
சீதலாவை குசலவாசனே முகுந்தா ஜெயஜெய
பச்சைமால் நாராயண மாதவா
வற்சலசிவசங்கர தாரகனைவதை ஜெயஜெய
பரசுராமராமபலபத்திர ஜெயராம
வருகிருஷ்ணபாதசமவர கிருஷ்ணஜெய ஜெயஜெய
பக்தஜனபரிபால பராக்ரம விசால
சித்திரமணிகோபால திருமாலோலா ஜெயஜெய
அருணசிதாமபா நகளங்க மணிதாரா
கருணாகோதண்டகாவச தேவகுமாரா ஜெயஜெய

மங்களம்-இ-ம்-பந்துவராளி ஆதிதாளம்

மங்களமே செயமங்களம்
மங்களம் ஸ்ரீராமமாதவனுக்கும்
மங்களம் கோவிந்தையனுக்கும் (மங்களம்)
பங்கயக்கண்ணனுக்கும் பணிமுகில்வண்ணனுக்கும்
அங்கஜனைப்பெற்ற ஐயனுக்கும் (மங்களம்)
சச்சிதானந்தனுக்கும் சர்வலோகேசனுக்கும்
அச்சுதானந்தனுக்கும் அமலனுக்கும் (மங்களம்)
ஸ்ரீதேவியாருக்கும் தேவாதிதேவனுக்கும்
பூதேவிபோகவிற் புருஷனுக்கும் (மங்களம்)

காசிபர்சீஷர்வருகிற

பொதுவிருத்தம்-இ-ம்-மத்தியமாவதி

பரிசிலைகாசிபர்க்கு பண்புடன் இருந்தபாலன்
தருமதேவனைச்சொப்பான தலத்தினிலங்குத்தோன்மிக்க
குருமுனார்த்தமதாயிந்தக் குவலயந்தனில் நிறைந்த
அருமறைக்காசிபர்க்கு அம்சிசிஷர் வந்தார்

தரு-இ-ம்-கல்யாணி-தாளம்-ஆதி

பல்லவி

காசிபர்சிஷ்ருமாங்களே அரசிவிசிவினைநீத்தே
பஞ்செய்யும் காசிபர்சீஷர்மார்களே

சரணம்

கடும்டாணிசிலபதமைத்து இசெய்யும் (காசிபர)

கரமதில்மழுவணி பரமனடிதுதிசெய் (காசிபர்)
பலகமலவேதியன்னடியிணைத்தனைத்தொழும் (காசிபர்)
தவமதுசெயசெபமணியுடன்காவியணி (காசிபர்)
களித்திடவுலகினையளித்திடதவஞ்செய்யும் (காசிபர்)

சிஷர்சொல் வசனம்

அடா தம்பி தவசிரோன்பணிவேன் அண்ணே தாசமாமணி நீம து ஐயா தவஞ்செய்யப்போகிறராம் அதற்குநாம் நல்லஇடமாய்ப் பார்க்கவந்தோமே இவ்விடத்தில் மிருகமெல்லாம் நம்மைகண்ட மாத்திரத்திலே வேடனைக்கண்ட மானதுபோலும் மெரளவுருளப்பார்த்து பசபசென்று முழிக்குறார்கள் பாருந்தம்பி ஆம் ஆம் ஆமடா அண்ணே தாசமாமணி அப்படியே தானிருக்குறார்கள் இவர்களையெல்லாஞ் சளசளவென்று பேசாமலிருக்கச்சொல்லண்ணே

பொதுவிருத்தம்-இ-ம்-பைரவி

மூலமெய்ப்பொருளதாகி முனைத்தெழும்பெரியமாயன்
சாலவேவிளங்குநாபித் தாமறைமலரோனின்றச்
சிலனும்பரிசிபெற்றச் சேயனுகிமேலாங்
காலமூன்றுணர்ந்தோனந்தக் காசிபனெனபாமாதோ

வசனம்

ஸ்ரீமன்னாராயணர் தன்னுடைய நாபிக்கமலத்திலேபிரம்மவேதனைப்பெற்றார் அந்தப் பிரம்மதேவன் பரிசிவமகாரிஷியைப்பெற்றார் அந்தப் பரிசிவமகாரிஷியானவர் காசிபமகாரிஷியைப்பெற்றார்

பொதுவிருத்தம்-இ-ம்-தோடி

சிறுவிதியமைத்தமாதர் திதிதனும்அதிதிசாமை
கறுநுதல்விளைமிரட்டை நாடுதாம்பிரையேகாட்டை
மறுவிழிசுரபிக்குரோத வசமுனிசுரசைமாதைக்
கறுவெழில்திமியென்பாரைக் காசிபர்மணஞ்செய்தாரே

வசனம்

சிறுவிதியென்னும் தவிசப் பிர்மாவின்னுடைய பெண்கள் திதியுந்தனும் அதிதியும் சாமையுங்விளையும் மிறட்டையும் தாம்பிறையுங்காட்டையும் சுரபியும் குரோதவசயும் முனியும் சுரசையும் திமியும் மென்னும் பெயருடைய பெண்கள் ஆக பதின்மூன்றுபேரையும் காசிப மகாரிஷியானவர் விவாகஞ் செய்துகொண்டார்

பொதுவிருத்தம்-இ-ம்-சங்கராபரணம்

பதின்மூன்றுமடவாரோடும் பண்புடனிருக்குநாளில்
பதிபெருமூலகந்தன்னைப் படைத்திடமனதிலெண்ணி
அதிவிதகதனையறிந்து ஐம்புலப்பகையையாற்றிக்
கதிபெறுந்தவமேசெய்யக் காசிபர்நினைந்தார்கேளீர்

வசனம்

இந்த பதின்மூன்றுபெண்களையும் விவாகஞ்செய்துக்கொண்ட பின்பு ஒருநாள் யிந்தவுலகத்தில் சராசரங்களைப் படைக்கவேணுமென்று

கருதி அதிதியென்னும் மூவகையறிந்த் ஐந்துபுலன்களையும் மாற்றிதவ ஞ்செய்யவேணுமென்று தன்மனதில் யெண்ணிநாற்காசிபமகாரிஷியா னவர்

காசிபமகாரிஷியானவர் வனத்துக்கு
தவஞ்செய்யவருகிறவிருத்தம்-இ-ம்-மோகனம்

மதிநுதல்மடவார்தம்மை மனமகிழ்ந்தாசிரமத்தில்
சதிருடன்விட்டுநீங்கித் தவஞ்செய்யமனதிலெண்ணி
துதிசெய்துவதிதமென்னுந் துரியாதிதத்திலன்பாய்
கதிபெறவனத்தைநோக்கி காசிபர்வருகின்றதோ

தரு - இ-ம்-ஆனந்தக்களிப்பு

காசிபமாமுனிவந்தார் வருங் காலத்தை
தெரிந்தாதிமூலத்தைப்போற்றி (காசிபமாமுனிவந்தார்)
அரஅரஅரநீலகண்ட செய
அங்கஜதகனப்ரசண்ட ப்ரசண்ட
காதலமேருகோதண்ட வென்று
காரணதத்துவபூரணமுண்ட (காசிபமாமுனி)
செங்கனல்போலுஞ்செஞ்சடையும்மார்பிற்
செழிக்கும்பூணநூலுந்தழைக்கும்வெண்குடையும்
லங்கோடுபுலித்தோலுடையும் பூமிந
லங்காமல்மெதுவாககுலுங்காதண்டையும் (காசிபமா)
காதிற்கவசகுண்டலமும் நீண்டக்
கைகொண்டதெண்டுடன்பொற்கமண்டலமும்
மேதினியுலகமென்றலமும் பெற்ற
விமலன்போலருள்பொழிகமலகுண்டலமும் (காசிப)

காசிபமகாமுனி சிஷ்ளைஅழைததல் வசனம்

அப்பாசிஷியா தாசமாமணி ஐயா அடா தவசிரோன்மணி சுவாமிஇ துவரையிலுமெவ்விடம்போயிருந்திர்கள் இங்கேவாருங்கள் பசகளா வந்தோம் வந்தோம் சுவாமி

காசிபாசிஷருக்குச்சொல் விருத்தம் -இ-ம்-தோடி

தாசமாமணியேநல்ல தவசிரோன்மணியேகேளாய்
ஈசனைத்தியானஞ்செய்ய வெழில்வனந்தன்னில்வந்தோம்
பூசனைசெய்யதிவ்யபுட்பங்கள்குணர்ந்துவைத்து
ஆசனம்போடுவீர்நாம் அருந்தவஞ்செய்யத்தானே

வசனம்

அப்பா தாசமாமணி ஐயா அடா தவசிரோன்மணி சுவாமிகாள் ஆதிபரம்ானந்தக் கடவுளாகிய சிவத்தைநோக்கிப் பூசனைப்புரியவேண்டியதாய் யிந்தவனத்துக்குவந்தேன் இப்போது அற்சனைசெய்வதற்கு திவ்வியமானபுட்பங்கள் கொண்டுவந்து வைத்துநாமிருக்க ஆசனம்போட்டுவையுங்கள் சிஷர்களே

தாசமாமணிசொல் விருத்தம்-இ-ம்-தோடி.

அழிவிலாச்சிவனைநோக்கி ஐம்புலன்றன்னைமாற்றி
வழுவிலாதவமேசெய்யும் மாமுனிநாதாபோற்றி
உழுவையாசனத்தைப்போட்டே னுகந்துநீரிருப்பீர்நான்போய்
எழில்மிகுபுட்பங்கொண்டு யோடியேவாரனையா.

வசனம்.

சரணம் சரணமையா சுவாமி யெமது அண்ணலாகிய பரமசிவத்தை நோக்கித் தவஞ்செய்யவந்த கர்த்தனே தேவரீருக்கு யிதோ ஆசனம் போட்டுவைத்தேன் யிதில் தேவரீ ரெழுந்தருளியிருந்தால் நான்போய் நல்லவாசனையிருந்த புட்பங்களை யெடுத்துக்கொண்டு வருகிறேனையா சுவாமி.

சிரோன்மணிக்கு-தாசமாமணி சொல் விருத்தம்-இ-ம்-பயிரவி.

தவசிரோன்மணியேகேளாய் தவஞ்செய்யவேண்டிஐயர்
நவமதாய்புட்பங்கொணர நமக்குரைசெய்தவண்ணம்
அவமிலாப்படியேநீபோ யரைநொடியதனிற்சென்று
குவலையமதிப்பதாகக் கொண்டுநீவோடிவாராய்.

வசனம்.

அப்பா தம்பி தவசிரோன்மணி நமது ஐயா சிவபூசை செய்யவேண்டுமாம் நீ சீக்கிரத்தில்போய் நல்லபுட்பங்களை பரித்து எடுத்துக்கொண்டு வோடிவாருமப்பா தவசிரோன்மணி.

தாசமாமணிக்குதவசிரோன்மணிசொல் விருத்தம்-இ-ம்-கல்யாணி.

மவுனமேமிருந்ததாச மாமணிஅண்ணாநீரும்
துவரிதழ்வாய்திரந்து சொல்லியவண்ணஞ்சென்று
தவமுனிகாசிபற்கு தகமையாய்புட்பங்கொண்டு
அவமிலாப்படியிப்போதே அரைநொடிதன்னில்வாறேன்.

வசனம்.

கேளும் அண்ணா தாசமாமணியே நீ சொல்லியப்படியே போய் நமதுஐயர் சிவபூசைசெய்ய நல்ல புட்பங்களை யெடுத்துக்கொண்டு வொருநொடியில் வருகிறேன் அண்ணா தாசமாமணியே.

தவசிரோன்மணிக்கு-தாசமாமணிசொல்-பரணி

மாசிலாமுனிக்குத்-தாசிலாமணியே

வாசமாமலரை-ஆசையாய்கொணர்ந்தேன்

தாசமாமணி-காசிபற்கு போற்றி-விருத்தம்-இ-ம்-மோகனம்.

கறையிலாமனத்தையொற்ற கண்ணுதல்போற்றிபோற்றி
மறையெலாமுணர்ந்தவுந்தன் மலரடிப்போற்றிபோற்றி
இறைவனேதேவர்தாமு மெமக்குரைசெய்தவண்ணங்
குறைவிலாபுட்பமெல்லாங்கொணர்ந்திலோவந்தேனையா.

வசனம்.

மறையாகம சாஸ்திரபுராணங்களையும் குறைவரத்தேர்ந்து வேதாந்தமுடிவிலே மனதைச்செலுத்தி ஞானவமிர்தத்தை யுண்டு யெங்களைரட்சிக்கவந்தகர்த்தனே தேவரீர் கட்டளையிட்டப்படிக்கி நல்லவாசமிகுந்தபுட்பங்களை யெடுத்துக்கொண்டுவந்து வைத்தேனையா சுவாமி.

காசிபர் சீஷர்களுக்குச்சொல்விருத்தம்-ஆனந்தபயிரவி.

மதியினிலுயர்ந்தசீஷ மார்களேகேளீரெந்தன்
பதின்மர்களிடத்திற்சென்று பணிவிடைச்செய்துக்கொண்டு
கதிதரும்அந்திசந்தி கவனமாய்க்கார்த்துநீங்கள்
ததியிலாசிர்மத்துக்குள் தான்மகிழ்ந்திருந்திடீரோ.

வசனம்.

வாருமப்பா சீஷர்களே நீங்கள் ஆசிர்மத்துக்குப்போய் நமது மனைவியர்களுக்கு பணிவிடை முதலானதுஞ் செய்துக்கொண்டு நீங்களும்சிவபூசைநெறி மாறாமல் முடித்துக்கொண்டு சுபேட்சமா யிருக்கக்கடவீர்கள் போய்வாருங்கள் சீஷர்களே,

சீஷர்கள்சொல்-பரணி.

இருந்திடுமென்றுசொன்ன யிறைவனேமலர்த்தாள்போற்றி
பொருந்துமாசிர்மத்துக்குப் போயவாரோம்சரணையா

கொங்கைரெண்டும்விம்முதே அங்கஜன் கணைகள் ஜாட
திங்களாலுந்தென்றலாகும்யென்னங்கம்நொந்துவாட (இந்த)

அந்தியென்றும்சந்தியென்றுஞ்சிந்தைசெய்வதேதே
வந்துமணஞ்செய்தணைந்தசொந்தமாதர்மீதே. (இந்த)

கட்டில்மெத்தைமீதில்நீரிஷ்டமுடன்வாரும்
பட்டுடைநெகிழ்ந்தியெந்தன்வட்டமுலைசேரும் (இந்த)

காசிபர்சொல்விருத்தம்-இ-ம்-நாட்டை

திதியெனுமனைவியோர் செப்பிடக்கேளுமுந்தன்
மதியதுகலங்கிடாமல் மங்கையேஅந்திவேளை
சதியதுவரும்நான்சொன்னேன் தாம்மத்தின்வழியிதல்ல
கொதிகொளுமனதையாற்றி கோதையேயிருந்திட்டாயே.

வசனம்.

வாரும்பெண்ணே யெனது பிராணநாயகி யிப்போது வுன்னைசேர்ந்தால் சதிதோசம்வரும் யிதுதர்ம்மத்துக்கு யோக்கியமல்ல யின்னஞ் சற்றுநேரம் பொருத்திருந்தால் இராத்திரிகாலம்வரும் அப்போது தடையில்லாமல் கூடிமருவி சுகித்திருப்போ மடிபெண்ணே.

திதிக்கும்-காசிபருக்கும்-தர்க்கம்.

தரு-இ-ம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி.

திதிசொல்.

காமன் கணையாலும்மைக்கருதியணையவந்தேனே-யென்னை
கலகஞ்செய்துதள்ளக்கருதாதேமனது நொந்தேனே

காசிபர்சொல்.

சோமன்றனைதரித்தசுத்தநாதர்வரும்வேளை-இப்போ
தோகையரையணைந்தால்துலையாப்பாவஞ்சேருநாளை

திதிசொல்.

மாதரின்பந்தன்னைமறுத்துவிட்டாலதுபாபம்-நிதம்
மாராத்தவஞ்செய்தாலும்வருவதுமக்கென்னலாபம்.

காசிபர்சொல்.

பாதகமல்லாய்பழிவந்துநேருமுன்னாலே-அந்த
பாமனென்றுந்துபகலில்வருவாரொன்மேலே

திதிசொல்.

அந்தியின்தென்றலனலாகவீசுதென்மீதே-யெந்த
ஞசைத்தீரும்படியணையவருவீரிப்போதே.

காசிபர்சொல்.

கந்தமலர்க்குழல்காதலிநீகொண்டவாசை-உன்னை
கலந்தணைவோமென்றால்கலங்குமேயென்றவப்பூசை

திதிசொல்.

உலகமாய்கைவென்றுக்கவொருவரால்முடியுமோசாமி-நீ
ஒட்டாரம்பேசியுதரிவிடாதேனுன்காமி

காசிபர்சொல்.

நலமாய்த்தவங்கள்செய்யநான்வந்ததரியாயோபெண்ணே-அந்த
நாதன்பகைவந்தால்நம்மைவிட்டுப்போமோயிண்ணே

திதிசொல்-கலிப்பா.

வந்துமதன்விடுத்த வாளியினாலென்தேகம்
நைந்துருகிமையலினால் நான்மெலிந்துவாடுகிறேன்
தந்தனமதாகவென்னைத் தள்ளுவதுஞாயமல்ல
சிந்தனையில்லாமலிப்போ நீயணைவாயென்கோவே.

வசனம்.

வாருமென் பிராணவல்லவரே வுமது அடியாளாகிய நான் மன்மத பாணத்தினால் மிகவுமெலிந்து மெய்தளர்ந்து வாடுகிறேனென்றும் நீர் யென்னைச்சேர்ந்து யென்விரகவேதனையைத் தீர்த்து ரட்சிப்பீரென்றும் வும்மையழைத்தால் அதற்குநீர் யிப்படிப்பட்ட வார்த்தைகள் சொல்லி யென்னைபோவென்று சொல்லுவது வுமக்குத்தகாது யெப்படியாவது மனமுகந்து யிந்தவேளையி லென்னுடன்கூடி அணையவாருஞ் சுவாமி.

திதிசொல் தர்க்கம்-தரு-இ-ம்-புன்னாக வராளி-தாளம்-அடசாப்பு.

என்னசெய்வேன்மையல்சகிபாது-மன்மதகாமம்
இன்னமும்பொருக்கமுடியாது.

காசிபர்சொல்.

முடியாதென்றுரைத்தாயென்மானே-யென்றவசுதான்
முடியவேணுமடியென்தேனே.

திதிசொல்.

என்னைமணஞ்செய்தும்வீண்தானோ-யிப்போதணைய
உன்னிடமாற்போனால்விடுவேனோ

காசிபர்சொல்.

விடுவேனென்றுரைத்தயேயானால்-வுன்கொங்கைரெண்டும்
தொடுவேனந்திப்பொழுதுபோனால்

திதிசொல்.

அந்தமட்டுந்தாளுமோதாளாதே-மாருதப்புலி
வந்துபாயுதேதாமதம்யேதே

காசிபர்சொல்.

தாமதந்தானிந்தவேளையாகும்-கூடினால்பாவம்
ஆமடிசொன்னேனேவீடேபோகும்

திதிசொல்.

வருந்தினானழைப்பதோவும்மை-யாமுனியோர்க்குப்
பொருந்தாதோகாமக்கனல்வெம்மை

காசிபர்சொல்.

காமக்கனல்பொருக்காதேபின்னே-மாலைப்பொழுது
போமட்டுபொறுக்கவேணுமின்னே

திதிசொல்.

அந்திமிளப்பிறைதணலாச்சே-யென்னமோயெனமே
லுந்தன்மனங்கருங்கல்லாய்ப்போச்சே

காசிபர்சொல்.

எந்தன்மனங்கருங்கல்லோமாதே-பேயும்பிசாசும்
வந்துலாவுகின்றவேளைமிதே

திதிசொல்.

கூடியெனையணைந்திடவாரும்-வாராமற்போனால்
டோடுவேனுன்மீதிற்பழிபாரும்

காசிபர்சொல்.

பழியும்பாவமும்வேரேயுண்டோ-என்றன்தலைசை
அழிவுசெய்குராயென்னகண்டோ

திதிசொல்.

எள்ளளவுமனமிதங்காதோ-யின்னமுமென்ன
கள்ளமோதெரியெனிதுவாதோ

காசிபர்சொல்.

வாதுமில்லைவழக்குமில்லை-யிதனால்வெரு
பாதகம்வந்திடுஞ்சொன்னேன்தொல்லை

திதிசொல்.

இத்தனைசாசமதுபோதும்-வுமக்குபொர்த
பத்தினியாள்பிதிலாசையோதும்

காசிபர்சொல்.

ஆசபாசமெத்தவிருந்தாலும்-வுன்னாலெனக்கு
தோஷம்வந்துநேரிடுமென்மேலும்

காசிபர்சொல்-விருத்தம்-இ-ம்-மோகனம்.

சந்திரன்மௌலியண்ணல் தக்கபேய்பூதத்தோடும்
வந்திடுங்காலமீதே மருவுதல்பிழையேயாகும்
அந்தியப்பொழுதுபோனலப்போனுமணைவோங்கண்டாய்
சிந்தைகொண்டலேயவேண்டாங் திதியேநீயேகுவாயே.

வசனம்.

வாருமென்பிராணப்பதமானப் பெண்ணே திதியேயிந்த அந்திப்பொழுதில் சந்திரனைத்தரித்த அண்ணலாகிய பரமசிவம் ரிஷபவாகனரூடாய் பூதகணங்கள்சூழ சஞ்சரிக்கின்ற நேரமாகையால் இப்போது வுன்னைச்சேர்ந்தால் மிகுந்தபாவம்வந்து நேரிடும்பெண்ணே.

திதிசொல- கலிப்பா.

நோராதோபாவமென்று நீருனைத்தீரொன்றுடனே
போராடும்மதனாலென்புத்தி மயங்குதையோ
தாராளமாயெனைநீ தழுவியணைந்தாலுமக்கு
சீரார்தவம்பலிக்குஞ் செகம்புகழுமாதவனே.

வசனம்.

கேளும்பிராணநாயகா பகற்காலத்திலணைந்தால் பாவமாகவிருந்தாலும், மன்மதன்பாணத்தினால் யார்பைத்துளைக்குது யென்புத்தியுமிகவும் மயக்குது யிந்தவேளையில் யென்னைத்தழுவி யணைந்து மன்மதனிகாரத்தைத்தீர்த்தால் பகற்பொழுதென்கிறதில் பாவமில்லைவுமக்குசிராகத்தவம்நிறைவேறுமென் பிராணநாதா.

காசிபர்கந்தார்த்தம்.

செந்துருமால்மகனைக்ரணைபட்டுருகுதுசேனைவே
வந்தெதிர்கின்லுவழங்கிபபெண்மயிலேமனமகிழ்வாய்

சுந்தரபாகதவந்தனையேபுரிகுழலிலுனைமருக
மந்தரமாமலையொத்ததனத்தினளேயுனக்கு.

வரலாமோமோடி-யுன்மேலின்பக்
தருமேநீபோடி
வருமோயின்பசுகந்தருமோநந்தியின்மீதிற்
பரமசிவனெழுந்து திரியும்போதிலனைய (வர)

திதிசொல்-கந்தார்த்தம்.

வேதம்நிறைந்துதெளிந்திமாதவனேயுன்மேல்விரகங்
கோதையர்நெஞ்சில்வுளாந்துமகிழ்ந்தெனைகூடியே-கீரணைய
பாதகமேதுமதன்விடுமைங்கணைபட்டுருகும்பொழுதில்
ஏதிதுவுநதன்மனத்தினில்வஞ்சமிலாமலேவந்

தெனைச்சேரும்சாமி-அதிவிரக
மனத்தாள்நான்காமி
என்னைச்சேரென்றுயானுமினிதாய்வந்தபோது
பன்னகசாலையைவிட்டுப்பரிந்துதள்ளிவிடாமல் (எனை)

காசிபர்சொல்-விருத்தம்-இ-ம்-தோடி.

மாதேநானுந்தனுடனதுசொன்னது
மறுத்தெனைநீயணைந்திடவாவென்றுரைத்தாய்
தோதகமாம்பகற்பொழுதென்றுரைத்திட்டானுந்
தொடுவழக்குப்பேசியென்னைத்தொடவேவந்தாய்
பாதகமும்பிசிவேண்டேன் பழியும்வேண்டேன்
பரமசிவன்கற்பனையுமிப்படியுமாச்சோ
வாதைகொண்டுவருமுந்தன் மையல்நீர
மனங்கொண்டேன்கனங்குழலேமருகவாராய்

வசனம்.

கேளுமென்னுடைய பிராணநாயகி- நான் பெதைச் சொன்னபோ
திலுந்தள்ளி தன்னை மறந்துப்பேசுகின்றாய் யினி பாவமும் பழியும்

யாதொன்றும் யெனக்கு அக்கரையில்லை பரமசிவன் கற்பனைப்படிக்கிட்டக்குமல்லாமல் வேறொன்றும் நடவாது ஆகையால் உன்மனதின்படிசம்மதித்தேன் மருகவாரும் பெண்ணே பிராணநாயகி.

திதிசொல்-கந்தார்த்தம்.

மாரன்கணையால்மையல்கொண்டுனை சேரும்படியாய்வருமெந்தனை நீ
நேரும்படியாகியிவ்வேளையினில்வாரும்மிகாமிருவோருமாய்

மருகுவோம்சுவாமி வனத்திலின்பம்
புரிகுவோம்-சுவாமி
வாருமிந்தவேளைசேரும்நண்பகலில்
மாரன்றன்னைவெல்லசீர்மிகுந்தன்பாக (மருகு)

காசிபர்சொல் கந்தார்த்தம்.

அன்பாகவெநீயெனையாளெனவன்பாகுதுபகலினில்மருவுதல்
இன்பாகவெநாமிருவோருமாய்தென்பாகவனத்திலுகந்துநாம்

சேருவோம்பெண்ணே-சேர்ந்தானந்தங்
கூடுருவங்கண்ணே
சேறும்போதுவனத்தாரும்வந்திடாமல்
மாரன்தன்னைவெல்லவாருமின்பதாகச் (சேருவோ)

பொதுவிருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

காசிபர்மகிழும்வண்ணங்கருதினயேவல்செய்து
பூசலங்குடிமிவைவேர் புனைவிழிகடையிற்பார்த்து
நேசனின்னிலகால நின்றனநகைத்துமந்த
மாசிலாதவனையன்னாள் தன்வசமாக்கினாளே.

வசனம்.

இவ்விதமாக திதியானவள் அநேகமான தந்திரவுபாயங்களும் முபசாரமுஞ்சொல்லி கடைகண்ணால் மிரட்டி யிடைக்கண் வேலையைவிட்டு புன்னகை நகைத்து நயமானவார்த்தையைப் படித்து அந்தகாசிபனை மயக்கிதன் மாயவலையிற்சிக்கும் படியாகச்செய்து மருவியணைகின்றவிதங்காண்க.

திதிசொல் தரு--இ-ம்-தோடி-ஏகதாளம்

பல்லவி

காயக்கண்மிகுந்தவுபாயத்தில்முனிவனைக்கைக்
கொண்டாளேதிதிமைக்கண்ணாள்

அநுபல்லவி

மாயக்கண்மிரட்டியும்-பிரட்டியும்-ஆட்டியும்
வஞ்சமோயிதுதஞ்சமோமையல்கொஞ்சமோ
கல்லுநெஞ்சமோவென்று (காயக்கண்)

சரணங்கள்.

வாசக்களபமள்ளிப்பூசினாள்-சீத
பருவும்பன்னீர்கொண்டுவீசினாள்-நீ
ஆசையற்றவனென்றுபேசினாள்-பின்னும்
அநுராகவபிநயம்பேசினாள்-மெத்த
அலுக்கினாள்-வளைகிலிக்கினாள்-முலைக்குலுக்கினாள்
கண்மெலிக்கினாளந்தக் (காயக்கண்)

மதனகேளிவிலாசம்பூட்டினாள்-கட்டி
மார்போடணைத்துமுத்தமீட்டினாள்-மெத்த
அதிவிதயத்தைப்பாராட்டினாள்-சேலை
அவிழ்த்துவுபரிலீலைமாட்டினாள்கட்டி
யணைத்திட்டாள்கால்பிணைத்திட்டாள்ரெண்டும்
பிணைத்திட்டாள்வுடலணைத்திட்டாளந்தக்(காயக்கண்)

தவமுறிமனத்தையுங்கெடுத்திட்டாள்-கையால்
தழுவிமார்பின்மீதுபடுத்திட்டாள்-அங்கு
அவரும்பிணங்கலீலைதொடுத்திட்டாள்போகம்
அமளிபிரளயின்பங்கொடுத்திட்டாள்-பின்னும்
அஞ்சினாள்மிகக்கெஞ்சினாள்மனங்கொஞ்சினாள்
கெட்டிநெஞ்சினாளந்தக் (காயக்கண்)

திதிசொல்விருத்தம்-இ-ம்-பந்துவராளி

கன்னல்வில்மதனால்மெத்தகருத்தழிந்துருகிவாடி
இன்னகரெங்குந்தேடியிருள்வனத்தும்மைகண்டு
மன்னியவிரகந்தீர்ந்தேன்மனதுசந்தோஷமாச்சு
என்னிடப்பிராணநாத-வுன்னடிக்கமலம்போற்றி

வசனம்.

வாருமென் பிராணநாதா அடியாள் மன்மத விகாரத்தினால் மெலிந்து கருத்தழிந்து மனம்வாடி யிந்ததேசமெங்குந் தேடிக் காணாமல் யிந்தவனத்திலும்மைக் கண்டு யென் விரகத்தைத் தீர்த்துக்கொண்டேன் யிப்பவும் யென்மனமிகுந்த சந்தோஷ மாச்சுதையா சுவாமி

காசிபர்சொல்விருத்தம்-இ-ம்முகாரி.

தவந்தனையழிக்கவந்ததையலேசொல்லக்கேளாய்
பவமதுவிளையுமிந்தப்பகற்பொழுதாகாதென்றேன்
செபந்தனைதுரோகஞ்செய்துசேர்ந்துணையணைந்ததாலே
அபத்திலுன்கெற்பத்துக்குண்டாச்சுதுதோஷந்தானே.

வசனம்

வாரும் பெண்ணே பிராணநாயகி நான்செய்த தவத்தையுமழித்தாய் பகலிற்சேர்வது பாவமென்று சொன்னேன் அதையுந்தடுத்தாய் பரமசிவத்துக்கு துரோகஞ் செய்த படியினாலும் வுன்வயத்திலுண்டான கெற்பத்துக்கு தோஷம் வந்துதடி பெண்ணே.

காசிபா புலம்பல்-தரு-இ-ம்-ஆகிரிதாளம்-ஆதி.

கண்ணிகள்

வந்ததேதோஷம்-கெற்பத்துக்கு
வந்ததேதோஷம்

வந்துதேதோஷம்-அந்திவேளையென்ற
எந்தன்சொற்கேளாதவந்தனுசேயின்று (வந்ததே)

சிந்தைநோகுதந்தசந்தாசடாதரர்
வந்தகாலந்தன்னிலுந்தனைச்சேர்ந்தால் (வந்துதே)

தவத்தைவிட்டியானுமவத்திலுன்னைசேர
செபத்தைத்ரோகஞ்செய்துபவத்துக்காளாகவே (வ)

புவனந்தன்னிலுள்ளமவுனமுநிவரெல்லாம்
அவத்தில்பெண்ணையணைந்தசிவத்துரோகியென்பாரோ ()

இஷ்டங்கொண்டுநீயெனகிட்டவந்ததினாலென்
கெட்டமதியாலின்றுதுஷ்டவேலையைச்செய்ய (வந்)

மட்டில்லாமையல்கொண்டுகிட்டயெனைமயக்கி
பட்டப்பகல்தனிலேகட்டியணைந்ததாலே (வந்து)

தாணிதனில்காமத்தைத்துருணமாய்நினையாமல்
தருணந்தனில்பிள்ளைகள்மரணமாகுமேஐயோ (வந்)

தாரணிதனையாளத்தீரமானமைந்தர்கள்
பூரணவாயிசைசிரணஞ்செய்யவே (வந்துதே)

திதிசொல்விருத்தம்-இ-ம்முகாரி.

உண்டாச்சுதோஷமென்றீருலகினில்மங்கைமார்கள்
கொண்டிடுமோகத்தாலேகொடுமைகள்வந்ததுண்டோ
இன்டருங்கெற்பத்துக்குயென்னதோஷங்களத்தை
மண்டலர்மாலைமார்பாமங்கைநானறியச்சொல்வீர்.

வசனம்

கேளுமென்பிராணநாயகா வுலகத்திலுள்ள மங்கைமார் கொண்ட புருஷாசையினாலே கொடுமையான தீங்குகள் வந்ததுண்டோ இன்று யென்னுடைய கெற்பத்துக்கு யென்னதோஷம் நேர்ந்துது அதனையெனக்கு நன்றாய் தெரியசொல்லுமென் சுவாமி.

காசிபர்விருத்தம்-இ-ம்-கண்டா.

மங்கையேஅந்திவேளைமருவினாமணைந்தத்தாலே
துங்கமாமுன்வயத்திற்றோன்றியபாலர்தானும்
சங்குசக்கரத்தான்மீதுசதிசெய்யும்பகைவராகி
அங்கவர்மடிவார்நீயும்அடவுடனறிந்திடாயே.

வசனம்.

வாரும்பெண்ணே இதியே இந்த அந்திவேளைப்பொழுதில் சேரலாகாதென்ற சொல்லைமறுத்து நீசேர்ந்துமருவினதால் வுன்வயத்திலுதித்தப் பிள்ளைகளானவர் சங்குசக்கரங் கட்க கோதண்டமணிந்தஸ்ரீமந்நாராயணர்மீதில் பகைவராகி மடிவார்களடி பெண்ணே.

திதிசொல்-கட்டளைக் கலிப்பா.

ஆருமோயிதிற்றோஷமென்றுறையோ
அணையவேயென்குணங்கள்மயங்கியே
சோகவாரியில்மூழ்கிவந்தேன்கண்ட
சொற்பனம்போல்வுற்பவமாச்சுதே
தோகைமார்க்குள்விவேகமில்லாமல்
நான்சுத்தநாயகன்புத்திமயக்கினேன்
யேகனையகிபாகாகெங்காதரா
இறைவனேயிதற்கென்செய்வேனீசனே.

திதிபுலம்பல்-தரு-இ-ம்-கண்டாதாளம்-ஆதி.

கண்ணிகள்.

ஐயையோநானென்னசெய்வேன்
அவனியிலென்னமென்றுய்வேன்
மையல்கொண்டுமனம்வாடி
மாமுனிவர்தன்னைத்தேடி.
செய்யவனந்தனிற்கண்டு
சேரவேநீவாருமென்று
பொய்யில்லாமுனிவர்சொல்ல
பொழுதிலகாதென்றேநல்ல
கதிரவன்மறைந்தாலுன்னை
கலந்தணைவேனென்றார்பின்னை
மதியணியுஞ்சிவனூர்வந்து
மகிழுங்காலமென்றார்நொந்து
தோகையரேயிதிற்பாவம்

தோணுமென்றூற்போதுபோக
அணைவமென்றூர்வெகுமோகங்
கொண்டதிலேநான்முழுகி
கோபத்தாலவர்தழுவி
இன்றவனொனைமருக
ஏங்கியென்மனமுருக
வயத்திநிலுதிக்கும்பிள்ளை
மாயனுக்கிடவேகொள்ளை
வெய்யலிலணைந்தபோது
விளைந்துதையோயிந்தநீது
பெத்தக்குழந்தைமடிய
பேதையானேனுன்கொடிய
இத்தலத்திலேநான்பாவி
இருந்திடத்தகாதென்னாவி
சங்காரநீசெய்தஜாலம்
தானிதெனக்கநுகூலம்
பங்கையன்விதித்தவிதி
பரமனேயிதுவோகதி.

திதிசொல்-விருத்தம்-இ-ம்-ருகாரி.

மறையெலாமுணர்ந்தஞான மாதவாயெந்தன்கோவே
வரைபுயமைந்தன்றன்னை மாயவன்கொண்ணாறுகில்
இறைவனேகுலம்விளங்கி யிருக்குமோவழிந்துபோமோ
கறையிலாமுநியேயன்றுய் கண்டெனக்குறைசெய்வீரோ.

வசனம்.

மறையாகம சாஸ்திரபுராணங்களெல்லாங்கற்றுணர்ந்தஞானமுநிவரோ யென்வயத்தி லுதிக்கும் பிள்ளைகளை அந்தமாயன் கொண்ணாறுகில் பின்புநமதுகுலம் விளங்கியிருக்குமோ அல்லது அழிந்துப் போகுமோ யெனக்குயாதொன்றுந் தெரியாதால் அதையெனக்குச்சொல்லவேணுமென்கர்த்தனே.

காசிபர்சொல்-விருத்தம்-இ-ம்-கண்டா.

செய்யுமென்றுரைத்தவெந்தன் றேவியேயிரண்டுபாலர்
வையகமாளும்போது வராகத்தாலொருவன்மாய்வான்
பையமற்றொருவன்றானும் பாலனால்மாயன்கொல்வான்
தையலேதனையன்மைந்தன் றரணியையாளுவானே.

வசனம்:

கேளும்பெண்ணே பிராணநாயகி இப்போதுவுன்வயத்தில் பிறக்கும்இரண்டுபாலரில் வொருவன்வராகத்தினாலும் யிறந்துப் போவான் அவன்பிள்ளையானவன் இந்தவுலகத்தையெல்லா மரசாட்சி செய்வான் பெண்ணே.

திதிசொல்-விருத்தம்-இ-ம்-கல்யாணி.

தாரணிதனிலேயின்னத் தனையருமீன்றலல்லோ
நாரணர்கொல்வார்மைந்தர் நானினிப்பெறவேனிந்த
பாரொடும்விண்ணுமஞ்சப் பதியுள்ளோர்நடுங்கத்தெய்வ
நூறொனும்வருஷங்கெற்பம் நொய்தாதத் தாங்குவேனே.

வசனம்.

கேளுமையாசுவாமி பிராணநாயகா நான் சிறுகுழந்தைகளாகப் பெற்றலல்லவோ அந்தநாராயணர் கொல்வார் தேவவருஷம் நூறுண்டு மட்டும் யென்வயத்தில் தாங்கிவளர்த்து வருகிறேன் சுவாமி பிராணநாதா.

பொது-அகவல்.

மையலாள் திதியும்மாதவனுடனே
அய்யுரச்சேர்ந்து அணைந்திடக்கெற்பம்
வேதனூறாண்டுத்திருவயத்தினிலே
ஆவலாய்தாங்கி அமர்ந்திடும்நாளில்
அண்டமெவ்வுலகம் வெண்டிசையெல்லாம்
மண்டலம்நடுங்க வானவாஞ்ச
அறமெலாம்பயந்திட அவள்வயத்தினைவிட்

இரணியனந்தயிரணியாக்கதனும்
இருவருமாக இவ்வுலகிலுதித்து
வெருமையாம்குபேரனைப்பேசவொட்டாமல்
அடித்தவன்புரவி யதனிலேவடிப்பட
வுலகம்வலமதுவந்து வெதுப்புருயிந்த்ரன்
வெள்ளானைமீதேயிளங்கினறனரோ.

கட்டியன்சொல்-விருத்தம்-இ-ம்-பந்துவராளி.

மட்டிலாப்பணிகள்பூண்டுவரிசைசல்லடமுந்தொட்டு
சட்டமாய்தலையிற்பாகை ச்ரிகைபொன்னிடைதரித்து
இட்டமாயுலகம்போற்றும் இரணியமகிபன்வாசல்
கட்டியக்காரன்ருனுங் கனசபைதன்னில்வந்தானே.

கட்டியன்வருகிற-தரு-இ-ம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

ஆக்கிரமவீரபராக்கிரமயிரணியன்
அருமைக்கட்டியக்காரன்வந்தானையா
அண்டர்பணிந்திடுங்கண்டயிரணியன்
அருமைக்கட்டியக்காரன்வந்தானையா
அரண்டபார்வையுமிரண்டமுழியுடன்
அருமைக்கட்டியக்காரன்வந்தானையா
அதட்டிக்குதட்டிவுருட்டிமிரட்டி
அருமைக்கட்டியக்காரன்வந்தானையா.

எச்சரிக்கை-கட்டியன்சொல்-விருத்தம்-இ-ம்-பைரவி.

தானவர்வானவர்கண்டுநடுங்கிட தவமுனியோர்மிரள
சந்திரசூரியர்கண்டெதிர்நின்று சலாமிகச்செய்துவர
ஆனைசேனையனைகளனைத்தும் நெருங்கியேயஞ்சலிசெய்துவர
அடையலர்தமையோர்னொடியில்ஜெயங்கொளரக்கர்கள்புடைசூழ
நாநிலமன்னரதிசயமென்றுநடுங்கிமனந்தளர
நடமிடுமடமயிலெனவருகன்னிளர்நம்பொன்னடிப்பாவ
தேனவிழ்மாலைநிறைந்திடுமார்பன்புகழ்காசிபரருள்செய்
யினைமிகுயிரணியன்வருகிறாரவரவர்தினமிகும்யெச்சரிக்கை.

இரணியன்வருகிற-விருத்தம்-இ-ம்-தோடி.

தங்குமாமகுடஞ்சூட்டி சறப்பணிபணிகள் பூண்டு
மங்களமாதார்பாடி வரிசையாலத்தியேந்த
துங்கமந்திரிகள்சூழத் தூயனுண்மறையோர்வாழ்த்த
எங்குமேபுகழ்பெற்றோங்கும் யிரணியன்கொலுவில்வந்தான்.

தரு-இ-ம்-அசாவேரி-ஏகதாளம்.

பல்லவி.

வீரசூரயிரணியன்யிரணியாக்கன் விந்தையுடன்தானிதோவந்தார்

அநுபல்லவி.

ஆரபரிமளமார்பிலலங்கவே-அந்தரவானவர்-சிந்தைகலங்கவே (வீ)

சரணங்கள்.

செண்டுதங்கியமுத்துகொண்டையுங்காதில்
செழித்துமணிகுண்டலந்துலங்கவே-மிக்க
தண்டையுஞ்சதங்கையுமண்டியதிரந்திட
தங்கச்சுட்டிநெத்தியில்செங்கதிரிலங்கவே (வீரசூர)

மந்தரமாலைபோலுஞ்சுந்தரப்புயமீதில்
மன்னியவலையங்கள்துன்னியேசெழிக்க
விந்தைசெய்யாமீதுப்பந்திப்பந்தியதாக
விச்சித்திரகிண்கிணிவுச்சிதங்கொழிக்கவே. (வீரசூர)

மழுவுண்டகுலிசமும்மெழுவுடன்கப்பணம்
வளங்கொண்டவாளத்தைக்கனங்கொண்டயீட்டியும்
கழுமுள்ளங்குசபாசந்தழுவும்பிண்டிபாலமும்
கட்டாரிசிலைகளைபட்டாவும்பூட்டியே (வீரசூர)

கட்டியன்சொல்-விருத்தம்

அம்பரஞ்சூழ லடங்காவுடனே துந்துமி அதிர்ந்து திமிதிமி யென்னவே, அதிர்முரசுபேரி ஈரகஜமேள வீராணமறைந்து தாம்தா மென்னவே, இன்பருமாடுகொம்பு தம்மட்டமிகுராண சங்கமிளாந்து ஓஓ மென்னவே, இணையொத்து தவல்தாளம் நாகசுரமத்தளந் திசை தணந்தணமென்னவே, வம்புமிகுகாளமும் பூரிசின்னந்தவளம் வரிசை பாம்பாமென்ன

வே, வகைபம்பை கிடுகுசகபத்து டம்மாறமெனும்வகைகள் சாம்சாமென் னவே, சம்பான்முதலவுணா கத்திடால் கட்டாரி கைகொண்டு சலாமெ ன்னவே, தாணிபதி யவுணர்குல மிரணியபதியுனது திருவடிகள் மிக சரணமே.

இரணியன்சொல்போற்றி-விருத்தம்-இ-ம்-மத்தியமாவதி.

சிவகாருண்யாபோற்றிசெய்பமாதவத்தாய்போற்றி
தேவர்கள்தேவேபோற்றிசிறந்தசின்மயத்தில்மிக்க
ஆவலாய்வாழுகின்றஅய்யனேமனமகிழ்ந்து
தாவியேயெமையளித்தத்தந்தையேபோற்றிபோற்றி.

காசிபர்சொல்-விருத்தம்-இ-ம்-பந்துவாாளி.

இன்னகர்தனிலுதித்தயென்னிடமைந்தரோகேள்
பொன்னின்மாமுடிதரித்தேன்புனேகுழலவுணருக்கு
மன்னியவுலகுலோகக்கும்வழுத்திடத்தாணிமீது
தன்னிகரிணையிலாமற்றலைவராய்வாழ்குவீரோ.

இரணியாக்கன்சொல்-போற்றிவிருத்தம்-இ-ம்-தோடி.

அன்னையேகற்பின்மிக்கஅரசியற்காசியாகி
மன்னியவுலகமெல்லாமகிழும்காயகியேபோற்றி
தன்னிகரில்லாவேதத்தலைவரின்மனைவியாகி
என்னையுமீன்றதாயேவுன்னிணையடிபோற்றிபோற்றி

திதிசொல்-விருத்தம்-இ-ம்-பைரவி.

திருபுவனத்துக்கெல்லாந்தேவர்களாகவாழி
குறையிலாதவுணர்தங்கள்குலபதியாகவாழி
நிறைந்துசெங்கோல்செலுத்திநீங்களென்னும்வாழி
யிரணியன்யிரணியாக்கன் யென்னுமைந்தர்களேவாழி.

இரணியன்சொல்-விருத்தம்-இ-ம்-கல்யாணி.

கேமியுங் காத்தோன் சதுர்முகனரியா நித்தனேவுத்தமற்கமுதே நீண்மறைமுடிவில் நீங்கிடாமனத்தோர் நெஞ்சினில் நடம்புரிக் தவனே காமனேக்காய்ந்து வெண்பொடியணிந்து கையில்மான்மழுதரிப்பவனே

கருணையங்கடலேபர்வதராசன் கன்னியை மணம்புணர்ந்தவனே, பாமினை யுகந்து திங்களும் புனலும் பணிபொடு வெண்சடைக்கணிந்து, பன்னரும்பதத்திற் சிலம்பொலியசைய பரும்புலி யாயிடைதரித்து, ஓமெனும் பொருளாய் கைலையம்பொருப்பில் வொளிபெறவுகந்துவாழ்பவனே, வுன்னிருபதமென் சென்னியில்வைத்தே னுகந்தெனைக் காப்பதுன் கடனே.

இரணியாக்கன்சொல்-விருத்தம்-இ-ம்-சங்கராபரணம்,

வுலகெலாம்புரந்துநாளும்வொன்னலர் தம்மைவென்று
பலமிகுமரசனென்னப்பிரமரோடெவருமஞ்ச
தலமையாய்செங்கோல்நாளுந்தகைபெறநடத்துமெந்தன்
மலைநிகர்புயவண்ணாவுன்மலர்ப்பதஞ்சரணம்போற்றி.

முதல்மந்திரிதுன்முகன்சொல்-விருத்தம்-இ-ம்-கல்யாணி.

அடையலர் தம்மையெல்லாம்அமற்களந்தனில்வென்று
நெடியசிங்கத்தைப்போலும்நீண்டவாள் கையிற்றாங்கி
கடிமறைதான்கும்நன்றாய்கருதியவேந்தர்வேந்தே
வடிவுள்ளவுனதுசெம்பொன் மலர்ப்பதந்துதிசெய்வேனே

உ-வது-மந்திரிசகுனிசொல்-விருத்தம்-இ-ம்-மோகனம்

செய்யப்பூமாதுவாழுஞ்சீருறுஞ்சமுர்கந்தன்னில்
பையரவதுபோற்சிறப்படைமன்னருகிற்சூழ
வையகத்தவர்கள்வானோர்வந்தடிபணிந்துநிற்க
அய்யனேவுந்தன்பாதம்அனுதினம்வணங்குவேனே.

இரணியன்சொல்-விருத்தம்.

தாளிணையைச்சரணமெனப்பணிந்தயெந்தன்
தம்பியேமன்மதியமைச்சமாரேயிந்த
நீளியசபையிலுமக்கிருக்கையீய்ந்தே தாம்
நீங்கள்மனமகிழ்ந்துநிறைந்திருப்பீர்தாமே.

பொது விருத்தம்-இ-ம்-தோடி.

பொன்னின்மா முடிபுனைந்த விரணியன்முன்புழ குழலாளெழுலீலாவதியாமங்கை, தன்னைமணஞ் செய்துக்கொண்டா னிரணியாக்கன்தத்தைமொழி சில்லிகையைத் தழுவிக் கொண்டான். பன்னரியவுலகில்மகிழ்ந்திருக்கும்போது பாருலகையாள்வதற்கு மனதிலெண்ணி - நன்னயமாய் தம்பிமுகன் தன்னைநோக்கி நயந்தவனோ டொருவசனம் நவிலுவானே.

இர்ணியன்சொல் விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி

தன்னிகரில்லகத்தம்பிதயித்தியஅவுணர்க்கெல்லாம்
மன்னவுறுகியிந்தமண்டலமாள்வதற்கு
பன்னும்வேதனுமால்வும்பர்பாமனேடெவருமஞ்ச
என்னகாரியஞ்செய்வாய்நீயெந்தனுக்குனாசெய்வாயே.

வசனம்.

கேளுந்தம்பி அதிவீரபராக்கிரம சாலியான யிரணியாக்கதனே -நா மிந்தவுலகத்துக்கெல்லாம் அரசனுகவேணுமே ஆகையால் அவுணர்கள் யிந்திராதிதேவர்கள் கருடகாந்தருவர் பிரமன்மால் வீசன் திக்குப்பாலர்கள் யிவர்கள்யாவரும் அஞ்சும்படியாக நீயென்னகாரியஞ்செய்வாய் சொல்லுந்தம்பி.

இரணியாக்கன்சொல்விருத்தம்-இ-ம்-மத்தியமாவதி.

அண்ணலேசொல்லக்கேளாயவனியைத்தாங்கென்றாலும்
நண்ணியகடலின்னீரைநாவினல்நக்கென்றாலும்
ஒண்ணியவூழ்சதீயைவோங்கிடுமூழிக்காத்தை
கண்ணவேபிசையென்றாலும்கணத்தினிற்பிசைவேனண்ணு

வசனம்.

சாணஞ்சாணமென் அண்ணுவே பஞ்சாட்சாக்கொடி பூமண்டலத்தையு மெடுக்கச்சொன்னலு மெடுப்பேன் சமுத்திரசலத்தையெல்லாம் நாவினாலே நக்கச்சொன்னலும் நக்கிப்போடுவேன் வூழிகாலத்து நெருப்பையும் சண்டமாருதக் காத்தையும்பிடித்து பிசையென்றாலும் பிசைவேனண்ணு.

இரணியன்சொல்விருத்தம்-இ-ம்-மத்தியமாவதி.

பூமியையெடுப்பாயோநீபெறுங்கடல்குடிப்பாயோநீ
சேமசவூழித்தீயைசொழப்பிழிவாயோநீ
தாமதமிலாமல்காற்றைத்தழலெழப்பிழிவாயோநீ
ஆமிதையணிந்துநீயும்அடவுடனுனாசெய்வாயே.

வசனம்.

வாருந்தம்பி யிரணியாக்கதனே பூமியை யெடுப்பேனென்றும் கடல்நீரை குடிப்பேனென்றும் ஊழிக்கால நெருப்பையும் காற்றையும்பிடித்து பிசைவேனென்றும் வெகுசாமர்த்தியஞ் சொன்னாயேயுனக்கு அவ்வளவு வலிமையுண்டோ சொல்லுந் தம்பி.

இரணியாக்கன்சொல்-விருத்தம்-இ-ம்-பந்துவராளி.

ஈதெனக்கிடோவையா யீரேழுபுவனமுற்றும்
ஓதனீரேழுமேழும் ஊழியாந்தழல்கள்மூன்றும்
போதியவாய்வுபத்தும் மூதண்டகோளமெல்லாம்
பாதியாயுள்ளங்கையில் பகுந்தெடுத்தாட்டுவேனே.

வசனம்.

கேளும்மென் அண்ணாவேயிந்த வொருபூமியோ யெடுப்பேன் அண்டாண்ட பகிரண்டங்களையு மெடுப்பேன் யிந்தவொருகடல் நீரையே நக்குவேன் யேழுகடல்களையும் நாவினால் நக்கிப்போடுவேன் ஊழிகாலத்து நெருப்பையோ பிசைவேன் தெட்சநாகமென்றும் மகாரப்பத்தியமென்றும் ஆகுன்னியமென்றும் யிந்தமூன்றுநெருப்பையும் பிசைவேன் யிந்தவொருவாய்வையோ பிடிப்பேன் ஊழிகாலத்து பத்துவாய்வையும்பிடிப்பேன்யிதுகளையெல்லாம்மொன்றாகச்சேர்த்து பாதிவுள்ளங் கையிலெடுத்து சுழட்டியகட்டுவேனண்ணாவே.

தாக்கம்-தரு-இ-ப-பந்து வராளி-ஏகதாளம்.

இரணியன்சொல்.

பூமியெடுப்பேனென்று மேகஞ்சொன்னாயே
பூமியெடுக்கப்பலம்பொருந்துமோதம்பி

இரணியாக்கன்சொல்

பூமியெடுப்பதுந்தாமதமோயீரேழு
பூமியெடுத்துநான்பிரட்டுவேனண்ணா

இரணியன்சொல்.

கடலின்னீரையெல்லாம் நொடியில்குடிப்பேனென்றாய்
கடலைக்குடிக்கவயிற்றிடமுண்டோதம்பி

இரணியாக்கதன்சொல்.

இடமுண்டோவென்றுயேகடலைனென்றுசயேழு
கடலையுங்குடிப்போன்கணத்திலண்ணை

இரணியன்சொல்.

அழியும்ஆழிநெருப்பைப்பிழிவேனென்றுரைத்தாயே
அழியுமழிநெருப்பைப்பிழிவாயோதம்பி

இரணியாக்கதன்சொல்.

பிழிவேனென்றுரைத்தசொல்பழுதுண்டோவொருக்காலும்
மொழிமூன்றுநெருப்பையும்மொடுக்குவேனண்ணை

இரணியன்சொல்.

கற்பகக்காலவாய்கைப்பிடிப்பேனென்றுயே
எப்படிபிடிப்பாயோவொப்புடன்தம்பி

இரணியாக்கதன்சொல்.

ஒப்புடன்பிடிப்பதுந்தப்பல்லவொருக்காலும்
இப்பொழுதேபிடிப்பேன்யிங்யாருமண்ணை

இரணியன்சொல்-விருத்தம்-இ-ம்-தோடி.

இவ்வண்ணஞ்செய்வாயானு லெனக்கெதிரினிவேறுண்டோ
செய்வண்ணமொன்றுகேளாய் திசைகமுகன்படைப்புமாற
பொய்வண்ணமிலாயவிந்தப் புவியைபோர்புரம்பிடித்து
கைவண்ணஞ்செருக்கால்பாய்போல் கடுகவேசுருட்டிவாராய்.

வசனம்.

வாருந்தம்பி யிரணியாக்கதா இப்படிக்கொத்த சாமர்த்தியவானே யானால் யினிமெனக்கு பிரயாசமொன்றுமில்லை ஆகையால் இந்தபூமியைப் பாயாகச்சுருட்டி சோதனைக்காண்பியுந தம்பிஇரணியாக்கதா.

இரணியாக்கதன்-விருத்தம்-இ-ம்-பைரவி.

நல்லதுஅண்ணாவுந்தன் னாவினால்சொன்னவண்ணம்
அல்லல்செய்யாயுதங்கள் அங்கயிலெடுத்துக்கொண்டு
வல்லமையாகவிந்த வையகந்தனைச்சுருட்டச்
செல்லுவேனுனதுசெம்பொற்சேவடிசரணமையா.

வசனம்

கேளும்யென் அண்ணாவே தேவரீர்வுரைத்த சொல்படியே வேலாயுதம் சூலாயுதம் வாளாயுதம் இவைகளை யெடுத்துக்கொண்டுபோய் யிந்தபூமியை யாவரும்நடு நடுங்கும்படியாய் பாயாகச் சுருட்டிக்கொண்டு வருகுறேன் அண்ணாவே.

சில்லிகைசொல்-விருத்தம்-இ-ம்-முகாரி.

அண்ணனுக்குயிவ்வகையேசொல்லிப்போட்டு
அவனிதனைச்சுருட்டுதற்காயேகுஞ்சேதி
வண்ணமுலைசில்லிகையாமனையாள்கேட்டு
மனமுருகிவுடல்பதறிவருந்திக்கொண்டு
கண்ணுடனேபசுந்தோளும்வலமேதுள்ள
காரணமீதென்னவகைதெரிலோமென்று
யெண்ணியந்தயிரணியாக்கதனிருக்கும்
இடந்தேடியேந்திழையாள்வருகின்றாளே.

சில்லிகைவருகிற-தரு-இ-ம்-கல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

பங்கேருகமென்ன-ஸ்ரீங்காரவதிநயபயிதலலிதபரிமளமிளமிருதுமொழி
பாவைமெல்லிகைவந்தாள்வொய்யாரச்சேர்வைசில்லிகைவந்தாள்

அநுபல்லவி.

திங்தோங்தைததிமிதொங்தொங்திதொங்திமி-தகிடதிகுடதிமி
தரிகிடதிமிதிமிதத்தளங்குதிமிதரிகிட திமிதகதளங்குதகதிமி தகத்திமி
பாவைமெல்லிவந்தாள். (தகத்திங்கிணதோம்

சரணங்கள்.

பயிலும்வொயிலும்வனமயிலினியயிலகு
பஞ்சரக்கிளிகள்கொஞ்சிமுத்தமிடும் (பாவை)

தகதிரிகிட திமிதிமிதசெகுகணகதிந்திமிதிமிதக
டிங்குடிக்குடிகுதத்தளங்குதிமிதகதரிகிடதிம
தளங்குதகதிமிதசத்திங்கணதோம் (பாவை)

பைம்பொற்குடமெனவிப்பொற்தடமுலை
பாந்தளகடிதடமாந்தளிர்வடிவப் (பாவைமெல்லி)

தித்தித்திமிதிமிதொந்தத்தகுதகுதாங்தெய்ய
தரிகிடதிந்திமிதத்திமிதகதளங்குதிமிதகதரிகிடதிமி
தளங்குதகதிகதகததிங்கணத்தோம் (பாவைமெல்லி)

பவளமெவளமுளவளயிதழ்மதுரப்
பாங்கியாகவரிதாங்கிவரவொளிர் (பாவைமெல்லி)

தருகுடதிருகுடதகுதகசெணுசெணுததாங்தெய்ய
தரிகிடதிந்திமிதத்திமிதத்தளாங்குதிமிதகதரிகிடதிமி
தளங்குதகதிமிதகத்திங்கணதோம் (பாவைமெல்லி)

சில்லிகைபோற்றிவிருத்தம்-இ-ம்-கல்யாணி

காசிபர்மகிழ்ந்தளித்தகனகாத்தினமேபோற்றி
ஆசையாயெனைமணஞ்செய்தாளும்நாயகனேபோற்றி
மாசிலாதுலகனைத்துமகிழ்ந்திடவந்தகோவே
பேசரிதானயெந்தன்பிராணநாயகனேபோற்றி.

இரணியாக்கன்சொல்-விருத்தம்-இ-ப-தோடி.

அந்தாத்தமார்வாழ்த்தும்அருவையற்காசியான
எந்தனுருயிரோமின்னேயேந்திழையானேதேனே
ஊந்தருபாரிசாதத்தளிர்மலர்க்கமலபாதம்
நைந்திடத்தனியேவந்ததென்னமுன்னவிலுவாயே.

வசனம்.

வாரும்பெண்ணே சில்லிகையே சொல்லும்மென்பிராணநாதா-அழகுபொருந்திய பாரிசாதத்தளிரும் மாந்தளிரும் வெட்கும்படியான வுனது மிருதுவானபாதங்கள் நோகநீதக்கதா யிவடத்திற்கு யேதுகாரியமாய் வந்தாய் அதையெனக்கு நன்றாய் தெரியச்சொல்லும் பெண்ணே.

இரணியாக்கன்சொல்-தரு-இ-ம-கல்யாணி-ஏகதாளம்.

பல்லவி.

என்னத்துக்கோடிவந்தாயே-வந்த-தெனக்குத்தெரியச்சொல்வாயே

அநுபல்லவி.

பொன்னைப்பொருந்துமெழிற்கன்னத்திருந்துமொழி
பெண்ணேகண்ணேசெம்பொன்னேயென்முன்னேநீ (என்)

சரணங்கள்.

ரத்னச்சிவிகையுனக்கில்லையா-கோடி-லட்சந்தாதியருகிலில்லையா
தத்துங்கவரியெங்கேமுத்தின்குடைகளெங்கே
தனமேயனமேநீதானேபொன்மானே (என்னத்து)

சுந்தரமுகம்வேர்வைபொடிக்கவே-நூலிற்-றுவளுமிடையகொங்கைபொ[illegible]
கொந்தலருமளகநொந்துசரிந்துவிழக் (டிக்கவே
குயிலேமயிலேசற்குணமேபூமணமேநீ (என்னத்து)

பஞ்சினமெல்லடிகள்கொப்பளிக்கவே வந்தபாதையெல்லாமதிர்ந்துளிக்க
வஞ்சியெசுயவபாஞ்சியேஆசைக்கண் (வே
மணியேயணிவருமாதேயிப்போதேநீ (என்னத்துக்)

இரணியாக்கன்சொல்-உந்தார்த்தம்.

தேனேரினியதெருவையேதிகழ்ந்த
ஆனேவுயிரோவுபையகண்மணியே
மானேயெனதுமதியேநிதியே
யேனோதனித்துவந்த-யேதடிப்பெண்ணே-கணத்திலெனக்கோதடிகண்
சிதமதிவதனதிலர்தநுதலிலகு (ணே
மாதேபிராணநாயகிமயிலேவொயிலிலகு (ஏதடிபெண்ணே)

சில்லிகைசொல்-விருத்தம்-இ-ம்-சாவேரி.

இவ்விடம்விட்டுநீரும்மெந்தனோடுரைசெய்யாமல்
எவ்விடம்போனீராயாமென்னிடபிராணநாதா
அவ்வியமானதில்லாமலன்புடனெனக்குநீரும்
செவ்வையாயுரைசெய்வீருன் திருவடிசரணம்போற்றி.

வசனம்

வாரும்மென் பிராணநாயகா தேவரீர் இப்போது இவ்விடம் விட்டு யென்னுடனேயுஞ் சொல்லாமல் மகா வுக்கிரத்துடனே வெகுஅவசரமாய் யெந்தயிடத்திற்குப் போனீர் அதையெனக்குத் தெரியச் சொல்லுஞ் சுவாமி.

இரணியாக்கன் சொல்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

சுந்தரமயிலேயெந்தன் துணைமலர்க்கண்ணேபெண்ணே
தந்தாருஞ்சூழுமெந்தன்தமையனார்சொற்படிக்கி
இந்திரனயன்மால்மெச்சயினியகாரியத்தின்மீதே
புந்திவைத்தேகிவாரேன்போயிருமனையிற்றனே.

வசனம்.

கேளும்பெண்ணே சில்லிகையே யென்தமையனார் சொல்லிய வூழி யப்படிக்கி பிர்மா விஷ்ணுதேவாதி தேவர்கள் முதலானபேர்களும் அஞ்சும்படியான காரியமாய்ப் போயவருகிறேன் இப்போது நீ அரமனையில் போயிருப்பெண்ணே.

சில்லிகைசொல்-விருத்தம்-இ-ம்-முகாரி.

பண்ணியுன்மீதில்வந்துபாய்ந்திடக்கினவுகண்டேன
நண்ணுமென்கழுத்துத்தாலிநழுவியேகிடக்கக்கண்டேன்
ஒண்ணுமென்கூந்தல்சிக்காய்வுயர்சடைவீழக்கண்டேன்
அண்ணலேபோகலாகாததையுமக்குரைசெய்வேனே.

சில்லிகைசொல்-தரு-இ-ம்-முகாரி-அடதாளம்.

பல்லவி.

சொற்பனங்கண்டேனே-அதில்வெகு
வுற்பனங்கொண்டேனே

அநுபல்லவி

சொற்பனமோவென்னவற்பனமாகுமோ
சொல்லப்படாதஅல்லல்கடாது (சொற்பனங்)

சரணங்கள்.

கட்டியதாலிகழுவிகிடக்கவும்
கண்ணுடன்தோளும்வலமேதுடிக்கவும்
முட்டிவருப்பண்ணியுன்னைக்கடிக்கவும்
மூத்தத்திலேதுளிரத்தம்பொடிக்கவும் (சொற்பனங்)
செங்கதிரைப்பறிவேடம்களைக்கவும்
தெற்கிருந்தோடிவடக்கேமுளைக்கவும்
திங்களுந்தெற்குத்திசையில்கிளைக்கவும்
செப்புமிப்பூமிகடுங்கிக்கிடக்கவும் (சொற்பனங்)
இந்தக்குறிகளெனக்குணக்காகாது
இந்தைபொருளுடன்சொல்லப்போகாது
வுந்தன்வனுமையாலென்சொல்லைகோகாதே
வுள்ளதைநான்சொன்னேன்கள்ளமேல்போகாதே (சொ)

சில்லிகைசொல்விருத்தம்-இ-ம்-ஆகிரி.

இக்கொடியசொற்பனத்தைநிலையாக
யிதையம்வைத்துபேசுவாய்நீயேயானால்
அக்கொடியகாரியத்தால்பயனுமுண்டோ
அடியவள்நான்சொல்லுவதுஞ்செவிக்கேற்காதோ
துக்கமொடுபழிபவைகளெல்லாம்வந்து
தோன்றுவதுயிதுமெய்யேமெய்யேயென்று
இக்கணமேயென்சொல்லைதள்ளிநீரு
மேகுவதுஞாயமல்லவேந்தர்கோவே

சில்லிகைசொல்-தரு-இ-ம்-ஆகிரி-தாளம்-அடசாப்பு.

பல்லவி

என்னகாரியம்பெண்ணிநீர்வுமக்கிது
ஏற்குமன்றேயெண்ணிநீர்

அநுபல்லவி.

மன்னவர்களுலகுக்கன்னை யென்பதுபொய்யோ
மனத்திலதையெண்ணமல்சினத்ததென்னமோஐயோ (என்)

சரணங்கள்.

பழியும்பாவமும்பொல்லாயிழிவும்வேறோயில்லைப்
பாறையிடர்ந்தாற்றேவர் ஆணைச்சொல்வாரக்கலில்லை
அழிவும்வந்திடுங்கோத்திக்கழிவுவந்திடுந்தொல்லை
யாளுமென்றுனைநீரோகேளுமடியாள்சொல்லை (என்)

மகமேருவைகுண்டம்புகழ்சேருங்கைலாசம்
மலையுமுனிவர்தேவர்தலமும்போகாதோதோஷம்
பகைசெய்தேவர்களுன்மேலிகரச்செய்யார்களோமோசம்
பண்ணூர்களோமனதிலெண்ணூர்களோவாயாசம் (என்)

காசிபர்குலத்துக்குநாசம்வருமிப்போதே
கண்டகினாவும்வேணதுண்டுசொன்னேனத்தே
யோசனைபெண்ணிப்பாருப்பேசுமெல்சொல்தப்பாதே
வுள்ளம்பதைக்குதெந்தன்வள்ளலேநீர்போகாதே. (என்)

இரணியாக்கன்சொல்-விருத்தம்-இ-ம்-பைரவி.

கொண்டமனையாளிந்தக்குறியேசொல்லக்
குழியெழுங்கண்கள்ரெண்டிற்புகையேமண்ட
அண்டமும்வானந்திசையுநடுங்கியஞ்ச
ஆற்பரித்துகைகொட்டிநகைத்துகேளென
ஒண்டொடியாளையிற்பொருந்தேன்கினவிற்கண்ட
தொருபொருள்தான்சிலவுதனக்குதவியுண்டோ
மண்டலமெலலாஞ்சுருட்டிஞெடிமுன்ஞக
வருகுவேனுனதுமனமகிழத்தானே.

வசனம்.

வாரும்பெண்ணே சில்லிகையே நான்கொண்ட பெண்சாதியானதினாலே நீசொன்னதெல்லாம் பொருத்துக் கொண்டேன்

கினவிற்கண்டபணம் செலவுக்குதவுமோ ஆகையால் யிப்போதே நான் போய் யிந்தபூமியைச் சுருட்டிக்கொண்டு வொருநொடியில் வருகிறேன் பாரடிப்பெண்ணே,

சில்லிகைசொல்-கந்தார்த்தம்.

ஐயோநானென்னசெய்வேன் அவனியைபேர்ந்தால்தோஷம்
வையகமுழுதும்போற்றும் வானவர்கைத்திடாரோ
கையினிலேந்தும்போது கைலையுதிர்ந்திடாதோ
மெய்யனேபிராணநாதா விதியோநானென்னசெய்குவேன்.

ஐயைய்யோபாவம்-விதியோநானென்னசெய்குவேன்
விதியோநானென்னசெய்வேன்-மதியால்வருவதுய்வேன்
சதியோவுன்பிராணனேசம்-அதுவேகாரணமோசம்
விதியோநானென்னசெய்குவேன்.

இரணியாக்கன்சொல்-கந்தார்த்தம்.

வானோர்பணியும்வலுவைசேர்பிரமன்றனே
சிஷ்டிக்குந்தரணிதனிலே
நானேகாசிபர்தருநல்சுதனே
யானால்பாரடிமானே
யிந்தபூமிபோனால்விடுவேனோநானே
நானிலமுழுதிலும்நலமுடன்பாராய்
மானேசந்திரவதனியே
கேளாய்ஆனால்பாரடி

இரணியாக்கன்சொல்-கந்தார்த்தம்.

நரிக்குப்புலிதானஞ்சிடுமோ நார்க்குமுதலையஞ்சிடுமோ
கரிக்குசிங்கம்அஞ்சிடுமோ காடிசெல்லுக்கஞ்சிடுமோ
எரிக்குங்கள்பின்மடவார்கள் மெயித்தத்தானுமஞ்சிடுமோ
யரிக்குந்தேவர் தனக்கேயான்.

வலுமைதளர்ந்தஞ்சுவனே-ரஞ்சிதமேனன்
வலுமைதளர்ந்தஞ்சுவனே
வலுமைதளர்ந்தஞ்சுகதெளிமையடிகுஞ்சுக
மயிலேவளரினமுலேமின்னலிடைக்
குயிலேமதுரிதமொழியன்னநடை (வலுமைதளர்ந்த)

இரணியாக்கன் சொல்-விருத்தம்-இ-ம்-தோடி.

வருகுவேன்மண்டலஞ்சுருட்டிக்கொண்டு
வாகுமட்டும்அரமனையிற்சென் றிருப்பாய்
பெருகியவென்புயவலியும்பெருமைதானும்
பிரமன்முதல்யானவற்கும்பெருகக்காட்டி
ஒருநொடியிலவருடனே அவர்கள்வாழும்
ஊரும்நகரும்மலேயும்வொக்கச்சேர்த்து
திருகுசினத்துடன்வருவேன்வத்துசேதி
தேன்மொழியேயுந்தனுக்குத்தெரிவிப்பேனே.

வசனம்.

கேளும்பெண்ணே சில்லிகையே பிர்மா விஷ்ணு தேவாதி தேவர்கள்முதலான பேர்களுக்கும் யென்னுடைய அதிவீர பராக்கிரமத்தைக் காட்டி யிந்தப்பூமியைப் பாயாகச் சுருட்டிக்கொண்டு யிந்தக்ஷணமேயிவ்விடம்வந்து சேருகிறேன் நீ அதுந்தனிலும் நமது அரமனையிர்ப்போய் வீத்திரும்பெண்ணே.

பொது -விருத்தம்-இ-ம்-கல்யாணி.

படபடென்றதிரப்பற்களைக்கடித்தும்
பகைவர்களெவர்களுமஞ்ச
விடவிடவென்றதிர்த்துதேவர்கள்முதலோர்
விண்ணிலகத்தை விட்டகல
வடவனல்சிதறிமருகடல்நுழைய
மலேதிசைநடுங்கவேகுதித்து

வெடிபட்கைத்துப்புவிதனைச்சுருட்ட
விரவில்தண்டகனும்வந்தனனே.

இரணியாக்கன்-வருகிற-தரு-இ,ம்-மோகனம்-தாளம்-ஆதி.

பல்லவி.

ராசாதிராசராசதயித்தியராட்கெம்பீரன்

அநுபல்லவி.

வீசும்அஷ்டலட்சுமிவாசன்தெண்டகாசூர
விஜையனிதோவந்தான்

சரணங்கள்.

அண்டரண்டங்களும்மெண்டிசைதேவரும்
மணிமுடிவணங்கிடவே
தண்டகாசூரவுத்தண்டரணசூர
கெம்பீரனிதோவந்தானே
வளமிக்கமந்திரியர்தளகர்த்தர்பெருஞ்சேனை
மருகினில்சூழ்ந்திடவே
களமெய்க்கும்அமரர்கள்வளமெய்க்குஞ்செய்தண்டகா
சூரனிதோவந்தானே
மண்ணஞ்சமலையஞ்சவிண்ணஞ்சநிலையஞ்ச
வானவரஞ்சிடவே
கண்ணஞ்சமனஞ்சயெண்ணஞ்சவேதண்டகா
சூரனிதோவந்தானே
திசைமுட்டகிரிமுட்டவிஜையத்தோளிர்முட்ட
தினவுகள்போகாமல்
தசமுட்டநினமுட்டபசைமுட்டஅதிவீர
தண்டகனிதோவந்தானே
அடியிட்டநலமகன்வெடிபட்டுப்பாதாளம்
அழுந்திநொழுய்பிடவே

தடியிட்டயார்நெஞ்சை பொடியிட்டானதண்டகா
சூரனிதோவந்தானே

இரணியாக்யன்சொல்-தரு-இ-ம்-சங்கராபரணம்-ஏகதாளம்.

பல்லவி

இந்தப்புவிதனையென்கையினாலெடுப்பேன்-பாரும்பாருமென் சமர்த்தை
இந்தப்புவிதனையென்கையினாலெடுப்பேன்

அநுபல்லவி

இந்தப்புவியையோர்புறம்பிடித்திடஎந்தன்சமற்திறல்வலுமைபெத்திட
அந்தரவானவரஞ்சிடத்துஞ்சிட ஆற்பரித்தேவீறுவீறென்றுசுழண்டிட (இந்த)

சரணங்கள்.

மூச்சூரசூலத்தைகையினிலெடுத்துமுன்னாகபூமியிலோங்கயின்னம்
மூதண்டகோளம்வெடித்தண்டாகண்ணிமைமூடியவாமன்தேங்க
அச்சமில்லாமலேசங்கங்கொழித்திடஅவுணர்கள்யாவருங்கண்டுசெழித்
திட, சிச்சிலிமட்சத்தைப் பாய்ந்ததுபோலவே சீக்ரமதாயின்று ஆக்ரம
(துகொண்டு (இந்த)

திக்கென்றெழுந்திடஅஷ்டகஜங்கள் திடுக்கிட்டேநடுநடுங்க-யிந்த
திண்புவிதண்ணையெடுத்திடுஞ்சத்தத்தில்சேடன்முடிகளைத்தொடுக்க
மித்வகப்பாதாளத்திற்போய்க்களித்திடமேதினிமங்கையங்கொண்டொ
ளித்திட-இக்கணமேமலேயாவுஞ்சுழன்றிடயேழு கடலுக்குள்ளேபுவியு
(ழன்றிட (இந்த)

தரு-இ-ம்-கல்யாணம்-ஆதி.

கண்ணிகள்.

எந்தன்சமர்த்தால்புவியெடுத்துக்களித்தேன்-யெடுத்
தேழ்கடலுக்குள்சலத்தில்தாழ்வில்லாமல்வைத்தொளித்தேன் (எ)

இந்திராதிதேவர்களுங்கண்டேங்கிநடுங்க-கண்டு
நோக்தவரிருக்துமென்னைவந்தனஞ்செய்தேயொடுங்க (எந்த)

அஷ்டதிக்குப்பாலர்தேவர்மூவனாக்கூட-என்னை
கஷடஞ்செய்யயிஷ்டங்கொண்டதுஷடத்தனமேமிகுந்த (எந்த)

வாரணங்களெட்டுமகம்மேருவுமசைய-யிந்த
பாரினைச்சுருட்டிதிருப்பாற்கடற்குள்யாருங்காண (எந்த)

இரணியாக்கன் சொல்-விருத்தம்-இ-ம்-பந்துவராளி.

வண்ணமாயுலகையாளுமன்னவாயெந்தனண்ணு
மண்ணினைச்சுருட்டியந்தவாருதிதனிலமூத்தி
திண்ணமாய்வந்தேன்யின்னந்தேவரீரொதைச்சொன்னாலும்
எண்ணமாய்செய்வேன்புத்தியெந்தனுக்குணாசெய்வீரோ.

வசனம்:

சரணஞ்சரணமென் அண்ணாவே தேவரீர் சொன்ன பிரகாரம் இந்தப்பூமியைச்சுருட்டி சமுத்திரத்தில் வொளித்துவைத்தேன் யின்னந்தமது திருவாய்மலர்ந்தருளும் காரியங்களையெல்லாம் முடிக்கிறேன் சொல்லும் அண்ணே

இரணியன்சொல்-விருத்தம்-இ-ம்-மத்தியமாவதி

சுந்தரப்புவியைப்பாய்போல்சுருட்டியேகடலில்வைத்து
வந்திடுந்தம்பிகேளாய்வகைமிகுசேனையோடு
அந்தமாய்நீயுஞ்சென்றுஅஷடதிக்விஜையஞ்செய்து
சிந்தையுமகிட்சிகூறசீக்ரமாய்வருகுவாயே

வசனம்.

வாருந்தம்பி யிரணியாக்கதனே நீசொன்ன வார்த்தையினாலேமகா சந்தோஷமாச்சுது யிப்போது நம்முடைய சேனைகளைக் கூட்டிக்கொண்டுபோய் யிந்திரன் அக்கினி யெமன் நிருதி வருணன் வாய்வு குபே

ரன் யீசானியன் அநதாபத்தியப் பாதாளம் யிதுகள்யெல்லாம் திக்குவி
ஜைபஞ்செய்து வாருமப்பாதம்பி யிரணியாக்கதனே.

இரணியன்விருத்தம்-இ-ம்-தோடி.

உம்பர்கள்முனிவர்நாகர்வுலகுளோர்நடுங்கியேங்கச்
செம்பொன்னின்கொலுவில்நாளுஞ்சிறந்தமந்திரிமார்கேளீர்
தும்புராட்சதருந்தண்டத்துரகஜப்படைகளோடும்
அம்புடன்வருகவென்றுஅவர்களையழைப்பிப்பீரோ

வசனம்.

கேளுங்கள் மந்திரிமார்களேநமது ரதகஜதுரகப்பதாதிகள் நால்வ
கைச்சேனையும் படைத்தலைவரும் யிந்தட்சணத்தில் தடையில்லாமல் வ
ரச்செய்யுங்கள் மந்திரிகளே.

மந்திரிகள்சொல்-விருத்தம்-இ-ம்- கல்யாணி

செம்பொன்னின்வாசல்காக்குஞ்சிறந்தகட்டியனேகேளாய்
சம்பான்முதலாயுள்ளதளகர்த்தர்படைகளோடும்
உம்பர்கள்வணங்குமேன்மைவுத்தண்டவீரர்தம்மை
இம்பமாயழைத்துக்கொண்டுயிட்சணம்வருகுவாயே.

வசனம்.

ஆரடா ஆசாரவாசல் காக்குங்கட்டியக்காரா நீபோய்நமது ஆண்ட
வனுகிய அரசன் வுத்தாரமென்று தளகர்த்தனுன சம்பாசூரான்னிகும்பா
சூரான் குமப்பாண்டசூரான் அக்கினிகண்ணன்முதலான வீராதிவீரரை
அதிசீக்கிரமா யழைத்துவாடா கட்டியக்காரா

கட்டியன்சொல்-பரணி.

கெடியாராட்சதரே
கடினமன்னவனுர்
இடியெனவழைத்தார்
நொடியினில்வருவீர்

சம்பரன்சொல்-விருத்தம்-இ-ம்-பைரவி.

அம்பரந்தன்னில்வாழும்அமரர்கள்திகிக்கங்கொள்ள
இம்பருந்திருக்குமண்ணல்இரணியனழைத்தானென்று
தெம்புடனவுணர்சேனைத்திரளுடனெழுந்திருந்து
சம்பரன்முதலல்லோருஞ்சதிருடன்வருகின்றாரே

சம்பரசூரன்வருகிற-தரு-இ-ம்-பந்துவராளி-அடதாளம்

பல்லவி.

சம்பரசூரனும்வந்தானே-தளகர்த்தன்
சம்பரசூரனும்வந்தானே

அநுபல்லவி,

சம்பரசூரனுடனிரும்பரசூரனும்வெத்திக்
கும்பாண்டக்கண்ணனுடன்செம்பாண்டக்கண்ணனுமாய் ()

சரணங்கள்

ஈட்டிவல்லயம்பூட்டியேகட்டாரிசூரி
யிடையிலுடைவாள்கட்டியே
தாட்டிகமுடன்வெகுமேட்டிமேட்டிகளாக
போட்டிகள்பேசிராஜன்பேட்டிகள்காணவென்று(சம்பர)

அண்டாண்டம்நடுங்கவே-தவசுசெய்யும்
அந்தணர்நொஞ்சொடுங்கவே
கொண்டலெனமுழக்கமண்டுசினத்துடனே
எண்டிசைக்காற்குந்தேவர்கண்டுதிடுக்கங்கொள்ள(சம்பர)

திக்குகளெட்டும்வெல்லவே-யிரணியன்பேர்
தேசங்களெங்குஞ்சொல்லவே
வக்கிரதந்தராசட்சதருக்கிருடனேகூட்டி
அக்கிரமஞ்செய்யவென்றுகொக்கரித்தாற்பரித்து (சம்பர)

தளகர்த்தன்சொல்-விருத்தம்-இ-ம்-கல்யாணி.

இடிஇடித்ததுபோற்கூவி யெங்களையழைத்தபோது
படிமீசையரக்கர்வந்தோம் பகைத்தவருலகிலுண்டோ
வடிவுள்ளமன்னாநீயும் வண்மையாயெந்தனுக்குத்
துடிபடவுரைசெய்வீருன் றுணையடிபோற்றிபோற்றி.

ராட்சதர்சொல்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

அண்டமகண்டமுமிடிக்கவோ
அவனியொன்னலரையொடிக்கவோ
எண்டிசையொன்றாய்பிடிக்கவோ
யேழ்கடல்நீரைகுடிக்கவோ
தெண்டிசையெபனையடிக்கவோ
தேவரைசமரில்கொடிக்கவோ
துண்டரைமுநிவரைப்பொடிக்கவோ
சொல்லுமெமதுதோள்துடிக்குதே.

இரணி[illegible]ல்-விருத்தம்-இ-ம்-தோடி.

அழைத்தபோதோடிவந்த அமைச்சர்கள்முதலாயுள்ளோர்
தழைத்திடவேண்டியுங்கள்தன்னைநானழைத்தசேதி
செழுத்துமென்றம்பியோடு வலுமைசெய்தெவருமஞ்ச
செழித்திடஅஷ்டதிக்கை ஜெயம்பண்ணிவருகுவீரோ.

வசனம்.

வாருங்கள் சேனாத்தலைவரென்னுஞ் சம்பராசூரனே நமது அதிவீரபராக்கிரம வீரதிவீரருடனே நீயும்யெனது தம்பியாகிய யிரணியாக்கதனுடன் சென்று அஷடதிக்கு அந்தரமத்திய பாதாளம்யிவைகளிற்சென்று ஜெயம்பெற்று வாருங்கள்சேனைகளே.

தளகர்த்தன்சொல்-விருத்தம்-இ-ம்-மத்தியமாவதி.

அறைந்திடுமுரசுகிடுகிடென்றதிர
அவனிமன்னவரெலாம்நடுங்க
நிறைந்திடும்படைகளனைத்தையும்
கூட்டிநேரொபெறத்திசையெலாம்புகுந்து

மறைந்திடவருணன்வாய்மொடுபோன்
மண்டலத்தோர்களைச்செயித்து
குறைந்திடும்படிசெய்தவர்களைக்கொணர்ந்துன்
குறைகழல்வணங்குவேன்மன்னே.

இரணியாக்கன்சொல்-தரு-இ-ம-பாட்டைதாளம்-திரிபுடை.

பல்லவி.

திக்குவிஜையஞ்செய்யவுக்ரமாயதிவீர
தெண்டகாசுரன்நடந்தான்.

அநுபல்லவி,

சக்கரைப்பந்தலிலேதேன்மாரிபொழிந்தாற்போல்
இக்கணந்தமையன்சொல்லுக்குவிக்கனம்வாராமல்யேறுந்
தத்துப்பரிவொத்துநெருங்கிடவெத்திக்கரிகத்துமருங்கிட (திக்)

சரணங்கள்

ஈட்டிவல்லயங்கையிற்கொண்டு-உலகில்
எதுத்தமன்னவர்களைவென்டு
சாட்டியில்லாப்பம்பரம்போல்ஆட்டியெவர்களையும்
வாட்டுவோமென்றவர்கையை நீட்டியெதிர்கொக்கரித்து
சங்கத்தொனிஅங்குமறைந்திடதிங்கள்குடையெங்குநிறைந்திட (திக்)

கடல்போலவேமாசமாறச்-சேனை
கவிந்துதிசைதிசையாய்பார்க்க
அடந்திடும்பேறைக்கண்டுஅடர்ந்தமன்னவரொன்று
டந்தனைவிட்டுவேறேயிடந்தனிற்செல்வோமென்று
வைத்தப்படையொத்துநெருங்கிடக்கத்திக்கொடுவைத்திப்பெருகிட(தி

அண்டாண்டபகிரண்டமுங்குலுங்க-யிவர்கள்
ஆதாரத்திற்தேவர்கலங்க

எண்டிசைதனிலுள்ளோர்கண்டுதிக்கங்கொள்ள
தெண்டைசையிலெடுத்துக்கொண்டுவெஞ்சங்கொடுத்து
கண்டவர்மனநின்றுதயங்கிடசண்டெனுமெதிர்க்கொண்டுபயந்திட (திக்)

பொதுவிருத்தம்-இ-ம்-நாட்டை

இவ்விதமாகவேதயிரணியாக்கதனுஞ்சென்று
செவ்வையிந்திரனைமாட்டித் தீயினைவெருட்டியேமன்
தெவ்வதையடக்கிப்பொல்லா நிருதியின்செழிபமாத்தி
கவ்வதிரவருணனோடுங்கருதிபோர்புரிந்தான்மாதோ.

வசனம்.

இவ்விதமாக விரணியாக்கதன்போய் யிந்திரன் அக்கினி யெமன் நிருதி வருணன் யிவர்கள்பேரில் யுத்தஞ்செய்து அவர்கள்செருவத்தையடக்கிககொண்டு அப்பால்வரும்போது இவடத்தில் பிரமதேவரானவர் பூமியில்சாசரங்களைப் படைக்க மனதில் யெண்ணிவருகிற விதங்காண்க.

காரணவிதுவேயாகக்கமலனுன்முகனுஞ்சோதித்
தாரணிபடைத்தோமிப்பால் சகலசீவனையுண்டாக்கப்
பூரணமாகவேதான் புத்தியிலெண்ணிக்கொண்டு
ஆரணமுனிவர்சூழ அடவுடன்வருகின்றாரே.

தரு-இ-ம்-கல்யாணி-தாளம்-ஆதி

பல்லவி

பிரமதேவரும்வந்தாரே.

அநுபல்லவி

செங்கமலமீதுதனிலமரும்வேதனெனும்
பிரமதேவரும்வந்தாரே

சரணங்கள்.

பிரமதேவரும்வந்தார்பெருகுசற்பரமான
தாமநுண்ணறிவித்தடத்திலமரும்பெருஞான. (பிரம)

சனகாதியர்வேதம்பாடிசதுர்முகனெனக்கொண்டாடி
தனிமுகம்நாலுடன்கூடிதாணியைபடைக்கநாடி (பிர்ம்ம)

துய்யபுஜங்களெட்டுந்துலங்கும்அட்சயபொருட்டுங்
கையிற்பவித்ரந்தொட்டுங்கனகப்பூணூலிட்டும் (பிர்ம்)

தும்புருநாரதர்பாடத்தோகையர்நடனமாட
கிம்புருடர்சுதிகூடக்கின்னர்வானோர்மலர்போடப் (பிர்ம்ம)

பிரமன்சொல் -விருத்தம்- இ-ம்-தோடி.

பாரினிற்புராக்கமாயன் பதுமத்திலென்னையீன்றான்
தாரணிதன்னையந்த தயாநிதியாலளித்தென்
போர்புரிந்திரணியாக்கன் பூமியைத்திருடிப்போனான்
சீர்மிகுந்துளபமாலை தேசிகாயென்னசெய்வேன்

பொது-வசனம்.

பிர்ம்ம தேவரானவர் பூமியில்சகல சீவராசிகளையும் படைக்கவேணுமென்றுவந்து நின்றுபார்க்கும்போது பூமியையெங்குங் காணாமல் அறிவினால் யெண்ணியிப்போது யிரணியாக்கதன் பாயாகச்சுருட்டி சமுத்திரத்திலொளித்து வைத்தானென்று தெரிந்துக்கொண்டு சகலசீவதயாபரனுய்விளங்கி முன்னை தன்னை நாபிக்கமலத்திலே வுற்பவிக்காநின்ற ஸ்ரீமந்நாராயணனைத் தோத்திரஞ்செய்கின்றவிதங்காண்க.

பிரமன்புலம்பல் தரு-இ-ம்-கண்டா-திரிபுடதாளம்

பல்லவி.

அரிஅரியேஅரிஅரியே-யிந்த
அவனியையெங்குங்காணேனே
புரியமுந்தனருளடைந்து-அந்தப்
புதுமையைநான்பூணேனே
வுந்திகரும்பூமிதேவி-முன்னாள்
வுகந்துதவம்புரிந்திலளோ

செந்திருவாழ்மணிமார்பா-வுந்தன்
திருவருளைத்தெரிந்திலனோ
பெத்தப்பிள்ளைவருந்திடவே-பாரில்
பெற்றவர்கள்பார்ப்பாரோ
வுத்ததுநான்சொனேனே-யென்னை
யுகந்தொருவர்சேற்பாரோ
வல்லவுணன்பூமியெல்லாம்-கொண்டு
வவ்வினதுபாயாதோ
நல்லதென்றுபார்த்திருந்தால்-வுனக்கு
ஞாயமதோவுபாயமதோ
இப்பொழுதேயவனுடலை-பிளந்து
யெரிந்துயின்பந்தாராயோ
மைப்புயலேகேசவனே-அரிஅரி
மாதவனேயருள்பாராயோ

பிரமன்சொல்-தரு-இ-ம்-ஜம்பை

செய்வதென்னயான்படைத்தஜெகத்தையெடுத் தொளித்துவைத்தான்
பைய்ரவமிசைதுயின்றபரனே அரிஅரியே
செய்யநருந்துளபணிந்துசெங்கைதனிலாழிகொண்டு
வையகத்திலெனைக்காக்கவாரும்-அரிஅரியே
பூமியெடுத்தொளித்துவைத்தப்புதுமையென்றுமறியேனஷ்ட
காமியங்களளிக்குந்திருக்கடவுளரிஅரியே
சாமியிக்தப்புவிபடைக்கச்சதுர்முகனென்றெனைவகுத்தாய்
ஆமெனுந்தான்மறையளித்தஅய்யா அரிஅரியே
உந்திமலர்த்தலஞ்சுமக்கவுகந்துதவம்புரிந்துநின்ற
அந்தப்புவிமாதுவருந்தாளோ அரிஅரியே
செந்திருவாழ்மணிமார்பவனுக்கையந்தணையகற்ற
வந்ததுறுபோலெனைக்காக்கவரும்அரிஅரியே
வுந்தன்திருவுளமகிழ்ந்துவுகந்துமறையெனக்களித்தாய்
நந்துலவுபுவிபயின்றென்றுதா அரிஅரியே

கந்தனருந்துணைபயணிகமலக்கண்ணனேயெனக்கு
வந்ததுயாதீர்த்தருளவாரும்அரிஅரியே
பெற்றபிள்ளைப்படுந்துயரம்பெற்றவர்களறியாமல்
மற்றவர்களறிவாரோவாரும்அரிஅரியே
இத்தலத்தையஞ்சாமலெடுத்தெளித்தபாவிதன்னை
வத்திருக்கநீதியுண்டோவாரும்அரிஅரியே

பிரமன்சொல்-விருத்தம்-இ-ம்-முகாரி

அச்சுதாநந்தாபோற்றி அருமறைப்பொருளேபோற்றி
சச்சுதாநந்தாபோற்றி சநார்த்தனமுகுந்தாபோற்றி
பச்சைமாமுகிலேபோற்றி பதுமைவாழ்மார்பாபோற்றி
மூச்சுடர்பொருளேபோற்றி மூலமேபோற்றிபோற்றி

பிரமன்சொல்-விருத்தம்-இ-ம்-ஆகிரி.

என்னையீன்றவனேபோற்றியெழில்மணிவண்ணாபோற்றி
தன்னையேநிகர்வாய்போற்றிதற்பரானந்தாபோற்றி
சின்மயவடிவேபோற்றிஜெகமெலாமுண்டாய்போற்றி
பொன்மணிமார்பாபோற்றிபுராதனாபோற்றிபோற்றி

பொது-விருத்தம்-இ-ம்-தோடி.

பதுமனிந்தவகைதுதிக்கபதுமனுபன்
பரிந்துமனதினிலுணர்ந்துபூமியென்னும்
புதுமைபெருமனையானையவுணன்வேழ்விப்
பொனதிங்தேயெழுந்துபிறைவண்ணன்கேட்டு
மூதிருமனல்விழிபொழியஅண்டமெங்கும்
முழங்குமொலிகிடியதிரவெள்ளைப்பன்றி
துதிபெருநல்லவதாரமாகிவேதன்
துணைமூர்க்கில்நின்றுவந்துகுதித்திட்டாரே

வசனம்.

பிர்ம்ம தேவரானவர் ஸ்ரீமந்நாராயணரை நோக்கித் தோத்திரஞ் செய்கின்றபோது தன்னுடையமனையாளாகிய பூமிதேவியை ராட்சதன் கிரகித்துக் கொண்டானென்று தெரிந்து மகாகோபத்துடனே மூன்றும்பிறைப்போலொத்த தந்தமும் அக்கினிப் பொழியாநின்றநேத்திரமும் மேகங்களதிரும்படியான கெற்சனையுமாகி சுவேதவராக அவதாரமாய் பிர்ம்மதேவனுடைய மூக்கிலேநின்று யெழுந்தருளினார்ஸ்ரீமந்நாராயண மூர்த்தியானவர்.

மாயன்வருகிற-தரு-இ-ம்-பந்துவராளி-தாளம்-அடசாப்பு.

கண்ணிகள்.

அண்டகோளம்விண்டதிர ஆற்அரிப்புமேலதிர
சண்டமாருதம்அதிரவே-வராகரூபந்
தாங்கிமாயன தானிதோவந்தார்
அவனிமன்னவர்கள் வாழ-அவுணர்குதமெல்லாந்தாழ
தவமுனிவொன்புகூரவே-வராகரூபந்
தாங்கிமாயன் தானிதோவந்தார்
தெண்டிரைக்கடல்பொங்கவேசேர்ந்துபிரண்டுதங்கவே
தண்குளியபிரிர்தொங்கவே-வராகரூபந்
தாங்கிமாயன் தானிதோவந்தார்
வானவர்கள்மலர்தூரமாமுனிவராசிகூற
தாவயம்வைமும்பிரவே-வராகரூபந்
தாங்கிமாயன் தானிதோவந்தான்

புராண விருத்தம்--வேறு.

மாக்கணம்வெம்மூலே மலர்மகளமர்ந்துறையார்பன்
போச்கிலப்பொன்னோர்ப்பொதிடம்பூந்தவீசுகந்தோன்
மூக்கில்நின்றோரு கேழலாயமுநிவாடய
கோக்குதெண்டிரைக்குகைகடல்நாளொழக்குளித்தார்

வசனம்.

பிர்ம்மதேவருடைய சுவாசத்திலிருந்து வராநின்ற வராகசுவாமியானவர் ஆகாயப் பரியந்தமானவி யிருக்குமசமுத்திரத்திலே விழுந்து

பிரண்டெழுந்திருக்கும்போது சத்தசமுத்திரத்தின் சலமெல்லா மயிர் நுனியிலே பனித்துளிபோலத் தொங்கும்படியாக விளங்கினார்வராகசுவாமியானவர்

விருத்தம்-வேறு.

படும்பங்கயத்தரும்பு மோர்பங்கயம்பிடுங்கி
கடன்திரழ்ந்திடுங்கருங்கடற்களிறொழுந்தென்ன
தடங்கொண்மாமலை பெண்ணலைசூழ்கடற்கவிழ்ந்த
நெடுந்திண்பார்க்கொடுவந்ததுநீண்மருப்பெண்ம

பொது-வசனம்

இந்தப்படியாகவந்த வராகசுவாமியானவர் ஆழம்பொருந்தியதடாகத்திலே முளைத்துவிளங்காநின்ற தாமரையை மதம் பொருந்திய யானையானது யெப்படிபிடுங்கிக்கொண்டு வருமோ அப்படிப்போல் சமுத்திரத்திற் கவிழ்ந்துகிடக்காநின்ற பூமியை அணுப்பிரமாணமாகக் கொம்பின்பேரிலெடுத்துக்கொண்டு வந்ததையா வராகம்.

நாரதர்சொல்விருத்தம்-இ-ம்-மத்தியமாவதி

பெருத்தவெண்கொம்பினாலிப்பூமியையெடுத்துவந்து
தரித்துவராகமந்தசதுர்முகன்மகிழும்வண்ணம்
செருக்குடன்விஜையஞ்செய்யச்சென்றபன்னாவனார்க்கித்தை
உரைத்திடவென்றுநெஞ்சமுகந்துநாரதர்வந்தாரே

நாரதர்வருகிற-தரு-இ-ம்-சாஅணு-தாளம்-திரிபுடை.

பல்லவி.

நாரதமாமுனிவந்தார்-மகா
நாரதமாமுனிவந்தார்

சரணங்கள்.

காரணங்களிங்கிடுங்கர்த்தன்மிகு
கனமாவெண்டிசைபுகழ்ந்திடுமுந்தன்
நாரணனைப்பணிந்திடுஞ்சித்தன்-திவ்ய
நாரதமுனிவன்றனிதோவந்தான்
கொட்டுபத்தளம்வயிறுமுழக்கிக்கொண்டு-கையில்
முல்லவும்வீணையில்ராகம்பழுக்கிக்கொண்டு

தொட்டுவெண்ணீராலுடல் துலக்கிக்கொண்டு-நல்ல
துய்யநாரதமுனிவன்றனிதோவந்தான்
கையிநிற்கமண்டலமெடுத்துக்கொண்டுமெழிற்
கனகமணிக்குடையும்பிடித்துக்கொண்டு
துய்யநாரணன்புகழைப்படித்துக்கொண்டு-நாலு
சுருதிநாரதமாமுநியிதோவந்தார்

பொது-விருத்தம்-இ-ம்-கல்யாணி

மண்ணுலகத்தினைவாருதிவைத்திருமணிமுடிபெருமாசன்
பொன்னுலகத்தினர்யவுணர்கள்தம்மைபுகழ்ந்துபணிந்திடவே
கன்னிரவெற்புயமன்னவனிரணியகாளைக்கிளையவருந்
தன்னிகரத்தவர்முன்பிதோநாரதர்தான்மகிழ்வோடுவாரார்

நாரதர்சொல்-விருத்தம்-இ-ம்-சங்கராபரணம்

மகராஜராஜவைபோகர்தா
ஜெயமேலாமதிக்குமூதண்டதீரா
திகழ்பெரவேதேசமெங்குஞ்செயித்தாய்
அகமகிழ்ந்தேவருமண்ணல்வாழி

இரணியாக்கன்செரல்-விருத்தம்-இ-ம்-தோடி

சுருதிகளனைத்துந்தேர்ந்ததூயனாரதரேயிங்கு
வருகுவீர்முநியேயிந்தவையம்வானுலகமெங்கும்
பெருகிசையனைத்துஞ்சென்றுபெருமையாய்க்கண்ணர்கண்
அருமையாமதிசையந்த வினத்தையுமுறைசெல்வீரோ

வசனம்:

நாலுவேதம் ஆறுசாஸ்திரம் பதினெண்புராணங்கள் இருபத்தெட்டாகமங்கள் அறுபத்துநாலு கலைக்கியானங்கள் தொண்ணூற்றாறு தத்துவங்கள் மனுவிக்கியான முதலியவைக் கற்றுணர்ந்த நாரதமுனிவரேவாரும் நீர்சகலலோகங்களிலுஞ் சஞ்சரிக்கின்றவ ரானபடியினாலேஅந்தந்தலோகத்தில் நடக்கும் அதிசையங்களைக் குறைவில்லாமல் தங்களுக்குத்தெரிந்தமாத்திரஞ் சொல்லுமையா நாரதமாமுநியே

நாரதர்சொல்-விருத்தம்-இ-ம்-நாட்டை.

தாரதலமெல்லாம்நீயேஜலத்தினிலொளித்துவைத்தாய்
அரரவணைமீதேயன்றுமரிதுயிலமர்ந்தமாயன்
வராகவதாரமாகிவவ்வியேபோகலுற்றான்
பராவியேயானுங்கண்டபதியதிசையமீதாமே.

வசனம்.

வாருமையா யிரணியாக்ஷதனே யிந்தப்பூமியைச் சுருட்டி சமுத்திரத்திலே யொளித்துவைத்திருந்தீரோ அதனை யிப்போதுஸ்ரீமந்நாராயணரானவர் வராக அவதாரங்கொண்டு திருடிக்கொண்டுபோகிறார் அதையென்கண்ணினால் கண்டுவந்தேன் யிதுதான் அதிசயமையா இரணியாக்கதனே.

இரணியாக்கதன்-சொல் விருத்தம்-இ-ம்-பைரவி.

சொல்லியமொழிதான்வந்துசுட்டிநாருசம்போல
மெல்லியகாதிலேமீசைகள்துடிக்கக்கண்கள்
எல்லுமிழ்விழிகள்தீயயிருப்புகைப்படலம்விம்ம
பல்லுகள்கடித்துவோடிப்பண்ணிமேலெதிர்த்திட்டானே.

தருஇ-ம்-அடா

பல்லவி.

நில்லடாவராகாநில்லடா நீயெங்கேபோராய்

அநுபல்லவி,

சொல்லடாவுன்சேதிநேராய்

சரணங்கள்

வெல்லுவேனுன்னையிப்போதுகொல்லுவேன்சொன்
னேன்சாகாதே-நில்லடா
பாரடாவராகாபாரடா அடா
பாரடாவராகாபாரடா
பாரடாபூமியைவைத்துநீபோடாவோடிவைத்து

போராடவேணுமேயானல்
கோடாசேவகனானல் (பாரடாவாராகாபார)

மடிக்குரோன்வாராகாமடிக்குரோன் அடா
மடிக்குரோன்வாராகாமடிக்குரோன்
மடிக்குரோன்கைதெண்டுகாலேயடிக்குரோன்மண்டையின்மேலே
இடிக்குரோனுன்பல்லிரண்டாயொடிக்குரோனுன் துண்டுதுண்டாய (மடிக்

வெத்தியோவாராகாவெத்தியோ அடாவுனக்கு
வெத்தியோவாராகாவெத்தியோ
வெத்தியோயிதுவும்பின்னேவைத்திருந்தபூமிதன்னை
மெத்தனத்திருடலாமோபத்தியுந்தானெங்கேபோச்சோ (வெ)

போடுவேன்வாராகாபோடுவேன்-அம்பினையுன்மேல்
போடுவேன்வாராகாபோடுவேன்
போடுவேன்கைபாணஞ்சூலஞ்சாடுவேனின்பெருந்தூலம்
ஆடுவேனுன்வெத்திமாலைச்சூடுவேனென்கையின்வேலை (போடு)

மண்டுவேன்வாராகாமண்டுவேன் - யிப்போதுனை
மண்டுவேன்வாராகா-மண்டுவேன்
மண்டுவேனுன்னுயிர்கொள்ள அண்டமெங்குமொலிதுன்ன
சண்டமாருதங்கள்போலேயிண்டிபாலங்கொண்டென்றாலே (மண்)

இரணியாக்கன்சொல்விருத்தம்-இ-ம்-தன்னியாஸி

கோபமேமிகுதியாச்சுக்கொல்லுவேன்வாராகாநீயும்
பூவுலகொளித்தேனத்தைபுரம்பொவெடுத்துவந்தாய்
நாவிலேவந்ததெல்லாம்கலிவரப்பிதற்றியிங்கு
சாவதுசெய்வேனிந்தத்தெண்டினாலுன்னைத்தானே.

தர்க்கம்-தரு-இ-ம்-கெவளிபந்து-தாளம்-துரிதம்

கண்ணிகள்.

அண்டமூழகிலமும்யெண்டிசையுமதிரத்
தண்டினால்மண்டையைச்சாடிநேனுன்னை

சாடியேநெடுந்தெண்டையொடித்துப்பிடுங்கிக்கொண்டு
ஆடல்வல்லரக்கனை அடித்துவராகம்
அடித்தப்போதினில்நெஞ்சந்துடித்திடச்சூலத்தை
எடுத்துதிருத்தியேவேலெறிந்தானேயவுணன்
எறிந்தச்சூலத்தைத்தூளாய்முறிந்துபோகவேபல்லால்
கடித்தப்பாலெறிந்துதேகடியவராகம்
கடியவராகமும்நெடியவேலவுணனும்
கொடுமைக்கொண்டுத்தோளைக்கட்டிக்கொண்டாரே
கொட்டிக்கொண்டுகையால்முட்டிக்கொண்டுகாத்தில்
விட்டகாத்தாடிப்போல்விண்ணிற்சுழண்டாரே
சுழன்றுகொண்டுவராகம்முயன்றவல்லரக்கனை
அரண்டுமார்பினில்குத்தி அழுத்திக்கொண்டதுவே
அழுத்திக்கொம்பதினாலுட்சுழட்டியேயவுணனை
இழுத்துப்போட்டுரெண்டுபிளப்பாய்பிளந்ததுவே.

பொதுவிருத்தம்-இ-ம்-பத்தியமாவதி

அவுணனுமிப்படியாயெதிற்கும்போது
    ஆதிவராகப்பெருமானவன்மேல்பாய்ந்து
கவனமொடுதண்டுடன்சூலத்தைப்பற்றிடக்
    கடித்தெறிந்துமணிமார்பைக்கொம்பினாலே
புவனமெல்லாம்புகழ்ந்தேற்றவமரர்வாழ்த்தப்
    பூமகடன்துயர்நீங்கத்தருமமோங்கப்
பவமகலதண்டகாசூரன்றன்னைப்
    பகுந்திட்டாய்யிருகூறாய்வகுந்திட்டானே.

வசனம்:

வராகசுவாமியானவர் யிரணியாக்ஷனை சம்மாரஞ்செய்து தன்கொம்பினாலேந்திவந்த பூமியை ஆதிசேஷனுடைய சிரசின்பேரிலேயெப்போதும்போல விரித்து பூமிதேவியினுடைய துயரந்தீர சகல்தேவர் முனிவர்களும் மனமகிழும்படியாகக் கிருபையருளி வைகுந்தத்திற்கு யெழுந்தருளினார் ஸ்ரீமன்னாராயண சுவாமியானவர் பின்னடக்கும்கதையைச்சொல்கின்றேம்.

இதுசொல்-விருத்தம்-இ-ம்-கண்டா.

மடித்ததுவராகமென்றவார்த்தையைக்கேட்டுத்தாயார்
துடித்துநெஞ்சுழன்றுக்கொண்டைச்சோர்ந்துதன்கொங்கைமீதில்
அடித்துயென்மகனேயென்றுஅழுதவன்மார்பில்வீழ்ந்து
கொடித்துவளதுபோல்நெஞ்சங்குலைந்தவள் புலம்புவாளே.

இதுசொல்-புலம்பல்-இ-ம்-ஆகிரி

தாளம்-அடசாபபு.

பல்லவி

ஐயையோமகனே-மகனேயடா-ஐயையோமகனே.

அநுபல்லவி

ஐயையோமகனேயானும்வகையறியேன்
தெய்வமும்வஞ்சனைச்செய்ததுக்குறியேன் (ஐயை)

சரணங்கள்.

தரணியிலேழையும்மொருநொடியினில்சுற்றும்
சதுர்வலியுடையோனேமரணமும்வுனக்கிப்போ
வருமென்றுதெரியேனேவல்லஞ்சக்கொடியோனே (ஐ)

அண்டமுகடுமுட்டத்திண்டிறல்முடியாலே
அளர்ந்தாயேவளர்ந்தாயேமண்டலம்பாய்கொண்ட
தெண்டகாருரனேவனுமையுந்தளர்ந்தாயோ (ஐயை)

எத்தனைத்தபஞ்செய்துபெத்துன்னைவளர்த்தேனே
எண்ணமும்நான்கொண்டகனமுமங்கினவாச்சே
அத்தனேஅப்பனேஆண்மையும்வீணபோச்சே (ஐயை)

பையாவஞ்சுக்கும்வையகந்த்ரணம்போலப்
ப்ராயாசமிடர்ந்தாயோயிபபோது
கையிலாகாதவன்செய்கைப்போலவேநீயுங்
களைப்பட்டுக்கிடந்தாயே (ஐயை)

எட்டுமலைகளையும்வெட்டுபம்பரமாக்கி
எட்டுப்பாம்புகள்தாம்பாய்வெட்டுதிக்கிலீயும்
விட்டுச்சுழட்டியாட்டியெடுத்தாயெகனவீம்பாய் (ஐ)

செத்தாயென்றுகேட்டும்மைத்திருந்தேனிந்த
திரோகத்தைமுன்னாலே
செத்தாலிந்தபழிதித்துவாரரென்று
திகைக்குரோன்பின்னாலே (ஐயையோ)

திதிசொல்-விருத்தம்-இ-ம்-கண்டா

அப்பனேமகனேயுன்னை அருமையாய்வருஷம்நூறும்
கெற்பமாய்த்தாங்கிப்பெற்றேன்கீர்த்தியாயுலகையாள
வெப்பமேகொண்டுமாயன்விளங்கியேவுனையிப்போது
இப்புவிதன்னில்கொன்றாரிதற்குநானென்னசெய்வேன்.

வசனம்.

அப்பாமகனே யென்கண்மணியே வுன்னையென் கற்பத்தில்நூறு வருஷந் தாங்கிப்பெற்றும் வுன்னைவளர்த்தும் பூனைவாயிக்கிக் கிளியை யினாகொடுத்தாப்போலும் யிப்போது கொடுத்தேனே நான் யென்னமாய் மனந்துணிந்து யிருப்பேனடா யென்கட்டிமகனே,

பொதுவிருத்தம்-இ-ம்-ஆகிரி.

முல்லைநகைத்திதியிவ்வாரழுதுவாடி
மூற்சையாய்பூமிதனில்விழுந்தாளிப்பால்
சில்லிகையென்றவன்மனைவித்தானுங்கேட்டுத்
திகைத்தெழுந்துஅண்டமெல்லாம்வெடிக்கக்கூவி
வல்லினைசேர்கொங்கையின்மேல்மோதிக்கொண்டு
மயிர்விரித்துத்தலைமீதிலடித்துச்சென்று
பல்லியரும்புயக்கணவன்வீழ்ந்துசாய்ந்த
வருங்குருதிப்போர்களத்தேவருகின்றாளே

சில்லிகைபுலம்பல் தரு-இ-ம்-ஆனந்தபைரவி

தாளம்-ஜம்பை

கண்ணிகள்.

முறையேயோமுறையேயோ
மோகனனேமுறையேயோ
என்கணவாவென்கணவா
எப்படிநானிருப்பேனே
மங்கிலியம்நானிழந்து
மண்ணுலகில்தரிப்பேனே
தழையுதிர்ந்தமரமானேன்
தனிக்காட்டின்கலையானேன்
அழல்படிந்தக்கொடியானேன்
அன்னையில்லாமகவானேன்
எப்படிநானுயிர்சுமப்பேன்
எவ்விதம்திருவாகிப்பேன்
எப்படிநான்தனியிருந்து
என்னமென்றுமனஞ்சகிப்பேன்
கண்ணினீரால்கைகழுவி
கவலைக்கொள்ளக்கடவேனே
எண்ணுதும்மெண்ணியெண்ணி
இருந்துழலக்கடவேனே
மங்கையரோதங்கையரோ
மனமடியக்கடவேனே
பாங்கிமாரோதோழிமாரோ
பட்டுவிழக்காரணமோ
முறையேயோமுறையேயோ
மோகனனேமுறையேயோ

சில்லிகைசொல்-விருத்தம்-இ-ம்-முகாரி.

அசைவிலாப்புயம்படைத்தஅருமையென்கணவாயிந்த
இசையெலாம்வெல்வேனென்றுதந்திரமாய்சென்றவுன்னை

மைசயுடன்மாயன்கொல்ல மன்னில்வீழ்ந்திறத்துநீயும்
தசைவிழுந்துகிரஞ்சிந்தத்தரணியில்மாண்டாய்மன்னா.

சில்விகைசொல்—தரு—இ-ம்-மிபாகுவகதாளம்

அரசேயெந்தனரசேயென்
ருருயிற்றுணைவோனே
துணையேயெந்தன்துணையே
மனந்துணியேன் துணியேனே
தெய்வமேஐயோதெய்வமே
யென்னை நிகைக்கவைத்திடலாமோ
ஐயையோஐயோஐயையோஐயோ
அருகிபோல்படலாமோ
கட்டியணைத்தணைந்துமிக
வட்டமுலைகிரடிகவிமுத்தங்கொடுத்தாயே
இட்டத்தனைவினைந்துபொட்டிப்
பாம்புபோலென்னை யிடியவோவிடுத்தாயோ
அருமைத்துணையேயென்னொருமைத்
துணையேவிட்டுஆருயிருழல்வேனோ
பெருமைக்கென்மேல்லைத்தயொருமைக்கும்
யேங்கிரான்பித்துக்கொண்டுழல்வேனோ
ஆழிகள்சூழ அகிலயேழையுங்கொடியில்
அடியோடேபெத்தாயே
தாழுவானவர்க்கெல்லாம்யேழ்மையாகவுன்னாலே
தருபயந்தீர்த்தாயே
எனக்கெதிராரொன்றுமனக்குறையில்லாமல்
இருமாப்புக்கொண்டேனே
உனக்குயிர்தலயதில்வினக்குமாயனாலே
உருளக்கண்கண்டேனே
எட்டுமலைகளையுங்கொட்டைப்பாக்குப்போலே
எடுத்தெடுத்தாட்டுவையே )
எட்டுப்பாம்பையுமொன்றாய்த்தொட்டுமுடிக்கிரானை
யிடையினிற்பூட்டுவையே

வெள்ளைப்பண்ணிவந்துன்னைத்துள்ளிப்பாய்ந்தவினைவு
வீணென்றுக்கொண்டாயே
உள்ளத்தைச்சொன்னாக்கால்பிள்ளைக்கிக்கோபமென்ற
உறையெய்யாய்கண்டாயே
கண்டகுழிகள்வேணதுண்டென்றுசொன்னதுங்
காதிங்ல்கேளாயே
உண்டென்றதைமனதில்கொண்டாலேவுந்தன்
வல்லுயிர்வீணேமாளாயே

சில்லிகைசொல்-விருத்தம்-இ-ம்-கண்டா

என்னுயிர்த்துணைவாநீதான்யென்னைவிட்டிராந்தாய்ந்தோ
வுன்னைவிட்டினிமேல்ந்தவுலகத்திலிருக்கலாமா
மன்னியப்பகையோர்கொண்டமங்கையர்கைத்திடாரோ
வுன்னிடவாய்திரந்துவொருமொழிபகர்ந்திடாயோ

சில்லிகைசொல்-புலம்பல்

தரு-இ-ம்-புன்னாகவராளி-தாளம்-அடசாப்பு

கண்ணிகள்.

கட்டிநல்மெத்தையின்மேல்விளையாடிக்
கலவிக்கொடுத்தாயே     வந்த
இஷ்டமறந்துக்குருக்களத்திங்ல்
இறந்துபடுத்தாயே
கைகட்டிதேவர்வணங்கயிணங்கக்
கதிர்முடிபூண்டாயே     யிந்த
வையகத்தில்யாரும்யிகழ்ந்துநகைக்க
வனத்திங்ல்மாண்டாயே
ரத்தினசிங்காதனமீதிலராசாளும்
நலமினிக்காண்பேனோ     யினி
செத்துப்பிறந்தாலுமுன்னாறுபோகந்
செழிப்பினிற்பூண்பேனோ

சிங்காதனமுமணிமண்டபமும்
சிறப்புகள்வாங்காதோ யிப்போ
தங்குந்தவத்தாற்பிறந்தவுன்மக்கள்
தனித்தனியேங்காதோ
இந்திரானவர்சூழவென்வாசலில்
இன்றைக்குவாராயோ வந்து
எந்தனைக்கிட்டவழைத்தொருவாய்முத்தம்
இப்போநிதாராயோ
எந்தவுலகத்திலெங்கேபிறந்தாலும்
அங்கேநான்வாரேனே ஞானும்
அந்தவுலகத்தில்வந்துயணந்துன்னை
அன்புடன்சேரேனே
எத்தனைக்கோடிதவங்கள்புரிந்தாலும்
என்போற்கிடைக்காயே மைத்த
ரதிப்பெண்வனுமையிலும் வந்தாலும்
மைத்துப்படைக்காயே
பத்தரைமாத்துப்பசும்பொன்கலத்திநிற்
பாலமுதூட்டுவையே அப்போ
மெத்தச்செருக்கினானுண்ணைமற்போநால்
விளையாட்டுங்காட்டுவையே

இரணியன்சொல்–விருத்தம்–இ–ம்–காம்போதி.

திதிமகன்மனையாளானச் சில்விகையமுதாளிப்பால்
சதிரிறணியனுங்கேட்டு தணல்மெழுகதுபோலாகி
விதிவசமிதுவோதம்பி வென்பிநிவாமேமென்று
கொதிசொளுடனத்தனுகிக் குலைந்தவன்புலம்புவானே.

புலம்பல்–தரு–இ–ம்–பைரவி–ஏகதாளம்

தம்பியோபடாதம்பியோசீ
தனியேபிறந்தாயே

நம்பினேனுன்னை நம்பினேனென்னை
நடுவில்மறந்தாயே
உந்தனால்செல்வம்வந்துதென்றேநான்
வுள்ளமகிழ்ந்தேனே
எந்தன்வாயினாலுந்தனைப்போவென்று
யிருஞ்செல்வமிழந்தேனே
வனத்துமான்சிங்கந்தனைப்போலே
மாயவனடித்தானே
சினத்தமாயவனையினத்துடன்கொல்லாமல்
செங்கைவில்பிடித்தேனே
கொள்ளைகொண்டுவந்ததுள்ளுயிரோமனங்
குலைசெய்துக்கொண்டானே
வள்ளலேயெமக்கள்ளனுயிரின்னம்
வாங்காமல்விண்டேனே
ஏதுக்கோயிந்தநீதுக்கோநீயும்
யெழுந்தாய்மலைபோலே-வுந்தன்
பாதத்தாளுக்கொவ்வாததேவர்க்கும்
பயம்போச்சேயினிமேலே
பண்ணியாய்வந்துகொண்ணவெம்மாயனைப்
படுக்காமல்விடுவேனோ
நண்ணியமாண்மையும்யெண்ணமுங்கெடுக்காமல்
நானுயிர்கொடுப்பேனோ
சொன்னசொல்லதுவென்னுவிலிருக்கவே
சுருட்டினாய்நெடுபூமி-வுன்னு
தாண்மையும்ஆண்மையுந்தானெங்கே
யொளித்ததோவென்றன்சாமி
மந்திரிபேதம்பியென்றுணையேயுயிர்
வாழேனேவாழேனே
சந்திரமுகசுந்தரனேகூடச்
சாகாமற்போனேனே

இரணியன்சொல்-விருத்தம்-இ-ட்-சாவேரி

வீரம்பேசியேயுன்னையிந்த
  வினைக்குள்ளாக்கிவைத்திடவோ
ஓரஞ்செய்யத்துணிந்தவர்போல்
  வுன்னையடித்தேனென்செய்வேனே
பாரமறியாததம்பியென்று
  பாராதஷ்டதிசைகள்வென்று
வாருமெனவேயுனையனுப்பி
  யாளக்கொடுத்தேனென்னசெய்வேன்

இரணியன்சொல்-விருத்தம்-இ-ம்-சாவேரி

செடியில்நுழையுமான்கையால்
  சிங்கம்விழுந்துமாண்டதுபோல்
நெடியமாயன்கையாலேநீயோ
  மடிந்தாயென்னசெய்வேன்
கொடியமாயன்றனைக்கொல்லக்
  கோபமில்லாதவன்போல
நெடியவில்லைக்கைபிடித்து
  நின்றேன்பாவியென்னசெய்வேன்

இரணியன்சொல்-விருத்தம்-இ-ட்-சாவேரி

கொள்ளைகொண்டென்னுயிர்தனையே
குலைசெய்திடவேதுணிந்துவந்த
கள்ளனமனைக்கொண்டுவந்துக்
கடிதாயிப்பகையைமுடிப்பேன்
வள்ளளெனதுதம்பியிந்த
வாதைவருமென்றறியாமல்
துள்ளியேழுமலைபோலே
துடித்துவிழுந்துமடிந்தனையே

இரணியன்சொல்-விருத்தம்-இ-ம்-சாவேரி

மாதுதவிக்கத் தாய்தவிக்க
மனந்தளர்ந்துயான் றவிக்க
தீதுக்காளாய்நீதவித்து
ஜெகத்தில்விழுந்துமடிந்தனையே
வேதனஞ்சமுனிவரஞ்ச
விளங்குந்தேவருனக்கஞ்ச
வாதனைச்செய்மாதனைப்பிடித்து
வுயிர்மடித்துபகைமுடிப்பேனே

இரணியன்சொல்-விருத்தம்-இ-ம்-தோடி

தாணிந்தவகைபுலம்பித்தேரிக்கொண்டு
தாய்பாதந்தொழுதெழுந்துமுகத்தைநோக்கி
தேனுந்துகுழல்மடவாள் தம்பிதேவி
சில்லிகையாள்முகம்நோக்கித்தெரிந்திலீரோ
ஏனிந்தக்கவலையுமக்கெனக்கேயாகும்
மெடுத்தவுடலிருப்பதுவேயிருத்தல்பொய்யே
யானிந்தப்பழிதீர்ப்பேன் றுயர்நீரொன்று
நாடுவானுண்மைசொல்லிக்காட்டுவானே

இரணியன்சொல்-தரு-இ-ம்-கல்யாணி-தாளம்-ஆதி

பல்லவி

ஏதுக்குவருந்துகிறாயம்மாநீ
ஏதுக்குவருந்துகிறாய்

அநுபல்லவி

ஏதுக்குவருந்துறாயிடர்ந்தமாயனுக்கும்
வாதுக்குநானிருக்கமடிந்தசேயனுக்கு
வருமோபலன்-றருமோ-அவன்
வல்லாண்மைதிடுக்கேனேவல்லாண்மைமுடுக்கேனே (ஏது

சரணங்கள்.

எடுத்தப்போதேயுடல்விருப்பதேநாட்டம்
எண்ணிப்பாற்குங்காலேவிண்ணின்பொம்மலாட்டம்
அடுத்தசுத்தமும்வாழுந்தொடுத்தசந்தைக்கூட்டம்
அநித்தியப்பொருளெனக்குநினைப்பதேவாட்டம்
ஆமோ-அழுப்போமோ-கொன்னற
ஆழிமாயனுக்கென்னால்தாழ்வல்லோயிநிசொன்னால் (ஏது)

வெறுத்துக்கடலிற்பொருள் பிரித்துப்போட்டாலும்
விரும்பிவைத்தவன்வீடுதிரும்புமென்மேலும்
நெறித்துக்கண்விழித்துக்கொண்டொருத்துக்காத்தாலும்
நீங்கும்பொருள்மறைந்துநீங்குமெவ்விதத்தாலும்
நிசமே-விதிவசமே-யென்று
நினையாமல்மனம்நொந்துதநியாயிருந்துனைந்து (ஏது

கண்ணிவிழும்படையோயெண்ணியோர்பிரவு
கலங்கியழுஞ்சேவல்புலம்பியதுவுரவு
நண்ணியத்தையும்வேடன்கொண்ணுனையாவு
நமக்கந்தப்படியல்லோவகைக்குமிவ்வுரவு
நலமோ-யென்னபலமோ-யிப்போ
நான்சொல்லும்வகைவிட்டுயேன்சும்மாவோலமிட்டு (ஏது)

திதிசொல்-விருத்தம்-இ-ம்-மூகாரி

வினையதுவினைக்குத்தப்பாமெய்த்தவம்புரிந்துநின்ற
முநிவருந்தந்தையாமொன்முகத்தையேயெடுத்துப்பார்த்து
அணிதமாயுக்தன்பாலன் அரியினால்மடிவானென்று
புனிதர்சொன்னதுமெய்யாகிப்போனதையரிந்தேனப்பா

வசனம்:

கேளும்மகனே உமது தந்தையானவர் யெனக்குமுன்னுதாகவேஅரியினால் மகன்யிரந்துபோவானென்று சொன்னவார்த்தையை நான் மெய்யன்றுநம்பாமல் பொய்யென்றிருந்தேன் அந்தவார்த்தையிப்போதுதி

ஷ்டாந்திரமாய்கண்ணால்கண்டேன் இப்போதுயென்வயர் துடிதுடித்து பதைபதைக்குது இதற்குயென்னசெய்வேன் மகனே.

இரணியன்சொல்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி

தேத்திமிக்தவகையாகித்தம்பிக்குள்ள
 செய்கடனைமுடிப்பித்தானப்பால்வேதம்
போத்தியேவுலகிலுள்ளஅவுணராலும்
 பொருந்தியதேவர்களாலும்பூதத்தாலும்
சாத்தியவெண்படையாலும்யாவையாலுஞ
 சாகாமல்வரம்பெறுவேனென்றுதேரி
ஆத்லருந்தபஞ்செய்யப்போவமென்று
 அமர்ந்திட்டான்கொலுவதனிலிருந்திட்டானே.

இரணியன்சொல்-விருத்தம்-இ-ம்-தோடி

அம்புவிநடுங்கவாழும்அமைச்சரோசேளுமெந்தன்
தம்பியைசிதைத்தவெந்தத்தண்டுழாயரியைக்கொல்ல
இப்பயாய்தவங்கள்செய்யயேகிடவேணுமிப்போ
செம்பவழிதழாளெந்தன்றேவியையழைப்பிபீரே.

வசனம்.

கேளுங்கள் மந்திரிமார்களே யெனதுதம்பியாகிய யிரணி யாக்கதனைக்கொண்ண அந்தஅரியை நான்கொண்ணு யென்பகையைத் தீர்த்துக்கொள்ளவேண்டியது அதற்காக யிப்போதுதபஞ்செய்யவேண்டியது ஆகையால் யெனதுதேவியாகிய லீலாவதியை அழைப்பியுங்கள் மந்திரிமார்களே.

மந்திரிசொல்விருத்தம்-இ-ம்-மத்தியமாவதி

தாவியபுலிப்போற்சீறிதானவர்நினைந்திதன்னாளும்
மேவியவரன்மனைக்குள்விளக்குங்கட்டியனேகேளாய்
ஆவலாயுலகனைத்தும்ஆண்டிடும்யிரணியன்றன்
தேவியைறைத்தாரொன்றுசெப்பிமீவரச்செய்வாயே

வசனம்.

கேளடா கட்டியக்காரா யிந்தவுலகத்தையெல்லாம் வொருகுடை யிலாளப்பட்ட யிரணியமகாராசன் தனநுதேவியாகிய லீலாவதி யம்மனை தனதுசமுகத்துக்கு அழைத்தாவொன்று சொல்லி அதிசீக்கிரமாய ழைத்துக்கொண்டு வாடாகட்டியக்காரா

கட்டியன்சொல்-விருத்தம்

இ-ம்-கல்யாணி

அமைச்சரோதேவர்சொன்ன
ஆக்கினைப்படிக்கிச்சென்று
இமையவர்போற்றுமாதை
இங்குவந்திடச்செய்வேனே.

வசனம்

அப்படியே வொருநொடியில் அரசன் ஆக்கினைப் படிக்கி யெனது தாயாகிய லீலாவதி அம்மனை யிங்கு வரும்படியாய் செய்கின்றேன்சுவாமி.

லீலாவதிவருகிற-சீசபத்தியம்

கதிரொளிசுட்டிநறையளக்மதில்நிசுநிகென
காதிலிடுங்கம்பலும்பளபளன்ன
மதிநுதற்றிலர்தமூக்குத்தியெழில்மாணிக்க
மாலைமகிழ்பார்பிநில்மதாணிமின்ன
சதிர்பாவுத்தங்கவளைகங்கணமுமாடவே
தாழ்வானகைமிகத்தயங்கிவீச
அதிமெலினயிடைதங்கவொட்டியாணமின்னவே
அணுபதசிலம்பசைந்தாற்பரிக்க
அதிவிதரணசாலி-பாக்கியசாலி
அவனியோர்தினம்பாவிரும்விசாலி
பதியாளுமிரணியனன்னவனதேவி
பரிவுடையதிகலீலாவதிவந்தாளே

தரு-௫-ம்-தோடி-தாளம்-அடசாப்பு

பல்லவி.

வந்தாளே-ஸ்ரீங்காரலீலா
வதியும்வந்தாளே

அநுபல்லவி,

செந்தூரத்திலர்தசெந்திமிகென்னவே

சரணங்கள்

பூரணைச்சந்திரோதயவர்ணம் பளபளென்னவே-படீர
ஆரம்பரிமளகொங்கைத்தளதளென்னவே (வந்தா)

தண்டைவெண்டையஞ்சதங்கைக்கலகலென்னவே-யிரச
தொண்டைவாய்மிகுமதுரங்குமுகுமென்னவே (வந்தா)

கந்தங்கஸ்தூரிபுநுகுவாசம்வீசவே மலர்
கொந்தளகந்தனில்வண்டுராகம்பேசவே (வந்தா)

அன்னநடைநடந்துஅன்பனைத்தேடி மிகு
கன்னல்மொழிவதனக்கணவனைநாடி (வந்தா)

முதல்மந்திரிசொல்-விருத்தம்-௫-ம்-நாட்டை

அன்னையேபோற்றிபோற்றிஅமுர்தமாமொழியேபோற்றி
கன்னியர்புகழவந்தகற்பினுக்கரசேபோற்றி
மன்னியவுலகையாளும்மன்னவன்றேவியாகி
தன்னிகரிணையில்லாதத்தாயேநின்றாள்கள்போற்றி

லீலாவதிசொல்-விருத்தம்-௫-ம்-சங்கராபரணம்

வணங்கியேமன்னவர்போற்றமாதர்கள்மறையிற்சூடுஞ்
மணங்கமழ்மாலைபூண்டமதியுள்ளவமைச்சமாரே
இணங்கமழ்வாள்கையேந்தும்சீள்சபைதனிலுள்ளோருக்
குணம்புகழ்கொலுவிலென்றும்குறைவிலாதழைத்துவாழ்வீர்

உ-வது-மந்திரிசொல்-விருத்தம்-இ-ம்-சாவேரி.

உக்றமித்துடனெதிர்ப்போற்குகந்தவெப்புலிபோற்சிறி
அக்ரமித்துடல்சிதைக்குமாண்மைகட்டியனேகோவாய்
எக்குலமதிக்குமன்னன்இரணியன்றேவியான
மைக்குழல்மாதிருக்கமகிழ்ந்துஆசனம்பளிப்பால்

வசனம்:

வாரும் ஆசாரவாசல் கார்க்குங்கட்டியக்காரா நமதுயினையவராகிய இரணியமகாராசன் றேவியாகிய லீலாவதியம்மன் வீற்றிருக்கத் தக்க, தாய் திவ்வியமான ஆசனங்கொண்டுவந்து போடும்பிள்ளாய் கட்டியக் காரா.

கட்டியன்சொல்-கவி

நேசமாய்நன்னெறி
நிகழ்க்துமந்திரிகளோ
ஆசனங்கொடுவந்
தலித்தனனையா.

லீலாவதிசொல்-விருத்தம்

இ-ம்-ஆனந்தபைரவி

மன்னவாபோற்றிபோற்றிமகிதலத்தாசேபோற்றி
தன்னிகரிணையில்லாதத்தலைவனேபோற்றிபோற்றி
நன்னயமாகத்தேவர்நயந்தழைப்பித்தசேதி
இன்னதென்றியம்புவீருன்னிணையடிக்கமலம்போற்றி

வசனம்.

வாருமென் றனைக்குகந்த பிராணநாதா தேவரீர்மனதுகந்து அந் தப்புரத்திலிருந்த வென்னையழைப்பித்த காரியஞ் சொல்லும்சுவாமி

இரணியன்சொல்-விருத்தம்

இ-ம்-தேசிகதோடி

இப்புவிமகிழவந்தவென்னிடதேவியேகேள்
ஒப்பிலாவெனதுதம்பிவுயிர்வதைச்செய்தமாயன்

தப்பிலாதவனைக்கொல்லத் தவஞ்செய்துவருகிறேன்
மெய்ப்புடனரண்மனைகருள் யுகந்துநீயிருந்திடாயே.

வசனம்

கேளும்மென் பிராணப்பதமான பெண்ணே லீலாவதியே யென்றம்பியாகிய பிரணியாக்கதனைக் கொன்ன அந்த அரியைப்பிடித்து நான் கொல்லவேணும் ஆகையால் அதற்குத்தவஞ்செய்து வேண்டிய வரங்களைப்பெற்றுக் கொண்டுவருகிறேன் அதுபரியந்தம் நீபோய்நமதுஅரண்மனையில் வெகுபத்திரமாய் வீற்றிருப்பெண்ணே பிராணநாயகி.

லீலாவதிசொல்-கவி.

இருந்திடவிடைகொடுத்த
இறைவனேதேவர்சென்று
திருந்தவேதவங்கள்செய்து
சீக்ரமாய்வருகுவீரோ

இரணியன்சொல்-விருத்தம்

இ-ம்-மத்தியமாவதி.

சிலையுடன்வாள்கையேந்தித்திகழ்கொலுவதனில்நாளும்
இலகிபவனைச்சரோயான்யேகிநற்றவமேசெய்து
கலமுடன்வாரமட்டும்நம்மிடதேசமெல்லாம்
தலைமையாயரசுசெய்துதகமையாயிருந்திடோ

வசனம்.

கேளும்முதன்மையான துன்முகமந்திரி நான்போய் தவஞ்செய்து வருகிறவரைக்கும் நம்முடையதேசமும் ஆனைசேனை பரிவாரங்களும் இவைகளுக்கு வொருகுறைவுவாரமல் சுபட்சேமமாக வைத்துக்கொண்டு அரசுபுரிந்து வாரும்மந்திரி.

மந்திரிசொல்-விருத்தம்-இ-ம்-தன்னியாசி

தகமையாயவுணர்கோனேர்தானவர்கடுங்கியேங்க
புகிமையாய்வாழுகின்றமன்னர்மன்னவனேபோற்றி

செகதலத்தவுணரெல்லாஞ்சீருடன்றழைத்துவாழ்க
அகல்படுந்தவஞ்செய்திப்போ அண்ணலேவருகுவீரே.

வசனம்

வாருமையா சுவாமியிரணிய பூபாலகா தமதுகுலமானது வோங்கி த்தழைந்துவாழ்கவும் நம்முடையப் பகையாளியாகிய அந்தமாயனைக்கொல்லவும் தேவரீர்சென்று தவஞ்செய்து வரங்களைப்பெற்றுக்கொண்டுவாருமையா சுவாமி ராசபரமேஸ்வரா

பொதுவிருத்தம்-இ-ம்-கும்பகாம்போதி:

மன்னவனிரணியன்றன்
மனமகிழ்ந்திருந்தானிப்பால்
தன்னுயிர்த்துணைவன்மாயத்
தையல்சில்லிகையாதென்பாள்
பொன்னவன்பேவுமாயன்
பூஞ்சரணடைவேனென்று
உன்னியத்தவமேசெய்ய
உள்ளமுமேற்கொண்டாளே

வசனம்

அகோதெப்படியென்றால் யிரணியமகாராசன் தன்றம்பிக்குரியக்கடமையெல்லா முடித்தும்பின்பு யாவருங்கண்டு களிகூறத்தக்கதாய்தவஞ்செய்யப்போக வேணுமென்று அரண்மனைக்குள்சென்றான் இப்பால் யிரணியாக்ஷன் மனைவியாகிய சில்லிகையென்பவள் தன்கணவனைக்கொண்ண ஆதிவாராகமூர்த்தியின்றுடைய திவ்யபாதத்தில் யானும்போயடைவேனென்று மனமுருகிச்செய்துக்கொண்டுத் தவஞ்செய்ய வருகிறவிதங்காண்க

சில்லிகைசொல்-விருத்தம்-இ-ம்-முகாரி

அடியவருக்கெளியவனுயருளேசெய்யும்
ஆதிநாரணன்பாதம்வணங்கிடாமற்
கொடியவனுர்யென்மகுணனிறந்தானந்தோ
குவலயமுண்டுமிழ்ந்தகோலசெவ்வாய்ரூபன்

நெடியவனைப்பணிந்துமிருவாகமீளாமுத்தி
நெறியடைவேனென்றுமனத்துணர்வுகூர்ந்து
துடியிடைசில்லிகைமாதுதவத்தாளாகிச்
சுந்தரவேடம்புனைந்துவருகின்றளே.

தரு-இ-ம்-புன்னாகவராளி-தாளம்.ஆதி

கண்ணிகள்

பூங்குழல்தனைவிரித்து-மேலே
புனைந்திடுஞ்சடைதரித்து
தாங்கியதுயில்விடுத்து-யிடையினிற்
தகுந்தமறவுரியுடுத்து
நெத்தியிற்றிலர்தபொட்டும்-திறந்து
நிறைந்திருநாமமிட்டும்
பத்தியின்மனம்திருத்தி-ஐம்புலப்
பகைதனைவேரறுத்து
அட்டாக்காமபேணியுறிவினி
லதிலேமனம்வூணி
எட்டாவெளியோடி-அங்கே
இருந்திடும்பொருள்நாடி
தன்னைத்தானேமறத்து-சில்லிகை
தவத்தின்மேலேமுனைந்து
இன்னமிந்தஞாலந்-தன்னி
இருந்தாளேநெடுங்காலம்

பொது விருத்தம்-இ-ம்-ஆசிரி

சங்கையைத்தவிர்த்தேயந்தத்
தையல்சில்லிகைமாதென்பாள்
அங்கைகளிரண்டுங்கூப்பி
அவர்சடைமுடிமேற்சேர்த்து
கங்கைவாழ்பாதந்தன்னைக்
கருத்தினிலிருத்திக்கொண்டு

தந்கியேசெடியகாலந்
தான்மகிழ்ந்தேத்துவாளே

சில்லிகைசொல்-தேவாரம்.

புரர்தனப்பொருளேபோற்றி
பூமகள்நாதாமோநற்
தாரதல்மண்டபிண்டந்
தன்னையுண்டுமிழ்ந்தாய்போற்றி
கரானினைவதைத்தன்பாகக்
கறியையாட்சித்தநாதா
அராவனைத்துயில்விட்டென்பால்
அரிஅரிவருகுவீரோ

சில்லிகைசொல்-தரு- இ-ம்
பூரிகல்யாணிதாளம்-ரூபகம்

அச்சுதாமறைவுச்சியின்மேவிய
ஆனந்தனேசரணம்சரணம்
பச்சைமாமுகில்வண்ணனேகண்ணனே
பைந்துளபாசரணம்சரணம்
கச்சைமால்கறிமெச்சிடவந்தருள்
காரணனேசரணம்சரணம்
இச்சையாம்பிறவிக்கடலறுத்தேநீ
யின்றெனையாள்சரணம்சரணம்
இந்தக்காயமெடுத்துச்சுமப்பதில்
யென்னப்பயன்சரணம்சரணம்
வந்துவந்துபிறந்திறவாமல்
வரந்தருவாய்சரணம்சரணம்
வுந்தன்பாதம்வணங்கவிணங்க
வுகந்தருள்வாய்சரணம்சரணம்
சுந்தரானந்தாஆதிவராகா
சோதியேசரணம்சரணம்

பொதுவிருத்தம்-இ-ம்-சேதாரகௌளம்.

மக்களைமறந்தாள்மக்கள்
வருந்திவீழ்ந்தழுதல்காணாள்
கைக்கிளிமறந்தாள்கிளிளைக்
கனிந்தழுநிறங்கல்காணாள்
ஒக்கலைமறந்தாள்வொக்க
வுடன்வந்துசூழ்தல்காணாள்
முக்கணனையந்நீர்த்த
முதல்வனைமறக்கிலாளே

வசனம்

தான் பெற்றமக்களை மறந்தவளாய் அந்தமக்கள்வந்து பாதத்தி லேவிழுந்து புலம்புகுறத்தையுங் காணாதவளாய் தான்வளாத்தக்கிளியை மறந்தவளாய் அந்தக்கிளியானது அழுது புலம்புகிறத்தையும் பாராதவளாய் வுயிற்குயிராகிய சுற்றத்தார்கள்பக்கத்தில் சூழ்ந்துகொண்டிருப் பதையும் காணாதவளாய் மூக்கண்ணனாகிய பரமசிவத்துக்குபிட்சையை த்தவிர்த்தருளிய ஸ்ரீமன்னாராயணருடைய திருவடியை மறவாத பிறக் த வித்தியோடுங்கூடிநாள் சில்லிகையாது.

பொதுவிருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி

உண்பதுமறந்தாள்செம்பொன்
னொளிமணிரத்னவுஞ்சல்
எண்பதுலட்சமாதா
யிருந்துதாலாட்டிப்போற்றும்
நண்பதுமறந்தாள் தன்னை
நாடுவோற்கருளேசெய்யுங்
கண்பதுமாயன் திவ்ய
கழலிணைமறக்கிலாளே.

வசனம்

உண்பதை மறந்தவளாய்ரத்தின உஞ்சலிலே தாலாட்டப்பட்டவெ ண்பது லட்சமாதாகிய பெண்களையு மறந்தவளாய்தன்னைநாடிப் பணிய

ப்பட்ட பேர்களுக்கு கருணைகடாட்சம்பொருந்திய ஸ்ரீமன்னாராயணனை மறவாதசிந்தையையுடையவளா யிருந்தாள்கில்லிகைமாது

நாரதர்சொல்-விருத்தம்-இ-ம்-பூரிகல்யாணி

ஈங்கலனிந்தவாரோயெழில்பெருந்தவமேசெய்து
பாங்குடனிருந்தாளிப்பால் பலவிதாரகத்தோடு
தூங்கிசைவீணைமீட்டிச் சுருதிநாரணனைப்பாடி
ஆங்குநாரதனார்தாமும் அன்புடன்வருகின்றாரே.

தரு-இ-ம்

அங்கஜனைற்தன்மஹ்ரீங்காரம்
நித்தியானந்தமூகதம் பஜேபஜே
பங்கஜநேத்திரம்சங்கபுஜங்கம்
பரமகல்யாணம் பஜேபஜே
மாதவகேசவஸ்ரீவைகுந்தம்
மாயவனுமம் பஜேபஜே
காதவித்துகளாதம பாபவி
நாசவிலாசம் பஜேபஜே
அஷடாட்சரவைபோக்கியபரம்
ஆதிமத்தியாந்தம் பஜேபஜே
சிருஷ்டித்திதிசம்பாரவிநோதம்
சென்னைவாசம் பஜேபஜே
சாந்தாகாரப்புஜகசயனம்
சர்வபூதேசம் பஜேபஜே
ஆக்கிரியமந்திரம்அரிநாராயணம்
அகிலாண்டதாரம் பஜேபஜே
வித்தியாதரகின்னரர்சுரகணிதம்
வேணுநாதப்ரியம் பஜேபஜே
சித்தபவுத்திரகளங்கரிமாயம்
சோதிரப்புயஅரி பஜேபஜே
கங்காபாதம்சாருவவெளமம்

கருடத்துவஜம் பஜேபஜே
பங்களீசுபகரகுஞ்சரொட்சகம்
வானரசுரேசம் பஜேபஜே
பீதாம்பராதாம்கவுஸ்துவாபரணம்
பிறந்தாபிரியம் பஜேபஜே
ஆதாரம்ஸ்ரீமுகஷ்டயவாசம்
ஆதிமத்தியாந்தம் பஜேபஜே
தத்துவசுரூபம்லட்சுமிகாந்தம்
சாமளவர்னம் பஜேபஜே
பக்தசபாபதிபணிதம்கவிதம்
பாலன்முகுந்தம் பஜேபஜே

நாரதர்சொல்விருத்தம்- இ-ம்-மத்தியமாவதி

தன்றவிழ்குழலாளான சில்லிகையென்னுமாதே
ஊன்றியவுருதிப்பேணி யுருதபஞ்செய்கின்றாய்நீ
தான்தனிநினைந்ததேவா சங்கரனயன்மால்தானோ
யானிதையறியக்ன்று யகமகிழ்ந்துரைசெய்வாயே

வசனம்.

கேளும்பெண்கள் சிகாமணியே நீமகாவிரதத்துடனே தபஞ்செய்யத்துடங்கினையே அத்தவமானது பிரமதேவனை நோக்கிச் செய்கிறதும் பரமசிவனைநோக்கிச்செய்கிறதும் ஸ்ரீமன்னாராயணனை நோக்கித் தபஞ்செய்கின்றதும் யெனக்குயாதொன்றுந் தெரியாம லிருப்பதால் அதனை யெனக்குத்தெரியச்சொல்லுஞ் சில்லிகையாதே.

சில்லிகைசொல்-விருத்தம்-இ-ம்-மோகனம்.

பரமனர்தானுமல்ல பங்கயன்தானுமல்ல
விரவுமென்புருஷன்றன்னை வீடுகொண்டுய்க்கவேண்டி

அரவணை துயிலுமாயன் அவ்ரடி நினைந்துயானுந்
திறமுடன் றவமேற்கொண்ட சேதியீதறிந்திடீரோ.

வசனம்

வாருமையா நாரதமுனிவரோ யான்பரமேஸ்வரனையும்பிர்மதேவனையும்நினைந்து தவஞ்செய்யவில்லை யென்னுடைய பிராணநாயகனை ஸ்ரீமன்னாராயணரானவர் வராகஅவதாரமாகி சங்காரஞ்செய்தபடியினாலே அவர் நரகத்துக்கு யேதுவாகினார் ஆகையால் அவர்முத்திமோட்சம் அடையும்படியாக அந்தஸ்ரீமன்னாராயணரை நோக்கித்தவஞ் செய்கின்றேனையா சுவாமி நாரதமஹாமுனியே.

நாரதர்சொல்-விருத்தம்-இ-ம்-தன்னியாசி

சில்லிகையுன்சொல்லாலே சிந்தைமகிழ்ந்தேனிப்போ
நல்லதேயுனக்குமந்தநாரணனருளேசெய்வார்
சொல்லுவன்கேள்நீயின்று சுருதியின்முடிமேல்நின்ற
வல்லமந்திரத்தைநெஞ்சில் மறந்திடாதிருந்திடாயே

வசனம்

வாருமம்மா சில்லிகையேவுனக்கு அந்தஸ்ரீமன்னாராயணர் அநுக்கிரகஞ்செய்வார் ஆகையால் வுன்தவத்துக்கேத்த அஷ்டாட்சர மந்திரத்தை நீ யெத்தேசகாலமும் மறவாமல் தியானஞ்செய்துக்கொண்டிருமம்மா சில்லிகையே.

சில்லிகைசொல்-தரு-இ-ம்-கேதாரகௌளம்

தாளம்-அடசாப்பு.

பல்லவி

நாராயண அரியே-ஸ்ரீமன்
நாராயண அரியே

அநுபல்லவி

நாராயண அரியென்மனமுருகியே
பாராயணஞ்செய்யப் பரிவுடனெதிர்வாரும் (நாராய)

சரணங்கள்

தாமோதரப்பொருளே-கிருபைதரத்
தானுகந்தெழுந்தருளே
சாமளவர்ணனேசர்வதயாநிதி
பூமனையுதவியவோமெனும்பொருளே (நாராய)

திருவளர்மணிமார்பா-துதிசெய்யுந்
தேவருக்கொருநிபா
மருவுயிர்க்தாவனவாசியேநீகதி
தருமெந்தாயிநிதாகவேயிதுதநி (நாராய)

அஷ்டாட்சரமுடிவே-துதித்தவர்க்
கமர்ந்திடும்பழவடிவே
துஷ்டசம்மாரனேசுத்தபவுத்திர
இஷ்டருக்கிரங்கியேயிகபாமுதவிய (நாராய)

சில்லிகைசொல்- விருத்தம்

இ-ம்-பைரவி

நாரதர்மவிலக்கேட்டு நாலிரண்டாமெழுத்தைத்
தாரணைச்செய்துக்கொண்டு சாத்தியமொழிதப்பாமல்
காரணமிதுவேயென்று கருத்தொருவழிபாற்சென்று
ஆரணமுடிமேல்நின்ற அமலனைப்பணிந்திட்டாளே

வசனம்

நாரதமுனிவர்சொன்ன வார்க்கியந்தப்பாமல் அஷ்டாட்சரத்தையொருமைப்பாடுக்கொண்டவளாய் வேதமுடிவிலே விளங்காநின்ற சைதன்னியமான ஸ்ரீமன்னாராயணமந்திரத்தை செபித்துக்கொண் டிருந்தாள்.

பொதுவிருத்தம்-இ-ம்-நாட்டை

கனியொருமாதந்தன்னில் கருத்திருநாளேநின்றாள்
நுனிசருகொருமாதந்தான் நான்குநாள்வுகந்துநின்றாள்

பனிசெய்நீரொருமாதந்தான் பரிந்தெட்டுநாளேதின்றாள்
அனலிணையோர்மாதந்தான் ஆறுநாள்பரிகிநாளே

வசனம்.

ஒருமாதம் இரண்டுநாள் பண்டுபலாதிகளைத்தின்றாள் வொருமாதம்நான்குநாள் வுதிர்ந்தசருகுகளைத்தின்றாள் வொருமாதம்யெட்டுநாள் பனிநீரைக்குடித்தாள் வொருமாதம்பனிரெண்டுநாள் வாயுவைபட்சணஞ்செய்து காலத்தைக்கழித்தாள் லீல்லிகைமாது

பொதுவிருத்தம்-இ-ம்-கல்யாணி

இப்படிநாலுமாதம் யெழில்பெருந்தவமேசெய்து
ஒப்புடனைந்தாமாதம் வொடுங்கவேமூச்சடக்கி
சொற்பொருமூலாதாரந் துடர்ந்தறுவீட்டினூடே
கற்பினைத்தெரிசித்தப்பால் கதிர்மதிமேற்கொண்டாளே.

வசனம்

இவ்விதமாய் நாலுமாதந்தவஞ்செய்து ஐந்தாமாதம் பிராணவாயுவைவொடுக்கி மூலாதாரம் சுவாதிஷ்டானம் மணிபூரகம் அனாகதம் விசுத்தி ஆக்கினேயம் யென்னும் ஆராதார தெரிசின அடுக்குகளுங் கடந்து அப்பால் சந்திரமண்டலம் சூரியமண்டலம் அக்கினிமண்டலமூங் கடந்து துரியம் துரியாதீதமென்னும் அனுபோகியானவளாய் பரப்பிர்ம்மஸ்வரூபமான சோதிரம்மியமாய் விளங்காநின்ற ஸ்ரீமன் னாராயணருடைய ஆனந்தபிர்த்தங்களைத்தெரிந்து வொருமைப்பாடு கொண்டவளானாள் லீல்லிகைமாது.

பொதுவிருத்தம்-இ-ம்-தோடி

கொண்டவளிருக்குமந்தக்கொழுந்தபக்தன்னைநாடித்
தண்டுளமணிந்ததோளும் சக்கரப்படையுங்கையில்
குண்டலமணிந்தகாதுங் குளிர்மதிமுகமுந்தோன்ற
அண்டர்நாயகனாரதி வராகமால்வருகின்றாரே.

மாயன்வருகிற-தரு-

இ-ம்-பைரவி-தாளம்-ஆதி

கண்ணிகள்

திருவளர்மணிமார்பனுர்-வுலகங்கள்
செழித்தப்பங்கயனுர்
அருமறையின்முடிநாதனுர்-சங்குசக்ர
மங்கையணிமதுசூதனுர்
கரியமுகல்வடிவாகனுர்-மிக்கமுகக்
கமலனுதிவராகனுர்
கருடவாகனமேரியே-சில்லிகைமுன்
கருணைதாவந்துமேவினார்

பொது-விருத்தம்-இ-ம்-சங்கராபரணம்

கண்டபோதெழுந்தாளந்தக்
 கருணைவாருதியின்மூழ்கி
அண்டர்நாயகன்பால்வந்து
 அள்ளியேவிழுங்குவாள்போல்
தெண்டனிட்டிறைஞ்சாளாகி
 செங்கைகள்சிரமேற்கொட்டி
எண்டிசையெங்குமோடி
 யின்பக்கூத்தாடினாளே

வசனம்

இவ்விதமாகவந்த ஆதிவராகசுவாமியை வெளியினில் கண்டெழுந்தவளாய் கருணைசமுத்திரத்தில் மூழ்கினவளாய் தெண்டனிட்டிரைஞ்சாதவளாய் சிரசின்பேரில் கைகளைரெண்டுங் கொட்டிக் கொட்டிக்கொண்டவளாம் எட்டுதிக்கும்வோடினவளாய் ஆனந்தநிர்த்தனஞ் செய்யத்துடங்கினுள் சில்லிகைமாது

சில்லிகைசொல்-தரு-இ-ம்-கல்யாணி-தாளம்-ஆதி

பல்லவி

ஆடினாளேசில்லிகை-யானந்தக்கூத்
தாடினாளேசில்லிகை

அநுபல்லவி,

ஆடிநாளின்னிசையுடன்பாடிஞள்பரமபதக
தேடிநாள்வாரகன்சரணங்கூடிநாள்பரவசமாய் (ஆடி)

சரணங்கள்

அங்கம்நெக்குரிகியுருகி-கருணைதரு
மானந்தச்சுவைபெருகி
சங்குசக்ரங்களணியுங்கமலச்செங்கையுடன்
அங்கனெழுந்தருளிவருஞ்செங்கண்ணனை கண்டெழுந்து(ஆ

வெய்யப்பிரவியைக்கடந்தேவுலகளந்த
மேவுமலர்ப்பதம்படிந்தே
ஐயனேகரியமுகில்மெய்யனேயடியார்க்கருள்
செய்யனேநிற்மலமானதுய்யனேயென்றேபரிந்து (ஆடி)

ஆதிமூலத்தரும்பொருளே-யெனைப்பொருளாய்
ஆளவரும்பொருளே
மாதவமுகுந்தபாசிதரஅம்புயவல்லி
நாதனேகருடனேறும்ஆதிவராகனேயென்றும் (ஆடி)

சில்லிகைசொல்- தேவாரம்

கருமுகில்வண்ணாபோற்றிக் கருடவாகனனேபோற்றி
அருமறைப்பொருளேபோற்றி அச்சுதானந்தாபோற்றி
திருவளர்மார்பாபோற்றி திருமுஷ்டனகராபோற்றி
அரிஅரிபோற்றிபோற்றி ஆதிவாராகாபோற்றிபோற்றி.

சில்லிகைசொல்தேவாரம்

நாரணாபோற்றிபோற்றிநான்மறைப்பொருளேபோற்றி
காரணாபோற்றிபோற்றிகருணைவாருதியேபோற்றி
பாரொலாமுண்டுமிழ்ந்தபரப்பிர்மவடிவேபோற்றி
ஆரணாபோற்றிபோற்றிஆதிவாராகாபோர்றி

சில்லிகைசொல்-தேவாரம்.

தற்பரவடிவாய்நின்றதாணுவானவனேபோற்றி
சிற்பரானந்தமாகிச்செகமெலாம்நிறைந்தாய்போற்றி
சொற்பொருள்முடிமேலானசோதியானவனேபோற்றி.
அற்புதாதிருமுஷடம்வாழ் ஆதிவராகாபோற்றி

சில்லிகைசொல்-தேவாரம்.

என்னையேபொருளாய்கொண்டு
யெழுந்தருளிறைவாய்போற்றி
தன்னிகரிலாமல்நின்ற
தற்பரம்வடிவேபோற்றி
கன்னியந்துளபஞ்சூடும்
காரணக்கண்ணாபோற்றி
அன்னையேதிருமுஷடம்வாழ்
ஆதிவாராகாபோற்றி.

சில்லிகைசொல்-விருத்தம்

இராகம்-தோடி.

பொய்யுடலெடுத்துமாயப்
புணரியிலழுந்துவோர்க்கு
கையினிற்சங்குசக்கரங்
கதைகட்கவில்லுமேந்தி
தையலம்புயமாதோடுந்
தழைசிறைகருடனேறி.
அய்யனேயிங்கெழுந்து
அருள்தரவந்தாய்போற்றி

வசனம்:

அகிலாண்டகோடி பிரமாண்டநாயகா ஸ்ரீமன்நாராயணா நீர்மேல்குமிழிப்போலப்புன்மையாகிய வுடலெடுத்து மாயக்கடலிலே யகப்பட்டுநரகத்திலேவிழுந்துத் தத்தளிக்காநின்ற அடியானை யொரு பொருளா

பெண்ணி சங்குசக்கரம் கதைகட்கம் கோதண்டம் பஞ்சாயுதங்களுடன் அம்புஜபல்லிச்சமேதராய் கருடவாகனத்திலெழுந்தருளி யிங்கே வந்த விநோதம் யென்னசொல்வேன் அரிஅரி.

சில்லிகைசொல்-தரு

இ-ம்-பந்துவராளிராகம்-அடசாப்பு

பல்லவி.

அரிஅரிஅரிஅரிஅரிஅரிசரணம்
அச்சுதானந்தாமிருவுச்சிதாசரணம்

அநுபல்லவி

சரசிஜதளநயனதுரிதனேசரணம்
தருணவடிவாள்முகக்கருணையாசரணம்

சரணங்கள்.

மாதவாகேசவாஆதவாசரணம்
மாதுளைரமணிமார்பாநிதனேசரணம்
சீதாமுகுந்தவைகுந்தனேசரணம்
தேவியம்புயவல்லியோகனேசரணம்
கங்கைவிளங்கியபாதாசெங்கணசரணம்
கருடவாகனருடபுருடனேசரணம்
சங்குசக்ரகமலசெங்கையாசரணம்
சதுர்முகனையீன்றருள்சதுரனேசரணம்
கொண்டல்மணிவண்ணனேகண்ணனேசரணம்
கோவிந்தாகோவிந்தாகோவிந்தாசரணம்
அண்டரண்டங்களையுண்டவாசரணம்
அருள்செய்யாதிவாகாஅண்ணலேசரணம்

சில்லிகைசொல்-சிங்காரபத்தியம்

அச்சுதானந்தனே அரியமாமறைமுடிவில்
அமலனேநிமலனேகருணைமேவும்
பச்சைமாமுகில்மேநிபரமனேவுலகுண்ட
பவழவாய்மார்பனேபதுமநா

செச்சைகூர்மார்பனேதெண்டகாசமுமீரா
திரவுத்தண்டனேகருடனேறும்
சச்சுதானந்தனே சாலோகசாமீப
சாரூபசாயுச்சியபதவியான
இச்சைகூர்வேதவேதாந்தரூபா
எழில்மேவுந்திருமுட்டநகரில்வாசா
மச்சாவதாரகூர்மாவதாரா
வராகனுயகமூர்த்திசரணம்சரணம்

சுவாமிசொல்-விருத்தம்

இ-ம்-ஆனந்தபைரவி.

ஆதிவராகசுவாமியவன்முக
மகிழ்ந்துபார்த்துச்
சீதளமுகவிலாசச்
சில்லிகைமாதேகேளாய்
நீதயவுடனேசெய்த
நெடுந்தவமகிழ்ந்தோமிப்பால்
ஆதலாலுனக்குவேண்டும்
வரமெலாமருளுவோமே

வசனம்.

வாரும்பெண்ணே சில்லிகையே நீசெய்யாநின்ற அரிதான தவத்தி ஞலுமெனக்கு அதிகசந்தோஷமாச்சுது ஆகையா லுனக்கு யென்னவர ம்வேண்டியது அதனை இப்போது கேழ்ப்பாயாகில் தருகின்றோம் கே ளும்சில்லிகையே

சில்லிகைசொல்-விருத்தம்

இ-ம்-தோடி.

உன்னடித்தொழுமல்வாழ்ந்தா ருலகத்திலொருவருண்டோ
என்னிடக்கணவன்மாய்ந்தா ரினியவருனதுபாதந்
தன்னையேயடையவேண்டுந்தாணியுள்ளளவும்நாயேன்
மன்னியப்பெயருமோங்க வரந்தரவேண்டினேனே:

வசனம்.

சரணம் சரணமையா சுவாமி சர்வலோக தயாபரா சகலபுவனேஸ்வரா வேதவேதாந்தரூபா ஸ்ரீமன்னாராயணா தேவரீருடைய பாதபத்மங்களைப்பணியாமல் யென்னுடையபுருஷன் மடிந்து நரகத்துக்குயேதுவானார் ஆகையால் யெனதுபுருஷன் தமதுதிருவடியைப் பெறவும் என்னுடைய திருநாமமும் அழியாம லிருக்கும்படியாக வரந்தர வேணுமையா சுவாமி.

சுவாமிசொல்-விருத்தம்-இ-ம்-பந்துவராளி.

நற்புகழ்மானேகேளாய் நமதுவூர்திருமுட்டந்தான்
செப்புமுந்தனக்குன்பேரால் சில்லிகாவனமென்றோத
தப்புமுன்கணவன்பேரால் தண்டகாவனமென்றோத
ஒப்பிலாவரங்கள்தந்தேன் ஊழியுள்ளளவுந்தானே.

வசனம்

கேளும்பெண்ணே சில்லிகா நம்முடைய வூர்திருமுட்டமென்னும் நகரம் அதற்குவுன்னுடைய பெயராலே சில்லிகாவன மென்றும் பெயர் பொருந்தியிருக்கவும் வுன்னுடையபுருஷன் தெண்டகாரூரனைபடியினாலே தண்டகாவனமென்றும் பெயர் பொருந்தியிருக்கவும் இப்படி ஊழியுள்ளகாலம்வரைக்கும் யிந்தவரங்கொடுத்தேன் பெண்ணே சில்லிகா.

சுவாமிசொல்-விருத்தம்-இ-ம்-மோகனம்.

பின்னையுங்கேளாய்மானேபிறகுநம்பதமேதந்தோம்
வுன்னிடக்கணவனுக்கு வுகந்துநம்பதமேதந்தோம்
இன்னமுஞ்சிலதுகால மிருந்துயிவ்வுலகில்வாழ்ந்து
என்னிடப்பதத்தில்வந்து யிருந்துநீமகிழ்ந்திடாயே

வசனம்

அப்படியே வுமக்குநம்முடையப் பதந்தைத் தந்தோம் வுன்னுடையப் புருஷனுக்கும் நம்முடையபதத்தைக் கொடுத்தோம் யிப்பவும்நீ யி

ன்னஞ்சிலகாலமிருந்து யிவ்வுலகத்தில் பூசைபுரிந்து பின்பு நம்முடைய பதவிக்குவந்து சேரும்பெண்ணே சில்லிகா

பொது விருத்தம்

இ-ம்-கல்யாணி

சுரர்கள்பூமழைகள்பெய்யத் துந்துமிநாதமோங்க
அரிஅரியென்றேயாரும் அன்புடன்வணங்கிவாழ்த்த
மருமலர்துளபமாலை வராகனுயகனூரப்பால்
விரவுடன்சில்லிகைக்கு விளம்பிவைகுந்தஞ்சென்றூர்

வசனம்

தேவர்களெல்லாரும் புஷ்பமாரிபொழியவும் அந்தரவானவர் துந்துமியறையவும் அரிஅரியென்று யாவரும் வணங்கிப்போற்றவும்வராகசுவாமியானவர் வைகுந்தத்துக்கு யெழுந்தருளினூர்.

பொதுவிருத்தம்-இ-ம்-நாட்டை

மாதுசில்லிகையாள்மாயன்
மகிழ்ந்தருள்வரங்கள்பெற்று
போதயவ்விடம்விட்டகந்தப்
புரமதுவந்துசேர்ந்தாள்
சீதான்றன்னைக்கொல்ல
சினங்கொண்டுயிரணியனென்னும்
நாதனுந்தபங்கள்செய்ய.
நடந்திடும்வகைச்சொல்வேனே.

வசனம்.

இவ்விதமாக சில்லிகையானவள் வரங்களைப் பெற்றுக்கொண்டு தன்னுடைய வீடுபோய்சேர்ந்தாள் பிறகுயிரணியன் ஸ்ரீமன்னூராயணனை கொல்லவேண்டியதாய் தபங்கள்செய்யும்படியான சரித்திரத்தைச் சொல்லுகின்றேன்.

இரணியன் சொல்

விருத்தம்-இ-ம்-பைரவி.

மாத்திரைக்கோலுங்கொண்டு
வளம்புலித்தோலும்பூண்டு

வேத்திரத்தண்டுமூன்றி
மெய்யெலாம்நீறுபூசி
தோத்திரம்பலவுங்கூறி
தொடக்கருத்தவர்கள்போல
ஏத்திடுந்தபசியாகி
யிரணியன்வருகின்றனே.

தரு-இ-ம்-கேதாரகௌளம்-தாளம்-ஆதி.

கண்ணிகள்

பொன்முடிதனைநீக்கி-பவழம்போலும்
புரியமிரசடைவீக்கி
மின்மணிப்பூண்போக்கி வுடலெங்கும்
வெண்ணீறுவடிவாக்கி
சிலைகணைவாள்பிடித்து-கரந்தனில்
செபமாலையதுதொடுத்து
இலங்குகச்சைதடுத்து-யிடையினில்
எழில்மறவுரிவிடுத்து
தங்கத்தண்டைகள்வீட்டி-பாதந்தினில்
தங்கும்பாதுகைமாட்டி
துங்கப்பொருள்கள்கூட்டி-கைதனில்
துலங்குந்தண்டதுநீட்டி
அருந்தவத்தோர்களெல்லாம்-அன்பாகவே
ஆசீர்வாதஞ்சொல்லவே
பெருந்தக்குடிசெல்ல- யிரணியன்
பிரப்பட்டானேமெள்ள

பொதுவிருத்தம்-இ-ம்-சுருட்டி

மலைகளுங்கானுரக்தவனங்களும்பலவுந்தாண்டி
அலைகடல்வெப்புதேனும் அமைக்கிடுங்கருப்பஞ்சாரும்

நிலைபெறுந்தயிருசெய்யும் நீழ்திரைக்கடல்களஞ்சும்
பிலமுடன்காலால்தாண்டி பெரியமந்திரஞ்சேர்ந்தானே

இரணியன்சொல்-தரு-இ-ம்

கேதாரகௌளம்-தாளம்-ஆதி:

கண்ணிகள்

மந்தரகிரியணுகி-சாலில்
மாதவஞ்செய்நணுகி
கொந்தளிர்மலர்சோலை-நீழலில்
குலவித்திரியுங்காலை
குயில்களுங்கிள்ளைகளும்-அன்னக்
குயில்மடப்பிள்ளைகளும்
மயில்களும்மாளிகளும்-அங்கங்கே
மருவியக்கூளிகளும்
கண்டுகண்களிகூர்ந்து-தவஞ்செய்
கருதிநினைவுதேர்ந்து
தண்டுனைசுனையாடி-மனமது
சத்துவக்குணம்நாடி
பஞ்சாக்கினிமூட்டி-நடுவினில்
பதுமாசனங்கூட்டி
நெஞ்சாப்பொருளெண்ணி-வடக்கே
நேர்முகமாய்நண்ணி
ஐந்தெறும்புலன்குறிக்கி-மவுனத்தை
அறிவினிலேயிருக்கி
சுந்தரயிடக்காலை-அண்டத்தில்
தொடுத்துவகுதுகாலை
துடைமேலேபின்னி-மூலத்துள்
துலங்குஞ்சுழிமுனையுன்னி
அடவுடனேவாசி-யெழுப்பி
மதிலேமனப்வீசி
மூக்கிடைநடந்தோடி-யெங்கு

முழுமதிநீனாடி
போக்கதிலேயுழலும்-வாசியும்
பூரணமாயெழிலும்
கும்பகரேசகத்தால்- பூரணங்
கொண்டதுவாசகத்தால்
தம்பனமதுவாக-வுச்சிதத்
தாமறைதனிற்போக
முச்சுடரதுவாகிப்-பிரணவ
மூலமுமதுவாகிச்
சற்சிதநிலையாகி-மேலும்
சற்குணமதுவாகி
நினைப்புமறப்புமரந்து-பரமப்பொருள்
நிலையதுவேசிறந்து

இரணியன்சொல்-பரணி

இறவாய்பகலாய் கீழ்மேலாய்
எங்குந்தானாய் நிறைந்தருளும்
பாரேன்வுந்தன் பதம்போற்றி
பணிந்தேனென்முன் வருகுவையே
பிறவாயணுவா யுயிர்க்குயிராய்
பேதாவேதனுதமென் னும்
மறவாநல்லோருளத்தில்நிதம்
வாழ்வேயென்முன் வருகுவையே
வேதமுடிவேநடுவொளியே
விண்ணோற்கினியகண்மணியே
போதம்நிறைந்தச் சின்மயத்தின்
பொருளேயென்முன் வருகுவையே
ஆதாரமுமாயறிவுருவாய்சத்து
மசையாப்பழம்பொருளே
தாதாவரிதாய்த்தவம்புரிந்தேன்
தயைசெய்தென்முன் வருகுவையே
பூவாய்மணமாய்க்கனிக்கினிதாய்

பொருளேபொருளின் சுவையான
தேவாவுன்னைக்குறித்துதவஞ்
செய்வேனென்றூன்வருகுவையே
காவாயென்னைவுகந்தெனவே
கடிதாய்க்கொடியத்தவம்புரிந்தேன்
நாவார்ந்திடுதேனமிர்தமென்னும்
நாதாயென்முன்வருகுவையே

பிரமன்சொல்-விருத்தம்.

இ-ம்-மத்தியமாவதி

பவக்கொடுவினையேசெய்யப் பரிந்திடுமிரணியன்செய்
தவக்கனலுலகமெல்லாந் தகிக்கவேயிமையோரஞ்சத்
துவக்கொடுபொராமலோடித் துரிதமாய்ப்பிரமற்கோத
நவப்புதுமலர்மேல்மேவும் நான்முகன்வருகின்றாரே

தரு-இ-ம்-சௌராஷ்டகம்-தாளம்-அடசாப்பு

கண்ணிகள்.

பிர்மதேவரும்வந்தாரோ-செங்கமலமீதுதனில்
பிர்மதேவரும்வந்தாரோ
பிர்மதேவரும்வந்தார்பெருகுந்தற்பரமான
தர்மநாரணனுபித்தடத்தில்வருமெய்ஞ்ஞான (பிர்ம)

சனகாதியர்வேதம்மாடிச்சதுர்முகனெனக்கொண்டாடி
தனிமுகம்நாலுடன்கூடித்தரணியைப்படைக்கநாடி (பிர்ம

துய்யபூஜங்களெட்டுந்துலங்குங்கூஷயப்பொட்டும்
கையிற்பவுத்திரந்தொட்டுங்கனகப்பூணநூலிட்டும் (பிர்ம)

தும்புருநாரதர்பாடத்தோகையர்நடனமாட
இம்புருடர்சுதிகூடக்கிளரும்வானோர்மலர்போட (பிர்ம)

இரணியன்சொல்விருத்தம்

இ-ம்-நாட்டை

அண்டங்களெல்லாந்தானே
யடைத்திடு பொருளேபோற்றி

புண்டரீகத்துள்வாழும்
  புராதனவடிவேபோற்றி
குண்டிகைத்தரித்தாய்போற்றி
  குணக்கடலானேபோற்றி
பண்டைநான்முகனேபோற்றிப்
  பராபராபோற்றிபோற்றி.

இரணியன்சொல்-விருத்தம்

இ-ம்-கல்யாணி

அய்யனேபோற்றிபோற்றி
  அமலனேபோற்றிபோற்றி
செய்யனேபோற்றிபோற்றி
  தேவர்கள்தேவேபோற்றி
கையிற்குண்டிகையாய்போற்றிக்
  கனகமேனியனேபோற்றி
தையலாள் பனுவலாட்டித்
  தனைமணம்புரிந்தாய்போற்றி.

பிரமன் சொல்-விருத்தம்

இ-ம்-மோகனம்

திண்டிறலிரணியவுனைன்
  செழுந்தபம்போலுமெந்த
மண்டலத்திநிலுமெந்தன்
  வயத்திலுங்கண்டதில்லை
கொண்டதோருனக்குவேண்டுங்
  குறைகளையின்னதென்று
கண்டிடவுரைத்தாயானல்
  கனவரந்தருகுவேனே.

வசனம்

வாருமப்பா யிரணியா வுன்னைப்போல் தவஞ்செய் "கின்றவர்களை நானெந்தவுலகத்திலுங் கண்டதில்லை யிப்போதுவுனக்கு யென்னவரம்வேண்டும் அதையெனக்குத் தெரியச்சொல்லும் " தருகிறேனப்பா யிரணியா.

இரணியன்சொல்-விருத்தம்

இ-ம்-பந்துவராளி.

மழுவையில்முதலாயுள்ள
மைந்துளப்படையினாலும்
அழிவுசெய்புலிகளாலும்
யாளிபூதத்தினாலும்
இழிவுசெய்யாவத்தாலும்
யெனக்கொருநாளுங்கீயே
வழுவலிமறணமில்லா
வாமெனக்கருளுவீரோ

வசனம்

வாருமையாசுவாமி பிர்மதேவரோ மழு அயில்குலிசம் முதலான ஆயுதங்களினாலும் ஆளிப்பூதப்பசாசு சர்ப்பமுதலியவைகளினாலும் மரணமில்லாமலிருக்க யெனக்குவரந்தா வேணுமையா சுவாமி.

இரணியன்சொல்-விருத்தம்.

இ-ம்-ஆனந்தபைரவி.

தேவர்களெவர்களாலுந்
திடுக்கிடும்பகைவராலும்
பாவைமாரெவர்களாலும்
பலபலவிதத்தினாலும்
ஒவிலாமண்ணில்விண்ணில்
வுள்ளிலும்பிரம்பின்மேலும்
சாவிலாதெனக்குநல்ல
சதிர்வரந்தருகுவீரோ.

வசனம்

வாருமையா சுவாமி பிர்மதேவரோ யிராத்திரியிலும் பகலிலும்மிடத்திலும் கல்லிலும் மலையிலும் அக்கினியிலும் சலத்திலும் வாய்வுனாலும் பஞ்சபூதங்களாலும் மைத்தயெதுகளினாலும் சாவில்லாமல் யெனக்குவரந்தாவேணுமையா சுவாமி.

இரணியன்சொல்-விருத்தம்.

இ-ம்-மத்தியாவதி.

அல்லிலின்பகலின்மேலும்
ஆனதோர்விடத்தினாலும்
கல்லிலுமலையின்மேலுங்
கடுங்கனல்நீரின்மேலும்
புல்லியவாய்வுனாலும்
பூதங்களைவையினாலும்
கொல்லுதலில்லாமல்தான்
கொடுத்தருள்செய்குவீரே.

வசனம்

வாருமையா சுவாமி பிர்மதேவரே தேவர்களாலும் பகைவராலும் ஸ்ரீஜெனங்களாலும்மண்ணிலும் விண்ணிலும் வுள்ளிலும்பிரம்பிலும் யாவத்திலும் நான்யிறந்துப் போகாமலிருக்க யெனக்குவரந்தர வேணு மையா சுவாமி.

பிர்ம்மாசொல்-விருத்தம்

இ-ம்-தோடி.

தந்தனம் யிரணியாகேள் சதிருடனினைத்துக்கேட்ட
மந்திரவரங்களெல்லா மனமகிழ்ந்தளித்தோமிப்பால்
சிந்தனையன்றிமூன்று ஜெகமொருக்குடை யிலாள்வாய்
உந்தன்மெய்நகரம்நண்ணி வுகந்துவாழ்ந்திருந்திடாயே

வசனம்

வாருமப்பா யிரணியா நீகேட்டப்பிரகாரம் வரமெல்லாந்தந்தோம் யினிமேலுன்னுடையப் பட்டணம்போய்ச் சேர்ந்து சுகமாக்வாழ்ந்திரு க்கக்கடவா யிரணியமகாராசனே.

பொதுவிருத்தம்-இ-ம்-சங்கராபரணம்

பிரமனிவ்வகையதாகப் பெரியதோர்வரங்களீந்து
உரியதன் னுலகம்போனன் உம்பர்களெவருமஞ்ச
இரணியனெழுந்துமென்மே லிருமாப்புமிகவுண்டாகி.
வருமுன்னமார்சேதி வகையுடன்வுரைசெய்வேனே.

கட்டியன்சொல்-விருத்தம்
எச்சரிக்கை.

அரணகிரணபணிமுடியணையயிருபுரமும்
அமரர்ஜெயஜெயவென்னவே
அருகிலடியொழுமுநிவ்ரினிதுபெறவரிசையுடன்
அரசேஅரசேயென்னவே
தரணமதிலடையர்கள்முடியிடரிவருப்வீரர்
தயதெதிர்சலாமென்னவே
தணதணனமணிமுரசுமதிரொளிகள்கிடுகிடென
தருபதிகளெதிர்செல்லவே
தொரணமெனகனகமருள்புரிதருவிதிழுலில்வரு
தூயனெனசிலர்சொல்லவே
துடிபடுமாதகஜத்துரகதளமிகுதியடா
துவள்கொடிகள்தளதளெனவே
மரணமிடவலியவர்கள்சிறமிடரவறைபொடிசை
வச்ரவாள்பளபளெனவே
பதிபாவிதுதிபுரிமணிதியருள்செய்யமார்பதி
வருகிறார்யெச்சரிக்கை

இந்திரன்வருகிற-விருத்தம்
இ-ம்-பூரிகல்யாணி

முத்துமாலிகையணிந்து வொளிர்பெறச்சாயேந்தி
மத்தளவீணைவாத்தியமங்களசங்கீதம்பாட

உத்தமர்வணங்கிப்போற்ற வொருபிரங்தேவர்வாழ்த்த
சித்திரத்தருவிநீழல் தேவேந்திரன்வருகின்றனே.

தரு-இ-ம்-கல்யாணி-தாளம்-திரிபுடை

பல்லவி

ராஜாராஜன்தேவேந்திர
ராஜன்வந்தானே

சரணங்கள்

ஆசையாகவேயமரர்போற்றிட
அருகைநடமிடமுனிவர்வாழ்த்திட
நேசமானயிந்திராணியருகினில்
நின்றுபணிந்திடக்கண்டோர்வணங்கிட (ராஜராஜ)

முப்பத்துமுக்கோடிதேவர்கள்
முன்னும்பின்னுமெச்சரிக்கைப்பேசவே
அற்புதமுடனரம்பைமாதர்கள்
அருகில்நின்றுசாமரைகள்வீசவே (ராஜராஜ)

நவமணிமகுடமுடிதுலங்கவே
நாகரீகமுத்துமாலையிலங்கவே
பவழமணிரத்னமணிகுலுங்கவே
பருத்ததோள்வளைபுசமிலங்கவே (ராஜராஜ)

சித்தர்கின்னரர்கீதம்பாடவே
சிறந்தகற்பகமலர்கள்போடவே
உத்தமமந்திரிமார்கள்கூடவே
ஒன்னார்களெங்கேயென்றுதேடவே (ராஜராஜ)

இந்திரன்சொல்-விருத்தம்

இ-ம்-தேசிகதோடி

மகிமைபெறுமதுநிருக்கொலுவில்வந்த
மாதவரோமுனிவர்களேவழுத்தக்கேண்மோ

இகலியசித்தர்வித்தியாதரரோவாரும்
இன்பமுடனுங்களுக்குமிருக்கையீந்தோம்
தகமைபெறஅனைவர்களும்வந்திட்டாரோ
சாற்றியசபைக்கினியார்வருவதேனும்
உகமையுடனமதுலகின் அதிசயத்தை
உள்ளபடிநாமறியவுரைசெய்வீரே.

வசனம்

கேளுங்கள் தேவர் முனிவர்களே கருடகாந்தருவர் சித்தர் வித்தியாதரர்களே கின்னரர் கிம்புருடர்களே வுங்களுக்கு யிருக்கச்சிலவுகொடுத்தோம் நம்முடையசபைக்கு அனைவர்களும் வந்திட்டார்களா யின்னம் யாரார்வரவேண்டியதும் நம்முடையவுலகத்தின் அதிசயத்தை யுள்ளபடியாக நாமறியச்சொல்லவேண்டும் தேவர்முனிவர்களே.

தேவர்கள்சொல்-விருத்தம்
இ-ம்ஆசாவேரி

செய்யபஞ்சகற்பகத்தினிழலில்வாழுந்
திரவேந்தேயுந்தனிருத்திருத்தாள்போற்றி
ஐயமில்லா திவ்வுலகத்துள்ளதேவர்
அருமுனிவர்சகலரும்வந்தனுகினூர்கள்
கையதனாற்புவியெடுத்துயிரணியாக்கன்
கடலிலொளித்தெங்களையுங்கலக்கச்செய்தான்
பையாவின்றுயன்றவனுலாக்கன்பட்டான்
பாரிலிந்தவதிசயத்தைப்பகர்ந்திட்டோமே,

வசனம்.

கேளும் பொன்னுலகத்தரசே எப்போதும் நம்முடைய தெய்வசபைக்குவருகின்றசுருள் முப்பத்து முக்கோடிதேவர்களும் நாற்பத்தெண்ணாயிரங்கோடி முனிவர்களும் குறைவில்லாமல் வந்திருக்கின்றார்கள் மேலும் யிரணியாக்கனென்பவன் யிந்தபூமியைப் பாயாகச்சுருட்டி கடலில் வொளித்துவைத்திருந்து யெங்களை மிகவுமனக்கலக்கஞ்செய்தா

ன் பிறகு ஸ்ரீமன் நாராயணரானவர் வராக அவதாரங்கொண்டு அந்தயிர ணியாக்கதனைக்கொன்றார் யிதுதான் வுலகத்தில் நடந்த அதிசயமையா சுவாமி.

முனிவர்சொல்-விருத்தம்

இ-ம்-சௌராஷ்டகம்

இட்டமாய்காமதேனுந்
தேவர்களுடனென்றனும்
சட்டமாய்வாழுகின்ற
தயாபராபோற்றிபோற்றி
கொட்டமேசெய்துவந்த
கொடியவன்மடிந்தபின்பு
இட்டமாய்தவமேசெய்ய
யிரணியனேகினனே.

வசனம்

சேனும்தேவேந்திர மகாராசனே கொடியதுஷ்டனான அந்தயிரணி யாக்கதன் யிறந்தபிற்பாடு யிரணியன் தபஞ்செய்யப் போனான் மகா ராசனே.

இந்திரன்சொல்-விருத்தம்

இ-ம்-தோடி

ஏகினனொன்றுரைத்த
யிமையவர்முனிவர்கேண்மோ
ஆகியவும்மையெல்லா
மவதிகள்செயுமரக்கன்
யூகியாந்தேவிதன்னை
யொருநொடிதனிற்பிடித்து
ஈகருஞ்சிறையிலவைத்து
யெந்தனுக்குனாசெய்விரே.

வசனம்

ஆ. ஆ ஆ ஆ வாருங்கள் தேவர்களே முனிவர்களே யுங்களை அவ ஸ்தைப்படுத்தினைத்த கொடியதுஷ்டனாகிய யிரணியன் தேவியையிந்த

க்ஷணத்திற் பிடித்துவந்து அருஞ்சிறையில் வைத்து வுடனே யெனக்குத்தெரியச்சொல்லுங்கள் தேவர்முனிவர்களே.

தேவர்கள்சொல்-விருத்தம்

இ-ம்-சங்கராபரணம்

அரைகுவீரென்றுசொன்ன
ஆண்டவாயெங்கள்கோவே
இரணியன்றேவிதன்னை
யிட்சணம்அழைத்துவந்துப்
புரைபடுஞ்சிறையில்வைத்துப்
போட்டஇசுருக்காய்நாங்கள்
உரைபுயமன்னர்மன்னா
வந்துமக்குரைசெய்வோமே.

வசனம்

கேளும் பொன்னுலகாதிபதியே தாங்கள் சொல்லியப்படியேசெய்துவந்து வுமக்குவுரைக்கின்றோம் மகாராசனே.

முனிவர்சொல்-விருத்தம்.

இ-ம்-நாட்டை

பாவியாமிரணியன்றன்
பாங்குள்ளதேவிகேளாய்
கூவியேயெங்கள்மன்னன்
கொடுமையாயுனைப்பிடித்து
ஆவியோடிருக்கவுன்னை
யருஞ்சிறைவைக்கச்சொன்னார்
நாவினாலுரைக்குமுன்னே
நடந்துநீவருகுவாயே.

வசனம்.

கேளும் யிரணியன்றேவியே யிப்போது எங்கள் ஆண்டவனாகிய தேவேந்திரமகாராசா வுன்னைப்பிடித்து அருஞ்சிறையில் வைக்க எங்

களுக்குச் சிலவுகொடுத்தார் ஆனதால் நீ மறுமொழிபேசாமல்பெங்களு டன் நடந்துவாரும்பெண்ணே.

லீலாவதிசொல்

கொச்சகம்.

மன்னவனுமென் கணவன்
மாதவத்துக்கேகினபின்
என்னைச்சிறையில்வைக்க
வென்னபாவஞ்செய்தேனையோ
கன்னல்மொழியுமைப்பாகா
கன்னிகைக்கோர்பாகமளித்
துன்னிதமாய்வாழ்கிவனே
வுன்பாதம்நம்பினேனே.

வசனம்

அரகரா சிவனே யாதொருபாவமும் அறியேன் வுன்பாதமே கதி யென்று நம்பியிருக்கின்றேன் பார்வதிசமேதா யென்னையிவ்வேளையில் பாதுகாக்கவேணும் கைலாசவாசா.

லீலாவதிபுலம்பல்–தரு–௩–ம்–

புன்னாகவாரளி–தாளம்–அடசாப்பு

கண்ணிகள்

என்னசெய்வேனேதுசெய்வேனே முன்னே
என்றலையிலெழுதிவிட்டவெழுத்திதுமெய்தானே
மன்னவனுமெனைப்பிரிந்தபோதே யிந்த
வையகத்தோர்நகைசெய்திடவந்ததென்னதீதே
உலகாளுமிரணியற்குத்தேவி யென்று
ஓகோயிச்சிறையிருக்கவேனபிறந்தேன்பாவி
கலகமிதுவென்றுதெரியேனே மன்னன்
காவல்வைக்கவேயினைத்தகருத்துமறியேனே
கைகாலும்நடுக்குதென்னசெய்வேன் யிந்தக்

கடுஞ்சிறையிலிருந்துயெங்கேதாலமையோவய்வேன்
மெய்யாகமன்னன்றவஞ்செய்ய அவர்
மேவினபோதெனக்குச்சிறைவிளைந்ததென்னமையோ
பூதலத்திற்கொடுமைகள்செய்தேனோ சொந்த
புதியவரைப்பிடித்துப்பழயவர்தனைவைதேனோ
வேதன்விதிதன்னையறியேனே யிந்த
வினைவருமென்றெனதுசிந்தைதனிலுங்குறியேனே
பிச்சைசக்கிவந்தோரைப்பழித்தேனோ என்ன
பிழைகள்செய்துபெரியவரைதலைத்தையழித்தேனோ
வைத்தவர்கள்வுடைமையெடுத்தேனோ வூரில்
வழக்கோரம்பேசியொருகுடியைக்கெடுத்தேனோ
ஒருவர்செய்தவுதவிமறந்தேனோ கண்ணுக்
கொடாமல்காலணைந்துபசுவைக்கறந்தேனோ
அருமைகுலைந்திடவெனக்கிப்போதே மன்னன்
அருஞ்சிறையில்பிடித்துவைக்கயார்க்குசெய்தேன்வேதை

தேவர்முனிவர்சொல்

விருத்தம்-இ-ம்-ஆசாவேரி

அண்ணலேயெமக்குத்தேவர்
அறிவித்தப்படியோங்கள்
எண்ணமாய்சென்றுயந்த
வந்திழைதனைப்பிடித்து
குண்ணிடத்தள்ளிவந்து
கொடுஞ்சிறைதனிலடைத்தோம்
தண்ணறுமாலைமார்பா
நின்றுளினைசரணையா.

வசனம்

கேளும்தேவேந்திர மகாராசனே தாங்கள் சொல்லியப்படிக்கு இரணியன் றேவியைப்பிடித்து கொடுஞ்சிறையில் அடைத்து விட்டுவந்தோமையா சுவாமி

பொது - விருத்தம்

இ-ம்-பூரிகல்யாணி

அற்பமுங்குற்றமில்லா தருவையாள் தன்னையிந்த்ரன்
ஒப்பிலாச்சிறையில்வைத்து வுபாதிசெய்திடவினைத்தான்
வப்பொழுதைதயறிந்த வடிவுள்ளநாரதன்றான்
மெப்புடன்புத்திசொல்ல மேவியேவருகின்றாரே.

நாரதர் வருகிற

தரு-இ-ம்-புன்னாகவராளி-தாளம்-ஆதி

நாரதமாமுனிவர்தானிதோவந்தார் மஹா
நாரதமாமுனிவர்தானிதோவந்தார்
கொட்டுமத்தளம்வயருகுலிக்கிக்கொண்டு கையில்
குலவும்வீணையில்ராகம்பலிக்கிக்கொண்டு
தொட்டுவெண்ணீறுடல்துலக்கிக்கொண்டு நல்ல
துய்யநாரதமுனிவன்றானிதோவந்தார்
கையினிற்கமண்டலமும்யெடுத்துக்கொண்டு யெழிற்
கனகமணிக்குடையும்பிடித்துக்கொண்டு
துய்யநாரணன்புகழைப்படித்துக்கொண்டு நாலு
சுருதிநாரதமுனிவன்றானிதோவந்தார்

நாரதர்சொல்-விருத்தம்

இ-ம்-சங்காபரணம்.

மன்னவாயிந்திரபூபா
யங்கைகயைக்கொண்டுவந்து
என்னமாய்சிறையில்வைக்க
யெண்ணிநீரவள்வயத்தில்
தன்னிகரில்லாப்பாலன்
தயாளராட்சகனிருக்க

அன்னவள் தன்னையிப்போ
தனுப்புவாய்நகர்க்குத்தானே.

வசனம்

கேளும் தேவேந்திர மகாராஜனே அந்த பதிவிரதையான லீலாவதியம்மனைக்கொண்டுவந்து யேன்சிறையில் வைத்தீர் அந்தம்மாள் வயத்தில் நல்ல குமாரன் பிறக்குரான் அவனால் உங்கள் குலம் அட்சயமாகுது ஆகையால் அந்தம்மாளை யனுப்பிவிடும் தேவேந்திரபூபதியே.

இந்திரன்சொல்-விருத்தம்

இ-ட்-பைரவி

நித்தனேபோற்றிமிக்கநிற்மலச்சுரூபாபோற்றி
முத்தனேபோற்றிதூய முனிவனேபோற்றிபோற்றி
சித்தமேமகிழ்ந்துதேவர்செப்பினப்படியேனுங்கள்
உத்தமிதனையிப்போதுவுண்மையாயனுப்புவோமே.

வசனம்

நித்திய நிரந்தர சுரூபமாய் வுலகத்தை யெல்லாம் வலஞ்செய்து கீர்த்திக்கொண்ட நாரதமுனிவரே சரணம் சரணம் தேவரீர் சித்தங்கொண்டு சொன்னபடிக்கு அந்தலீலாவதியம்மனை யிப்போதே சிறைவிடுத்து அனுப்பிவைக்குரேனையா சுவாமி.

நாரதர்சொல்-விருத்தம்

இ-ட்-பரசு

கற்பினுக்கரசியான காவலன்றேவியாரே
ஒப்பொருவருமில்லாத வுத்தமிபெத்வதாயே
மைப்பொருவிழியேயுந்தன் மானகர்தன்னைவிட்டு
செப்பமாயிவடம்வந்த சேதிமையுரைசெய்வாயே.

வசனம்

கேளுமம்மா லீலாவதியே யிப்போது நீ வுன்னுடையஅரமனையை விட்டுத் தனித்து யிவடம்வந்திருக்கும் காரியமென்ன அதையெனக்குத் தெரியச்சொல்லுமம்மா லீலாவதி:

லீலாவதிசொல்-விருத்தம்

இ-ம்-முகாரி

மிக்கவைம்புலனைமாற்றி விருளார்த்தவத்தைச்சார்ந்த
தக்கநாரதரேயுந்தன் றுளிணைசரணமையா
திக்கெலாம்வென்றயிந்த்ரன் சித்தமோடென்னைப்பிடித்து
இக்கணஞ்சிறையில்வைத்தாரொளிபவனென்னசெய்வேன்

வசனம்

பொறிபுலன் பூதமென்பதைமாற்றி தவசிரேஷ்டராய் விளங்கும்படி யான நாரதமுனிவரேகேளும் அரமனையிலிருந்த அடியாளை யேதோ கோபத்தினால் தேவேந்திரமகாராசன் யென்னைக் கொண்டுவந்துசிறை யில்வைத்தாரையா சுவாமிநாரதபகவானே.

நாரதர்சொல்-விருத்தம்

இ-ம்-தோடி

ஜெகமெலாமதிக்கவாளுந்
தேன்மொழியேயிந்த்ரன்
வகைத்தெரியாமல்செய்தான்
வர்மமென்றெண்ணவேண்டாள்
மகிமையாபுந்தனுக்கு
மைத்துனமார்களென்று
நகைபுரிந்தவர்கள்செய்தார்
நாயகிபொருத்திடாயே.

வசனம்.

உலகத்தில் பதிவிரதைகளுக்குத் தாயாகவிளங்கும் லீலாவதியம்ம னேகேளும் தேவேந்திரமகாராசன் குற்றமாகச்செய்த தல்ல மைத்துன னென்று முறைமைக்கொண்டாடினார் அதைவுன் மனதில் கோபங் கொள் ளவேண்டாமம்மா லீலாவதி.

லீலாவதிசொல்-விருத்தம்

இ-ட்- சங்கராபரணம்

இருள்மனத்தகத்திருளு மேகமாய்த்தபத்தின்மிக்க
அருமையாய்வாழுகின்ற அண்ணலேபோற்றிபோற்றி
நிருபனார்செய்தகுற்றம் நீக்கிடவந்தகோவே
பெருமையாய்க்கதையொன்றிப்போ பிரபலமாயுரைத்திடீரே.

வசனம்.

உலகமாய்கையைநீக்கி மனதை தபோகியான வழியிற் செலுத்திய ஞுதனே அரசனுடைய குற்றத்துக்கு காமென்ன செய்யப் போகிறேன் யாதொன்றுமில்லை யிப்போது தேவரீர் யிங்குயெழுந் தருளியப் படியால் தமது திருவாய்மலர்ந்து வொருகதை சொல்ல வேணுமையா சுவாமி

நாரதர்சொல்-கலி வெண்பா

உரைத்திடுவேன்கேளாயுண்மை யுள்ளவோர்கதையை
வருத்தமொன்றுன்மனதில் வையாதே-பெருத்தபுவி
தன்னில்விளங்குஞ்சரித்திரத்திலோர்கதையை
என்னமென்றுசொலவேணிளயயிலே - வுன்னருகில்
பேசுமொழியால்பேதையைபொய்நற்கதியில்
நேசித்திருக்கநிகழ்த்துவேன்-பாசமிகு
மூக்கணமாய்பஞ்சறிவாய்மூச்சுடாரப்பழம்மலமாய்
எக்குணமுந்தாளுயிலகுமந்த-தக்கவர்கள்

நெஞ்சகத்தினீங்காதநிஷ்களங்கமாய்சகல
மஞ்சகத்தில்வாழுமறைமுடிவே-சஞ்சலங்கள்
தீரும்படியாகச்சின்மயத்திலோர்வசனம்
நேரும்படியாகநிகழ்த்துவேன்-பாருமந்த

நாராயணுயநமாவென்றுநல்லமுதைத்
தாராளமாகவுண்டுசொர்ந்திடுவாய் பேராக

ஆக்குவதுமாக்கி அழிப்பதுவுங்காப்பதுவும்
தாக்கரியவெவ்வுயிர்க்குந்தானுகி-நோக்கரிய
அட்டாட்சரப்பொருளை அன்பாகவேதுதித்து
நிட்டைதாக்காமியங்கள்நினைக்கவரும்-கஷ்டமில்லை

ஏமனணுகானெவ்வுலகமும்பணியும்
ஓமெனவேயாமுனிவருள்ளமதில்-நேயமாய்
சிந்தித்திருக்குமந்தத்திருமால்பதத்தையென்றும்
வந்தித்திருப்பாய்மகிழ்ந்து.

லீலாவதிசொல்

பாணி

தத்துவங்கடந்தசதுமறைப்பொருளே
சுத்தமெஞ்ஞானத்தூயனேபோற்றி
அத்துவிதத்தையருளியதேவே
கத்தனேயுந்தன்கழலிணைப்போற்றி.

நாரதர்சொல்-விருத்தம்

இ-ம்-நாட்டை.

தெரியற்கரியான
தேன்மொழியேகேளாழி
அரிதிருவடியைப்போற்றும்
அன்புள்ளப்பாலனுக
மருமலர்வாசம்போலுன்
வயத்திநில்வித்திருக்கும்
சிறுவனுமீயுமாகத்
தினந்தினம்வாழிவாழி

இந்திரன்சொல்-விருத்தம்

இ-ம்- ஆனந்தபைரவி

அண்டரோமுனிவரோநீ
ரனைவருமெழுந்திருந்து

வண்டவிக்குழலாளிலா
வதிசிறைதன்னிற்சென்று
பண்டுநாரதனார்சொன்னப்
படியவள்தனைவிடுத்து
இண்டுநீரனுப்பிவிட்டு
யிட்சணமுனைசெய்வீரோ.

வசனம்

வாருங்கள் தேவர்முனிவர்களே நாம்தெரியாமல் அந்தலீலா வதி யைக்கொண்டுவந்து கொடுஞ்சிறையில் வைத்தோமே அந்தம்மானை யிப்போது நாரதர்சொல்லியபடிக்கு அவளினது அரமனைக்குப் போகும் படியாக அனுப்பிவைத்துவிட்டு வந்துசேருங்கள் தேவர் முனிவர்களே.

தேவர்முனிவர்செயல்

விருத்தம்-இ-ம்-கல்யாணி.

அன்புள்ளத்தாயேபோற்றி
அரசியற்கரசேமன்னன்
வம்புகள்செய்ததல்ல
மைத்துனன்முறைமைகொண்டார்
செப்பவழிதழினாளே
சீக்கிரமாய்நீயுமிப்போ
உம்பர்நம்பதியைவிட்டு
வுன்னகற்கேகுவாயே

வசனம்

வாருமம்மாதாயே யெங்கள் தேவேந்திர மகாராஜர்க் குற்றமாக நினைத்துச்செய்ததல்ல மைத்துனர் முறைமைக் கொண்டு விளையாடினார் அதையுன்மனதில் கிலேசம் வையாமல் வுன்னரமனைக்குப் போய் சேரு மம்மாதாயே

லீலாவதிசொல்-விருத்தம்

இ-ம்-மோகனம்

அனைகழல்வீரர்போற்ற
அணிதிசம்கொலுவில்வாழும்

இளையவனென்னையிப்போ
　யேகெனவுரைத்தானென்றீர்
மளையவன்விதித்தாலத்தை
　மாத்திடவொருவருண்டோ
வளைபுயமன்னனுக்கென்
　வந்தனஞ்சொல்லுவீரோ.

வசனம்.

கேளுங்கள் தேவர்முனிவர்களே. வுங்கள் அரசனானவர் யென்னைப் போகும்படியாய் வுத்தாரஞ்செய்தாரென்றீர் அப்படியே போகின்றேன் விதியைவிலக்க யாவராலே முடியும் ஆகையால் வுங்கள் அரசனுக்கு யெனது வந்தனம் சொல்லுங்கள் தேவர்மு[illegible]வரோ.

தேவர் முனிவர் சொல்

பாணி.

மன்னவனேதேவர்
சொன்னசொற்படியே
நன்னயமாதினைத்
தன்னகர்க்கனுப்பினோம்

பொது-கொச்சகம்

துங்கமறைமுடிசிவ
தூயமுனிசொன்னளவில்
மங்கைலீலாவதிதன்
மனையில்வந்துசேர்ந்தபின்பு
இங்கிதமாய்த்தவம்புரிந்து
யெழில்வரம்பெற்றிரணியனும்
மங்களமாகக்கொலுவில்
வரும்வகையான்சொல்லுவனே

கட்டியன்சொல்-விருத்தம்

இ-ம்-தோடி

தட்டிச்சல்லடமுங்கச்சைத்
தாறுமேயரையிற்கட்டித்
திட்டமாய்ப்பணிதிபூண்டு
திகழ்வாங்குழையிற்கொண்டு
இட்டமாயுலகம்போற்று
மிரணியமகிபன்வாசல்
கட்டியக்காரன்றானுங்
களரியில்வருகின்றானே

கட்டியக்காரன்-வருகிற-தரு

இ-ம்-கல்யாணி-தாளம்-அடசாப்பு

பல்லவி

கட்டியக்காரன்வந்தானே-செய
திபதியிரணியமகிபதிவாசல்
கட்டியக்காரன்வந்தானே,

அநுபல்லவி.

இட்டமாயரையில்தட்டிகட்டிதுடை
தட்டியட்டியிட்டு-செந்தூர
போட்டுநெத்திக்கிட்டு-வெகு
கத்திடாலுடனேவெத்திவேலுமிகு
சுத்தவீரனையுத்தசூரனெனக் (கட்டியக்காரன்)

சரணங்கள்

அகிலபுவனாதிகோமுலகங்களும்
அதிரமீசைமுறுக்கி-கண்
டமாரோடவுருக்கி-வெகு
அண்டபகண்டமும்விண்டலமெண்டிசை
பத்திபெடுத்துகாத்தில்சுழட்டிக் (கட்டியக்காரன்)

எத்திசைவெத்திமுகத்தில்மிகுத்திடும்
ஆரபாரகோரன்மிகுத்திரவீரசூரன்
அவுணர்கள்குலபதி அரசர்கள்துதிசெய
ஆமகவேதபுராணமறைத்திட
அவரிடாமயமிதெங்கும்வுறைத்திடக்(கட்டியக்காரன்)

அந்தணர்சிந்தைபயந்துதளர்ந்தெம
கண்டதுண்டமிண்டன்
கண்டசண்டமிண்டன் மிண்டன்
தரணியிலுள்ளவர்நடுங்க
தவமதுசெய்பவரொடுங்க
யிரணியகசிபதிவருகிறவேளையில்(கட்டியக்காரன்)

கட்டியன்சொல்-விருத்தம்

எச்சரிகை

வடவரைகள்கிடுகிடெனஅவுணர்கள்கொடிமளபளென
வருபுரவியெதிர்செல்லவே
மணிகள்முடியணியரசர்பணியசையயிருபுரமும்
வந்தடிபணிந்துபோற்ற
அடயலர்கள்கொடியசையநெடியவாள்கைகொண்
டமைச்சர்களனேகர்சூழ
அதளகுதளமொடுமதிசிதயிவானவர்கள்
அவர்பாதந்தனில்வீழவே
கடகடெனயிடரிவருஞ்சேனையைச்சேடனும்
கண்டுமிகத்தெண்டனிடவே
கவனமொடுபவகமலதவமுனிவரபயமென
கரமெடுத்தெதிர்செல்லவே
படர்கொடியகடலதிரமுரசரையவியனுலகில்
மன்னரியமன்னர்தொழவே
பரமன்ஹரிநானெனவே யிரணியனிதோவருகிறார்
பலருமிகயெச்சரிக்கை

பொது-விருத்தம்-இ-ம்-தேசிகதோடி

அண்டரண்டங்கள்போற்ற வமரர்கள்வணங்கியேற்ற
எண்டிசைகார்க்குந்தேவர் யிறைஞ்சிவாய்புதைத்துநிற்க
மண்டலம்வியப்பதேவ மாமுனிவோர்களாசிர்
கொண்டிடுமிரணியசூரன் கொலுவுக்குவருகின்றானே

பொதுசொல்-இரணியன்வருகிறதரு

இ-ம்-மத்தியமாவதி-தாளம்-ஆதி

அடர்மகுடமுடி துலங்கவே-ஆஆஆஆஆ
அணிந்தமணிப்புயமிலங்கவே
யிடியனையமுரசதிரவே-ஆஆஆஆஆ
யிரணியமன்னன்கொலுவில்வந்தானே(அடர்மகுட)

அடயலர்கள்கிடுகிடென்னவே-ஆஆஆஆஆ
அருணாருக்கினில்துதிக்கவே
இடர்செய்வடிவேலசையவே-ஆஆஆஆஆ
இரணியமன்னன்கொலுவில்வந்தானே(அடர்மகுட)

மந்திரிதந்திரிகளாடவே-ஆஆஆஆஆ
மௌனவர்கள்தாமறியவே
இந்திரசந்திரரொதுங்கவே-ஆஆஆஆஆ
இரணியமன்னன்கொலுவில்வந்தானே (அடர்மகுட)

அண்டரண்டமதுகுலங்கவே-ஆஆஆஆஆ
அவனியுள்ளோர்மனங்கலங்கவே
எண்டிசையும்படபடென்னவே-ஆஆஆஆஆ
இரணியமன்னன்கொலுவில்வந்தானே(அடர்மகுட)

இரணியன்சொல்-விருத்தம்

இ-ம்-ஆனந்தபைரவி

பொன்னணிமகுடமின்னப் பூஷணதிகளுந்துன்னத்
தன்னிகரிணையில்லாத நயித்திபாருகிற்குழ

மின்னிடைமாதர்வந்து மிக்கபொற்கவரிவீச
இன்னிலமதிக்கப்பெற்ற யிரணியன்கொலுவில்வந்தான்

தரு-இ-ம்-மோகனம்

தாளம்-ஆதி

பல்லவி.

ராட்சதர்க்கதிபதி-தானயிரணியமகா
ராஜராஜன் வந்தானே

அநுபல்லவி

தீட்சண்யமாகவே தேவர்களும்நடுங்க
திரமுளமுனிவர்கள் தபங்களழிந்திட
திங்கள்கதிரழல்வெளிகளழிந்திட (ராசதர்க்கதிபதி)

சரணங்கள்

சோதிசந்திரவட்டக்குடையவுணரிணிதுபிடிக்க நல்ல
துலங்குமிரணியநமாவென்றந்தணர்மறைபடிக்க
நாதனென்னுமனப்பயங்கொண்ட
ரம்பைகள்நடிக்கவின்னும்
நாகலோகத்தோர்கள்ரத்னமாலைவைத்து
[redacted]கள் ...ம்பிடிக்க
கோதிலாநவமணிமுடிதுலங்கிட
குவலயத்திலுள்ளோர்கண்டுகலங்கிட
வாதைசெய்துலகழிக்கமனதுள்ளமந்திரிமாரிலங்க
தம்புருகின்னரிவீணைமுழங்கிட
தவிலொருநாகசரங்கள் தழங்கிட
பம்பைகள்கொம்புகள் துந்துமியொலியிட
பலவிதமுரசமுமறைபடயிப்படி (ராட்சதர்க்கதிபதி)

பொது-விருத்தம்

இ-ம்-தோடி

கொடிமிகபடபடென்னக்
குவலயநடுங்கிபஞ்ச

இடியென அவுணர்கூவி
யெதிர்கவெங்கேயென்ன
அடிதனைத்தொழுதன்றா
ராயிரங்கோடிவைச்சர்சூழ
கடிதடநீள்வாளேந்தி
கனகனும்வருகின்றானே

### இரணியன்வருகிறதரு

இ-ம்-கல்யாணி-தாளம்-ஆதி

கண்ணிகள்

அதிகவீரபராக்கிரமனாலவற்றபலவிக்கிரமன்
துதிகள்தேவதுஷ்டக்கிரகன்-யிரணியபூபன்
கொலுவுதனில்மேவினான்
யொன்மணிமகுடமின்னப்பூந்துகில்பளபளென்ன
மின்மினிப்பூணொளிதுன்னவேயிரணியபூபன்
வேடிக்கையாய்வந்துமேவினான்
சந்திரக்குடைமேல்விளங்கத்தாமரையிருபால்துலங்க
வந்திகாவாழ்த்தொலிபொங்கவேயிரண்யபூபன்
வானவர்வணங்கவந்தானே
மின்னுமிடைமாமயர்கள்வேல்போல்விழிகன்னிய[illegible]
பொன்னிழைத்தநீபங்களேந்தவேயிரண்யபூபன்
புசழுடனேவந்துமேவினான்
வருணன்பன்னீர்த்தெளிக்கமந்தவாடைத்தேன்றுளிக்க
பெருமதிதெண்குடைபிடிக்கவே-யிரண்யபூபன்
பெருமையுடன்வந்துமேவினான்
சுபகரமாய்பார்க்கும்போது சூரர்கைகட்டிநடுங்கி
விபரிதபொன்பூவும்போடவே-யிரண்யபூபன்
விந்தையுடன்வந்துமேவினான்
இருப்புலக்கைப்பிண்டிபாலமெங்குமழுவேல்வாள்சூலம்
தரித்துமுராசுவளதிரவே-யிரண்யபூபன்
சகலாட்சகன்வந்துமேவினான்
அந்தரதுந்துமிமுழங்க அகிலமெங்குந்தான்வணங்க

சுந்தசரங்லீகதகிலோலனுயிரண்யபூபன்
சுகமுடனேவந்துயேவினன்

இரணியன்சொல்-விருத்தம்

இ-ம்-தேசிகதோடி

இண்டமூம்மூர்த்திகளைத்துரத்திவிட்டேன்
இகல்செய்துயிந்திரனைச்சிறையில்வைத்தேன்
தெண்டிசைவாழ்யெமனைபணிவிடையேகொண்டேன்
தேவர்களைக்குறுதிசிந்தவடித்துமந்த
பண்டிமறைமுனிவொல்லாம்நடுங்கலோகம்
பதினலுமெனைத்துதிக்கபண்ணிவைத்தேன்
இண்டுலகில்தெய்வமில்லையானேதெய்வம்
என்குலமும்யென்னரசும்யென்றுவாழி

முதல்-துன்முகமந்திரிசொல்

விருத்தம்-இ-ம்-கல்யாணி

இரணியீஸ்பரனேயென்று
பெண்டிசையோர்கள்மற்றும்
தரணியின்மீதிலுள்ள
சராசரமெல்லாநின்று
சரணெனவந்துவுந்தன்
றளின்மேல்விழுந்துபோற்ற
கருணையாயவரைக்காக்குங்
கர்த்தனேபோற்றிபோற்றி

உ-வது-மந்திரிசகுனிசொல்

விருத்தம்-இ-ம்-சங்கராபரணம்

அண்ணலேபோற்றிபோற்றி
யமரர்காயகனேபோற்றி

வெண்ணிலாவிஜையங்கொண்ட
  விறைவனேபோற்றிபோற்றி
புண்ணியகுலங்கொண்ட
  போர்முகவீராபோற்றி
திண்ணமாயென்னையாண்ட
  தேவனேயிரணியாபோற்றி

இரணியன்சொல்-விருத்தம்

இ-ம்-சாவேரி

எதிர்பொருதியமர்விளைத்துவெற்றிகொண்டு
எதில்மிகுநன்மதியமைச்சமாரோகீங்கள்
சதிர்மிகுத்தசபையிலுமக்கிருக்கையீய்ந்தோம்
தகையுடனிறைந்துபார்ந்திருப்பீர்தாமே

கட்டியன்சொல்-விருத்தம்

இ-ம்-நாட்டை

மன்னர்மன்னவர்கள்வேதவேதியர்
  வணங்கிநின்றுபுடைசூழவே
புன்னுமாதவர்களண்டர்நின்றருகில்
  பணிந்துமாமலர்கள்தூவவே
என்னுதற்கரியபத்னமாலைவைத்
  தூரகமன்னரடிதாழவே
தன்னிகற்கரியயிரண்யமன்னனிருந்
  தாளிணைக்கினிதுசரணமே

கட்டியன்சொல்

கூறல்

திடமிகுத்தசூரருக்கொருதனிக்குவடெனத்
திகழ்வச்ரகண்டவீரா

கடுகடுத்திடியெனப்பொருதுசத்துரர்களைக்
களப்படப்பொருதுஞ்சூரா
தடமுடிச்சூரர்களைத்துகள்படச்செய்தஜெய
சங்கிராமமீகுங்கோரா
கொண்டையில்முச்சகமதைப்பெருகளித்திடவருங்
கொற்றவாயிரணியீஸ்பரா

நீதிவிசாரணை

இரணியன்சொல்

பரணி.

தரணிதனிலவுணராலிந்திரனைக்கொண்டுவந்து
தான்விலங்கிட்டீர்களா

மந்திரிகள்சொல்

பரணி.

தாரணிக்கதிபனேயிந்திரனைக்கொண்டுவந்து
தான்விலங்கிட்டோமையா

இரணியன்சொல்

பரணி

தகமைபெருவானவர்கள்தலைதனிற்சுமைகளைத்
தான்வைத்திடித்தீர்களா

மந்திரிகள்சொல்

பரணி

சக்ரேஸ்பராதேவர்தலைதனிற்சுமைகளைத்
தான்வைத்தடித்தோமையா

இரணியன்சொல்

பரணி,

உரமான தம்பியைக்கொண்ணமாயவனோடி
யொளித்தயிடமறிவீர்களா

மந்திரிகள்சொல்

பாணி

உக்ரமாய்தம்பியைக்கொண்ணமாயவனோடி
ஒளித்துவிடபேயரிகிலோம்

இரணியன்சொல்

பாணி

உசிதமுடனேபிரமன்திரிகாலபஞ்சாங்கம்
உரைசெய்தானுகொலுவினில்

மந்திரிகள்சொல்

பாணி

உத்தண்டமன்னனேபிரமனும்பஞ்சாங்கம்
ஓதியேமிகவருகிறார்

இரணியன்சொல்

பாணி

வருணன்மீசானியன்வாய்வொடுகுபேரனும்
வந்தடிப்பணிந்தார்களா

மந்திரிகள்சொல்

பாணி

வண்மையுடனாறுதினமும்நால்வரும்வந்திதோ
வணங்கியேநிற்குறார்கள்

இரணியன்சொல்

பாணி

வாசமிகுகம்கமபன்னீர்சலங்கொண்டு
வந்துமேகம்பொழியுதா

மந்திரிகள்சொல்

பாணி

மன்னவாவும்முடையசக்கரநெறிப்படி
வந்துமேகம்வீசுது

இரணியன்சொல்

பரணி -

குடியானகோடானகோடிராட்சதர்களும்
கொலுவுக்குவந்தார்களா

மந்திரிகள்சொல்

பரணி

கோரயெமதூதனைக்கண்டபல்லுயிர்கள்போல்
குலைநடுங்கியேநிற்குறூர்

இரணியன்சொல்

பரணி

கூாடாமுற்றிலும்பாரடா
கோடையிடிபடைவீரரோ

மந்திரிகள்சொல்

பரணி

குறையன்றியாவரும்வந்துநின்றாரிதோ
கொற்றவாநின்சமுகமே

நாட்டியப்பெண்கள்வருகிற

விருத்தம்-இ-பந்துவராளி

அழைத்தனரென்றபோது அஞ்சனந்தீட்டித்தங்கம்
இழைத்தவொட்டியாணந் தாலுமிடையினிற்பளபளென்ன
கழுத்திலாபரணமெல்லாம் கலகலென்றலங்கமாதர்
செருத்திடுமரசன்மேவுஞ் சிற்சபைதனில்வந்தாரே

தரு-இ-ம்-கல்யாணி-அடதாளம்

பல்லவி

நடனஞ்செய்தமாதர்கள்வந்தார் மன்னன்மகிழ
நடனஞ்செய்தமாதர்கள்வந்தார்

அநுபல்லவி

விடம்போற்சுதிகள்சிற மிருதங்கமதிற்சேர
அடவாயசங்கீதங்கூறி அபிநயந்தனிற்தேரி (நட)

சரணங்கள்

சுத்தசுரங்கள்படிக்க மத்தளந்தாளம்
ஒத்துபிசகாமலடிக்க
தத்தயர்பாதமாடத்தகும்படிமைத்தவர்பாட
மெத்தசபையோர்கொண்டாடமெயகலங்கிரம்பையோட (நடன)

சுந்தரக்கிளிபோல்பேசி கீதங்கள்காவால்
தெளிந்துகைகளைவீசி
கந்தருவர்கண்டுதேகங்கலங்கிடயிவள்ராகம்
அந்தரங்கண்டவர்மோகம்ஆகுதென்பாரேவைபோகம் (நடன)

அவனியுள்ளோர்கள்களிக்க சபையிலுள்ள
அரசர்மனந்ததளிக்க
மவுனமுனிவர்கண்டுலையலின்மனங்கொண்டு
குவலையந்தன்னில்நின்றுகொஞ்சுங்கிளியிவளென்று (நடன

நடனமாதர்சொல்

கலித்துறை

விடையாளனைப்பணிந்தேதந்திய
காசிபர்மெய்த்தவத்தால்
படையாளராய்வரும்
பார்த்திபனேபுவிநூலுலகம்
குடையாளராய்வருமர்சே
வுனதுகொலுமுகத்திற்
தடையாதுமன்றிநடனைக்காக்க
நீருந்தயைசெய்வையே

நடனஞ்செய்மாதர்சொல்

தரு-இ-ம்-மொகனம்-தாளம்-ஆதி

பல்லவி

கனயோகசாலிநீயே-கனயோகசாலிநீயே

அநுபல்லவி

இனியொருவருமிணைசொல்வரியவிஜப
இந்திராதிகளபணிபாதாதந்திராயிரணியனுதா (கன)

சரணங்கள்

தேவர்கள்நிதமும்பணிபாதா மூன்று
செகத்தில்வெகுபுகழ்பிரக்யாதா
பெவர்கள்நிதமுத்தாவும்விதரண
வீராரணமுககுராகோராயிரணியதீரா (கன)

தானவர்குலமெல்லாமீடேர வுந்தனை
யமரரொல்லாந்துதிகூர
கோணனப்பதினுலுலோகமரசுகொண்ட
கோலாகலரணவீராலோலாயிரணியமாரா (கன)

தாம்தாம்திரிஞுதிரிதில்லாஞு
தந்தரிதாம்தாம்தகதகதக
தத்தபதத்தகத்திரிகிட (கன)

வித்துவான்கள்சொல்

விருத்தம்-இ-ம்-சங்கராபரணம்

தாமரைக்கண்ணன்புகைக்கண்ணன்பெறவைதவிர
நாமந்துன்னவேயுலகங்கள்யாவையும்நவில
தாமவெங்கனலந்தணர்முதலினோர்சொரிந்த
ஓமவேள்வியினிமையவர்பேரொலாமுன்னும்

வசனம்

வீருமையா யிரணியபூபாலகா வும்முடையகீர்த்திப்பிரதாபம்யெப்படிப்பட்டதென்றால் நாராயணனென்னும் சிவனென்னும் பெயரைத் தூத்தி வும்முடையபெயரே யீரேழுபதினாலுலோகமும் விளங்கும் படியாகச் செய்வித் தும்பிராமணாள் செய்யாநின்ற யாகாதி கிரமங்களினால் அக்கினிமுகத்திலே சொரியாநின்ற அவிற்பாகங்களையெல்லாம் தேவரீருண்டு கீர்த்திப்பெற்ற மகானுபாவரே

வித்துவான்கள்சொல்

விருத்தம்-இ-ம்-கேதாரகௌளம்

மரவின்மாப்பொரும்புறக்கடல்மஞ்சனமரிவி
யரவணைட்டிடைமகளிரோடினனமுதருந்தி
பரவியிந்திரன்பதியிடைபகற்பொருதாத்தி
இரவிலோகமும்நான்முகனுலகத்திலிருக்கும்

வசனம்

இனனம் வும்முடையப் பிரதாபம்யெப்படியென்றால் வுப்புக்கடல் தேன்கடல் கருப்பன்சாத்துக் கடல்தயிர்க்கடல் நெய்க்கடல் நல்லதண்ணீர்க்கடல் பாற்கடல் யிந்தயேழுகடலேயும் சாலாலேதாண்டி அப்பால் மானதோத்திரப்பருவதமுங்கடந்து அப்பால் அருபத்து நாலுகோடி யோசனையகலமும் ஆழமும் பொருந்திய திருப்பாற் கடலிலே போய்பிராதக்கால ஸ்தானம்பண்ணி நாகலோகத்திலேபோய் நாககன்னியருடனேகூடி அமுர்தபானஞ்செய்து மத்தியானகாலத்திலே தேய்வலோகத்திலேபோய் தேவசிம்மாசனதநில் கொலுவிருந்து யிளப்பாரிஅப்பால் யிரவுகாலத்தில் பிர்மலோகத்திற்போய் கொலுவிருந்து செங்கோல்செலுத்தாநின்ற மகானுபாவரே

வித்துவான்களசொல்

விருத்தம்-இ-ம்-பந்துவராளி

பண்டுவானவர்தானவர்யாவரும்பத்தி
தெண்டிரைக்கடல்கடைதாவலியதுந்தேடி

கொண்டமத்தினைக்கொத்தலர்க்குவ்வுதோடகமைந்த
தண்டனைக்கௌனுத்ததுநொய்தெனத்தவிர்ந்தான்

வசனம்

பின்னையும்வும்முடைய பிரதாபம் வெப்படியென்றால்அநேகங்கோடி தேவர்களாலேயும் அனேகங்கொடி ராட்சதர்களாலேயும்மயிற்முனை யசைக்கப்படா நின்றநூராயிரம் யோசனைவுயரமும்யிரநூராயிரம்யோசனை அகலமும் பொருத்திய மந்தரகிரியை தோளுக்குயேற்கத் தெண்டாயுதமாக பிடிக்கவேணுமென்று பிடுங்கிப் பாாக்கின்றபோது அந்தமலை யும்முடைய சுண்டுவிரலுக்கு கனம்போராமல் யெரிந்துவிட்டவரல்லவோ வும்முடையப் பெருமையை ஆதிசேஷனாலுஞ் சொல்லமுடியுமோ மகானுபாவரே

இரணியன்சொல்விருத்தம்

இ-ம்-பைரவி

மந்திரிமாரேயிந்த
 மாசருங்கொலுமுன்பாக
விந்தைபாய்நடனஞ்செய்த
 வெழில்மிகுமாதருக்கும்
அந்தமாம்புலவோருக்கும்
 அகமகிழ்ந்திடுவதாக்
பந்தமாய்சவிகைச்சேலைப்
 பணிதிபொன்னளித்திடீரோ

வசனம்

வாருங்கள் மந்திரிமார்களே நமது கொலுமுகச்சமுகத்துக்கு முன்னால் பரதசாஸ்திரப்படி நடனஞ்செய்தப் பெண்களுக்கும் கவிதாப்பிரசங்கஞ் செய்த வித்துவான்களுக்கும் வேண்டிய பொன்பூஷணங்களும் அமிரிமிதமாய் குறைவில்லாமல் குடுங்கள்மந்திரிமார்களே

மந்திரிகள்சொல்

கவி

தூதகஞ்சுகியே
ஓதும்வாணவற்கும்
நீதமங்கையற்குப்
போதபொன்னளிப்பாய்

கட்டியன்சொல்

கவி

ஒன்னலர்நடுங்க
மன்னியவமைச்சரோ
சொன்னசொற்படிக்கி
நன்னிதியளிப்பேன்

வித்துவான்கள்சொல்வாழி

விருத்தம்-இ-ம்-பூரிகல்யாணி

குடைநிழலிரணியேசன்
கொலுமுகம்நிறைந்துவாழி
தடமுடிப்புனைந்தமன்னர்
தழைத்திடுஞ்சமூகம்வாழி
படிமிசைச்செல்வமோங்கிப்
பதிமிகப்படைத்துவாழி
அடர்பொருமவ்வணரோங்கி
யனுதினம்வாழிவாழி

நாட்டியப்பெண்கள்சொல்

எச்சரிக்கை

சிலாதிதிபாலாசுரர்காலாநவலீலா
கோலாகலயிரணியேஸ்வரகோவேயெச்சரிக்கை
கோவேஜெயதேவேந்திரகுழுதேவர்கள்முதலாய்
மாவேந்தர்களபணியும்பதமன்னாயெச்சரிக்கை

ஙன்னுவிற்பன்னுசம்பன்னுபிரசன்னு
தன்யாயிரணியயேஸ்வரசதுராயெச்சரிக்கை
சதுராமொழிமதுராமிருதஜயபூரணசந்த்ரா
எதிர்காசிபரிஷிதந்தருள்யிளைவாயெச்சரிக்கை
இளையென்றுனதெதிர்வந்தவரிணைமென்கழல்பணியும்
துளையென்றுளமுளைதங்கியசூராயெச்சரிக்கை
சூராஜெயதிராவதிகோராகனவீரா
சிராதிசழ்முழுவச்சிரதேகாயெச்சரிக்கை
தேகாசுபயோகாயேழுலோகாபிரபுடிகா
வாகாகனுபோகாநிறுவாகாயெச்சரிக்கை
அகிலங்களுமெல்லாமுனதாகச்செயங்கொண்ட
இகல்வென்றிடுமிரணீஸ்பாயிளைவாயெச்சரிக்கை

இரணியன்சொல்விருத்தம்

இ-ட-தோடி

படிமிசைதனைசுருட்டப்
    பலமிகுத்தம்பிதன்னைக்
கொடுமைசெய்துயர்வதைத்தக்
    கொடியமாயனைக்கொணர்ந்து
அடிபடச்செய்துயெகதன்
    வஞ்சகமுடிக்காவிட்டால்
அடர்படுவுலகிலென்னை
    யார்மதிப்பார்கள்மந்த்ரீ

வசனம்

வாருங்கள் மந்திரிமார்களே யெனது தம்பியாகிய யிரணியாக்ஷ தனைக்கொண்ண அந்த அரியைப்பிடித்துவந்து வதைசெய்து யென்கெஞ்சகத்தை முடிக்காமற்போவேனேயாகில் யினியிவ்வுலகத்தில் யென்னை யாவரும் வீரனென்றுமதிப்பார்களோ சொல்லுங்கள்மந்திரிமார்களே

மந்திரிகள்சொல்விருத்தம்

இ-ம்-கௌளபந்து

வாருதிசூழுமிந்த பதிதலத்தரசர்கோவே
ஏருளதம்பிதன்னையிகல்செய்துகொண்ணமாயன்
திரமேயொடுங்கிசெஞ்சந்திகைத்தெங்கேயொளித்திட்டானே
பாரிலுன்கீர்த்திக்கென்றும்பழுதொன்றும்வாராதையா

வசனம்

வாருமையா யிரணியேஸ்வரா வுமதுதம்பியைக் கொண்ண அந்த அரியானவன் வுமக்குப்பயந்து திகைத்துவோடிப்போயி வொளித்துக்கொண்டான் யிப்போது யிந்தவுலகத்தில் வுமதுகீர்த்திப்பிரதாபத்துக்கு யாதொருபழுதுவாராதையாசுவாமி

இரணியன்சொல்விருத்தம்

இ-ம்-மோகனம்

பந்தமாய்வேதம்நாலும்
  பதிஞலுலோகத்திற்கும்
அந்தமாயாசுதெயவம்
  அரிஞர்செய்வேமம்யாகம்
சிந்தைசெய்ஜெபதபங்கள்
  செய்வதுயெனையல்லாமல்
எந்தடவாகவாழ்வற்
  றிருப்பரோசொல்லுமந்த்ரீ

வசனம்

வாருங்கள் மந்திரிமார்களே யிந்தப்பதிஞலுலோகத்தி லுள்ளவர்கள் செய்யும் அரசும்வோமம் வேழ்விஜெபதப மந்திரியாகாதி கிரமங்கள், முதலானத்திற்கும் தெய்வம்நானேயல்லது வேறோயுண்டென்று நினைப்பார்களோசொல்லும் மந்திரிமார்களே

மந்திரிகள் சொல்விருத்தம்

இ-ம்-கேதாரகௌளம்

இருப்பாரோவென்றுகேட்ட
யிணைவனேயுமதுபேணா
விருப்பமாய்த்தொழாதபோர்கள்
வியனுலகில்லையென்று
அருபமாயுரைக்கலாமோ
அறியாதபேர்கள்போலும்
உருப்படும்மைக்காணுமல்
வொளித்திருப்பார்களையா

வசனம்

வாருமையாயிரணி யேஸ்பரா யிந்தத்திரிலோகங்களிலேயும் முள்ள வர்களில்வும்மைத் தொழாதவர்களில்லை யென்று நாவினுல் சொல்லப் போமோ தேவரீருடைய மகுத்துவந்தெரியாதவர்கள்போலப் பதுங்கிக் கொண்டிருப்பார்களையாசுவாமி

இரணியன் சொல்விருத்தம்

இ-ம்-மத்தியமாவதி

மன்னியவமைச்சமாறே
மனமகிழ்ந்துரைபபேன்கேளும்
தனணிகரிணையில்லாதத்
தலங்களோர்பதினுலுக்கும்
கன்னயமாகத்தெய்வம்
நானென்றும்பலரும்போற்ற
இன்னிலவீரபாகுக்கெழில்
முரசறையச்சொல்வீர்

வசனம்

கேளுங்கள் மந்திரிமார்களே யிந்தப்பதினுலு லோகத்திற்கும்நா னேதெய்வமென்று யாவரும் போற்றிவாழ்வது நன்மை அதுதப்பிவே

யௌ

ரொருதெய்வத்தை நினைத்தால் நன்மையாக விளையுமென்று யாவருக்குந்தெரியும்படியாக நம்முடையவீரபாகுவையழைத்து வுலகத்தில் பறையறைச்செய்யும்மந்திரிமார்களே

மந்திரிகள்சொல்விருத்தம்

இ-ம்-கல்யாணி

அடர்பரிசேனைசூழும்
அரசனார்கொலுவிலன்பாய்
இடரொன்றிலாமல்நாளும்
யேவல் செய்பவனேகேளாய்
படரவேமன்னன்போரால்
பறையறைவிக்கவென்று
துடிதுடிப்புடனேசென்று
தோட்டியையழைத்துவாரா்ம்

வசனம்

கேளடாகட்டியக்காரா நமது அரசனார் வுத்தாரப்படிக்கு யிந்தவுலமெல்லாமறியும்படியாகச் செயயவேண்டிபேரிகை முழக்கிவைக்கவேணும் ஆகையால் நிபோய் சிக்கிரத்தில் வீரபாகுவை அழைத்துவாடாகட்டியக்காரா

கட்டியன்சொல்

கவி

பறையறைபவனே
திரமிகுமாசன்
விரவினிலுன்னை
வருகெனஅழைத்தார்

வீரபாகுவன்வருகிரவிருத்தம்

இ-ம்-பந்துவராளி

மட்டிலாப்புகழ்பெற்றோங்கு
மன்னவனழைத்தாரென்று

இட்டமாய்சொல்லக்கேட்டு
செழிதுதிடும்பறையிடுப்பிற்
கட்டியேதடியும்பூரக்கம்பளித்
தோளில்வைத்து
விட்டெனவெழுந்துதோட்டி
வீரபாகுவன்வந்தானே

தரு-இ-ம்-சங்கராபரணம்

தாளம்-ஆதி

பல்லவி

வீரபாகுனானே தோட்டி
வீரபாகுனானே

அநுபல்லவி

சூரனெனுமிரண்யத்திரனுரைத்தபடி
சுகமுடன் ரிசையெட்டுமகிமையால்பறைதட்டும் (வீ)

சரணங்கள்

ஆதியில்பாற்கடலில் தேவர்கள்
அமுர்தங்கடைந்தார்கூடி அந்த
வெதையில்நஞ்சுகொதித்துவிழுந்திட
வெருண்டுஅமரரோடி
நாதனைத்துதிசெயத்திதகன்றவருய்ய
வேதியர்மறைப்படிக்கத்திதிலாபறையடிக்கும் (வீ)

தென்னவன்மகள்தனையே சிவன்மகிழ்
திருமணம் செய்ய திகழ்
இகணிகைம்மலர்மகளை திருமால்
கலியாணமிகச்செய்ய
கின்னரர்சித்தர்கள் வீணைதன்னருகில்ராகம்பேச
அன்னவாவேதக்தொடுக்கமுன்னொனான்பறையடிக்கும் (வீ)

கதிர்விழிதனையுடையோன்கண்டங்
கருத்தமியானறிவேன்மிகுஞ்
சதிர்பெருஞ்சிகரனார்த்ரோகம்
தங்காயிருந்ததறிவேன்
விதியவன்சிரந்தனைமதியணிபவன்கொய்யத்
தறியினில்திசையெட்டு மகிமையால்பறைதட்டும் (வீ)

வீரபாகுவன்சொல்-விருத்தம்

இ-ம்-சங்கராபரணம்

அண்ணலேபோற்றிபோற்றி
யசுரர்நாய்கனேபோற்றி
வெண்ணிலாவிஜையங்கொண்ட
வீரவனேபோற்றிபோற்றி
புண்ணியகுலங்கொண்ட
போர்முகவீராபோற்றி
திண்ணமாயென்னையாண்ட
தேவனேபோற்றிபோற்றி

மந்திரிகள்சொல்விருத்தம்

இ-ம்-தோடி

அழைத்தபோதோடிவந்த
தாரடாவீரபாகு
தழைத்தநம்மரசன்றெய்வத்
தென்னைதொழாமல்வேறோ
வழுத்துவோரதம்மையெல்லாம்
வதைப்பதுத்திண்ணமாமென்
றிழைத்தநம்முலகமெங்கு
மெழில்முரசறைந்துவாராய்

வசனம்

அரடா அடாவீரபாகுவேயிந்த வுலகத்தாருக்கு நம்முடைய அரசனே தெய்வமல்லாமல் வேறொரு தெய்வமில்லை அப்படிமதியாமல்தினை

யாமலிருப்பவர்களுக்கு வேண்டிய ஆக்கினைகள் கிடைக்குமென்று பெ
ரிதும் பறைசாத்தி வாரும்பிள்ளாய் வீரபாகுவே

வீரபாகுசொல்விருத்தம்

இ-ம்-நாட்டை

வியனுலகினில்வாழ்வேதியர்மனிதர்
மிகுதவமுனிவர்வானவர்கள்
நியமமாய்தெய்வம்அரசனேயென்று
நித்தமுந்தொழுதிடல்நன்மை
பயம்பெறத்தெய்வம்வேறெனநினைத்துப்
பகர்ந்தவர்நாக்கையுமறுத்து
இயலுடன்வதைக்கயிரணியமன்னன்
இட்டகட்டளையிதுவாமே

வசனம்

வாருங்கள்வேதியர்கள் தவசிகள் வானவர் மானிடர்முதலானவர்க
ளே கேளுங்கள் யிந்தப்பதினாலு லோகத்திற்கும் நமது அரசனேதெ
ய்வமென்றும் யாவருந்தியானிக்கவேண்டியது அதுதப்பியும்மாத்தும்வே
றொருதெய்வத்தைநினைத்தாலும்செபித்தாலும் மதித்தாலும்துதித்தா
லும்அவர்களைப்பிடித்துவந்து நாக்கையறுத்து வேண்டியஆங்கினைகள்
படியாக அகிலாண்டகோடி பிர்ம்மாண்டநாயகராகிய யிரணிற்பேஸ்பாம
காராசன்யிட்டு கட்டளை யிதைசகலமானபேர்களும் அறிவீர்களாக திடு
ம் திடும் திடும் திடும்

பொதுவசனம்

இந்தப்பிரகாரமாக யிரணியமகாராசன் கட்டளையினபடி வீரபாகு
பறைசாத்தினபின் அந்தபுரத்திலிருந்த லீலாவதியம்மன்கற்பவேதனை
யால் தோழிகளைப்பார்த்து சொல்லுகிற விதங்காண்க

லீலாவதிசொல்விருத்தம்

இ-ம்-முகாரி

என்னிடதோழிமாரே
யிருந்திருந்தின்றைக்கேதோ
பண்ணுமென்வயிரிடுப்பும்
பக்கமும்நோகுதிந்த
நன்னயமாகக்கைகால்
நடுக்குதுயெந்தனுக்கு
மன்னியசோபதாப
மாகுதெனசெய்வேனம்மா

வசனம்

வாருங்களடித் தோழிப்பெண்களா யின்றையதினத்தில் யெனக்குகைகா லயர்ந்துப்போகுது வயரும் யிடுப்பும்பக்கமும் நோகுது யிருந்திருந்துதிரேகம் நடுக்குது மெத்தவுங்களையாய் வருகுது யிதற்குநான்யென்னசெய்வேனடி அம்மணி

தோழிப்பெண்சொல்

கொச்சகம்

மந்திரியேநிர்கேளும்
மன்னவனார்தன்றேவி
வந்துநிறைந்தகெற்ப
மாதமொருபத்தாகி
அந்தரமாயக்கோதை
யலைந்துமிகவாடுகிறாள்
விந்தைமருந்துவச்சி
வேணும்வரச்செய்வீரோ

வசனம்

ராஜாதிராஜனாகிய யிரணியேஸ்பரமகாராசனுக்குகந்தமந்திரிகளே சரணம் யெங்கள் அன்னையாகிய லீலாவதியம்மாள் நிறைந்த கெற்பவதி

யாய் பிரசவேதைப் படுகிருள் அதற்குவொரு மருத்துவச்சியை அழைப்பிக்கவேணுமையாசுவாமி

மந்திரிசொல்விருத்தம்

இ-ம்-பக்துவராள்

தேவர்கள்முனிவரஞ்சத்
திகழும்வாள்கையிற்கொண்ட
காவலன்றேவியான
கன்னிகைவருத்தந்தன்னைப்
பாவையருரைக்கக்கேட்டோம்
பரிந்துகட்டியனேகிபோம்
யேவலாள்மருத்துவச்சி
யிட்சணமழைத்துவாராய்

வசனம்

கேளும் ஆசாரவாசல் கட்டியக்காரா நமதுராசாதிராசன் பத்னியாகிய லீலாவதி அம்மாள் நிறைந்தகெற்பமாகி பிரசவேதைப்படுகிறதாய்தாதிமார்கள் வந்து சொல்லக் கேழ்விப்பட்டோம் அதற்குதகுந்தமருத்துவச்சியை அதிசிக்கிறத்துக்குள்ளாகஅழைத்துவாடாகட்டியக்காரா

கட்டியன்சொல்

வசனம்

அப்படியே தங்களுத்தாரப்படிக்கி தடையில்லாமல்ஒருநொடியில் அழைத்துக்கொண்டுவருகிறேனையாசுவாமி

மருத்துவகிழவிவருகிற

விருத்தம்-இ-ம்-சுருட்டி

கடிமனதுடனேகாலுங்
துவளக்காதுங்கேளாமல்
இடையினில்கருத்தகர்ந்தை

யுடுத்தியிருகண்பஞ்சாகி
வடிவுபெலிந்திடகூன்மூதுகுடடன
வாயிற்பல்லில்லாள்
கொடியநடுக்கிக்கிழவிமருத்துவக்
கோதையும்வந்தாளே

தரு-இ-ம்-மோகனம்

தாளம்-ரூபகம்

பல்லவி

மருத்துவத்தினிற்றிரமையெனைப்போலிந்த
வையகத்திலுண்டோ

அநுபல்லவி

பெருத்தவயத்தினால்ஞெய்மிகுத்தாலுமவளைப்
பேசாதடியென்றுவாயின்மீதிலடித்து (மருத்து)

பிறட்டவும்நன்றுயுருட்டவுந்திருட்டுதனமா
யழுதாலெனக்கென்னதெரியாதா
வரட்டுமாடாகிலுங்கால்படிபால்பீச்ச
வகைதுகையறியசெகத்திலென்னைப்போல் (மருத்து)

இந்திரன்றேவிதனக்கந்தநாளில்கெற்பம்
மிகுந்தவள்புலம்புராளென்றென்னையழைத்தார்கள்
சிந்தையகிழ்ந்துமனைப்புகுந்துபார்க்கும்போது
செல்வமேவாடியென்றழைத்தேன் (மருத்து)

செகத்திலில்லாதஞெக்கிபாயிருந்தாள்வகை
தெரியாமல்வளர்ந்ததுயென்மூதுகினில்கூன்
வந்தழைத்தமர்தானேகம்பிள்ளை
வகைதுகையறியாமல்வளர்ந்ததுவாறுமாறு (மருத்து)

பருததுவக்கிழவிசொல்விருத்தம்

இ-ம்-மத்தியமாவதி

ஆரம்மாவருத்தமாகி
　　யழுகிருய்வளவில்நின்று
கூரம்மாவுனக்குண்டான
　　குறிகளைச்சொல்வாயாகில்
பாரம்மாவெந்தனத்ராணி
　　பாரினிலொருவருண்டோ
நீரம்மாவஞ்சவேண்டாம்
　　நின்றெனக்குறைசெய்வாயே

வசனம்

ஆரடியம்மா யிவ்வளவிலே லீலாவதியென்கிறப் பெண்ணிதானோ யேனழுகிருயவுனக்குண்டானக் குறிகளையெல்லாம் சொல்வாயானல்அதற்குத்தகுந்தவுபாயஞ் சொல்லுகிறேன் ஒளியாமல்சொல்லுமம்மா லீலாவதியே

லீலாவதிசொல்

அகவல்

வஞ்சியேயெந்தன் வயருளப்பெடுத்து
நெஞ்சுதானுலர்ந்துநினைவதுதவருது
இடுப்பெலாமநோகுதுயென் துடையிரண்டும்
கடுக்குதென்னம்மணி நானென்னசெல்வேன
பக்கமும்நோகுது படுத்திடப்போனல்
விக்குதென்குலேபை விரியுதென்னடியோ
கத்திரிக்கோலால்கத்திரிப்பதுபோல்
உத்தரமுட்டெலும்பை வலிக்குதென்னம்மணி
பெருமூச்செறிந்து திறட்டுதென்வயத்தை
வரவரவதிகநோய் வருகுதென்சய்வேன்

கண்ணிருண்டெந்தன் காதடைத்திடு
நண்ணுமென்றரோகம் நடுக்குதென்செய்வேன்
நடந்திடக்கால்கள் நடக்குதுட்காரந்தால்
இடர்தரப்பெருமூச் செறியுதென்னடியோ
ஒருகுடந்திரண்டு வோடியோறட்டி
வரவரவிளைப்பாய வருகுதென்னம்மணி
யென்செய்வேன்சகியேயென்செய்வேன்தோழி
யென்செய்வேனம்மணியெப்படிபொருப்பேன்

லீலாவதிசொல் தரு

இ-ம்-ஆகிரி-தாளம்-ஆதி

பல்லவி

வயர்வலிக்குதே அம்மா அம்மா அம்மா யெந்தன்
வயர்வலிக்குதே

அநுபல்லவி

அயலாரபோலவெயென்னை
யம்மணிமெண்ணாதே
ஆகமநடுக்குது
தாகமெடுக்குது (வயர்வ)

சரணங்கள்

அங்கம்நோகுதே அம்மா அம்மா அம்மா யெந்தன்
அங்கம்நோகுதே
அங்கம்நோகுது அடித்துடையதிருது
பொங்குகுழையையென்பெண்தோஷம்பொல்லாது
போகாபோவொற்றிப்போகாயோ (வயர்வ)

மங்கைமாரோயெந்தன் வாணுலழுந்திப்போ
வதையுதுரோகம்வதையுது
இங்கிதமறியாதேயென்னையிழுத்தெறியாதே
அம்மா அம்மா அம்மா வயாவலிக்குதேஅம்மா
அம்மா அம்மா யெந்தன் (வயர்வ)

லீலாவதிசொல்

சிங்காரபத்தியம்

தையலேயென்த்ரேகந்தணல்வெதுப்பாகுதே
தாளேனினியிக்தவேளையம்மா
மெய்யெலாம்வேர்வையால்வேகுதேநோகுது
மெல்லியேநானென்னசெய்வேனம்மா
கைகால்நடுக்குதுகடுக்குதென்னடிவயர்
கனத்துமிகநோகுதடிகன்னியாரே
பையவேயென்னிருபக்கமுடனீரலும்
பதருதுசிதருதுவுதருதம்மா
ஐயையோவயனாநோகுதம்மம்மாரே
அன்னமேசொற்னமே யென்னனும்
செயயும்வகையினியொன்றுமிரிகிலேனே
தேன்மொழியேயிதற்குவகைசெப்புவீரே

லீலாவதிசொல் தரு

இ-ம்-பூரிகல்யாணி தாளம் அடசாப்பு

பல்லவி

என்னமோயென்வயத்தை யன்னமேநோகுதேநொ
ன்னதான்செய்வேனடி அம்மம்மம்மாரோ
என்னதான்செய்வேனடி

அநுபல்லவி

அன்னமாரோயெந்தன்னருகினில்வந்திப்போது
என்னைப்பிசகாமலிருகினிருக்கிப்பிடியுங்கடி (என்ன)

சரணங்கள்

இடுப்புவலிப்பெடுக்குதே யெந்தன்வயத்தை
இருந்திருந்துகடுக்குதே

உடுத்ததுயில்சறிந்துவுதறுதென்கையுங்காலும்
அடுத்துப்பிடிக்கயிங்கேயென்னெதிராருங்காணேன் (என்ன)

பக்கம்விழுந்துப்போகுதே அம்மணியெந்தன்
பழுவெலும்பெல்லாம்நோகுதே
மூக்குந்தம்மாளேயெந்தன்முன்னேயழையுங்கடி
இத்கென்றுயிரத்தேளெந்த்ரோகத்திற்கொட்டிநாப்போல் (என்ன

வயத்தைபிரட்டுதைதையோ யெனதுகூலே
மார்பில்வந்துமுட்டுதைதையோ
கயத்தைப்பிடிக்கச்சொன்னால்களேயாய்வருகுதிப்போ
பயத்தியக்காரிகளாபலவிதமாய்ப்பேசுரீர் (என்ன)

மருத்துவக்கிழவிசொல் விருத்தம்

இ-ம்-சங்கராபரணம்

திருநிறைந்திலங்கும்பிள்ளை தெய்வீகமானபிள்ளை
குருவருள்மிகுந்தபிள்ளைக் குவலையமாளும்பிள்ளை
வருவிழியுடையலீலாவதி திருவயத்திலின்றுள்
அருமையாய்ப்பிறந்தபிள்ளை யாண்பிள்ளையதிந்திடமே

பொதுவிருத்தம்

இ-ம்-மோகனம்

இந்தவருத்தத்துடன்மகனே
யீன்றுளீன்றபிள்ளை தனைச்
சொந்தத்தோழிமாரெடுத்துத்
தூயநீராட்டிவெயில்வளர்த்தி
வுந்திக்கொள்ளுஞ்செவ்வெண்ணை
யூட்டிப்பெற்றஆச்சிமுன்னே
வந்துகளித்துக்கொண்டாடி
மகனென்றேதிகைகொடுத்தார்

வசனம்

அப்போது அருகில்நின்ற சுற்றத்தார்களும தாதிமார்களுங்கூடி பிள்ளைக்கு நீராட்டி வைத்துதுவட்டி வெயில்வளர்த்தி யீரம்வுலர்த்தி செவ்வெண்ணையூட்டி மகிட்சிக்கொண்டாடி அடியம்மணிலீலாவதியே யிந்தாயிது ஆண்பிள்ளையென்று கையிற்கொடுக்க லீலாவதியம்மன்வா ங்கிககொண்டாள்

இ-ம்-ஆசாவேரி

கொடுத்தமகனைக்கையிலேந்திக்
குமுதங்குமுத்துதிர்வதுபோல்
யெடுத்துமுத்தமிட்டணைத்து
யிருகொங்கையினூரியபாலை
கொடுத்துவிழிமூர்க்குருவியுள்ளங்
குளிர்ந்துகுளிர்ந்துகுப்புத்து
படுத்தாளின்பக்கடல்படிந்தாள்
பார்ப்பாள்சுத்திகார்ப்பாளே

வசனம்

தன்கையிற்கொடுத்த மகனை வாங்கிக்கொண்டு யெடுத்துமுத்த மிட்டு யிரண்டுஸ் தன்னியத்திலும் பெருகியபாலைக்கொடுத்து மனங் குளிர்ந்து ஆனந்தம்பெருகி யின்பக்கடலிலமூழ்கினவளானள் லீலாவதி

மருத்துவக்கிழவிசொல்

விருத்தம்-இ-ம்-பைரவி

தெருலயற்காசிபான
தேன்மொழியேநிவாழி

திருவயத்துதித்தமைந்தன்
சிரஞ்சிவியாகவாழி
வருவிழியுடையலீலா
வதியெனுமயிலேயானும்
அருமையாய்வாழுகின்ற
அகத்தனிற்கேகுவேனே

வசனம்

ஸ்ரீசனங்களுக்கெல்லாம் அரசியாகிய லீலாவதியே நீவாழ்க வுனது திருவயத்திலுதித்த பிள்ளையானது சிரஞ்சிவியாகவாழ்க வைப்பொருக்தும்படியானப் பெண்ணேயான்வாழும்படியாக வீட்டுக்குப்போய் வருகிறேனடியம்மணி

தோழிசொல்விருத்தம்

இ-ம்-காட்டை

சதுர்விதவுபாயத்தோடுந்
தரணியையொருகுடைக்கீழ்
அதிபதியாகிநின்று
ஆளுமன்னவனேபோற்றி
மதிநுதல்வதனம்போன்ற
மங்கைலீலாவதிப்பெண்
பதிதனையாளநல்லப்
பாலனைப்பெற்றுளையா

வசனம்

வாருமையா சுவாமி ராசாதிராசவுத்தண்டராச கெம்பீரராச பரமேஸ்பரா யின்றையத்தினம்பட்டத் தரசியாகியலீலாவதியம்மன் யிவ்வுலகனைத்தையுஞ்செங்கோல்நடாத்தும்படியான திவ்விய அதிரூபலாவண்ணியமுடைய ஆண்பிள்ளையைப்பெற்றுளையாசுவாமி

இரணியன்சொல்விருத்தம்

இ-ம்-தேசிகதோடி

மந்திரிமாரோகேளீர்
மங்கைமார்வந்தெனக்கு
சந்ததிபிறந்தசேதி
சாற்றவான்முரசமார்ப்ப
இந்திரவீணைகொஞ்ச
யெழிலிபூமாரிபெய்ய
பந்தமாயெனைப்போல்கீர்த்தி
பாரினிலெவர்பெற்றாரோ

வசனம்

வாருங்கள்மந்திரிமாரகளே நமது தோழியப்பெண்கள்வந்து யெனக்குபுத்திரன் பிறந்தானென்று சேதிசொல்ல யெனது கெடியினாலே அந்தரதுந்துமி யரையுற யிந்திரவீணைகொஞ்சுது தேவபுஷ்பமாரி பெய்யுது யினியிந்த வுலகத்தில் யிவ்விதமான கீர்த்தியார்பெற்றாகள் சொல்லுமந்திரிமாரகளே

மந்திரிகள்சொல் விருத்தம்

இ-ம்-பூரிகல்யாணி

அணிபெறமுடிதரித்த
ஆண்டவாவுமக்குரத்ன
மணியெனவுதித்தபிள்ளை
மகத்தானயோகசாலி
திணிபெறசெங்கோல்தாங்கி
செகமொருகுடையிலாள்வான்
இணையிலாதரசேபிள்ளைக்
கென்னபேரிட்டீனைந்திர்

வசனம்

நவரத்னஜ்ஜித முடிபுனைந்த நாதிபனே கேளும் பிறந்தபிள்ளையானது மகத்தான யோகசாலியாகவும் யிந்த உலகத்தைவெல்லாம்வொருகுடைக்கீழ்நின்று ஆளவல்லவனாகியு மிருப்பான் அந்தக்குழந்தைக்கிப்பேரொன்ன சொல்லுமையாசுவாமி

இரணியன்சொல்விருத்தம்

இ-ட்-சாவேரி

பரந்துவந்தரசரெல்லாம்
பண்புடன் திறையளக்க
சிரந்தங்கொலுவில்வாழுந்
திருள்ளவமைச்சமாரே
நிறைந்தசெங்கோல்செலுத்தி
நிலந்தழைத்துவோங்கப்
பிறந்திடும்புதல்வனுக்கு
பேர்பிரகலாதன்றனே

வசனம்

அரசர்கள் திறைகொணர்ந்து அளக்கும்படி சந்தோஷித்துடன்கமது கொலுவில் நிறைந்திருக்கும் அமைச்சர்களே நல்லசுபதினத்தில் பிறந்தபிள்ளையாகையால் அவனுக்குப்பிரகலாதனென்று பேரளித்தோம மந்திரி

தாலாட்டுகிறதரு

இ-ப்-நிலாம்புரி

ஆராரோ ஆரரிரோ ஆராரோ ஆரரிரோ
தாரார்புயம்படைத்து தவஞ்செய்யுங்காசிபற்கு
பேரனெவந்துதித்தபிரகலாதனனேநித்திரைசெய் (ஆராரோ)

பேரணியுமன்னாபெருமையுடனேசூழ
பாராளிரணியனாபாக்கியமேகண்வளராய் (ஆராரோ)

திங்களொளிவானயெந்தன் தேனமுதமே முக்கனியே
செங்கனியே யறுஞ்சுவையேசெல்வமேகண்வளராய் (ஆரிரோ)

பூதலத்தோர்போற்றும் பொன்னே நவமணியே
நிதொன்றிலாதசெல்வத்திருமகனேநித்திரைசெய் (ஆராரோ)

இரணியன்சொல் விருத்தம்

இ-ம்-ஆனந்தபைரவி

கொலுவிதிலேவல்செய்யுங்
கொடியகஞ்சுகியேகேளாய்
வலிபெறும்நமதுசேனை
தன்னவன்சம்பாசூரன்
இலகியலிலாசக்கண்ணன்
யெரிகண்ணன்புகைக்குங்கண்ணன்
அளவிலாபபடையைப்போ
தழைத்துநிவலிருவாயே

வசனம்

ஆரடா அடா ஆதகஞ்சுகியே நம்முடைய தளகர்த்தரான சம்பாசூரன்நிகும்பசூரன் விசாலாட்சதன் அக்கினிக்கண்ணன் யிவர்களை யெல்லாம் இத்தட்சணத்தில் அழைத்துவாராய் கட்டியனே

கட்டியன்சொல்

கவி

பம்பாமதுபோல்
அம்பாரஞ்சுழலத்
தும்புராட்சதருடன்
சம்பான்வருவாய்

சம்பாசூரன்வருகிற

விருத்தம்-இ-ம்-கல்யாணி

அம்பரந்தன்னில்வாழும்
அமரர்கள்நடுக்கங்கொள்ள
இம்பமுத்திருக்குமுன்ன
னிரணியனழைத்தாரென்று
தெம்புடனவுணர்சேனைத்
திரளுடனெழுந்திருந்து
சம்பரன்முதலெல்லோருஞ்
சதிருடன்வருகின்றாரே

தரு-இ-ம்-சங்கராபரணம்

தாளம்-ஆதி

பல்லவி

சம்பாசூரனும்வந்தானே தளகர்த்தன்
சம்பாசூரனும்வந்தானே

அநுபல்லவி

சம்பாஹுடனிகும்பாசூரனும்வெற்றிக்
கும்பாண்டகண்ணனுடன்செம்பாண்ட
கண்ணனுமாய் (சம்பா)

சரணங்கள்

சுட்டிவல்லயம்பூட்டியே கட்டாரிகுரி
இடையிலுடைவாள்கட்டியே
தாட்டிகமுடனவெகுமேட்டிமேட்டிமேட்டிகளாக
போட்டிகள்பேசிராசன்பேட்டிகள்காணவென்று (சம்பா)

அண்டாண்டநடுங்கவே தவஞ்செய்யும்
அந்தணரெஞ்சொடுங்கவே

கொண்டலெனமுழக்கமண்டியினத்துடனே
எண்டிசைகார்க்குந்தேவர்கண்டுதிடுக்கங்கொள்ள (சம்பா)

திக்குகளெட்டும்வெல்லவே யிரணியன்பேர்
தேசங்களெங்குஞ்சொல்லவே

வக்கிரதந்தராட்சதருக்கிரமுடனேகூடி .
அக்கிரமஞ்செய்யவென்றுகொக்கரித்தாற்பறித்து (சம்பா)

தளகர்த்தன்சொல் விருத்தம்

இ-ம்-பைரவி

இடியிடித்ததுபோற்கூவி
யெங்களையழைத்தபோது
படியிசையரக்கர்வந்தோம்
பகைத்தவருலகிலுண்டோ
வடிவுள்ளமன்றுகியும்
வண்மையாயெந்தனுக்குத்
துடிபடவுரைசெயவீருன்
றுணையடிபோற்றிபோற்றி

ராட்சதர்சொல் விருத்தம்

ஆனந்தபைரவி

அண்டமகண்டமுமிடிக்கவோ
அவனியொன்னலரையொடிக்கவோ
எண்டிசையொன்றாய்ப்பிடிக்கவோ
ஏழ்கடல்நீரைக்குடிக்கவோ
தெண்டிசையெமனையடிக்கவோ
தேவரையமரில்கொடிக்கவோ
துண்டரைமுனிவரைபொடிக்கவோ
சொல்லுமெமதுதோள்துடிக்குதே

இரணியன்சொல் விருத்தம்

இ-ட்-மோகனம்.

வெம்புராட்சதர்களெல்லாம்
விண்ணப்பஞ்செய் துநிற்க
சம்பான்முகத்தைநோக்கித்
தாரணியெங்குந்தேடி
தம்பிதன்னுயிரைக்கொண்ண
தண்டுழா அரியைப்பத்தி
இம்புரக்கட்டிக்கொண்டு
யிட்சணம்வருகுவீரோ

வசனம்

வாருங்கள் தளகர்த்தனை சம்பாசூரா நிகும்பாசூரா அக்கினிக்க ண்ணு சுரோணிதக்கண்ணு நிங்களனைவருஞ் சென்று யென்றம்பியாகி ய யிரணியாக்கதனைக்கொண்ண அரியானவன் யெங்கேயிருக்கிருனென் றுத்தேடிப் பார்த்துப்பிடித்துக் கட்டிக்கொண்டு வாருங்கள் சேனைத் தலையவர்களே

தளகர்த்தன்சொல் விருத்தம்

இ-ம்-நாட்டை

அடித்தானேதேவே
ரரிவித்தப்படியேசென்று
ஒப்புடனுலகமெல்லா
மோடியேதிரிந்துப்பார்த்து
மைப்புரும்அரியைக்கண்டு
மடனுறப்பிடித்துக்கட்டி
மெப்புடன்வருவோமெங்கள்
மேன்மைநிறையத்தானே

வசனம்

தேவரீருத்தாரப்படிக்கி நாங்கள்போய் யிந்த்வுலகத்தையுந்தேடி ப்பார்த்து அந்தஅரியைக்கண்டுப்பிடித்துமடலேறுமடல்சேர்த்துயிருபி

கைகட்டிக்கொண்டு வருகிறோம் யெங்களுடைய அதிவீரபராக்கிரமத்தைப் பாருமையரசுவாமி

ராட்சதர்சொல்தரு

இ-ம்-பைரவி-ஏகதாளம்

கண்ணிகள்

வந்தாரோராட்சதர் உலகமெங்கும்
வந்தாரோராட்சதர்
இந்திரலோகம்புகுந்துயிந்திரனை
இணைத்துப்பிணைத்துமுடிக்கிக்கடிக்கி (வந்தாரோ)

பருதிலோகம்புகுந்துசூரியனைப்
பார்த்து ஆர்த்து சேர்த்து கோர்த்து (வந்தாரோ)

அரன் அரிலோகம்புகுந்து அவனை
அங்குங்காணும்லேயெங்குந்திரிந்து (வந்தாரோ)

பிற்மலோகம்புகுந்துபிற்மாவை
பெருந்தோலுரித்திதுரத்திதெருத்தி (வந்தாரோ)

தர்மலோகப்புகுந்துயெமனைத்
தண்டைப்பிடுங்கிக்கொண்டங்குமுடிக்கி (வந்தாரோ)

முனிவர்மடங்கள்புகுந்துமுனிவர்
முயங்கும்வேள்வியைமயக்கிதியக்கி (வந்தாரோ)

மனிதர்லோகம்புகுந்துமனிதர்
வணங்கியிணங்குணங்களைக்கொண்டு (வந்தாரோ)

சம்பான்சொல் விருத்தம்

இ-ம்-சுருட்டி

வந்தராட்சதர்களெல்லா
மன்னனை வணங்கித்தேவா

இத்தனைப்படிபேசிந்த
தேசமும்உலகமெங்கும்
மூந்தியேகடந்துதிக்குவிஜையமே
மூயன்றோம்நாங்கள்
விந்தைசோரியைக்காணே
மெல்லடிபோற்றிபோற்றி

வசனம்

மேஹாமையா யிரணியேஸ்பரா அடியேன்களை திக்குவிஜையஞ் செய்து வரச்சொன்னீரே யிந்திரலோகம் அக்கினிலோகம் பிர்மலோக ம் கைலாசம்வைகுண்டம் மெங்கும் ஈரணைத்தேடி பாற்கும்போது வும் மூடைய காமதேனமேயல்லாமல் அரியென்கிறபேர் யெந்தெந்த உலகத் திலேயுங் காணேமையாசுவாமி

இரணியன்சொல்

கவி

அரிதனைப்பிடித்துக்கட்டி
அனுதினம்வதைசெய்வேறேன்
சொரிதிகழ்மனைக்கிங்கள்
செல்லுவீர்செல்லுவீரே

வசனம்

நமதுபகைவனை அந்தஅரியை யெந்தவிதத்திலும்பிடித்து வதை செய்கிறேன் நிங்கள்யாவரும் தங்கள்தங்கள் அரண்மனைக்குப்போய் சேருங்கள்சேனைகளே

பொதுசொல்விருத்தம்

இ-ம்-பைரவி

விடைகொடுத்தலுப்புஞ்சேதி
விளைவுடன்சங்கலாதன்

அடல்பெருங்கலாதன்பொல்லா
வனுகலாதனன்றுன்கேட்டு
நடைபெருமீசனவேதன்
ஞகர்கோன்றன்னைநாமே
மிடலுறப்பிடித்துக்கட்டி
மீள்வமென்றெழுந்திட்டாரோ

சங்கலர்தன்வருகிறதரு

இ-ம்-மோஹனம்-தாளம்-ஆதி

பல்லவி

முரன்மிக்கசெய்வுக்கிர யிரணியப்பிரபலமக்கள்
மூவருமேவினுரோ

அநுபல்லவி

திரைமுத்துங்கடலமுத்துங்தரைமுத்துஞ்சுவைமுத்துஞ்
சேடனும்நடுங்கிடவே (முரன்மிக்க)

சரணங்கள்

வடவைக்கனல்வெருண்டயிடரிபபுறதிருண்ட
வாருதியொளித்திடவே
கடக்கக்காமவிதற்குள்படையிற்கனல்தெரித்த
கடலிகிரொளித்திடவே (முரன்மிக்க)

திசையெட்டுங்கிரியெட்டும்விசையகிரிகளெட்டும்
திசைதிசைசுழண்டிடவே
விசையுட்கிஅசைவுட்கித்தசைவுட்கிமனமுட்கி
மிதிவர்கள்மெலிந்திடவே (முரன்மிக்க)

நவரத்னமணிவைத்தசுவர்னப்புரம்வெருட்டி
நானிலமதிர்ந்திடவே
புவனப்பரிகடத்துங்கவனப்பிறமன்மெச்சி
யுவந்துளப்பயந்திடவே (முரன்மிக்க)

சங்கலர்தன்சொல் விருத்தம்

இ-ம்-பந்துவராளி

தரணியீரேழுமாண்டதந்தையேபோற்றிபோற்றி
விரவுடனெங்கன் துண்டோள் வீங்கியேதிவுதீர
திறமுடனுனக்குவேண்டுஞ் செய்கையுங்கையிலேமேலா
கறவிலாவூழியத்தைக் கட்டளைவிட்டாள்வீரே

வசனம்

சரணம் சரணமையா சுவாமி யெங்களைப்பெற்றெடுத்ததந்தையே யிப்போது யெங்களுடைய புஜங்களும் வீங்கிய தினவுகள் திரும்படியாகவும் உன்னுடைய வினைவின்படி சகலகாரியமுங்கைகூடும்படியாகவும் யெங்களுக்கான வூழியங்கள் செயயும்படியாய் கட்டளையிடுமையா சுவாமி

இரணியன்சொல்தரு

இ-ம்-கல்யாணி-ஏகதாளம்

பல்லவி

மைந்தரேங்களெந்தன்முனனேயிப்போ
வந்தகாரியஞ்சொல்லுங்கள்

அநுபல்லவி

தந்திரமுடன் சூழவந்தகாரியஞ்சொன்னால்
இந்தட்சணமேவரந்தந்திடுவோமேயென்னால் (மைந்த)

சரணங்கள்

மண்ணினை யெடுக்கவோவிண்ணினில்படுக்கவோ
வாரிதனை மடுக்கவோ
ஒண்ணுமூழிநெருப்பைகண்ணுநெருப்பார்த்து
உருக்கவோகருக்கவோமுருக்கவோநெருக்கவோ (மைந்த)

அண்டத்தைவிரட்டியேதுண்டித்துதிரட்டியே
அடுக்கும்மிலேசுருட்டியே
எண்டிக்குமலேகளைகண்டித்துபொடியாக்கி
ஏத்தவோமாத்தவோதூத்தவோயாத்தவோ (மைந்த

சங்கலாதர்கலாதாபொங்குமனுகலாதா
சிங்கமுகவிலாதா
வுங்கள்மனதுமிலேசங்கைபில்லாமலே
ஓதுங்கள்போதுங்கள்யோதுங்கள்காதுங்கள்

சங்கலர்தன்சொல் விருத்தம்

இ-ம்-கௌளிபந்து

இங்குநீர்சொன்னதெல்லாம்யெளியதேயரியதல்ல
சங்கரன்கையிலேயோடுஞ்சதுர்முகனுலகத்தோடும்
பங்கமில்தேவர்கோனேபடுத்துடன்கட்டிக்கொண்டு
எங்கடங்கருத்தைமுத்திதிக்கணம்வருகுவோமே

வசனம்

அகோவாருமையா சுவாமிதந்தையே யிப்போது தேவரிசொன்னகாரியமெல்லாம் அரிதல்ல மெத்தயெளிதானகாரியம் ஆகையால் அந்தப்பரமசிவனை கையிலாசத்தோடும் பிர்மதேவனை சத்தியலோகதேதாடும் தேவேந்திரனை அமராபதிபட்டணத்தோடுஞ் சேர்த்துக்கட்டிக்கொண்டு வொருநொடியில் வருகிறோம் அந்த வூழியம்யெங்களுக்கு கட்டளையிடுவையா சுவாமி

இரணியன்சொல்விருத்தம்

இ-ம்-ஆனந்தபைரவி

அவ்விடையுமக்கேதந்தே
 னவனியைசுருட்டியுங்கள்
செவ்விபதந்தைதன்னைச்
 செருத்தமால்தனையுங்கூட

வெவ்வியேகட்டிக்காண்டு
வந்திட்டாலதுவேவீரம்
ஒவ்விரோன்சொன்னவண்ணம்
வொப்பிரிர்செய்குவீரோ

வசனம்

அகோவாருங்கள்மககளா நிங்களிப்போது கேட்டுக்கொண்டவூழியங்களை தடையில்லாமல் செய்யும்படியாய் வுங்களுக்கு கட்டளையிட்டேன் ஆனாலின்னமொருகாரியஞ்சொல்லுகின்றேன் கேளுங்கள் வுங்களுடைய சிறியதொகப்பனாகிய பிரணியாக்கதனைவராக அவதாரங்கொண்டு யெதிர்த்துப்பாயந்துக்கொண்ண அந்தநாராயணனையும் பிடித்துக்கட்டுக்கொண்டுவாருங்கள்மக்களா

சங்கலர்தன்சொல்விருத்தம்

இ-ம்-தன்யாசி

அவந்தனைப்பிடித்துக்கட்ட
அண்ணனைப்போகச்சொன்னால்
வுவந்தவனகணத்திற்சென்று
உலகமுங்கொள்ளையிட்டு
கவந்தபக்தங்களாடக்
கண்டுபோர்பொருந்தியுந்தன்
துவந்தனைமுடிப்பானுதல்
சுருக்குடனனுப்புவீரோ

வசனம்

கேளுமையாசுவாமி யெங்கள்பிதாவே நீசொல்லியப்படி அந்தநாராயணனைப் பிடித்துகட்டிக்கொண்டு வருவதற்கு யெங்களுடையதமையன் பிரகலர்தனனை அனுப்பினால் அவன்போய் அந்தஅரியுடனே போர்செய்து ஜெயங்கொண்டு யிந்தட்சணத்திற் தடையில்லாமல் கட்டிக்

கொண்டுவருவான் ஆதவால் அவனை அனுப்புமையாசுவாமி

இரணியன்சொல்விருத்தம்

இ-ம்-மோகனம்

வழுத்தியபண்ணஞ்செய்வேன்
மைந்தரோபோய்வாருங்கள்
இழைத்தநங்கொலுவில்நாளு
மிசைந்திடும்வமைச்சமாரோ
செழித்தவென்மகன்பாற்சென்று
சிக்கிரமாயுனதுதந்தை
அழைத்தனவொன்றுரைத்து
அவன்றனைவரச்செய்வீரோ

வசனம்

கேளுங்களமக்களா நீங்கள் சொல்லியப்பிரகாரஞ் செய்கின்றேன் யிப்போதுபோய் வாருங்கள் அகோவாருங்கள் மந்திரிமார்களே யென்னுடைய குமாரனாகிய பிரகலாதனை நானழைத்தேனென்று சொல்லி அதிசிக்கிரமாயழைத்து வரச்செய்யும்மந்திரிகளே

மந்திரிசொல்விருத்தம்

இ-ம்-கல்யாணி

கண்டதுகொலுவில்சொல்லுங்
கஞ்சுகிகேளாயிந்த
தெண்டிரைக்கடல்சூழ்வையந்
திகழ்நவகண்டம்வானங்
கொண்டடொருகுடையிலாளுங்
கொற்றவன்பாலன்றன்னை
கண்டுநீ அழைத்திப்போது
கடுகெனநொடியில்வாராய்

வசனம்

அடாவாடா நீதாகஞ்சுகி நமதுராசாதிராசனான திரிலோகாதிபதி ரணியமகாராசனுடைய குமாரனாகிய பிரகலாதனை யிந்தட்சணத்தில் அழைத்துவாருங்கள்பிள்ளாய்

கட்டியன்சொல

பரணி

குண்டகும்புயத்தோன்

எண்டிசைக்கரசன்

தண்டமர்பாலா

இண்டுநிவ்ருவாய்

பிரகலாதன்வருகிறவிருத்தம்

இ-ம்-பைரவி

விண்ணவரெவரும்வேத
வேதியரெவருமவாழும்
மண்ணுளோரெவருஞ்செய்த
மாதவம்வெளிவந்தாப்போல்
கண்ணுமெந்தனையேகாளும்
நரிகினில்விழாமல்கார்த்த
அண்ணல்வேள்பிரகலாதன்
ஆண்டவன்முன்வந்தானே

தரு-இ-ம்-பியாகு

அடதாளம்

பல்லவி

நாதன்வந்தான்ஜெயப்பிர

கலாதன்வந்தான்

அநுபல்லவி

ஆதவன் முந்தப்பயந்தொழிந்திட
அவுணாகள்கண்டுபயந்தொளித்திட (நாதன்)

சரணங்கள்

சுத்தநவமணிரத்னமுடிமின்ன
சோதிப்புயமிலங்கயெழில்
துங்கணிமார்பில்தங்கப்பதைக்கத்துன்ன
தோள்வளைகள்குலுங்க
கொத்துச்சரப்பளிமுத்துமாலைபன்ன
குழந்தைக்கிங்கருண்டோகோடிமன்மதனென்ன
எத்திசையிலுள்ளோாசந்தோஷமாய்சொன்ன
இரணியமன்னவனிடதோள்துடிக்கவென்ன (நாத)

அன்பத்தோரட்சாம்அறுபத்துநாற்கலை
யாதுமிகத்தெரிந்தோர்நல்ல
அந்தக்கரணங்களன்பெருபூத
மனத்தையுந்தானறிந்தோர்
உம்பரறியாமலறிப்பதங்கண்டவர்
ஓமென்றஅட்சரந்தானுள்ளாங்கொண்டவர்
நம்புமடியவரின்பமுடன்றெழும்
நாராயணாவென்றுபாராயணஞ்செய்து (நாதன்)

அண்டபிண்டமீரேழெண்டிசையிலுமுள்ளோா
அவர்வினைத்தானொழிய வெகு
அந்தணாசோபனஞ்சொல்லவேபுஷ்பம்
அமரர்கள்தான்பொழிய
கண்டபோகளெல்லாந் தெண்டமிடகேமெத்தக்
கருமுகில்மாயவன்பாதமனதில்வைத்த
தொண்டனானபிரகலாதன்தன்னையுத்த
துஷ்டயிரணியன்கிட்ட அழைக்கப்பெத்த (நாதன்)

பிரகலாதன்சொல்போற்றிவிருத்தம்

இ-ம்-தேசிகதோடி

மன்னவர்மன்னுபோற்றி
^மண்டலாதிபனேபோற்றி
உன்னியேவுலகமெல்லா
மொருகுடைநிழலிலாண்டு
தன்னிகரிணையில்லாத
தந்தையேபோற்றிபோற்றி
என்னைநிரைத்தசேதி
யியம்புவாய்போற்றிபோற்றி

இரணியன்சொல் விருத்தம்

இ-ம்-பந்துவராளி

பணிந்திடவுவந்துவந்தப்
பாலகாபிரகலாதா
இணைந்தன்றம்பிமார்கள்
யீசனைவேதனோடு
தணிந்திடும்அமரர்கோனைச்
சதிருடன்பிடிக்கச்சென்றார்
கணங்கொடுநியுமென்னக்
காரியஞ்செய்குவாயே

வசனம்

வாருமப்பாகுழந்தாய் பிரகலாதனு யிப்போது வுன்னுடையதம்பி மார்கள் பரமசிவனையும பிரமதேவனையும் தேவேந்திரனையும் பிடித்துக் கட்டிக்கொண்டு வருகிறதாகச் சொன்னார் ஆகையால் நியென்னசாமர்த்தியஞ்செயவாய் சொல்லுமப்பாபிரகலாதனு

## பிரகலாதன் சொல் விருத்தம்

இ-ம்-கல்யாணி

பிச்சைக்கிக்கையேற்றுண்ட
பித்தனார்மேலும்யார்க்கும்
இச்சகப்பஞ்சாங்கத்துக்
கிசைந்திடும்பாப்பான்மேலும்
கொச்சவானவர்கோன்மேலும்
குமாரரையேவச்சொன்ன
உச்சிதந்தன்னையானு
மூவந்திட்டேனபகிழ்ந்திடடானே

வசனம்

வாருமையா யென்னைப்பெத்தபிதாவே பிச்சையெடுத்து வுண்டபித்தன் பேரிலும் யெளியோர்களுக்கும் பஞ்சாங்கஞ்சொல்லிப் பிழைக்கும் பாப்பான்பேரிலும் கொஞ்சமாகிய பலத்தையுடைய தேவேந்திரன் பேரிலும் குழந்தைகளை அனுப்பினவுச்சிதம் மெத்தநன்றாச்சுது யெனக்குஞ் சந்தோஷமாச்சுதையாசுவாமி

## இரணியன் சொல் விருத்தம்

இ-ம்-பூரிகல்யாணி

பண்ணியாவுருவுகொண்டு
பாய்ந்தவுன் சிறுபிதாவைக்
கொண்ணமால்தன்னைப்பத்தி
கொண்டுநிவிஜையத்தோடே
விண்ணவரொருமெச்ச
வஞ்சமாய்வென்றுசால
இன்னையில்வந்துசேர்வா
யென்மனங்குளிரத்தானே

வசனம்

வாருமப்பா பிரகலாதனே யுன்னுடைய சிறுபிதாவாகிய யிரணியாக்கதனை பண்ணியாயுருவுகொண்டு பாய்ந்துக்கொன்ன அந்தநாரணன் பேரில் யெதிர்த்துப்போர்செய்து பிடித்துக்கட்டிக்கொண்டு யின்றைய தினமே யென்மனது சந்தோஷிக்கத்தக்கதாகவொருட்சணத்திலவந்து சேருமப்பாபிரகலாதனே

பிரகலாதன்சொல்தரு

இ-ம்-ஆனந்தக்களிப்பு-தாளம்-ரூபகம்

அரியெங்கேயிருக்கிறானையா அந்த
அரியிருப்பிடமெனக்கறியச்சொல்லையா

காணுதற்கரிதானவேடன் குழவிக்
கள்ளன்வடிவெடுக்குங்குள்ளநிமோடன்
ஊணுக்குமண்ணுண்டபாடன் முன்னே
உனக்குப்பயந்தெளிக்குந்தனக்கல்லோகோடன் (அரி)

அவனைப்பிடிக்கப்போகச்சொன்னால் யினி
யாண்பிள்ளையல்லநான்சாண்பிள்ளையென்னால்
விவரிக்கவேண்டாம்நிமன்னா உனக்கு
வேண்டும்போதழைப்பிக்கக்காண்பினிபின்னா (அரி)

வோடுகின்றவனைக்கண்டாலேதூரத்தி
யோடுவர்க்கெளிதென்றுநாடோர்சொல்லாலே
நாடியொளிப்பவனின்னாலேபிடிக்க
நானோதேடிப்போவேனோவுன்னாலே (அரி

பிரகலாதன்சொல்விருத்தம்

இ-ம்-பந்துவராளி

ஏழிருலோகமாண்டுயிறை
முறைசெலுத்திக்கொண்டுங்
கோதையாட்புத்திக்கொண்டாய்
கோலமால்வேணுமானால்

தாழுமோர்சிட்டிகைக்குள்ளே
 சமாத்துடனழைப்பேன்பின்னுன்
வாழுமென்தந்தையேநின்
 மனர்ப்மலம்போற்றிபோற்றி

வசனம்

வாருமையா வென்னைப்பெத்த பிதாவே நீ யிந்தயீரேழுலோகமும் செங்கோல்செலுத்தி கர்த்தவ்வியமுஞ் செலுத்திக்கொட் டீ யுனக்கு கோளைழுபுத்தியெங்கேயிருந்தது அப்படிப்பண்ணி வுருவங்கொண்ட நாராயணனை வுனக்குவேண்டும்போது வொருசிட்டிகைக் குள்ளே யழைப்பிக்கிறேன் அப்போது வுன்னுடைய கோபத்தை தீர்த்துக்கொண்டு வாழலாமையா சுவாமி

பொதுவிருத்தம்

இ-ம்-மோகனம்

விடைகொடுத்தனுப்பிப்பின்பு
 வேதவேதியர்கள்வானோர்
அடவுடன்புகழ்ந்துபோற்ற
 அரியனைப்பொலியமேவி
நடனசங்கீதலோல
 னுகவேகயக்கும்போது
தொடையல்யாழ்முனிவனுன
 சுருதிநாரதர்வந்தாரே

நாரதர்வருகிறதரு

இ-ம்-கல்யாணி-தாளம்-ஆதி

பல்லவி

நாரதமாமுனிவந்தார் மகா
நாரதமாமுனிவந்தார்

அநுபல்லவி

சீருடன்வீணைமீட்டி சரிகமபதவென
சேருடன்கிசைபூட்டி (நாரதமாமுனி)

சரணங்கள்

பெய்யும்நிலவைப்போல்பெய்யில்வெண்பொடியூசி
தூய்யசுருதிமறைசெயயாவினிற்பேசி (நாரதயா)

தண்டுகவெண்டலமிரண்டையுங்கைப்பிடித்து
தண்டைசிலம்புகாலில்மண்டிடவேயடித்து (நாரதயா)

உருண்டருத்ராட்சங்கள்புறண்டமாலிகைசூட்டி
மூரண்டகலகமெங்குந்திரண்டிடவேகாட்டி (நாரதயா)

இரணியன்சொல்விருத்தம்

இ-ய-கேதாரகௌளம்

நாரதமுனியேவாராய்
நானிலமுதலதாக
ஈரேழுபுவனத்துள்ள
யிகட்சியும்புகட்சிதானும்
நேருடனிந்தாயன்றே
நீதெரிச்சேதியெல்லாம்
யேருடனெந்தனுக்கு
யியப்புவாயறியத்தானே

வசனம்

அகோவாருமையாநாரதரே யிந்தபூலோகமுதலாயுள்ள யீரேழு லோகத்திலுஞ் சஞ்சரிக்கப்பட்டவரும் அங்கங்கேநடக்கும்யிகட்சிகளும் புகட்சிகளும் யிழிவுகளும் பெருமைகளும் நிச்செவ்வையாய்த்தெரிந்துக்கொண்டவரானதால் யெந்தலோகத்தி யெந்தயிகட்சியைந்த லோகத்தில் யெந்தபுகழ்ச்சியிருப்பதுங் கண்டதுங்கேட்டதும் மெனக்கு வொன்று முகுறைவில்லாமல் யானறியும்படி சொல்லவேணுமையா நாரதரே

நாரதர்சொல் விருத்தம் இ-ம-கமாஸ்

மண்டலமெல்லாமுந்தன்
மகிமையேமகிமையல்லால்

கண்ட துமில்லைவேறு
காதிலுங்கேட்டிலேன்யான்
மண்டமர்கடந்தவேலாய்
மைந்தனும்பிரகலாதன்
திண்டிறலானசேதி
செப்புவேனிப்போதானே

வசனம்

கேளுமையா யிரணியபூபாலகா இந்த அண்டரண்டபுவனங்களெல்லாம் நான்சஞ்சரித்துப்பார்க்கும்போது அங்கங்கேவுன்னுடையமகிமையே ரிஷியீஸ்வரர்முதலானவரும் தேவதைகளும் புகழ்ந்துக்கொண்டு யிருக்கக்கண்டதேயல்லாமல வேறொருசங்கதியுங் காதினால்கேட்டதில்லை இதுவல்லாமல் வுன்னுடையகுலபுத்திர சிகாமணியாகிய பிரகலாதன்விர்த்தாந்தமெல்லாங்கேட்டபடி சொல்லுகின்றேன்கேளுங்மகாராசனே

௬௫-இ-ம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி

பல்லவி

மைந்தன்சேதிசொல்லக்கேளையா ராஜாதிராஜா
மைந்தன்சேதிசொல்லக்கேளையா
இந்திராதிசுரர்வந்திதசரணா
விந்தையிரணியதுரந்தரசுந்தர (மைந்தன்)

சரணங்கள்

நல்லோர்க்குஞ்சற்சனவிலாசன் உன்னிலுமதிக
வல்லோன்விற்பனன்பதிலோலன் சாதுசன்மார்க்க
சல்லாபன்யெங்களுக்கநுகூலன் துன்மார்க்கமான
பொல்லாதவண்டர்குலகாலன் வோதுமுன்னவன்
கல்விகண்டுஆதிசேஷனும்நாணுமே

சொல்லும்போதுஅவாகிடெங்கும் காணுமே (மைந்தன)
சத்தியசதகுருதநல்லவாக்கியன் அழியாத
பத்திமுத்திமெஞ்ஞானவாக்கியன் வேதபுரா

னத்திலும்விஸ்தாரமனுசிலாக்கியன் லோகாதிலோக்
மெத்திசையும்புகழும்பாக்கியன வுன்பேரொடுக்கும்
பத்தபாலகன்சுசிலன் அதிதன்
சித்தமுத்தனவனேபிரகலாதன் (மைந்தன்)

தெள்ளுமாமுனிவோர்கள்கூடி பிர்மலோகத்தில்
வள்ளலேயுந்தன்புகழ்பாடி பூசனைசெய்து
பிள்ளைபிரகலாதனைக்கொண்டாடி மகிழ்ந்தசேதி
உள்ளதுஞ்சொல்வந்தேனேடி ஆகையினாலே
மெள்ளக்குழந்தைக்கைந்துபிராயமாச்சுதே
பள்ளிக்குகந்துவைக்கத்தருணமும்வாச்சுதே (மை)

பொதுவிருத்தம்

இ-ம்-செஞ்சுருட்டி

நாரதர்சவிலக்கேட்டு
நயந்துடல்புளகம்பூத்து
பாரியபுயங்கள்வீங்கிப்
பண்ணவர்முனிவர்தம்மேற்
பிரியகருணையாகி
சிந்தையில்மகிட்சிபொங்கி
நேருடனிரண்யரூபன்
நினைந்ததுயியம்புவானே

வசனம்

இப்படியாகத்தன்னுடைய புத்திரனாகிய பிரகலாதனனுடைய விர்த்தாந்தமெல்லாம் நாரதமகாமுனிச்சொல்லக்கேட்டு மகாசந்தோஷமான து தலைக்கேரி சரீரம்மெங்கும் புளகாங்கிதங்கொண்டு புஜங்கள் பூரித்து சொல்லுகின்ற விதம்யெப்படியென்றால்

இரணியன்சொல்விருத்தம்

இ-ம்-குப்பகாம்போதி

ஈதற்குமுன்னினைந்தேன்யானும்
யிசைக்கும்நாரதரேநியும்

மோதியத்தன்மையாலே
முயர்ந்திடிநிமித்தியங்கன்றே
ஆதலால்பிரகலாதனை
வன்றனையலைந்தநாளில்
வேதனாலோதவைப்பேன்
விண்ணவர்கடுங்கத்தானே

வசனம்

அகோவாருமையா நாரதமுனிவரே யிதற்குமுன்னமே நாமும்அப்படித்தான் செய்யநினைத்துக்கொண்டிருந்தோம் மனதுக்கு மனதே சாட்சி நீருஞ்சொன்ன படியினாலே மகா திவ்வியமான நிமித்தியமாச்சுது யித்போது திதி வாரம் நட்சத்திரம்யோகம கரனமான பஞ்சாங்கமும் அமைந்த சுபதினத்தில் நமது குழந்தை பிரகலாதனை பள்ளிக்கு வைக்குறேன் நீரும் உம்முடைய யெதாஸ்தானத்துக்குப்போய் வாருமையா நாரதமுனிவரே

இரணியன்சொல்விருத்தம்.

இ-ம்-ஆனந்தபைரவி

என்னருகேவல்செயயும்
யேந்திழைமாரேகேளீர
பொன்னணிபனைக்குச்சென்று
பூங்குழலானமாது
தன்னையேகண்டுவுந்தன்
றலைவனாதழைத்ததென்று
வன்னமாமொழியாளீலா
வதிதனையழைத்துவாரீர்

வசனம்

அகோவாருங்கள் பெண்களா அடிவிசாலாட்சி அடிமோகனாங்கி அடிவாலகோகிலாம்பா அடிபரிமள கெந்தி அடிநீங்கள் நமது அரமனைக்குட்சென்று நமதுமனைவியாகிய லீலாவதியையழைத்து வாருங்கள்பெண்களா அப்படியே யழைத்துவருகிறோமையா சுவாமி

தோழிகள்சொல் விருத்தம்

இ-ம்-நாட்டை

துங்கனருங்குழலாளேயெங்கள் தாயே
தூயமார்தேவியருக்கரசியாரோ
திங்களுறுமுகத்தாளே அழகின்மிக்கத்
திவ்யகுணவதியேதேன்மொழியினளே
மங்கையர்களதிரியலாப்பதியேலோக
நாயகியேயிரணியற்குத்தேவியான
மங்கையரேகொலுமுகத்தில்மன்னனும்மை
வரச்சொன்னார்சேதிவந்துவழுத்தினோமே

வசனம்

கேளுமம்மாதாயே லீலாவதியே யிப்போ நமதுமகாராசன் கொலு முகத்திலிருப்பதால் உனனை அவடத்துக்கு அதிகசீக்கிரமாயழைத்து வரச்சொன்னார்வாருமம்மாதாயே

லீலாவதிசொல்

சிசபத்தியம்

முத்துமாமணிசுட்டிநெத்தியினிலாட
முகபூர்ணசந்திரவொளிமுடிகியாட
கொத்துமாலைகளாட குழையூசலாடவே
கொங்கைதனில்மசலையதுகுலுங்கியாட
சந்தநாரத்தண்டைவெண்டையமுமாடவே
தாழ்வான்கைவொளிதயங்கியாட
பத்துமாத்துத்தங்கவளைகையிலாடவே
பாங்கிமாாகவரிவிருபாலுமாட
சித்தசுரதாளமத்தளமுமோங்க
தருநாதவீணையிசைதானுமோங்கச்
சுந்தரவீரயிரணியபனேபேவுஞ்
சுகலீலாவதிதேவிவருகின்றாளே

தரு-இ-ம்-நாட்டை-தாளம்-ஆதி

பல்லவி

மங்கையற்குள்பிமானி லீலாவதி
வந்தாளேயெசமானி

அநுபல்லவி

பங்கயநருமலர்வதனசொய்யாரி
பனிமொழிப்பிரகலாதனைப்பெற்றசிங்காரி (மங்)

சரணங்கள்

கற்பினுக்கருந்ததியீடு சொல்லுங்கமல
வதிக்கேயிவள்சோடு
அற்புதமிகும்பொன்னுபரணவிசாசி
அஷ்டலட்சுமிவாசம்யிஷடபாக்கியசாலி (மங்)

நடைகட்குயிவளன்னப்பேடு மணி
நாகப்படமேமதனவீடு
துடைக்குப்பசுமையிளங்கதலியுந்தோற்குமே
துடியிடைக்கிணைமின்னல்கொடிவந்துபாற்குமே (மங்)

நங்கையர்களங்கவரிவீச அழகு
நளினத்துடனேநயம்பேச
சிங்காரமுடன்கோடிமங்கையாகள்விளக்கேற்ற
ஜெயவிரணியனிருபனமணிபோல்வந்த
லீலாவதிசொல்விருத்தம்

இ-ம்-கல்யாணி

அண்ணலேபோற்றிபோற்றி
அமராகள்முதலாயுள்ளோர்
எண்ணவேவாழுகின்ற
யென்னிடத்தலைவாபோற்றி

நண்ணியசபையிலென்னை
நயமுடனழைத்தசேதி
திண்ணமாயுரைசெய்வீருன்
திருவடி போற்றிபோற்றி

வசனம்

கேளுமென்பிராணனாயகா அந்தபுரத்திலிருந்த வென்னை யேதுகாரியமாய் கொலுமண்டபத்துக்கு அழைப்பித்திர் அதையடியாளுக்குத் தெரியச்சொல்லும்பிராணனாதா

இரணியன்சொல் விருத்தம்

இ-ம்-கேதாரம்

மாயமிலேயிகேளாய்கலிலுறயனுந்தனுக்குத்
தாயகமாகம்மதனையனும்வயதைந்தாச்சு
தூயதாய்கலைகள்யாவுந் துலங்கவேயோதிவைக்க
நேயமாயுனையிப்போது நிச்சயித்தழைத்தேன்பெண்ணே

வசனம்

அகோவாரும்பெண்ணேலீலாவதி நம்முடையக் குழந்தை யானபிரகலாதனனுக்கு கல்விக்குப்பருவமான ஐந்துவயதாச்சுது ஆகையால் அவனுக்கு வித்தையாரம்பஞ்செய்விக் யெனக்குமனதாய்வுன்னை அழைப்பித்தேனேயன்றிவேறொரு சேதியுமில்லைபெண்ணே

லீலாவதிசொல்

கொச்சகம்

நாவலாகன்போற்றுகின்ற நன்றுடர்யெவ்வுலகும்
ஆவலுடன்வொருகுடையில் ஆளுகின்றநாயகனே
காவலனார்சிந்தைதனில் கருதுமதற்கெதிருண்டோ
ஏவளாசல்சொல்லதென்ன வுன்னிஷ்டபடிசெய்வீரே

லீலாவதிசொல் விருத்தம்

இ-ம்-மோகனம்

வண்டுமொய்த்தளையக்கூந்தல்
மங்கையேதோழிப்பெண்ணே

மண்டபர்வேல்கைதாங்கும்
மைந்தனையழைத்துவாராய்

வசனம்

அடி தோழிப்பெண்ணே யெனதுதவபுத்திரனாகிய பிரகலாதனை நானழைத்தே னென்றுசொல்லி யொருநொடியில் அழைத்து வாரும் பெண்ணே

தோழிபெண்சொல்-விருத்தம்

இ-ம்-கல்யாணி

குண்டரும்புயத்தாய்போற்றிக்
கோதிலாதுனதுதாயார்
விண்டுனையழைக்கச்சொன்னார்
வெழுந்திருந்தென்பின்வாராய்

பிரகலாதன்சொல்-விருத்தம்

இ-ம்-பூரிகல்யாணி

சந்திரமுகமுஞ்செய்யத்தாமரைக்கண்ணுமெய்ய
சுந்தரபவழச்செவ்வாய்த்துலங்குபுன்னகையுஞ்சோதி
சிந்துரனுதலுமாயன்றிருவடிபுனைந்தநெஞ்சும்
இந்திரன்முதலோர்வாழ்த்தயென்னையாளையன்வந்தான்

பிரகலாதன்வருகிற-தரு

இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்

பல்லவி:

வந்தான்பிரகலாதன்-தந்தைமுன்னே
வந்தான்பிரகலாதன்

அநுபல்லவி

வந்தான்பிரகலாதன்யிந்திராதிபவேதன்
சிந்தாகுலம்போகவேவிந்தையதாகவே (வந்தா)

சரணங்கள்

காலப்பொழுதிலெழுவாலச்சூரியன்போல்
கதிர்மணிமுடிதுன்ன அதின்

மேலச்சந்திரனைப்போலவிளங்கிய
வெண்குடைநிழல்தன்னமன்னன்முன்னே (வந்தா)

வச்சிரமிழைத்தபச்சைமரகதமாளிகை
மார்பினிலும்மிலங்கப் பொன்
கச்சுடனாமணிநட்சத்திரம்போல்மின்னி
கலகலென்றுகுலுங்கமனந்துலங்க (வந்தா)

மகரக்குண்டலங்காதில்தகதகவெனமிக்க
மதியதுபோல்சொலிக்க நல்ல
இகல்பெருந்தோள்களின்நிசநிசவெனமிக்க
இரண்டுவல்லயஞ்செழிக்கப்புவிதழைக்க (வந்தான்)

தண்டைச்சதங்கைகள்மண்டிக்கலகலென்னத்
தாமரைத்தாள்தனிலொலிக்க திவ்ய
குண்டுக்கடகமிரண்டுங்கைகள்தன்னில்
கொழுஞ்சுடர்போல்சொலிக்கப்புண்யம்பலிக்க (வந்தா)

தழைந்தஅன்னங்காலில்விழுந்தெழுந்தாப்போல்
சுநாமமாயிருபாலும்போட மழை
முழங்கிமேகம்போல்முழங்கும்புரவியேரி
மங்கையர்நடமாடவிஜயங்கூட (வந்தான்)

அண்டரனைவருக்கும்பண்டமுதளித்திடும்
ஹரிபாதத்தைக்கூறி மிக்க
மண்டலத்தவரோடும்விண்டலத்தவராசீர்
வாதஞ்சொல்லத்தேரிஅன்புமீறி (வந்தான்)

பிரகலாதன்சொல்போற்றி

விருத்தம்-இராகம்-பைரவி.

கன்னியர்பதியேயென்னைக்
கண்மணியெனவேயீன்ற
அன்னையேபோற்றிபித்த
அப்புவிக்கரசனேனேன்:

தன்னிடப்பாயியாகித்
தயவிலிருக்கநாயே
என்னை நீரழைத்தசேதி
யியம்புவீர்போற்றிபோற்றி

வசனம்

அகோவாருமம்மா யென்னைப்பெற்றதாயே வீட்டிலிருந்தயென்னை
அழைப்பித்தகாரியம் யெனக்குச்சொல்லவேண்டுமம்மா தாயே

லீலாவதிசொல்-விருத்தம்

இ-ட்-பந்துவாரளி

நேசமுடன்மகன்தனையேயெடுத்தணைத்து
நீனிதியேயென்னிருகண்மணியேமிக்க
ஆசையுள்ளசெங்கரும்பேதேனேயிந்த
அம்புவியையாளவந்த அறிவுள்ளானே
வாசமுள்ளநீராடிமாலைசூட்டி
வஸ்திராபரணங்கள்வகையாய்ப்பூட்டி
தேசமெல்லாம்புகழ்ந்தேத்தவேதபோதச்
செல்லுவாய்நீமகிழ்ந்துசொல்லுவாயே

லீலாவதி - தரு-இ-ட்-ராட்டை

தாளம்-அடசாப்பு

பல்லவி

பள்ளிக்குவைக்கவுந்தனையா அழைக்குறார்
பாலகாநீவாடா

அநுபல்லவி

தெள்ளித்தெளிந்தயென்
கண்மணியானவிநோதனே
செழிக்குமன்புங்குணமுறக்
தழைக்கும்பிரகலாதனனே (பள்ளி)

சரணங்கள்

வாசமலர்வனம்மிஷிதவுமியனும்
வசிஷ்டனுமகத்தியனுஞ்சதிஷ்டனும்புலத்தியனும்

காசிபனும்பரத்துவாசமுனியானூர்
கத்துக்கொண்டதில்லலோமெத்தப்பெரியவரானூர் (பள்ளி)

படிப்பும்வார்த்தைகள்பேசும் துடிப்புமுனக்குமேலும்
பாற்கும்போதுசேடனுந்தோர்க்குமேயானாலும்
தொடுத்தவித்தையும்புத்திக்கெடுத்துசொல்லுவதேதோ
||தொட்டிக்காட்டாதவித்தைசொட்டுப்போட்டாலும்வாராதோ (ப)

செல்வத்துக்குமதிகங்கல்விசசெல்வமேயென்று
செப்பும்பெரியோர்மொழிதப்பல்லவேயொன்றும்
சொல்வித்தையும்விஜயவில்வித்தையுநீமிக்க
சொன்னாலுமொருகுருமுன்னாலேயோதிவைக்க (பள்ளி)

பள்ளிக்குடத்திருந்துப்பிள்ளைகளுடனின்று
பாடமுஞ்சொல்லிக்கொண்டுவீடதனிற்சென்று
கிள்ளைக்குதலையின்சொல்வுள்ளக்காதுநிரம்ப
கேழ்க்கவேணுமென்றெண்ணிவேழ்க்கையாகுதுரொம்ப (பள்ளி)

பிரகலாதன்சொல்-விருத்தம்

இ-ம்-மோகனம்

மன்னவர்மன்னாபோற்றி
  மண்டலாதிபனேபோற்றி
உன்னியவுலகமெல்லா
  மொருகுடைநிழலிலாண்ட
தன்னிகரிணையில்லாத
  தந்தையேபோற்றிபோற்றி
என்னைநீரழைத்தசேதி
  யியம்புவீர்போற்றிபோற்றி

இரணியன்சொல்-விருத்தம்

இ-ம்-கல்யாணி

வந்தடிப்பணிந்துநின்ற
  மாகதக்குன்றேவாடா
எந்தனுருயிரேவாடா
  யென்னிருக்கண்ணேவாடா

சுந்தரமணியேவாடா
சுரர்குலாதிபனேவாடா
மைந்தனேவாடாமிக்க
மறைநூல்களோதவாடா

இரணியன்சொல்தரு

இ-ம்-பியாகடை-தாளம்-ஜம்பை

பல்லவி

வாடாபிரகலாதாகண்மணியே
வாடாபிரகலாதா

அநுபல்லவி

வோடாதேயினிவிளையாடாதே
யிந்தாசும்மா

சரணங்கள்

சட்டமணிமார்பிலேயிட்டமுடனணைத்துக்
கட்டிக்கொண்டுமுத்தமிட்டுக்கொள்ளகிட்ட (வாடா)

பேசும்பசுங்கிளிகூசும்மழலையின்சொல்
நேசமுடனேகேழ்க்கஆசையாயிருக்குது (வாடா)

அந்தகலைகலென்னதொந்திப்பளபளென்ன
எந்தன்மடியிலேமைந்தாவோடிகிட்ட (வாடா)

இரணியன்சொல்விருத்தம்

இ-ம்-நாட்டை

அறிவிலாமகனே
பிழையிலாவேதம்
மொழிவதற்குன்னை
எழிலுடனழைத்தேன்

இரணியன்சொல்விருத்தம்

இ-ம்-கேதாரம்

பேதனைத்தெரிந்த
ஆதகஞ்சுகியே

நாதனுர்சுக்கிரனை
நீதயாயழைப்பாய்

கட்டியன்சொல்விருத்தம்

இ-ட-மோகனம்

அக்கினிச்சிதறித்
திக்கெனமன்னன்
இங்கணழைத்தார்
சுக்கிரனேவருவாய்

சுக்கிராச்சாரிவிருத்தம்

இ-ம்-தோடி

காதலனழைத்தாரென்று
கஞ்சுகிசொல்லக்கேட்டு
ஆவலாயெழுந்திருந்து
அரைதனிற்காவிச்சோமன்
மேனியேவுடுத்திக்கொண்டு
விரவிபுத்தகங்கையேந்தி
கூவியேயிரண்யபூபன்
கொலுவினில்சுக்ரன்வாரான்

தரு- இ-ம்-புன்னாகவராளி

தாளம்-அடசாப்பு

பல்லவி

சுக்கிராச்சாரியும்வந்தானே-அசுரர்குரு
சுக்கிராச்சாரியும்வந்தானே

அநுபல்லவி

சுக்குராச்சாரியும்வந்தான்
தொல்லுலகிலுள்ளோர்க்கு
வக்கிரத்திருந்தாலே
உக்கிரஞ்செய்வக்கிரக (சுக)

சரணங்கள்.

இரணியாயவென்றுவேதத்தை-தினம்
யெண்ணியனவருக்கும்போதித்தேன்
வாயதுகொண்டயிரவலனுகிய
மன்னன்கனகனும்யென்னளும்போத்தியே. (சுக்)

காதிரதங்கருண்டலமின்னவே-கருது
புஸ்தகங்கைதன்னிர்துன்னவே
சோதிசேர்காவிஅணாதனிலென்னவே
சுத்தபவுத்திரம்பெத்திடும்வுத்தம (சுக்)

முத்துவர்ணக்கொடைதனைக்கொண்டுமுன்
கைதனிற்கமண்டலங்கொண்டு
மைத்துசிறசினில்குல்லாவும்பூண்டு
மன்னவனென்னையேவுன்னினதேதென்று (சுக்)

சுக்கிராச்சாரிசொல்

விருத்தம்-இ-ம்-நாட்டை.

வடிவுளகஞ்சுகி
கடினமன்னவன்பால்
மொடியில்நான்வந்ததை
அடவுடனுரைப்பாய்.

கட்டியன்சொல் விருத்தம்.

இ-ம்-மோகனம்.

ஏர்க்குமேயுலகைக்
சார்க்குமந்திரிகளே
நேர்க்கமாங்கொலுவினில்
பார்க்கவந்தார.

மந்திரிசொல்விருத்தம்.

இ-ம்-சுருட்டி.

அள்ளரியுலகாள
வள்ளலேயமது

தெள்ளியகொலுவினில்
வெள்ளியும்வந்தார்.

இரணியன்சொல்

விருத்தம்-இ-ம்-கல்யாணி.

திரமுள்ளகொலுவில்
அறிவுள்ளமந்திரி
குருவையிக்கொலுவில்
வருகவேசொல்வீர்.

மந்திரிசொல்விருத்தம்.

இ-ம்- தன்னியாசி.

உறமுளக்கொலுவில்
திறமுளக்கஞ்சுகி
நளபதிகுருவை
வருகவேசொல்வீர்.

கட்டியன்சொல்விருத்தம்.

இ-ம்-கேதாரம்,

துங்கபூசுரரே
எங்களாண்டவனார்
தங்கியக்கொலுவினில்
பொங்கமாய்வருவீர்.

சுக்கிராச்சாரிசொல்.

விருத்தம்-இ-ம்-தோடி;

நந்தனேயுங்கள்
நீதிலாக்கொலுவில்
ஏதுவீரமைத்த
தோதுவீர்யெனக்கே.

இரணியன்சொல்.

விருத்தம்-இ-ம்-பரிசு.

வந்தசுக்கிரனே
அந்தமாயரியைநீ

சிந்தித்துச்சேதி
வந்துபெனக்கே.

சுக்கிராச்சாரி சொல்.

விருத்தம்-இ-ம்-பைரவி.

அந்தமாபரின்ப
சிந்தையில்நினைத்தால்
நிந்தைபாயநரகம்
வந்திடுமையா.

இரணியன் சொல்-விருத்தம்

இ-ம்-தேசிகதோடி.

சுக்குராச்சாரிகோளாய்
சொல்லுவனாள்வதற்கு
இக்கணம்வந்தெழுந்த
பென்னிடத்தினயனுக்கு
தக்கவேதாவேதத்தியானம்
தன்னைபேபோதிவைக்க
அக்கினியைப்போலசிறி
அவழுந்தானுமுன்னைத்தானே.

வசனம்.

காருண்யா சுக்குராச்சாரியரே - இப்போது என்னுடைய குமாரனாகிய பிரஹலாதனுக்கு வேதத்தியானம் செய்விக்கிறதற்கு உன்னை யழைப்பித்தேனையா சுக்குராச்சாரியரே.

சுக்கிராச்சாரி சொல்.

வசனம்.

அப்படியேயாதொரு குறைவில்லாமலுமுன்னுடைய பாலகனுக்கு வோதிவைக்குறேனையா மகாராஜனே,

இரணியன் சொல்-விருத்தம்

இ-ம்-ஆனந்தபைரவி

௧ பன்னாகுகுகிடிசொய்
பாலகன்பிரஹலாதன்

தன்றுட்டோஷனை
தளகர்த்தர்மந்திரிகுமாரன்
அன்னவர்தானுமிப்போ
அவனுடன்பள்ளிக்கூடம்
தன்னவேயோதவென்று
துரிதமாயழைத்துவாராய்

வசனம்.

அடா வாடா தூதாகனுக்கு நம்முடைய பிரகலாதனுக்குக் கோமாராகிய தளகர்த்தன் மந்திரி குமாரர்களை பள்ளிக்கூடத்தில் பிரகலாதனுடன் கூட இருந்து வாசிக்கவேண்டியதாய் அனுப்பவேணும் ஆசையால் இச்சமயத்தில் அவர்களை அழைத்துக்கொண்டுவாருப்பிள்ளாய் கட்டியக்காரா.

கட்டியன்சொல்-விருத்தம்

இ-ட-கௌளிபந்து.

அந்திரானுசக்
கிருதைசெய்மன்னன்
மந்திரிகுமாரரை
வந்திடச்சொன்னார்

மைந்தர்வருகிறவிருத்தம்.

இ-ட-போகனம்

மகிமைசேருலகமாளு
மன்னவனிரணியன்றன்
அகமகிழ்ந்தழைத்தபோது
மைச்சர்கள்பாலரெல்லாம்
ஆசையுடனெழுந்திருந்து
வஸ்திராபரணம்பூண்டு
ஜெகதலந்தன்னிலேபோற்றும்
தினகரனென்னவந்தாரே.

சரு-இராகம்-புன்னாகவராளி.

தாளம்-ஆதி.

பல்லவி.

வந்தார்வந்தனரே-மைந்தர்களும்
வந்தார்வந்தனரே.

அநுபல்லவி

சுந்தரமாகவே துலங்குஞ்
சபைதனில்

சரணங்கள்.

முத்துக்குச்சுக்கொன்றைதுள்ள
மோரணமாளிகைமின்ன
பத்தரைமாத்துப்பசும்
பொன்பணிபீடவே (வந்தார்)
சுத்திபணிமணிசூட்டி
சொற்றனந்தன்னைச்சாலில்பூட்டி
சுத்தவெண்டயக்கொலிக்க
சுகுணவிரணியன்முன்னே (வந்தார்)
விண்டயிமும்விண்டலமும்
மைந்துமுள்ளபேருலகும்
உண்டருளும்பெருமானை
உள்ளந்தனிலேவைத்து (வந்தார்)
தொண்டனைபிரகலாதனை
தோழமையாகவேகூடி
தண்டமிழ்நூல்மறையோதி
தானவர்மைந்தரும்வேடி. (வந்தார்)

மைந்தர்சொல்விருத்தம்.

இ-ம்-கல்யாணி.

பொன்னகராளும்புரந்தரன்முதலாய்
மன்னிப்புலகில்மைந்துள்ளபேரும்
நன்னயமாகவுங்கிடவாழும்
மன்னவாவுந்தன்மலரடிபோற்றி

இரணியன்சொல்-விருத்தம்

இ-ட-ராட்டை.

அழிவிலா கல்கைப்பிறும்
அமைச்சர்களைக்தர்களேவாரீர்
[illegible]
பாலகனுடனேசென்று
வழுருலாவேதமோத
வண்மையாய்பள்ளிக்சேரி
எழில்பெறானுயவாசித்
திருக்கானிமுத்திட்டேனே.

வசனம்.

வாருங்கசொன்னது அருமையான அமைச்சர்கள், குமாரர்களே நீங்கள் யாவரும் பென்றுள் குமாரனுகிய பிரகலாதனை உடனே போய் வேத பாராயணஞ்செய்ய வேண்டியதால்பள்ளிக்கூடத்திறகுப்போக அழைப்பித்தேகனமைக்தாகளே.

இரணியன்சொல்விருத்தம்

(இ-ட-ஆனந்தபைரவி.

மறையவர்கோளாய்மெந்தன்
மகன்தனைக்கூட்டிக்கொண்டு
இரமுடன்பள்ளிக்சேரி
சிருள்ளவேதந்தன்னை
அறப்படுவோதிவைப்பாய்
யதிறத்துறைவந்தாலுல்
குருவென்மெண்ணாமாட்டேன்
சொல்லுவேனுன்னைத்தானே.

வசனம்.

சேனுமையாசுக்கிராச்சாரியரோ நமது குமாரனுகியபிரகலாதனுக்கு சொல்லிமைக்குமபடியான் வேதத்தியானத்தில் யேதாகினும் குறைவு படுமாகில் வுட்னேமென்று வாளினுல் வுன்னுடைய சிரோசத்தைப்பிரு கூருச்செய்துப்போடுவேன் போய்வாரும்.

சுக்கிராசாரிசொல்

விருத்தம்-இ-ட-சங்கராபரணம்

அப்படியேதேவா
செப்பிடுமொழியை
கொப்பெனத்தலையில்
வைப்பனையா

இரணியன்சொல்விருத்தம்

இ-ட-தோடி.

நசைசைசோமைந்தாகேளாய
தன்யார்க்ஞடனேகூடி
யகிமைசோவெள்ளியினனே
வனமையாய்நீபுஞ்சென்று
உசமையில்லாதவேதம்
வோதியேதெளிந்தபின்பு
ஜெகமெலாமதிக்கநீயுஞ்
செல்வனேவருகுவாயே.

வசனம்.

வாருமப்பா பிரகலாதனே இப்போது நீ யிந்த சுக்கிராச்சாரி யார் பின்னே போய் வேதப்பாராயணஞ் செய்து கொண்டு வாரு மப்பாமகனே.

சுக்கிராச்சாரிசொல்விருத்தம்.

இ-ட-கேதாரம்.

பொருமையுந்தருமஞ்சம்
புலாக்கமழ்வாள்கையேந்தி
தாணியிரேழுமாணடோன
றனையனேசொல்லக்கேளாய
இரணியனென்னசொன்ன
தென்குலேடுதிதந்தையோ
பெருமையாயவேதமோத
பிரகலாதனைவருகுவாயே.

வசனம்.

அப்போ பிரகலாதா யிப்போது வுனதந்தையாகிய யிரணிய மகாராஜன் சொன்ன சொல்லைக் கேட்டையா அந்த வார்த்தையைக் கேட்டவுடனே யென்னுடைய குலகுரு ... ஆகையால் வேதப்பாராயணம் வோதுவைக்குறோம் வாருமப்பா பிரகலாதனே.

பிரகலாதன்சொல்

வசனம்.

அப்படியே தடையில்லாமல் வருகிறேன் வேதமோதிவையு ஞ்சுவாமி.

பொதுசொல்கொச்சகம்.

ஆர்க்கமுடன்வேட்டிரைசை
யாள்தனகன்றன்மகனை
பார்க்கான்பின்கூட்டிவிட்டு
பதியிலிருந்தளவில்
தீர்க்கமுள்ளபிரகலாதனை
செல்வருட்டனேகூட்டி
வூர்க்கமுடனபள்ளிதனி
லோதுமவகைசொலலுவனே.

சுக்கிராசசாரி சொலதரு.

இ-ட-ராட்டை-அடதாளம்.

பல்லவி.

ஏமகந்தப்பாதேஷனே-ந
ஏமகந்தப்பாதே.

சரணங்கள்.

பிரமமுகூர்த்தத்திலகிரமந்தப்பாமலே
பிரியமாய்சங்காப்பமபண்ணிக்கோ
பாமதத்துவத்திலவிரவுமனதப்பினை
பகவானென்றேமனதிலெண்ணிக்கோசிஷனே (ஏமகந)

செப்புமுத்தாணிபுக தும்பைமலைப்போலே
இனிதோரும்புரிபிடிக்கமுகு
அப்புவியணைத்துதிக்குந்தபிறைந்தனை
யடிதொழுதேதமுழுக்கிஷனே (சேட்டப்பா

திட்டமதாகவேபட்டவர்தனக்கையும்
நிர்க்கமாய்ப்பாக்கவேசாத்து
பேட்டியான்றேல்தன்னிமிஷட்டாசனம்போட்டு
பிசமுக்கனைத்தனைப்போற்றுசிஷனே (சேகத்தப்பா)

எட்டுக்குமுசபாகத்திட்டதோடிருந்துகொண்டு
மறைசொல்த்தப்பாமலோதி
இடக்கைவிட்டுநலவிட்டகசையாயிரணியமா
வென்றுசொல்லிப்போதுசிஷனே. (சேகத்தப்பா)

சுக்கிராச்சாரிசொல்விருத்தம்.

இ-டசுறு

செய்வண்ணமானசெல்லாமுடிந்தபின்பு
சிராசவுனதுதனைத்தேனினிந்து
கைவண்ணமொடுதலிரிகேளாய்
கருதுதாம்பூலமொடுதாம்பீயம்
ஐய்வண்ணமாயவைத்திவ்வின்வலஞ்செய்
அருமைமொடுகிழுக்காயக்குளிப்புமையா
மெய்வண்ணப்பொருளிதுவேயிரணியாயமா
வெழுத்திதுமேன்மையாய்விளம்புவாயே.

வசனம்.

வாருமப்பா பிரகலாதனே உன் இடைப்பக்கையின் னிருபாதத்தை வன்னிருந்தையாம் பாக்கலினிசுகொள்ப்பும் தேங்காய் தாம்பூலம்வைத்துத் தூபதீபங்கொடுப்பெண்ணிப் பிரதட்சணஞ்செய்துகொள் கிழக்குமுகமாயிருகைகட்டிக்கொள் வாயைமூடிக்கொள் தலையைகுனிந்துகொள் யிரணியாயமா யிரணியாயமோ யிரணியாயமா வென்றுச்சொல்லுமப்பா பிரகலாதனே.

பிரகலாதன் சொல்

கொச்சகம்

திருவைமார்பிலதரித்திடுமைப்பனே
தேவருக்கிடார்நீத்தருள்தம்பனே
பெருமையாகவேதந்தைப்போசொலவென்றுர்
பிரனுதேயெகதஸ்வுமவானுதே
உருவமாகிநரப்புமாயெங்கு
||பொன்னிரணியோனைக்கெட்டெடுத்தாய்நின்ற||
அருமறைப்பொருளாகியண்ணலே
ஹரிஹரியோநாருயணையனே

பிரகலாதன் சொல்தரு

இ-ம்-காதரோமக்கிரியை தாளம்-ஆதி.

நாருயணமே ஹரிஹரி
நாருயணமே.

அநுபல்லவி.

நாருயணமந்திரம்பாருயணஞ்செய்தால்
நமனுமவந்தணுகுமோஅவைப்புமிதுவேல்லை (நாருயண)

சரணங்கள்

சென்மசாபல்லியமாகும்முன்னேசெய்த
கன்மங்கள்பிறம்போகும்
தன்மபரிபாலனஞ்சகலசிட்சகலமான
சின்மயநிரஞ்சனதேவதேவாட்சக (நாருயண)

வித்தையும்புத்தியுஞ்சேரும்-அஷ்ட
சித்தியும்பத்தியுங்கூடும்
தத்துவபொருட்கெல்லாந்தலைமையாய்விளங்கிடும்
நித்தியபரிபூரணநிமலாச்சுதானந்த (நாருயண)

கருணைபொழிவிலாசமுயிதரிபாத
கசடாகுவெகுமோசம்.

அருணகிரணசசிகருணைபெயலர்மீதிற்
தருணனுன்முகனையுந்தந்தபக்தரட்சக (நாரயண்)

பிரகலாதன்சொல்-விருத்தம்

இ-ம்-கல்யாணி

ஓம்நமோநாரயணவென்றுறைத்துளமுருகி
தானமாந்திருந்தடக்கையிந்தஸ்ரீகாமிற்றுங்கி
ஆனிரக்கண்களபுனலுகம்பிருபுரம்பொடிப்ப
ஞானனுபகனிருந்தனனந்தனர்நடுங்க.

சுக்கிராச்சசாரிசொல்விருத்தம்

இ-ம்-பந்துவராளி

இந்தவிதம்நீசொன்னுயார்குடிக்கி
யெரிநெருப்போபெருங்குலேயோயிடநீவந்தாய்
உந்தனையென்பின்கனகனனுப்பும்போது
உரைத்தமொழியால்லகைகால்நடுங்குதையோ
அந்தமுள்ளமுனிவர்களோவமரர்தாமோ
அய்பனேவுந்தனுக்கிதார்சொன்னுரோ
மைந்தனேபிரகலாதனனேயிந்த
வார்த்தைதனைமரந்திடாய்மரந்திடாயே.

தரு-இ-ம்-சங்கராபரணம்

தாளம்-அடசாப்பு

பல்லவி

என்னுசொன்னுயடா-பிரகலாதா
என்னுசொன்னுயடா.

அநுபல்லவி

என்னசொன்னுபடாபிள்ளாய்
துன்மதியிநாலேயின்று
உன்னையும்கெடுத்தல்லா
லென்னையுங்கெடுக்கவென்று, (என்னு)

சரணங்கள்

சிவனையன் வேறுமுண்டோ-வுன்தந்தையல்லால்
தெய்வத்தின்கூறுமுண்டோ
அவனைப்பூசனைச்செய்யாதரிபெயர்நீசொன்னாய்
ஐயையோயோசம்மோசஞ்செய்வதுண்டோயென்றால் (என்

மூவர்க்குமூவனவன்-பஞ்சகிர்த்திய
தேவர்க்குத்தேவனவன்
காவல்செய்துலகத்தைக்காக்குமவனல்லாமல்
காத்திவ்யம்வேறுமுண்டோபத்தியுடன்சொல்லாமல் (என்)

இரணியமகாராஜன்-யெவ்வுயிருக்குந்
தாணிக்குமெகுரேசன்
அருமறைமுனிவோருமமரர்களுமெப்போதுந்
திருவடிதொழுவதுந்தெரியாதோபோதும்போதும் (என்)

பிரகலாதன்சொல்வெண்பா

இ-ப-சங்காபரணம்.

என்னவகைசொன்ன யெழிலார்தவமுனிவ னே
தன்னை முகப்பார்த்துத் தலைவனுமே-என்றுறுதி
தப்புவதுமுண்டோசதுமறையேசொன்று
ஒப்புடனேசொல்வானுவந்து

தரு- இ-ம்-கல்யாணி

ஏகதாளம்.

பல்லவி:

என்னதப்பிதம்நான்சொன்னேன்சொன்னேனென்று
ஏடுத்துசேழ்க்கிரையா.

அநுபல்லவி

[illegible]யுமுன்னையுப்பிரணியமகாராஜன்
ஜெழுப்பிக்க வுன்னியொழிந்தேனல்லால். (என்)

சரணங்கள்.

அந்தணர்முனிவோருஞ் சிந்தையிலனவோரும்
அவரவர்நினைந்ததுதவறுமல்லைகதக்கு
வந்துகூடும்பொருளொந்தனரிலாலாய்ந்து
வழக்கஞ்சென்னேகல்லபதிப்பதுண்டோசொல்லாய் (என்)

உடலுக்குளுயிர்போலேமடலுக்குள்மணம்போலே
கரந்தப்பால்சுவைபோலே சிறந்தபெள்ளெண்ணைபோலே
சடலுக்குள் திரைபோலேஅடருத்தவுலகத்தில்
கலந்துநிரைந்திருந்தநலந்தனைவிட்டுவேனோ. (என்)

அஞ்சனமேனியுங்கஞ்சமலர்விழியும்
அணிந்தபீதாம்பரந்தணைந்தபோர்வையுங்கொண்டு
தஞ்சமென்றவர்க்கெல்லா மஞ்சலென்றருள்செய்யும்
சரணனைப்பரமனைத்தருணனைவிட்டுவேறே (என்)

சுக்கிராச்சாரி சொல்.

கலித்துறை.

நித்தியமாம்பொருள்யானேஉரைக்கும்நிலைவிடுத்து
பித்தர்கள்போல்பிதற்றுகிறுயிந்தப்பேருலகில்
கர்த்தாவிரணியன்தானன்றிவேறென்றுகண்டதுண்டோ
சத்தாகிலுமறிவில்லாமல்யால்பெயர்சாற்றினையே

தரு-இ-ம

கண்ணிகள்.

இந்தவாலப்பிராயத்திலேபிரகலாதவுனக்கிந்த
அருவெங்கேவந்ததுபிரகலாதா
நல்லதுசொல்லப்போனுலும்பிரகலாதா-யிப்போ
பொல்லாங்காய்விளையுமல்லோபிரகலாதா
தப்பிதம்நீசொன்னதல்லபிரகலாதா-யிப்போ
தப்பிதமாகத்தோனுமேபிரகலாதா
அப்பனையென்மணியேபிரகலாதனுவுனக்

கொப்பாவராருமுண்டோபிரகலாதா
உந்தன்குலக்குருநானேபிரகலாதா-வுன்
தந்தைபெயர்சொல்லிவாழ்வாய்பிரகலாதா
கால்தேசப்பார்த்தல்லவோபிரகலாதா
சீலமதையென்னைவேணும்பிரகலாதா
தந்தைபெயர்சொல்லாமல்பிரகலாதா-நீ
எந்தடவுவாழ்வுகொள்வாய்பிரகலாதா
அன்னையும்பிதாவுமல்லோபிரகலாதாவுலகில்
முன்னறிதெய்வமென்பாரோபிரகலாதா
என்னசொன்னாலுமுனக்குபிரகலாதா-சத்து
மன்னுமறிவில்லையோதான்பிரகலாதா.

சுக்கிராச்சாரிசொல்விருத்தம்

இ-ம்-பைரவி.

தெரியாதோவுனதுதந்தையல்லால்வேறே
சிவனரியுந்தானிந்தசெகத்துக்கில்லை
வெறிமுகத்தோன்கைக்கொண்டதிரவியம்போல்
வேதமென்றுந்தெய்வமென்றும்விரித்துச்சொன்னாய்
அறியாதபருவத்திர்வுணர்வுகூர
அன்பாகப்போதித்தாராரோயிந்தக்
குறியாகச்சொன்னவர்கள்முனிவர்தாமோ
குவலயத்துமறையதரோகூறுவீரே

வசனம்

அகோவொருமப்பா பிரகலாதனே - அறியாதப் பிராயத்திலே வு னங்கு யிந்த போதனை போதித்தவர்கள் முனி யீஸ்பரர்களோ பிரா மணரோ அதை யெனக்குத் தெரியும் படியாய் சொல்ல வேண்டு மப்பாபிரகலாதனே.

பிரகலாதன்சொல்விருத்தம்

இ-ம்-நாட்டை.

எந்தையாமிரணியனார்தவங்கள்செய்ய
ஏகினாச்சமயந்தன்னைப்பார்த்து

இந்திரனுமெந்தனிடத் தாயைக்கொண்டு
அருஞ்சிறையாலடைத் துவைத்தானந்தவேளை
வந்துமுனிநாரதனென்தாயைத்தேத்தும்
வகைபோலயெனக்குண்மை குத்துச்சொன்னார்
அந்தமுடன்தாய்வயித்திலிருந்துக்கேட்ட
தறைகுவேனுனுடக்கு அனைகுவேனே.

வசனம்

கேளுமையாசுக்கிராச்சாரியரோ யென்னுடைய தந்தையாகிய யிரணியமகாராஜன் மந்தரகிரிச் சாரலில் தவஞ்செய்யப்போன சமையத்தில் பொன்னுலகுக்கதிபதியாகியதேவேந்திரமகாராஜன் யென்னுடைய தாயார் லீலாவதியம்மனைக் கொண்டுபோய் அருஞ்சிறையில்வைத்து வபத்திரவஞ்செய்யும்போது நாரதமுனியானவர் அவடம்வந்து யென்தாயாருடையமனதைத்தேத்திதெளிவுவுண்டாக்குவர்போல் யெனக்கு வுபதேசம் பண்ணினா அந்தவுபதேசப்பொருள் யென் தாயார் வயத்துக்குளளிருந்தேயான்கேட்டுக்கொண்டேனந்தமார்க்கஞ்சொல்லுகிறேன் கேளுமையாசுவாமி.

பிரகலாதனன் சொல்தரு

இ-ம்-பைரவி- அடதாளம்

பல்லவி

வித்தில்லாதவிளைவுண்டோ-ஐயா
வெள்ளியைநீர்கண்டதுண்டோ

அநுபல்லவி

தத்துவகுணத்தினில்தன்னறிவதுகொண்டால்
கைத்தலந்தனிலுள்ளகனிபோலாகுங்கண்டாய (வித்)

சரணங்கள்

முப்பொருள்முப்புரமாகுமது
முக்குணமூச்சுடாருடம்-அதை
ஒப்புடனெப்படியப்படியெண்ணுவோர்
தப்படிக்கபபடியாகவேநண்ணுவோர். (வித்தி)

ஒருவினை யொருப்பயந்தருமோ-அந்த
ஒறியினை யல்லால்வேறொன்றுமோ
கருதியப்பொருளினைக்காட்டுகின்றதுவல்லால்
தருமயன் தனக்கிதுசாட்சியுண்டோசொல்லாய் (வித்தி)

கருமமுங்கருமத்தின்பலனும்-நல்ல
தருமமுந்தருமத்தின்பலனும்
திருவளர்மணியார்பன்பரமென்றுதெருவார
இருமையென்றெறுத்திடுங்கடலேயென்றெருவார. (வித்)

சொற்பொருளாகியபோதன்-வுண்டோர்க்
கற்புதமானவதீதன்
தற்பாசிற்பாதத்துவமானது
நற்பரசெப்பரகாரணனானது (வித்)

சுக்கிராச்சாரிசொல்விருத்தம்.

இ-ம்-கேதாரம்,

நன்மையேயுணர்த்தீரையா
நாதனுன் தந்தைகேட்டால்
புன்மையாய்விளையுமென்னைப்
பொருந்திடாதொருத்தல்செய்வார்
வண்மையாயவர்பேர்சொல்லி
வணங்குதனுண்மையாகும்
தன்மைநான்செய்யவேண்டித்
தகைமைநீருணர்த்திடீரோ.

வசனம்.

கேளுமப்பா பிரகலாதனே யிப்போது நீர் சொல்லிய வார்த்தைகள் வுண்மையானதுதான் ஆனால் வுன்னுடைய தந்தையார் யிவ்வார்த்தையைக்கேட்டால் யென்னைவெகுவாக கஷடப்படுத்தி விடுவார் ஆகையால் நீ யிப்போது வுன் தந்தையாருடைய பெயரைசசொல்லி வணங்குவதே வுத்தமமாயிருக்கின்றது இல்லாவிட்டால் யான் செய்யவேண்டியதை யெனக்குச்சொல்லுமப்பா பிரகலாதனே.

பிரகலாதனன்சொல்-தரு

இ-ம்-தோடி-ஜம்பைதாளம்

கண்ணிகள்.

இன்னமின்னமென்னசொல்லுவேனென்சாமியோநான்
இன்னமின்னமென்னசொல்லுவேன்

பன்னும்வேதமுடிவில்மன்னும்நாரணன்மலர்
பொன்னின்சரணமல்லாலுன்னும்பொருளுமுண்டோ (இன்)

பண்டோரதாமொழிகொண்டேனெனதுசிரம்
கண்டேன்பாயவன்பாதம்மிகண்டேனுலகவாழ்வு (இன்)

ஏதோநான்சொல்வதெல்லாஞ்சூதோயென்னுடையக்கு
வாதோபெரியோர்கள்மனமீதோதெரியாதோசும்மா (இன்)

சேனுமடியேனையெந்தனுளுந்தயவாகவே
ஆளும்நாரணன்மலர்த்தாளும்விடவேமுண்டோ (இன்)

காரணமவென்றுமாரமூர்தம்வாயில்
நீராவல்விடமுண்ணவாராதெனகஇப்போது (இன்)

ஊருமென்றந்தைபெயர்சீருந்துதிசெய்து
பாரும்பலனுண்டாகில்நேரும்நானுரைக்கிறேன் (இன்)

நில்லும்மிரணியன்முன்சொல்லும்யெந்தனையவன்
வெல்லும்வகைநினைந்தால்புல்லுமென்னெருப்பல்லவோ (இன்)

சுக்கிராச்சாரிசொல் விருத்தம்

இ-ம்-ஆரபி.

திடுக்கிடவுலகுதன்னில்தெய்வம்வேறிருக்குதென்றாய்
நடுக்குதுனையுங்காலும்நானிதற்கென்னசெய்வேன்
துடுக்குள்ளமிரணியதற்குசொன்னதுண்டாகில்மெத்த
கடித்தென்னகுலைசெய்வானேகாரணமறிகிலேனே.

சுக்கிராச்சாரிசொல்விருத்தம்

இ-ம்-பைரவி.

இருவுருபாலன்
உரைசெயுமொழியை

இரணியற்கோத
திரமுடன்போரோன்

பொது-விருத்தம்

இ-ம்-ராட்டை.

சொன்னசொற்படியேசொல்லி
துரியத்திலிருந்தான்பாலன்
இன்னதுசெய்லைநாமே
யிரணியற்குரைப்போமென்று
அன்னவன்வெள்ளிபோன
வளவினிற்பிரகலாதன்
பன்னுதானவர்மைந்தர்க்குப்
பகுத்தரியுரைக்கின்றானே.

வசனம்,

இந்தப் பிரகாரம் பிரகலாதன சுவாமியானவர் தத்துவமார்க்கங் களைச்சொல்லி மனமுருகி புளகாங்கிதராய் நிற்கயிதுகளையெல்லாங்கேட்ட சுக்கிராச்சாரியானவர் யிரணியமகாராஜனுக்குச்சொல்லவேணுமென்றுபோனசமையத்தில் பிரகலாதனன் தன்னுடன்கூடிவாசிக்காநின்ற பிள்ளைகளுக்கு தத்துவமார்க்கஞ்சொல்லுகின்றவிதங்காண்க.

பிரகலாதனன் சொல்

தேவாரம்

எட்டெழுத்தானமந்திரம்
யெமன்றனைவெல்லுமந்திரம்.
துட்டரைஜெயிக்குமந்திரம்
தொல்வினையகற்றுமந்திரம்
இட்டமாமறையோர்மந்திரம்
யிகபரங்கொடுக்குமந்திரம்
அட்டாங்கமளிக்குமந்திரம்
ஹரிநாமமந்திரமாமே
முப்பொருளானமந்திரம்

மூச்சுடரொழுந்தமந்திரம்
இப்புவிவிளங்குமந்திரம்
யெழில்வகைபடைக்குமந்திரம்
மெய்ப்பொருளாகுமந்திரம்
மேலவர்துதிக்குமந்திரம்
அப்பொழுவாயுநின்ற
அரிநாமமந்திரமாமே
சொல்லுதற்கரியதாகி
சுத்ததற்படிகமாகி
நல்லவருளத்திற்ஞான
நற்கொழுந்தானமந்திரம்
வல்லமாமலர்வாசம்போல்
மறையவர்முனிவர்வானோர்
அல்லலையகற்றிநின்ற
அரிநாமமந்திரமாமே
|| பதித்திர்வன்னிமூன்று ||
|| மன்னியமயனமாகி
கதியிலெண்டபிண்டந்
தன்னையுண்டுமிழ்ந்தமந்திரம்
விதிமவன்றன்னையீன்று
மெய்ப்பொருள்செவிக்குணர்ந்த
அதிமறைமுடிவாய்நின்ற
அரிநாமமந்திரமாமே

பிரகலாதன்சொல்தரு

இ-ம்-ராதநாமக்கிரியை-அடதாளம்

கண்ணிகள்:

நாருயணனென்னுங்கள்-மைந்தர்களே
நாருயணனென்னுங்கள்
நாருயணமந்திரம்சோரதசெவித்துளே
தோராதபெருப்பாம்புநோயாங்குத்துளே (நாராய)

கேசவனேயென் றுங்கள்-மைந்தர்களே
கேசவனேயென் றுங்கள்
கேசவன்மலரடிப்பூசைசெய்யாகைகள்
வீசித்தியானங்குத்தசேசித்தவுலக்கைகள் (கேசவ)

சீதரனேயென் றுங்கள்-மைந்தர்களே
சீதரனேயென் றுங்கள்
சீதரன் திருநாமமோதாதபெருநாக்கு
ஏதுமறியாவூமைத்தோகத்தடிநாக்கு (சீதரனே)

மாதவனேயென் றுங்கள்-மைந்தர்களே
மாதவனேயென் றுங்கள்
மாதவன்கமலபொற்பாதந்தொழாத்தலை
யாதாவாங்கொல்லைக்கேதுமிரத்தலை (மாதவனே)

அச்சுதனேயென் றுங்கள்-மைந்தர்களே
அச்சுதனேயென் றுங்கள்
அச்சுதன்கோவிலைச்சாதன்பெருங்கால்கள்
குச்சுவிட்டுநடுவில்வச்சிடுந்தரிக்கால்கள் (அச்சு)

கோவிந்தனேயென் றுங்கள்-மைந்தர்களே
கோவிந்தனேயென் றுங்கள்
கோவிந்தன் திருவுருமேவாதபெருங்கண்கள்
தாவுமயல்சிறகிலதூவியகருங்கண்கள் (கோ)

மதுசூதனனென் றுங்கள்-மைந்தர்களே
மதுசூதனனென் றுங்கள்
மதுசூதன் திருப்பணிக்குதவாதபோாக்கை
முதியவிழலைக்கட்டும்புதியசமூதையாக்கை (மதுசூத)

தாமோதரனென் றுங்கள்-மைந்தர்களே
தாமோதரனென் றுங்கள்
தாமோதரன்றெண்டாமேயில்லாவாசம்
யேமனுலகில்பாசமதிமைநரகில்நாசம் (தாமோ)

திருமாலேயென் றுங்கள்-மைந்தர்களே
திருமாலேயென் றுங்கள்

திருமாலின் துளசியும்மருமொராநெடுமூச்சு
கருமான் முருத்தியிலேவருதாதபெருமூச்சு (திரு)

ஹரிஹரியென்னுங்கள்-மைந்தர்களே
ஹரிஹரியென்னுங்கள்
ஹரிஹரியெனநினைக்துருகாதமனங்கல்லு
கருமகனுலையிலேமருவியஅடைக்கல்லு (ஹரிஹரி)

பிள்ளைகள்சொல் விருத்தம்.

இ-ட்-பூரி-கல்யாணி.

தேவரீரிசைந்தமாந்ரஞ்செவியெலாங்குளிர்ந்தோமிச்சொல்
நாவினால்நவிலும்போதுயக்தமுதுண்டதானோம்
பாவமேபோக்குமாயன்பாமதத்துவத்தைப்பின்னும்
ஆவலாயெங்களுக்குஅருள்செய்வீரருள்செய்வீரோ

வசனம்.

வாருமையா பிரகலாதனசுவாமி தேவரீர்சொல்லிய திருவாக்கியப்படியே பொருளைக்கேட்டு யெங்களுடைய செவிகளெல்லாங் குளுர்ந்து பிருதையகமலங்களி கூர்ந்தோம் அல்லாமலும் நாவினால் வசனிக்கும்போது தேவாமூர்தம் வுண்டாலெப்படியோ அதுபோல் ஆனந்தக்கடலில் மூழ்கினவரானோம் ஆகையால்மகாபாவங்களை யெல்லாயபோகப்படாநின்ற நாராயணனுடைய பாமதத்துவத்தின் போதனையை யின்னம் அடியேன்களுக்குத் திருவுளமகிழ்ந்து சொல்லவேணுமையாசுவாமி.

பிரகலாதனன்சொல்விருத்தம்.

இ-ட்-பைரவி.

பாலரோநானுஞ்சொன்னபரம்பொருள்நிலைமையின்னஞ்
சாலவேவிளம்புமென்றதண்மையால்மகிழ்ந்தேயானுஞ்
சீலமேமிடந்தமாயன்சிறந்தசின்மயதின்வண்மை
ஏலவேயுங்களுக்குயியம்புவேனறியத்தானே

வசனம்.

ஏ௳ுங்கள்பாலரோ யிப்போது நான்சொன்ன மகாமந்திரத்தைக் கேட்டு வுங்களுக்கு அறிவுவிளங்கி யின்னமும் அந்த நாராயண

னுடைய பரமதத்துவத்தைச் சொல்ல வேணுமென்று கேட்டபடி யால் யெனக்கு மகா சந்தோஷ மாச்சுது யின்னம் அந்த பரம்பொ ருளின்னிலமையை யெனக்குத் தெரிந்த மாத்திரம் சொல்லுகின்றே ன் கேளுங்கள்பாலரே.

தரு-இராகம்-கல்யாணி-தாளம்-ஆதி

பல்லவி.

திருவளர்மணிமார்பன் பரமகுருவாய்வந்து
தெளிவித்ததென்னசொல்வேன் பாலரே.

அநுபல்லவி.

கருவில்நான் வளர்போது அருமையென் தாய்மீது
கருணைசுரந்தருள் பெருகுந்தவமேலே
உருவுகொண்டுலகில்வரும்நாரதர்போலே் (திரு)

சரணங்கள்

சுத்தவிமலயானசுயஞ்சோதிவொளிவாகி
நித்தியவெளியாகிநிறையுமெய்யெழுத்தாகி
முத்திஅகாரமாகிமோனப்ரணவமாகி
சத்தியப்ரணவமுதல்தங்குமெட்டெழுத்தாகி
கர்த்தனுகியபிரணியகெற்பமாகி
ஒத்தயந்தியாபூமியுருவாகி
வைத்ததால்விராட்டியினுருவாகி
சித்தநாரணனெனுமெய்யுருவாகி (திரு)

அரிவிந்துநாதமாமறிவாயிலங்குநேரம்
திருவாமெய்குப் விளங்குஞ்செயல்கேளும்விபகாரம்
புரியுளமூலமோங்காரம்புகல்வேனகாரம்
துரியலிங்கமகாரம்சுழித்தவுந்திகாரம்
யுற்பதுவிரிமாகாரம்விசித்தியும்
பரியுகார்க்கும்பதமொருநேத்தியும்
முரணகாரமேவசிக்குமத்தியு
சிரசில்மருமேஅரசுபுத்தியும் (திரு)

அபரிச்சின்னமதாகிஅசங்காபூரணமாகி
விபரிதவுருவாகிவிமலயகணமாகி

சுபம்சுபமதாகிதொகுத்தவுட்பிரம்பாகி
உபயகாரணமாகிவுணரறியுருவாகி
கபடனுடகருஸ்திரவேஷதாரியாகி
நிபுண அகடிதகாரணவிவகாரி
தபமேயஞ்ஞாதியர்க்குயளிக்குங்கிறுபைவாரி
அவஞ்செய்வோர்மனத்தகலுமேயமூராகி (திரு)

பாதம்பாதாளமாகும்பைம்பொன்முடியேவானம்
ஆதவன்மதிவன்னிஅருள்சேர்திருநயனம்
சீதவாருதியெல்லாஞ்செவ்வாயூாலின்பானம்
வாதமெல்லாஞ்சுவாசமாமேரோமங்கிதானம்
ஓதுமாயலனாயெலும்பதாய்மண்ணும்
மீதிலாவியவுடுவெண்பாலுமின்னும்
மாதிரஞ்,செவியாகமறைபண்ணும்
ஆதிநாரணனகிலரூபனென்னும் (திரு)

பிள்ளைகள்சொல்விருத்தம்

இ-ம்-நாட்டை.

தேவர்கள்மூனிவர்தேடியுங்காணு
சின்மயப்பரம்பொருள்நிலைமை
செவ்வையாயுணர்த்தீர்யிரும்புநெஞ்சுருகி
செவியெலாங்குளிர்ந்தமுதுண்டோம்
அவ்வியங்கண்டுதேவரீர்பதத்தை
யனவருஞ்சிறகினிற்புனைந்து
ஒவ்வியதங்கள்திருமந்திரத்தால்
ஒப்பிலாப்பதமடைந்தோமே

சுக்கிராச்சாரிசொல்விருத்தம்.

இ-ம்-மோகனம்

உன்னிடப்பாலன்றன்னை
வொப்பித்தீர்மகிழ்ந்தயானும்

தன்னையாகவேதந்
தானேதிவைக்கும்போது
அன்னவனதனைத்தள்ளி
அய்யனேயகிலம்போற்றும்
மன்னனேபுதுமையொன்று
வழுத்தினேன்கேளும்நீரோ.

தரு- இ-ம்-தோடி-தாளம்அடசாப்பு.

பல்லவி.

ஐயாயிரணியேசா வொரு
அதிசயம்நீகேளாய்
மெய்யோவதுபொய்யோ-அந்த
வினயன்கண்டகினவோ (ஐயா)

அநுபல்லவி

விண்ணுடருமண்ணுடரும்வேதப்பொருள்பகரும்
பண்ணோர்மறைசொன்னெனுந்தன்பாலன்பகர்ந்திலனே (ஐ)

சரணங்கள்.

என்னோடவன்மனத்தா-லொன்று
மிசைத்தானதுவசைத்தான்
சொன்னாலெந்தனுவும்
வெந்துசுடுமேநாகிடுமே (ஐயா)

ஏதென்றிதுசொல்வேன்மூடி
எனக்கோஅவன்றனக்கோ
தீதென்றிதுசொன்னால்
வன்தோரான்வதில்கூரான் (ஐயா)

அண்டபகிரண்டங்களும்நீ
ஆண்டாய்ப்புகழ்பூண்டாய்
கண்டுன்மகன்சொன்ன
லப்போகாணும்பொய்யெய்தோணும் (ஐயா)

இரணியன்சொல்-விருத்தம்

இ-ம்- பைரவி

உக்கிரமாய்ப்பாலன்
சுக்கிரன்றனையே
அக்கிரமஞ்சொன்னதை
இக்கணமறிவோம்

இரணியன்சொல்-விருத்தம்

இ-ம்-ஆனந்தபைரவி

அப்படியிப்போல்சீறி அனல்விழிபெருகநோக்கி
ஒப்பிலாமந்திரிமாரே வோடியிக்கணமேசென்று
தப்பிலாப்பிரகலாதன்றன்னைநானழைத்தேனென்று
செப்பியேகூட்டிக்கொண்டுசீக்கிரமாய்வரச்செய்வாயே

வசனம்.

வாருங்கள் மந்திரிமார்களே இந்தட்சணமே பள்ளிக் கூடத்திற் போய் நமது குழந்தை பிரகலாதனைக் கண்டு நானழைத்த தாகச் சொல்லி அதிசீக்கிரத்தில் கூட்டிக்கொண்டு வரச்சொல்லுங்கள் மந்திரிமார்களே.

மந்திரிசொல்விருத்தம்

இ-ம்-கல்யாணி.

கிடுகிடென்றாசர்மணிமுடிசிதற
கெடிகொளவலுமைபெற்றோருங்கும்
படிமிசையாளுமன்னவன்கொலுவில்
பணிந்திடுங்கஞ்சுகியேகேளாய்
கடிதுடனோடிப்பிரகலாதனைக்கண்
டுதவுனைத்தனர்வாவென்
றடல்படுஞ்சமூகமுன்னவன்றனை
அழைத்ததிவேகமாய்வருகுவாய்

வசனம்.

ஆரடா ஆசாரவாசல் காக்குங்கட்டியக்காரா நமது அரசர்பிரான் வுத்தாரப்படிக்கு பள்ளிக்கூடத்திற்குப்போய் பிரகலாதனை அழைத்துக்கொண்டு சீக்கிரத்துக்குள் வடாகட்டியக்காரா.

கட்டியன்சொல்-விருத்தம்

(இ-ம்-பூரிகல்யாணி.

வந்தனமையயா
உந்தன்சொல்லிடியை
எந்தவேளைத்து
மைந்தனை யழைப்பேன்

கட்டியக்காரன்சொல் விருத்தம்.

இ-ம்-கல்யாணி.

சந்ததமூலசாள
மைந்தனேவுனது
தந்தையுமழைத்தார்
வந்திடுமையயா

பிரகலாதனன் சொல்விருத்தம்

இ-ம்-சுருட்டி.

பன்னுசஞ்சுகியே
மன்னனென்தந்தை
உன்னியேயழைத்த
தென்னனுனவாரோன்

பிரகலாதன்சொல் விருத்தம்.

இ-ம்-நாட்டை.

ஐயனேவேதயோத
அன்புடன்போனையென்னை
செய்யனேஅழைத்தேதுன்
திருவடிசரணமையயா

இரணியன்சொல்விருத்தம்

இ-ம்-கல்யாணி

வந்தடிபணிந்துநின்ற மகன்தனையெடுத்துக்கொண்டு
தந்திருமார்பிற்றுங்கித் தழுவியேமடிமேல்வைத்து
அந்தணன்கேழ்க்கநீயும் அவனையுமுணிந்துசொன்ன
சிந்தனையின்னதென்று நீயுரைசெய்வாயப்பா.

வசனம்

வாருமப்பா பிரகலாதனு யிந்த சிம்மாதனத்தி லேறி யென்மடியின்பேரிலுட்கார முகத்தில் வேர்வையேது மார்பு திடுக்கிடுவதேது கைகால் நடுக்க மேது இந்தச் சுக்கிராச்சாரியார சொன்ன தத்துவத்திற்கு நீ யென்னபதில் சொன்னாய் அதை யெனக்குச சொல்லுமப்பா யென் கண்மணியே.

இரணியன்சொல்-தரு

இ-ம்-கல்யாணி-தாளம்-அடதாளம்.

பல்லவி

சுக்கிராச்சாரியார்சொன்ன முக்கியமந்திரம்பழித்துநீ
சொன்னதென்னடாமகனே.

அநுபல்லவி.

அக்கிரமஞ்சொன்னானேயென்றான்
தக்கவேயுன்னாலேயென்றான்
அழிவென்றானேபிலத்துக்கு
யிழிவென்றானேகுலத்துக்கு (சுக்கி)

சரணங்கள்.

யோசனை வேறில்லையென்றான்
பேசவுங்கூடாதென்றான்
உனக்கோயெனக்கோமகன்றனக்கோ
முடிதலென்றான்
நீசொல்லியகொடுஞ்சொல்லைப்

பேசினாலும்வெகுதொல்லை
நெஞ்சினையுருக்குமென்றான்
வஞ்சனைபெருக்குமென்றான் (சுக்கி)

சொல்லுவோமென்றாலுநாவு
புல்லெனவேவெந்துபோகும்
சுடுநரகத்தில்வீழ்ந்து
தவிப்போமென்றானென்றான்
வல்லவுணர்குலமெல்லாங்கொல்ல
நினைந்தவன்சொல்லாம்
வாழ்வெல்லாமுன்மகனாலே
தாழ்வென்றானேயினிமேலே. (சுக்கி)

புத்தியுட்பெருமையாலும்
பத்தியன்பாவனையாலும்
புண்ணியவானிவனென்றே
நண்ணியேமகிழ்வுகொண்டேன்
குற்றமல்லோகுருவோதும்
சத்தியந்தப்பினாலேதுங்
குலட்சயமெனுஞ்சொல்லுக்
கலட்சயமுண்டோநில்லுஞ் (சுக்கி)

இரணியன்சொல்—தரு—சொண்டி

இ-ம்—நாதநாமக்கிரியை

சுக்கிராச்சாரியனுருபதேசஞ்சொன்னதுக்கு
நிந்தனைகளென்னத்தைச்சொன்னாய்
அக்கிரமஞ்சொன்னானென்றான்
வுன்கீர்த்திக்கழிவென்றான்
மெத்தயிழிவென்றான்
நீசொன்னபெரும்பிழையால்

சுக்கிரனும்நெஞ்சினை
யுருகுதேன்றுபஞ்சரிக்குரான்
யோசனைவேறில்லையென்றான்-கெடுதலை
யுனக்கோவுன்மகனுக்குபின்றனக்கோவென்றான்
வாய்பேசவொண்ணுதென்றான்-நரகமும்
வந்துபோமென்றானுவெந்துபோமென்றான்
மாயவன்சிநேகிதனென்றான்-அவுணர்கள்
வாழ்வெல்லாமுன்மகனாலேதாழ்வாமென்றான்
புத்திமானியென்றிருந்தேன்-நல்லநல்ல
புண்ணியவானெனவிருந்தேன்யெண்ணியெண்ணியே
பத்தியும்பாவனையும்-கனயோக
பாக்கியவானென்றிருந்தேன்யோக்கியமுடனே
குருமொழியிகழ்ந்தோர்கள்-அவர்கள்தன்
குலட்சயமென்றிடுஞ்சொல்லட்சயமோ
அருமையென்கண்மணியேயாவருக்கு
மன்புவிதரணமுள்ளயின்பவானேநீ
தப்பிதஞ்சொல்லமாட்டாய்-சுக்கிரன்சொல்
சத்தியமல்லவென்றெந்தன்புத்தியிலுண்டு
அப்படியவன்சொல்வதே-நீசொன்னால்
அதையறிந்தவனைநான்வதைசெய்கிறேன்
சொல்லடாபிரகலாதா

சுக்கிராச்சாரிசொல்விருத்தம்

இ-ம்-பைரவி.

பெரியவர்வார்த்தைகேளாப்
    பெரும்பழியுடையோர்தீய
அருநரகத்தில்வீ  ்
    அலருவதுண்மையென்றே
குருமொழியிகழ்ந்தோர்பாவங்
    கூறவுமெளிதோவையா
திருகுநீசொன்னசேதி
    செப்பெனச்செப்புவேனே.

பிரகலாதனன்சொல் தரு

இ-ம்-சங்கராபரணம்-தாளம்-அடசாம்பு.

பல்லவி:

என்னஜென்மம்ஜென்மம்-நாம்
யெடுத்ததேகன்மம்.

அநுபல்லவி

தன்மமென்றும்பாவமென்றும்
வன்மமறியாதே

சரணங்கள்

ஆணவத்தின்மலைக்காடு-வதி
னுழலும்ஞம்புனல்மாடு
வேணமட்டுந்துள்ளாடும்
வினையடைக்குங்கூடு (என்ன)
மூன்றுசைமேலெண்ணு
மூர்க்கமானதைநண்ணும்
தான்தானேமனதெண்ணும்
தாழ்வதேபண்ணும் (என்ன)
புன்மையெதுவுந்தணியாப்
பெருமைபெள்ளளவணியா
நன்மைசிறிதுங்கனியா
நாராயணனைப்பணியா. (என்ன)

இரணியன்சொல்.

விருத்தம்-இ-ம்-தோடி

பருவமதானமைந்தன்
பகர்ந்ததத்துவத்தைக்கேட்டு
யெரியில்நெய்கவிழ்த்தாப்போல
யிருஞ்சினந்தலைக்கொண்டேரி
தரணியிரோமுமெந்தன்
றுள்தொழுவதுவேயல்லால்
அரியவன்பெயரையாரோ
அறிவித்தாருரைசெய்வீரோ

இரணியன்சொல்-விருத்தம்

இ-ம்-கும்பகாம்போதி

என்னிடயெதிரிபேசா யிவ்வுலகத்திலுள்ள
மன்னவர்மூவர்வானோர் மறையவரேவரானாலும்
சொன்னாக்கருத்திரண்டாய் துணிப்படவுடலைவெட்டி
பன்னுசக்கரமேகொல்லும் பாலனேயறிகுவாயே.

தரு- இ-ம்-மோகனம்.

பல்லவி.

இப்படிக்கொத்தபொல்லாத
தப்புவார்த்தைகள்சொன்னால்
யெந்தன்கோபம்
பொல்லாதேமைந்தாவே.

அநுபல்லவி.

யெப்புவியுக்திசையும்
வொப்புடனேபோற்றி
யேற்றுவதன்னையல்லால்
வாழ்த்துவதுண்டோகீர்த்தி: (இப்படி)

சரணங்கள்.

மெத்தமெத்தவேகல்விகத்துகத்துப்பேசாதே
வீணனவீணுக்குநீவாணுலேமாய்க்காதே
பெத்ததகப்பனுடன்கதத்தவித்தையோதாதே
பேச்சுமூன்னடத்தையுஞ்சீச்சிபோடாயிப்போதே (இப்)

எனக்குவந்திடும்பதியுனக்கதுமில்லையே
ஈனபுத்தியுனக்குத்தானதுமல்லயோ
சினக்கும்அரியைக்கொல்லயெனக்கென்னத்தொல்லையோ
செத்தேயுண்பதோசோறுவைத்துவுண்கவில்லையோ (இப்)

மண்ணும்விண்ணையும்வாரியுண்ணியவயமொரம்பி
வனந்தவயிரமார்பைபிளந்தானேமாயஅவெம்பி
எண்ணுமென்குலத்தோனா கொண்ணயன்பேனாநம்பி
யேனோநீபினத்துராய்மானமில்லையோநம்பி. (இப்)

இரணியன்சொல்விருத்தம்

இ-ம்-ஆனந்தபைரவி.

சிறுபிள்ளையென்றுநீதான்
செப்பிடுங்குற்றமெல்லாம்
பொருத்தனனினிமேலந்தப்
பிழைதனைச்செய்வாயாகில்
மருத்துன்னைவதைத்துக்கொல்வேன்
மறையவன்சொன்னதெல்லாம்
திரத்துடன்படித்துக்கொண்டு
சீக்கிரமாய்வருகுவாயே.

வசனம்.

வாருமப்பா பிரகலாதனே – சிறுபிள்ளையில்லாதபடியினாலே இப்போது நீ செய்த குற்றத்தைப் பொருத்தேன் - யினிமேல் யிப்படிப்பட்ட தப்பிதமான வார்த்தைகள் பேசாமல் சுக்கிராச்சாரியார் பென்னசொல்லுகின்றாரோ அந்தப்பிரகாரம் புத்தியாய் வாசித்துக்கொண்டு வாருமப்பாமகனே.

பிரவியாங்கடலில்வீழ்ந்து
பேதுருமவருக்கெல்லாம்
திரமுளக்கப்பலாகி
சீர்முத்திக்கரைமேற்சேர்கும்
துரவுமாதவர்வேதத்தின்
சொல்லுமெய்ப்பொருளின்மண்மை
அறிவுடன்கேட்பாயானு
லைாகுவேனிலமைதானே.

வசனம்

அகோ கேளுமையா யென்னைப் பெற்ற பிதாவே பிறவிக் சடலிலே வீழ்ந்து தத்தளிக்கா நின்ற பேருக்கு ஓடம்போலே தாங்கி

அந்தப் பொருளான முத்தியென்னுஞ் சமையேலே சேர்க்கா நின்ற சைதன்னியமான பதத்தை இன்னஞ் சொல்லுகிறேன் கேளு மையாசுவாமி.

தரு-இ-ம்-பைரவி-அடதாளம்

கண்ணிகள்.

காமங்கள்பெருவதும்வருந்
தருவதுந்தந்தையே அது
கடந்தால்பேரின்பங்க
ளடந்துவருவதுந்தந்தையே
ஓமங்களந்தணர்
நேமப்புரிவதுந்தந்தையே - ஓம்ரீ
ஓம்நமோநாராயண
வென்பதல்லவோதந்தையே
மண்ணுக்குள்விண்ணுக்கு
ளொன்றுக்குளுநன்றுக்குள்தந்தையே-இன்னம்
மைத்தெங்குஞ்சுத்தெங்கு
முத்தப்பாஞ்சுடர்தந்தையே
ஒண்ணுக்குளொண்ணி
நண்ணியமெய்ப்பொருள்தந்தையே அது
ஓரெழுத்தின்பொருள்
நாராயணமல்லோதந்தையே
மூவற்குந்தேவற்கு
மூலப்பொருளாயேதந்தையே கன
முத்தியுஞ்சித்தியும்
புத்தியுந்தருவதுதந்தையே
வேர்வருங்காட்சியுமாட்சியுந்
தாட்சியுந்தந்தையே அது
ஓரெழுத்தின்பொருள்
நாராயணமல்லோதந்தையே
நீருநிலனுநெருப்பு

மாருதமூந்தந்தையே அது
நின்றதுசென்றது
அன்றதுயின்றதுதந்தையே
ஓரிலெண்ணையைப்போல்நின்றவன்
மாயவன்தந்தையே அது
ஓமெழுத்தின்பொருள்
நாராயணமல்லோதந்தையே
வேதப்பொருளாய்விளங்கும்
பொருளதுதந்தையே சொல்ல
வேணுமோதோணுமோ
காணுமோவென்னுமேலதந்தையே
ஓதப்பிரமன்பரமனூலாகு
மோதந்தந்தையே அது
ஓமெழுத்தின்பொருள்
நாராயணமல்லவோதந்தையே
ஆதியுமாகியனாதியுமானது
தந்தையே யின்னும்
அடியுமுடியுமநடுவு
மிலாதது தந்தையே
ஓதும்பொருட்கெல்லாஞ்
சாதகமானதுதந்தையே ஹரி
ஓம்நமோநாராயண
வென்பதல்லவோதந்தையே
ஆணவமாய்கைக்குழியி
லழுந்தியேதந்தையே இதை
அறியாமல்குறியாமல்
வெறியாடுகிருய்சும்மாதந்தையே
உன்னிவுன்னுக்குள்ளே
பார்த்தாலுந்தோணுமேதந்தையே அது
ஓமெழுத்தின்பொருள்
நாராயணமல்லோதந்தையே

நீரிற்குமிழிநிலையில்லாகாயத்தை
தந்தையே இத்தை
நிசமென்றுமெ ய்மணிவகைப்
பூணலாகுமோ தந்தையே
ஒருமனமும்பொருளுங்குணமூய்சேள
தந்தையே அது
ஓமெழுத்தின்பொருள்
நாராயணமல்லோ தந்தையே.

இரணியன்சொல்-விருத்தம்

இ-ம்-மோகனம்.

மதிமந்திரிமாரேமெத்த வலுமைகொண்டிந்தபையல்
யெதிரிபெயொன்றுசத்துமெண்ணமலுமைத்தான் பாரும்
முதிபடமோதியண்டமுகட்டினில்விட்டெரிந்து
உதிர்படவாளால்வெட்டி வுயிர்குடித்திடுவேனே.

வசனம்.

ஆ ஆ ஆ வாருங்கள் மந்திரிமார்களே இந்த யீரேழு பதினாலு லோகமும் நமக்குள்ளடக்க மென்று தெரிந்திருந்தும் நம்முடைய யெதிரியின் பெயரைச் சொன்ன னல்லவா இவனை வாரி யறைந்து வாளினாலே வெட்டி வுதிரத்தைக் குடித்துப் போடுவேன் பாருங்கள் மந்திரிமார்களே.

மந்திரிசொல் விருத்தம்.

(இ-ம்-பந்துவராளி.

படபடென்றிடிபோல்பல்லைப் பதரிடக்கடித்துமீசை
துடித்துடலதிரக்கைகால் தோள்பதரிடவுதட்டைக்
கடித்துதிரங்குடித்துக்கண்ணனலெங்கும்வீசப்
பிடிபடாக்கோபம்வந்தால்பொருக்குமோகுழந்தைஐயா.

வசனம்.

கேளுமையா சுவாமி இராஜவல்லபா தேவரீர் பல்லீக்கலேந்த போது வுலகமெல்லாந் தத்தளிக்குது தேவரீருடைய வுடல் துடிக்கும்

போது அண்டபுவனமெல்லாஞ் சுழல்கின்றது தேவரீர்கண்களை வுருட்டிப்பார்க்கும் போது யெங்கும் அக்கினி சுவாலையாய் வீசுகின்றது வுமக்கு யிப்படிப் பட்டக்கோபம் வந்தால் யார் சகிப்பார்கள் இந்த அறியாதக்குழந்தை பேரில் இப்பேர்ப்பட்ட கோபம்வாலாகாது அக்கொடிதாகிய கோபத்தை பொருத்து மன்னித் தருளுமையா சுவாமி.

இரணியனுக்கும்-பிரகலாதனுக்கும்
தர்க்கம்-இ-ம்-பந்துவராளி-அடதாளம்.

கண்ணிகள்:

ஆராடவுனக்கிந்தப்போதனை செய்தவர்
நேரகயெனக்குநீநிகழ்த் துவாய்மைந்தா.

பிரகலாதன்சொல்தரு

நிகழ்த்திடுனுமென்ன நீயென்ன அறிவாயோ
அகத்தினில்குடிகொண்டதருப்பொருளெந்தா.

இரணியன்சொல்

அரும்பொருளாவதும் பெரும்பொருளாவதும்
தரும்பொருள்யானன் றிதானுண்டோமைந்தா

பிரகலாதனன் சொல்

தானுண்டோவென்றுபேசதுமறைப்பரவிய)
ஆனந்தநாரணன் அமலன்காணெந்தா.

இரணியன்சொல்

நாரணனுதனேயானுக்கால்தம்பியை
கொறடிாம்பன்றியாய்கொல்வானேமைந்தா

பிரகலாதன்சொல்

கொல்வானேபொல்லாதபாதகனைக்கண்டால்
வெல்லாமல்விடுவானேவிமலன்காணெந்தா.

இரணியன்சொல்

விமலனெனவனுக்குமெய்யினிற்பயமுண்டோ
உமிழ்திரைக்கடலினிலொளிப்பானேமைந்தா.

பிரகலாதனன்சொல்

கடலினுமுள்ளவன் காசினிதனிலெல்லாம்
உடலினுமுள்ளவன் வொருவன்காணெந்தா.

இரணியன்சொல்

ஒருவனென்றுரைத்தாயேவொருவன்பேற்பகையென்ன
ஒருவன்மேலுறவென்னவுகந்துசொல்மைந்தா

பிரகலாதனன்சொல்

உகந்தென்னசொல்வது வுண்மையையறியாமல்
அகந்தனேயெண்ணுவோர்க்கவன்யெமனெந்தாய்

இரணியன்சொல்

எமனவனென்றாயே யெமனையுங்கொன்னுனு
னையுஞ்சினமுடிப்பேனறிந்துபார்மைந்தா

பிரகலாதனன்சொல்

அறிந்தென்னபார்ப்பது அவனைநீகொல்வாயோ
செரிந்துன்னைக்கொல்வதுந் தெரியாதோவெந்தா.

இரணியன்சொல்

தெரியாதோயானுக்கால் சினைகருடனுடனே
அரியவன்பதுங்கின தரியாயோமைந்தா

பிரகலாதனன் சொல்

பதுங்குவதுஞ்சிங்கம்பாச்சலுக்கிடமல்லோ
ஒதுங்கிப்பிழைப்பதற்கு வொண்ணுதுயெந்தா

இரணியன்சொல்

ஒண்ணுதென்றெண்ணுதேவின்னுமண்ணுமெல்லாம்
கண்மணிபோல்நான்காத்தேனேமைந்தா

பிரகலாதனன் சொல்

காத்ததுமுன்னவன்கருணையினாலல்லோ
யேத்தியேநீவாழ்தலின்பங்காணெந்தா

இரணியன்சொல்விருத்தம்.

இ-ம்-ஆனந்தபைரவி

ஒருமையாயுரைத்தபோதுவுள்ளமூஞ்சித்தம்வெந்து
இருவிலங்கரிந்தநீய யீரேழுலோகமஞ்ச

அருடையென்றம்பிதன்னை ஆறுயிருண்டான்பேரை
வுரைசெய்யவென்றேநானுமுன்னையும்பெத்தேனேடா.

வசனம்.

அடா வாடா பிரகலாதனே நீ சொன்ன வார்த்தையினாலே இந்த அண்டாண்டங்களும யீரேழு பதினாலு லோகங்களும சத்த சமுத்திரங்களும் அதிர்ந்து போகும் படியான கோபம் வருகின்றது இப்போது யென் பகைவனாகிய அந்த அரியின் பெயரைச் சொல்லத் தானவுன்னை பிள்ளையாகப்பெத்தேன் நல்லதாகட்டும்.

இரணியன்சொல்

இ-ம்-தோடி.

யென்றிடித்தன்பாற்சிறி
யிருந்தமந்திரியேகேளாய்
ஒன்றியவுடலிற்புண்ணை
வுகந்தருத்தெரிவார்போலக்
கொன்றிடவேணுமிந்தக்
கொடியனென்குலத்துக்காகான்
இன்றுநீமல்லர்தம்மை
யிக்கணமழைப்பீரோ,

வசனம்

வாருங்கள் மந்திரிமார்களே யென்னுடைய பகைவன் பெயரை வெகுமுயற்சியாக சொன்னதுஷ்டன் இனியென் முகத்தின் முன்னே நிற்கலாகாது இவனை யிந்தட்சணமே கொல்ல வேணும் ஆகையால் அதிக சீக்கிரத்துக்குள் மல்லரை அழைத்துவரச்சொல்லும்மந்திரிகளே.

மந்திரிசொல்விருத்தம்.

இ-ம்-நாட்டை.

இண்டெமதருகில்
நிண்டகட்டியனே
துண்டமல்லர்களைக்
கொண்டுநீவருவாய்.

கட்டியன்சொல் விருத்தம்

இ-ம்-கல்யாணி.

தெண்டிரைக்கடல்சூழ்
எண்டிசைக்காசே
கண்டிதமல்லரைக்
கொண்டுதோவாரோன்

கட்டியன்சொல் விருத்தம்

இ-ம்-கமாஸ்

துடிபடவாசன்
கடினமாயழைத்தார்
படிமிசைமல்லர்
கொடியினில்வருவீர்.

மல்லர்வருகிறவிருத்தம்.

இ-ம்-சுருட்டி

ஆமெனக்கொடுமைதனல்சிந்திட
ஆழ்கடலதுதோய
ஞாலமுமதிலுளசோலையுதிர்ந்து
நடுங்கிமிகக்காய
மேலவனைத்தெழுமேகமுடன்தரு
வெந்துமிகத்திய
சூலமுடன்மழுவாள்கொடுமல்லர்
சுருக்கினில்வந்தாரோ.

பொதுசொல்-தரு-இ-ம்-ஆசாவேரி

தாளம்-அடசாப்பு

பல்லவி.

மல்லர்வந்தாரோ-வலுமையுள்ள
மல்லர்வந்தாரோ.

அநுபல்லவி.

தோல்லுலகெங்கினும்வல்லமைகொண்டிடும்
வெல்லவரும்பணிஇரணியன்முன்னே. (மல்லர்)

சரணங்கள்

காலில்விருதுவெண்டயமிட்டுக்
கருப்புக்கச்சையுஞ்சல்லடமுந்தொட்டு
வேல்மழுசூலமும்வபள்களும்பிடித்து
விழித்துவுதட்டைக்கடித்துப்பெருத்த (மல்லர்)
நெரித்தகுஞ்சியுஞ்செம்மட்டமயிரும்
நெத்திவிசாலமுந்தத்தியகடையும்
கருத்தமீசையும்முருக்கிவெருட்டிக்
கண்டவர்தங்களை துண்டங்கள்செய்வார்போல் (மல்லர்)
இடித்தபேச்சும்வெடித்தச்சிறிப்பும்
இருட்டைக்குழைத்துதிருட்டுமேனியும்
பிடித்துமேகதைப்பிசைந்துஜலத்தை
குடித்துகொழித்துகடித்துப்பெருத்த (மல்லர்)

மல்லர்கள் தரு.

இ-ம்தோடி-தாளம்-ரூபகம்

பல்லவி.

மல்லர்நாங்களே-கொலைசெய்யும்
மல்லர்நாங்களே.

அநுபல்லவி.

தொல்லுலகில்கவிஞ்ஞோர்களென்றெண்ணுமல்
துண்டத்தினமாகமுண்டத்தினஞ்செய்யும்
வல்லாண்மைப்பேசியேசத்துமதியாத
மட்டியர்தங்களைவெட்டியெரிகின்ற (மல்லர்)

சரணங்கள்.

இச்சையாய்சங்கீதவித்துவானைக்கண்
டிராஞ்சித்தினந்துதிப்போம் அதி
லேதுந்தெரியாதமூடர்கள்பாடினு
லெங்கள்காலாலுதைப்போம்.

அச்சமில்லாமல்சபைதனிலேநின்று
ஆடுமவர்க்கொருபாடகனென்று
கொச்சைநாய்போலஅழுதுதிரிவோனைக்
கொல்லத்துணிந்தவல்லேயத்தாற்குத்தும் (மல்லர்)

கள்ளுஞ்சாராயமுங்கஞ்சாவபினி
கலந்துநன்றாய்குடிப்போம் துரையில்
கருப்புகச்சையுஞ்சல்லடமுங்தொட்டு
கையில்கத்திப்பிடிப்போம்
துள்ளிதுள்ளிக்காலில்வெண்டயமாடச்
சூலமழுவேல்கண்டமாடுை
கொள்ளையிடாமலறஞ்செய்யாசிந்தைக்
கொண்டிடும்பேர்களைத்துண்டுதுண்டாய்வெட்டும்

திக்குசெஜங்களைவிக்கிரமங்கள்கொண்டு
திசைக்கும்படியாயடிப்போம் பெங்கள்
திரேகங்குளிர்ந்திடமேகத்தைப்பிழிந்து
தாகத்துக்கேகுடிப்போம்
அக்கிரமஞ்செய்திந்தஅண்டத்தைஎரிப்போம்
அஷ்டகிரிதன்னைச்சுள்ளிப்போல்முரிப்போம்
பக்கண்டிடிபோவிரணியனெங்களைப்
பார்த்திருந்தால்வேலைகாத்திருந்தேசெய்யும் (மல்லர்)

மல்லர்கள்சொல்விருத்தம்

இ-ம்-பைரவி.

மல்லலம்புயனேபோற்றி
    மன்னவர்மன்னுபோற்றி
எல்லொளியாாபாபோற்றி
    யிரணியவேந்தேபோற்றி
வல்லமையாலேயெம்மை
    வளமைத்திட்டசேதி
சொல்லுவீரேனர்சொன்ன
    தொண்டுவேலைகள்செய்வோமே.

வசனம்.

சரணஞ் சரணஞ் சுவாமி இரணியேஸ்வரா சர்வலோக தயா பரா பூமண்டலாதிபா அடியேன்களை அழைப்பித்தகாரியம் யின்னதென்று திருவுளம்பற்றியருள்வேண்டுமையா சுவாமி.

இரணியன்சொல் விருத்தம்.

இ-ம்-மோகனம்

மன்னியவமைச்சமாரே
மல்லர்கள்வசத்தில்தானே
யென்னிடயெதிரிபோனா
யெதிர்த்துநின்றுரைத்தபையல்
தன்னையேயொப்பிவைத்து
தகைபணிவகையும்வாங்கி
அன்னவன்றனைப்பிடித்து
அவர்களைவரச்சொல்வீரே.

வசனம்.

ஆகோ வாருங்கள் மந்திரிமார்களே யெனக்குப் பகையாளியானவன் பேரைச்சொன்ன துஷ்டனை யிந்தட்சணத்தில் மல்லர்கள் வசத்திலொப்பிவித்து அவன் தரித்துயிரானின்ற ஆடையாபரணமெல்லாம் வாங்கிவைத்து அவனையின் கட்டுமாருய் பிடித்துக் கட்டிக்கொண்டு யெனது முன்பாகவாச் சொல்லுங்கள் மந்திரிமார்களே.

மந்திரிகள்சொல் விருத்தம்.

இ-ம்-தன்னியாசி.

வாங்கொடுவாள்கையேந்து
மல்லரேசொல்லக்கேளீர்
மாங்குள்ளகுலத்துக்காகப்
பையலைப்பிடித்துநீங்கள்
ஓங்கியபணிதியாடை
யுயர்வமணிகள்வாங்கி
யேங்கிடக்கயத்தால்கட்டி
யவன்றனைக்கொண்டுவாரீர்.

வசனம்

வாருங்கள் மல்லரே தனது குலத்தை யழிக்கவந்த கொடியது ஷடனைப் பிடித்து ஆடையாபரணம் நவரத்ன மாலை முதலாகிய துகளை வாங்கிவைத்து மனது திடுக்கிட்டுயேங்கி அஞ்சும்படியாக அவனை பின்கட்டுமாருகக்கொண்டு அரசன் முன்னேகொண்டு வந்து விடுங்கள் மல்லர்களே.

மல்லர்கள்சொல்விருத்தம்

இ-ம்-பைரவி.

யீசனுக்கீசாவுந்தன்
இணையடிதலைமேல்வைத்து
கூசாமல்மகனைக்கட்டிக்
கொண்டிதோவந்தோமையா.

இரணியன்சொல்விருத்தம்

இ-ம்-நாட்டை

துடித்திடுமல்லரே
பிடித்திவனுடலைக்
கடித்துதிரத்தைக்
குடித்திடுவீரே.

இரணியன்சொல்-தரு

இ-ம்-புன்னாகவராளி-தாளம்-அடசாப்பு.

பல்லவி

மல்லரேகேளும்-சொல்லுகிறேன்
மல்லரேகேளும்.

அநுபல்லவி.

மல்லரேநிகத்தாலேசல்லடைக்கண்போலே
சில்லிசில்லியாகக்கொல்லுங்கள்கொல்லுங்கள் (மல்)

சரணங்கள்.

குண்டுகட்டாய்மெத்தகட்டியே-மயிர்
கொடுமணிகயத்தினுல்கட்டியே.

துண்டுதுண்டாய்வாளால்வெட்டியே-யிவன்
சொரியுண்ணுங்கோளென்ன அட்டியே-நட்டியே (மல்)
காத்தாடிப்போலவே சுத்துங்கள்-இவனைக்
கால்வாரிநிலத்தோடேயெத்துங்கள்
கோத்துகோத்துவேலால் குத்துங்கள்-குத்தி
குடலைப்பிடுங்கிகோபமுத்துங்களேத்துங்கள் (மல்)
என்மகனுயின்னம்வேணுமோ-யினி
யெனக்கிவன்மேலன்புதோணுமோ
சொன்னதுன்மதியாலென்ன காணுமோ-பையன்
தேகமதியெல்லாம்ஆணுமோபூணுமோ (மல்)

மல்லர்கள்சொல்விருத்தம்

இ-ம்-மோகனம்.

வாருங்கள்மல்லர்களேமன்னன்சொன்ன
வகைப்படியேமணிக்கயத்தால்மைந்தன்றன்னை
சீறுங்கள்யிவன்றனை யேயிருக்கக்கட்டிச்
செல்லுவோங்கானகத்தில்செல்லுவோமே

வசனம்.

வாருங்கள்மல்லர்களே நமது மஹாராஜனுன யிரணிய பூபன் சொன்னவுத்தாரப்படிக்கி யிவனை மணிகயத்தினுல் யிருக்கக்கட்டி கானகத்திற்கு கொண்டுபோவோம் மல்லர்களே.

பிரகலாதனன் சொல்

கட்டளைக்கலிப்பா.

ஆழிதன்னைப்பொருப்பைமத்தாக்கியா
டறவுதன்னைக்கயொனப்பூட்டியே
ஆழியைக்கடைந்தண்டற்கமுதம்நீ
அன்றளித்திடநின்றருளண்ணலே
ஆழிபொங்கிடவூழியைப்போல்மல்லர்
அருங்கயர்கொண்டருகில்வந்தாரிதோ
ஆழியிற்றுயிலையனேமெய்யனே
அரிஅரியென்னைக்காற்றருள்செய்வாயே

பொதுவிருத்தம்.

இ-ம-கலியாணி.

இப்படியேசொல்லிமல்லாகையிலீயந்து
இவனையிந்தக்ஷணத்திலுயிர்வாங்காவிட்டால்
ஒப்புடனேயுங்களையுங்கொல்வேனென்றான்
உரிக்கியேஅடித்திழுத்துக்கொண்டுபோனார்
அப்பொழுதிலனுபோகியென்னுந்தோழி
அதுகண்டுதலைமீதிலடித்துக்கொண்டு
மைப்படியுங்குழலீலாவதிமுன்னோடி
வாய்குளறியழுதிதனைவழுத்துவாளே.

வசனம்.

அகோ தெப்படி யென்றால் இந்தப் பிரகாரம் இரணிய மஹாராஜன் தன்குமாரனாகிய பிரகலாதனை மல்லாகள் வசத்தி லொப்பிவித்து யிவனை இந்த க்ஷணத்திலே கொல்லாவிட்டால் வுங்களைச் சிரசாக்கினை செய்துப் போடுவே னென்று சொல்ல அப்போது மல்லாகள் மிகுந்த கோபத்துடனே பிரகலாதனை பிடித்து அடித்து கட்டியிழுத்துக் கொண்டு போகுஞ்சமையத்தில் இதுகளை யெல்லாங் கண்டிருந்த போகி யென்னும் பெயருடைய தோழியானவள் தலைமீதிலடித்துக் கொண்டு மைப்பொருந்துங் கண்ணாகிய லீலா வதியம்மனுடனே சொல்லு கிறவிதங்காண்க.

தோழிசொல்-தரு-இ-ம்

மத்தசாவேரி-ஏகதாளம்.

பல்லவி.

என்னசொல்லுவனடியம்மா-யிந்த
அதிசயந்தன்னை நான்
யென்னசொல்லுவனடியம்மா.

அநுபல்லவி.

மன்னர்மன்னனிரணியேசன்மனங்கொதித்து
மைந்தனைமல்லாகள்தள்ளிநெஞ்சிலிடித்தாரது. (மன்)

சரணங்கள்

பள்ளிக்கூடத்திலெதெள்ளியநூல்தனை
படித்துக்கொண்டுவாவென்றுவிடுத்தேனேநான்பிள்ளை
வெள்ளியோதுமந்திரம்தள்ளிவிட்டானேயுன்னை
வேட்டித்துண்டாடுவேனென்றுதிட்டஞ்செய்தாரடி. (என்)
அரிதிருவடிநிதம்பாவியேநாமங்கூறி
ஆனந்தம்பெருகியேவானந்தப்பதமேறி
அருள்போலாகுமென்றுரைசெய்மகனைச்சீறி
யாக்கிரமங்கொண்டுயிரைப்போக்குமென்றுருள்ளதே (என்)
வேங்கைக்குளகப்பட்டசெங்கண்ணதுபோலாகி
வெஞ்சப்பூனைவாய்ப்படும்பஞ்சக்கிளிபோலாகி
ஏங்கிமூச்சுமகன்வாங்கமல்லர்துரோகி
இருக்கிப்பாசத்தால்கட்டியுரிக்கிப்போனார்சைபோகி (என்)

லீலாவதி சொல்

கட்டளைக்கலிப்பா.

ஐயையோவிதுநான்செய்தபாவமோ
அண்ணல்நெஞ்சமிரக்கமில்லாமலே
வையகத்திலுள்ளோர்கள்நகைத்திட
மல்லர்கள்கையில்மைந்தனைவொப்பித்தார்
செய்யும்வாரினியாதொன்றறிகிலேன்
தெய்வஞ்செய்ததிருவிளையாட்டிதோ
நையுதெந்தன்வயர்பத்திவேகுதே
நானிதற்கென்னசெய்குவேனங்கையே.

லீலாவதிசொல் விருத்தம்.

இ-ம்-முகாரி.

வதைத்திடக்கொண்டுபோர
மல்லரோகில்லுமப்பா
கொதித்துயென்வயருபத்திக்
கொப்பெனயெதிரியுதையோ
பதைத்துமன்னன்பால்சென்று
பஞ்சையைப்போலேகெஞ்சி

இதத்துடன்வங்கிவரரேன்
யிவ்விடமிருங்களப்பா

வசனம்

வாருங்கள் மல்லர்களே யென்னுடையக் குழைந்தையாகிய பிரகலா தனை வதைக்கக்கொண்டு போகின்றீர்களே யென்னுடைய வயரானது பத்திக்கு மெலென்று யெரியுது இப்போது அரசனிடத்திற்போய் அவர் மிருதைய மிதங்கும்படியான பரிதாபமானவார்த்தைகள் சொல்லி வுத்த ரவுவாங்கிக் கொண்டு வருகிறேன் நீங்கள் சற்றுநேரம் மனம்பொறுத் து நான்வருகிறவரைக்கும் யிவடத்தில் தானேயிருங்கள் மல்லர்களே.

மல்லர்கள்சொல் விருத்தம்

இ-ம்-ஆனந்தபைரவி.

மன்னவனுத்தாரத்தை
மரித்தென்றுஞ்செய்யப்போமோ
அன்னிலேதப்பினின்று
லாக்கினையிடுவார்கண்டாய்
உன்னிதமாகச்சென்று
வுண்டில்லையென்றறிந்து
அன்னையேநீதானிப்போ
அரைநொடிதன்னில்வாராய்.

வசனம்.

அகோ வாருமம்மா தாயே யெங்களரசனிட்ட கட்டளையை மறுத் துயிருப்போமாகில் யெங்களுக்கு ஆக்கினைவந்து நேரிடும் ஆகை யாலிப்போதே அரசனிடத்தில் போய் வுண்டு யில்லை யென்று தெரிந் துக்கொண்டு சீக்கிரத்தில்வந்து சொல்லுமம்மாதாயே.

லீலாவதிசொல்

இ-ம்-கண்டா

பிழையிலாகுலம்விளங்கப்
பிறந்திடும்பாலன்மீது
எழுவுதல்சுபத்திரும்
வதைசெய்யவுனத்தீர்மன்று

இதிலென்னசெய்தபோதும்
யிரங்கியென்முகத்தைப்பார்த்து
பழிதனைநிறுத்துமுக்தன்
பதமலர்சரணமையா.

தரு-இ-ம்-முகாரி- தாளம்.

அடசாப்பு.

கண்ணிகள்.

கந்தவுலகத்திலிந்தக்கொடுமைக
ளேற்குமோயென்சாமி-பெத்த
மைந்தன்றனைக்கொண்ணுநிந்தனைசெய்வது
மாற்கமோயென்சாமி
இம்மைப்பழிகளும்அம்மைநரகமும்
மெய்துமேயேன்சாமி-இந்த
மும்மையுலகத்தில்நம்மைத்திரம்பிய
முறைகெடுமென்சாமி
பெத்தக்குழந்தைமேலித்தனைகோபம்
பெருகுமோயென்சாமி-யென்ன
குத்தங்கள்செய்தாலும்பெத்தார்பொருத்துள்ளங்
கொள்வார்களென்சாமி
பல்லுவிழுந்தின்னம்நல்லாமுளையாத
பாலகன்யென்சாமி-யிப்போ
கொல்லநினைந்துநீர்மல்லர்கைமீவது
கொடுமையோயென்சாமி
மண்டலத்தெல்லோருங்கொண்டாட்செங்கோல்
மருவினீரென்சாமி-இப்போ
கண்டோர்களெல்லோருந்திண்டாட்டஞ்சொல்வது
கருமமோயென்சாமி
சொன்னசொல்கேழ்கவுமின்னந்தெரியாத

சிறுபிள்ளையென்சாமி-அது
சொன்னத்தைதாய்தந்தைநன்மையென்றோர்வது
சிகுர்தமாமென்சாமி
மக்கண்மெய்தீண்டலுடர்க்கின்பமாகி
வருகுமேயென்சாமி அந்த
சொற்கேழ்க்கலின்பஞ்செவிக்கென்றுவேதமுஞ்
சொல்லுமோயென்சாமி.

இரணியன் சொல்-விருத்தம்

இ-ம்-தோடி.

ஆரடியிந்தமொழிசொன்னாய்போடி
அன்பாகநீயுமெனக்காகாய்போடி
பாரடியெவ்வுலகப்பதினாலுந்தான்
பகலானென்றெனைப்பணிநல்பாராயோடி
பேருளவென்றம்பியுயிர்கொண்டான்பேரை
பிதற்றினைவுடனேயுனையுமிப்போ
கூறியவாளுக்கிறையாய்குழித்திப்போது
கோதையரோடிருவரையுங்கொல்லுவேனே.

வசனம்

அடிவாடி லீலாவதி இந்தப்பதினாலுலோகமும் யென்னைத் தெய்வமாகநினைத்து துதிக்கின்றதையும் பார்த்திருக்கும் யென்னுடைய தம்பியாகிய யிரணியாக்கதனைக் கொன்ன கொடிய சத்துருவின் பெயரை சற்றாகிலும் பயபக்தியில்லாமலும் சொன்ன பையலுக்கு நீ அன்பானபானவானபடியினாலே நீயும் யெனக்காகாது இப்போது வுன்னையும் அவனையும் சேர்த்து பெரிய காளினாலே வெட்டிப் போடுவேனென் யிந்தட்டணம் பெண்ஹத்தி பாவஞ்சிக்கலாமல் அப்பாலேபோடி.

லீலாவதிசொல்

கொச்சகம்.

சின்னஞ்சிறுபாலகனேதெய்வீகரத்தினமே
வன்னக்கிளியேமரகதமேதெள்ளமிர்தே
மன்னனுரைத்தபடிமல்லருனைவதைத்தால்
தன்னந்தனியேதவிப்பேனேயென்மகனே.

தரு-இ-ம்-புன்னாகவராளி

தாளம்-அடசாப்பு

பல்லவி:

மடியவேபோராயோ-பிரகலாதா
கண்ணிமுத்தந்தாராயோ.

அநுபல்லவி

மடியவேபோராயோ
கொடியவெங்கனலாலென்
கடுமரற்பினில்மீட்டாமலடி
வயத்திலேமூட்டி. (ம.டி.)

சரணங்கள்.

எண்ணுதுமெண்ணினனே-கொடும்பாவம்
பண்ணுதும்பண்ணினனே
கண்ணேயென்கண்ணின்மணியேயெவ்வுலகமும்
நண்ணியேபுகழுணியே ||
உண்ணுமல்தின்னுமல்வூரெங்கும் தூராகி
விண்ணுளும்பெருஞ்செல்வம்வெறுத்தென்னைவேருகி (ம.டி.)
கொங்கைப்பால்பெருகுதடாவூட்டிவளர்த்த
செங்கையுஞ்சுருகுதடா
அங்கமும்வெந்துழலுதடா-வுயிர்போகாமல்
இங்கவந்துழலுதடா

யெங்கேபோய்விழுந்தின்னம் யெங்குவன்மனம்விண்டு
மங்களைதனமும்மையுங்கொயுங்கொண்டு (மடி)
மூன்றுள்செல்கலிவிதியோ – மன்னவனுக்கு
என்னகாரணமதியோ
அன்னியாயஞ்செய்தாயோ – பெரியோர்களை
எண்ணுமலனைதாயோ
பொன்மனின்முடியும்மாத்னபூஷணமும்வெறுத்து
இன்னதென்றெனக்குண்மையைபம்மாமலேவெறுத்து (மடி)

பிரகலாதனன்சொல்விருத்தம்

இ-ம்-பூரிகல்யாணி.

ஏங்கியேயழுதுயென்னையெடுத்துவாய்முத்தங்கொண்ட
மாங்குயிலனையேவுந்தன்மலரடிபோற்றிபோற்றி
ஈங்குநீவருந்தவேண்டுமெனக்குநாரணனேயல்லால்
பாங்குள்ளதுணைவேருண்டோபகருவேன்கேளுமம்மா

வசனம்:

கேளுமம்மாவென்னைப்பெத்ததாயே யேதுக்காக யித்தனை வருத்தப்படுகின்றாய் அடியேனுக்கு ஸ்ரீமன்நாராயணருடைய திவ்வியதிருவடித்தாமரை துணையேயல்லாமல் வேறொன்று துணையுண்டோ யேன் அம்மணி.

லீலாவதிசொல் – தரு.

இ-ம்-செஞ்சுருட்டி–தாளம்–ஆதி.

பல்லவி.

என்டாலுமாவென்றுடனுனக்குப்போரா

அநுபல்லவி.

வேண்டாமிதெல்லாம்விகடம்செய்யத்தகாது

சரணங்கள்.

ஆண்டவனேனை அரிவாய்நீதானே
சண்டொருவருமில்லையிதுமாய்சொல்லே (என்)
சூதுசெய்துமோசிதுணையுனக்காதி
வாதுவெய்யாய்நீயோமனையுமிவுதந்தாயே. (என்)

இந்திரலோகப்இந்திராணிபோகம்
சந்ததமுங்கைக்கொண்டேன்-நாமீத்திபகுலவுதண்டேன் (ஏண)
திருவுடன்வாசன் திருவேங்கடேசன்
சிக்கும்வினையெண்ணித்திகைக்கிறுப்படைட்டண்ணி (ஏண

பிரகலாதன்சொல்

தரு-௬-ம்-சங்கராபரணம்-தாளம்-அடதாப்பு

கண்ணிகள்:

பேதுக்குநீயித்தேநினைப்
படுகிறுயன்னே பே உலக்
கென்னகுறைபென்று
வள்ளிக்கலக்குறுயன்னே பே
காதுக்குங்கண்ணிங்காதபேபேதையா
அன்னே பே பிறைக்
காணவும்பேழ்க்கவும்
வெணதுண்டாகிரயம்அன்னே பே
அரியாதயானிடம்பிரவேசக்
தடைவதுமன்னே பே நால்
ஆண்டினன்பதுபாலன்றி
நித்திரையில்போம்அன்னே பே
இருபத்தேதாலொக்குள்பருவத்தே
வளம்போகும்அன்னே பே வைத்த
இருபத்தேதாலொக்இவில்லைருப்பான்
மொழியக்கேளன்னே பே
உலையுபவீவிபென்றுக்
கிணையுப்புதல்வென்றும்அன்னே பே தங்க
ளூளம்வைத்துப்பாலே
தளருவார்பனிதர்கள் அன்னே பே
பரலிசெய்காகத்துக்குசதை
வழிவார்கள் அன்னே பே
பாபப்பிறவிச்சிநீ
தேதானதுபோ அன்னே பே

பாபத்தினால்வந்தஆபத்துமிவ்வுடல்
அன்னையே பெண்ணிப்
பாராமல்நானென்று
போராலுடைக்கொண்டு அன்னையே
கூபத்திலேவிழுந்தாபத்தர்
போலவேஅன்னையே கொடுப்
கூத்துவனரகத்தையேத்திரு
வானையோஅன்னையே
பண்ணியநூல்களையெண்ணவு
மறியார்கள்அன்னையே அந்த
பரம்பொருள்இல்லையென்றாரயிங்
தழிப்பார்கள்அன்னையே
பொன்னிலும்பெண்ணிலும்
தன்மனம்வைப்பார்களன்னையே மகர்
புத்தியைநானென்னலாத்துச்
சொல்லவேனுமோஅன்னையே
தேவர்களாயுனார்கள்யாகர்க
ளாயினும்அன்னையே சொல்லுக்
தெரிவயராயினும்
பாவயாராயினும்அன்னையே
பாவாகளாயினும்பாவிக
ளாயினும்அன்னையே மாயன்
அடியிணைத்துதிக்கவே
குடிபோகுவினையெல்லாம்அன்னையே
வெடித்தகாரியமெல்லாமடித்து
வேரோவருமோஅன்னையே
லப்படியவைற்குச்செப்பத
மலைதந்து அன்னையே காத்தும்
காணணிருக்கவட்டேவேசயிடர்
வருமோஅன்னையே
ஒன்றிவிற்படைப்பதுமபொன்றி
நிலைநிறுப்பதும்அன்னையே மாய்

நோன்றிநில் துடைப்பதும்
மொன்றியகுணமல்ல அன்னையே
அன்றுநாரதர்சொன்ன தின்று
நீமறந்தாயோ அன்னையே — அத்தை
அகங்கொண்டு அளவற்ற
சுகங்கொண்டநுபவிப்போம் அன்னையே
வருந்தியழைத்தாலும்வாராது
வாராது அன்னையே — கிட்டி
வந்ததைப்போவென்றுநொந்தாலும்
போகாது அன்னையே — ஜளவை
திருமாலுக்கடிமைசெய்பொருந்திய
வினையென்றே அன்னையே
செப்பியவாய்விதந்தப்பு
மோதப்பாதோ அன்னையே
மூலப்பகுதியுங்கோலமா
மூலகங்களன்னையே — அது
மூத்தொழில்செய்கையை
பத்தியநுபவிக்கும் அன்னையே
காலங்கள்மூன்றினுஞ்சால
மயக்குமே அன்னையே — ஆந்த
கர்த்திவ்வியமானகாரணனே
யல்லாலன்னையே

மல்லர்கள்சொல்விருத்தம்.

இ-ம்-ராட்டை.

ஈங்கிவன்றனைநிருத்த
  யெங்களுக்கென்னவாதை
ஆங்கவன்கனகமன்னன்
  ஆக்கினையிடுவார்கண்டாய்
யேங்கிடமணிக்மயத்தர
  விறுகவேகட்டிக்கொண்டு
தீங்குருவனத்தில்காமுஞ்
  சொல்லுவோம்வருகுவீரோ

வசனம்

சேனுங்கள் தம்பிமார்களே - இவனை யிடைத்தில் நிருத்திவைத்தி ருப்பதில் நமக்கு யென்னலாபமிருக்கின்றது-நமது அரசன் யிந்த சங்கதியை அரிந்தால் நம்மைவெகு மிருந்தகோபத்துடன் ஆக்கினைசெய்வார் நாம் யிந்தவிடத்தில் யிருக்கப்போகாது - யிந்தமணிக்கயத்தினால் யிறுக்கக் கட்டிக்கொண்டு காட்டுக்குப்போகலாம் சீக்கிரம் சீக்கிரம் கட்டுங்கள் தம்பிமாரே.

லீலாவதிசொல்விருத்தம்.

இ-ம் கண்டா.

கரும்புபோல்வளர்த்தப்பாலன்
கண்முழிபிதுங்கிச்சோர
பெருங்கவேகையைக்கட்டி
நிலைகலங்கிடவேதள்ளி
குரும்புகள்செய்யவேண்டாம்
சுகர்தமுண்டுங்களுக்கு
பெருபுகழுகியடைக்குமென்னைப்
போகவேமனங்கொள்வீரோ

(லீலாவதிசொல்)தரு

இ-ம் கண்டா - தாளம் - ஆதி.

கண்ணிகள்.

மல்லர்களாமறுசொல்லிவாரேன்சொல்லீ
வாரமட்டுமெள்ளப்போகொண்ணுதோ
யில்லையோதான் றயவுயில்லையோதானீங்க
ளிருக்துமெள்ளநடந்துபோகொண்ணுதோ
தன்மமுண்டோயிதனால்கன்மமுண்டோநீங்கள்
தள்ளிடாமல்நின்றுபோகொண்ணுதோ
வர்மமுண்டோயிவன்மேல்பார்மமுண்டோசத்தே
மறைவில்நின்றுமெள்ளபோகோண்ணுதோ
எங்குருவேமுனிபுங்கனேயந்த

இறையவனுக்குமறைபோர்தொண்ணுதோ
கண்மணியோன்செய்தபுண்ணியமே அருள்
கற்பகமேமகனே அற்புதனே
பெண்ணிபெண்ணியனங்குண்ணுவேனோகண்டு
யேங்குவேனோவுயிர்தாங்குவேனோ
வெட்டுவாரோதலைமேல்குட்டுவாரோதள்ளி
விட்டிடுவாரோதண்டால்மாட்டுவாரோ
பெட்டிப்பாம்புப்போலவேவொட்டிநொந்துமகனே
புழுங்குவாயோபுழுங்கிஅழுங்குவாயோ
தேத்துவாரொன்னை ஆத்துவார்வேரோ
நிக்குங்காணேனொருபக்கங்காணேன்
போத்துவாரிடர்மாத்துவாரொங்கும்
போக்குங்காணேனொருநீக்குங்காணேன்
சங்கலர்தங்களாயிங்கேவாடஅண்ணன்
தன்னைக்கொல்லவுன்னாலுனையெண்ணினானோ
மங்கியங்கியனஞ்சங்குவாயோசங்கி
வாடுவாயோவாடிதேடுவாயோ
ஐயோ அய்யோமகனே அய்யோ அய்யோவுனக்கு
அகுதியானேன்பெத்தசகுதியானேன்
கையழுகுமகனேமெய்யழுகும்பெப்போ
காணுவேனோயின்பம்பூணுவேனோ

தோழிசொல்விருத்தம்

ரு-ம்-பந்துவராளி.

வருகுயின்மொழியினுமேலங்கைமேயெங்கள்தாயே
மருமலர்குழல்விரித்துமதிமுகம்வாடிச்சோர்ந்து
தெருவில்வீழ்ந்தழுதால்வாரதிங்குகள்விடுமோகம்மை
உருவதுகந்துநீரும்வருத்தத்தையகத்துமம்மா

வசனம்.

கேளும்மா தாயேயிலாவதியே யுன்கண்ணீர் ஆறாய்ப்பெருகக் கூந்தலை விரித்துக்கொண்டு அழுதத்தினாலே வருவதுவிட்டுப் போகுமோ சுகம் துக்கம் யிரண்டும நாமே யநுபவிக்கவேண்டு மல்லாமல் நம்மைவிட்டுப்போகுமோ போகாது ஆகையால் யுன் மகன் சேதியெல்லாம் நாங்களறிந்துச் சொல்லுகிறோம சஞ்சலப்படாமல் தைரியமாயிருமம்மா தாயே.

லோகவதிசொல்விருத்தம்.

இ-ம்-ஆகிரி.

அப்பனேமகனே யெந்தன்
னருயிர்மணியேகண்ணே
எப்படிப்பிரிந்துவாழ்வேன்
யிணியிந்தவுடலந்தன்னை
யப்பரேவந்தெனை
வந்துகண்மடியவிட்டால்
இப்புவியுள்ளோரெல்லா
மிருமாபழிசொல்லுவாரே

தரு- இ-ம்-ஆகிரி
தாளம்-அடசாப்பு
பல்லவி:

என்னசெய்வேன்தெய்வமே - ராணி
என்னசெய்வேன்தெய்வமே

அநுபல்லவி.

யென்செய்வேன்தெய்வமேயென்சுதன்வல்லுயிர்
வஞ்சகப்பாதசாமஞ்செனக்கொல்வாரோ (என்)

சரணங்கள்.

முழித்தமுழிபிதுங்கஅழுத்திமார்பிலேறி
இழுத்துயிழுத்துப்போட்டுக்கழுத்தினைமுரிப்பாரோ (என்)
கருசமலர்முகமுங்கொஞ்சியகனிவாயும்
செஞ்சையுருக்குதடாமைந்தனேஐயையோ (என்)
திருக்குவாளைக்கொண்டு துக்குப்பகையாகி
பாதகிபெண்ணவந்திடுதற்குமிறந்தாயோ (என்)

தப்பாகமொழிபேசா அப்பனே யுன்றுயிர்
வைப்பாட்டெடமா ஜனெப்படி கொல்வானோ (என்

அருந்தவஞ்செய்துன்னை வருந்திநான்பெறும்போது
பெருந்தலையிலெழுத்தாயிருந்ததோ காரணம் (என்)
பிள்ளையைவதைசெய்த கொள்ளிக்கண்பதாகி
கள்ளியென்றுவைத்திலுன்னோர்கள்வைதாரோ (என்

அரி அரியென்றுநீ பயமென்று சொன்னதுபோலே
அரிவந்துவுனையிப்போ பயமென்றுகாப்பாரோ (என்)
தாயினுமன்புள்ளமே மைந்தனே யுன்கனி
வாயினுமூலைப்பாலுங்காயவுமில்லையே (என்)

சத்தியத்தவறுதவுத்தமனே யுன்னைப்
பெத்தவயோனக்குப்பத்தியெப்புதையோ (என்)
யெத்தனைப்பிள்ளைகள்பெத்துவளர்த்தாலும்
வுத்தமியவுனைப்போலும்புத்திரன்கிடைக்குமோ

பொது-கொச்சகம்.

இந்தவிதமந்தமிசை
யிருந்துயீலாவதியும்
அந்தமுடன்புலம்பி
அழுதுபின்புபாலகனை
தொந்தமுடனே நயத்தால்
தோளிழகவேபுனைந்து
வெந்தயல்லற்கடும்
வைசயினிஞன் சொல்வேனே

மல்லர்கள்சொல்விருத்தம்

இ-ம்-தன்னியாசி.

பூதலமாளும்
நாதனார்பால
தக்கதைப்பேர்சொல்லி
நீ[illegible]யம்வாழ்வம்

மல்லர்கள்சொல்-தரு-இ-ம்-மோகனம்

தாளம்-அடசாப்பு.

பல்லவி.

மைந்தனே கேளாய்-பிரகலதா
மைந்தனே கேளாய்

அநுபல்லவி.

இந்திராதிதேவரும்வந்தனைபுரியுமுன்
தந்தையிரணியனைச்சிந்தைசெய்வாய்நீயும் (மைந்)

சரணங்கள்.

இப்போதுநீயுன்றந்தை-பெயரைசெப்பி
வாழ்வாயினிசிந்தை-கொண்டு
ஒப்புடன்சொல்லாமல்
மைப்புயன்பெயர்சொன்னால்
குப்புறத்தள்ளியேதப்பாமல்
கொல்லுவோம் (மைந்)

பொன்னானமேனியுன்மேனி-என்ன
மாமோதெரியாதோபார்-நீயிப்போ
அன்யாயமாகவேதுன்னுமால்பெயர்சொன்னால்
வுன்னையிந்தவாளாலேசின்னபின்னங்களாய்செய்வோம் (மைந்)

அண்டர்நாதனுந்தன்-தந்தைபுகழ்
கொண்டவிநோதனை-நோக்கேஅவா
தொண்டனென்றுசொல்லாமல்விண்டு
வின்பெயர்சொன்னால்
கண்டங்கண்டமாகவே
துண்டங்கள்செய்வோமே (மைந்)

பிரகலாதனன்சொல்-விருத்தம்,

இ-ம்-தோடி.

நீதியில்லாமூடர்களே சொல்லக்கேளீர்
நீழ்மிலமுந்சேணிலமும்லயத்துள்வைத்த

ஆதிபரந்தாமனையென்னகத்துள்கொண்டு
ஆனந்தக்கடலமிர்தமருந்தவென்னை
வேதனைகளென்னசெய்யும்வினையென்செய்யும்
வீண்வார்த்தையென்னுடனே விளம்பவேண்டாம்
போதனையாயெனது தந்தையுமக்குச்சொன்ன
புகழ்செய்வீர்நிர்நினைத்தகைசெய்வீரோ

பிரகலாதனன்சொல்-தரு.

இ-ம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

என்றுசொன்னீர் மல்லர்களாயின்னம் சொல்லுங்களிங்க
ளேதுசொன்னாலுந்தானந்தன்காதுகொள்ளுமோ

அநுபல்லவி.

பன்னுமறைமுடிவினில்மன்றாந்தூயவன்சுரு
பங்கயம்பூமாதுமார்பில்தங்குமாயவன்
பலர்ப்பாதன் கன்னிதன் லோகநாதன்ஞானபோதன்
பேர்சொல்லாமல் (என்று)

சரணங்கள்.

செங்கணியுள்ளோன்பங்காவைதின்னலாகுமோ-கங்கை
தீர்த்தமுள்ளோன்சேத்துநினைத்துன்னலாகுமோ
துங்கவுருதுள்ளசந்தையுன்னலாகுமோ-மாயன்
சேத்திரமுள்ளோனையாத்திரைபோபண்ணலாகுமோ
[illegible]ல்லுமசொல்லும்பில்லும்கில்லும்இல்லும்புல்லும்
வீண்பொல்லாமையாகவே (என்று)

வெட்டினாலுங்குத்தினாலும்விட்டினாலுமேபட
வெவ்வரவின்கவ்வுஞ்சைபூட்டினாலுமே
முட்டிமதயானையென்மேலோட்டினாலுமே-அனல்
மூட்டிமூட்டிப்போட்டுநீகொளுட்டினாலுமே
யேதுமோசமேதுநாசமேதுகிலேசமாயனேச
மிருக்கவே (என்று)

அடியவர்த்தெளிவையான ஆதியர்னவன்-யென்றும்
அடியுமுடியுமறிவுமில்லாஅநாதியானவன்

நெடியவன்பரமானந்தனீதிவானவன்-சுத்த
நிமலன்னமலன்விமலன்பரஞ்சோதியானவன்
நித்தியன்சொல்லுஞ்சத்தியன்றுணைதுத்தியன்செய்யும்
புத்தியில்லாமலே (என்று)

மல்லர்கள்சொல்-விருத்தம்.

இ-ம்-பைரவி.

கொள்ளிக்கண்ணுடைய மல்லாகொடியசிங்கப்பல்லாகேள்
துள்ளியோராணைத்திண்ணத்துடர்வெங்கைபபுலியேவாடா
வள்ளலின்பேர்சொல்லாமல் மால்பெயர்சொன்னத்தாலே
தள்ளியேயிவனைமுக்தலைதரித்திடுவோம்வாரீர்

உ-வது மல்லன்சொல்விருத்தம்

இ-ம்-நாட்டை

அப்படியரசன்
செப்பிடுமொழியை
ஒப்பிடாதிவனைக்
கொப்பெனவதைப்போம்

௩-வது-மல்லன்சொல் விருத்தம்

இ-ம்-கல்யாணி

ஈட்டிசூலத்தால்
தாட்டியாய்குத்தி
நீட்டியக்கத்திகொண்
டேட்டிபையறுப்போம்

௪-வது-மல்லன்சொல்

விருத்தம்-இ-ம்-மோகனம்

கண்டகோடாலிவேல்
தண்டொடுசூலம்வாள்
கொண்டிருவிவன்
மண்டையையுடைப்போம்

மல்லர்சொல்-விருத்தம்

இ-ம்-நாட்டை

யெரிதடிசவளம்வேல்
வரைபொடிசெய்யும்வாள்
ஓரமதில்விடுத்திவன்
னெறிதனையழிப்போம்

பிரகலாதன்சொல்

கொச்சகம்.

புரகரியும்நான்முகனும்புரந்தரனும்
புகழ்ந்தேத்தும்
முரஅரியேமெஞ்ஞான
மூர்த்திமுழுப்பொருளே
கரகரிமுன்வந்தெழுந்த
காட்சியைப்போல்வந்தருளும்
அரிஅரிநாராயணனே
அற்புதனேயெங்கோனே

பிரகலாதன்சொல்தரு

இ-ட்-நாட்டை-ஏகதாளம்

கண்ணிகள்.

அரிஅரிநாராயணாவெங்கோனே-வுந்தன்கமலத்
திருவடிதுணைநம்பினேனே
கருணைசெய்திடவேணும்நீயே-நீயல்லால்வேறோ
பரமெனக்கார்சொல்வாயே

சமந்தகணிமாபிரானே பொல்லாதமல்லர்
யெமன்றனைப்போல்வாராதானே!
ஆளுடையநாயகனேஐயாஇப்போதுயிர்த்த
வாளுமெந்தன்மேல்வருமோமெய்யா

வண்டுளபமணிபாரத்தாமா மல்லர்கள்வந்து
தண்டுகொண்டுமோதவசமாமா
தந்திமுன்னெழுந்துவந்தசோதி வுன்னடியேனை
குந்தமுங்கொண்டுவிடுமோமோதி

ஆலந்தளிர்மேல்தவிழ்ந்தபிள்ளாய் வுன்னடியேனை

குலம்வந்துபாயமனங்கொள்ளாய்
மூலநடுமுடிவில்லாவீரா மல்லர்கள்விடும்
வேலும்வந்துபாயுமோகிபாரா
சங்குசக்கிரமணியும்பிரதாபா பங்கயமீது
மங்கையாள்வளருமணிமார்பா
அச்சுதாமுகுந்தாவாசுதேவா மாதவாஅரி
பச்சைமுகில்வண்ணாயெனைக்காவா

பிரகலாதனன்சொல்

தேவாரம்.

செங்கண்மாலரியேபோற்றி
திருமகள்கொழுநாபோற்றி
கங்கணிகரத்தாய்போற்றி
தரணியையளந்தாய்போற்றி
இங்கெனக்கருள்வாய்போற்றி
எந்தையேபோற்றிபோற்றி
திங்கள்சேர்வதனாபோற்றி
சிறியேனைக்காப்பாய்போற்றி

தேவாரம்.

மூததணிமார்பாபோற்றி
மூவுலகளந்தாய்போற்றி
இந்தலம்யீன்றாய்போற்றி
யேழைபங்காளாபோற்றி
பத்தர்கட்கரசேபோற்றிப்
பாசம்வேரறுப்பாய்போற்றி
சித்தமகிழ்தென்னையாளுந்
திருவடிபோற்றிபோற்றி

தேவாரம்.

எந்தையேபோற்றிபோற்றி
இமையவர்க்கரசேபோற்றி
சிந்தையிற்குடியாய்கொண்ட
தெய்வமேபோற்றிபோற்றி

பந்தம்வேரறுப்பாய்போற்றி
பரப்பிரம்மவடிவேபோற்றி
செந்திருமார்பாவுந்தன்
சேயனைக்காப்பாய்போற்றி

பொதுவிருத்தம்

இ-ம் கல்யாணி

இலங்கியகல்சுவரெரிந்தகமலத்தைப்போலும்
யெழிற்பெரியோரதமைக்கிழைத்தயிடரைப்போலும்
உலங்கெழில்தோள்மல்லர்விடும்படைகளெல்லாம்
ஒன்றுநூராய்ப்பொடிந்துயெழுந்தேயோடி
மலங்குமவர்தலைமீதும்முகத்தின்மீதும்
மார்மீதுந்தோள்மீதும்வந்துமோத
கலங்கியிரணியசூரர்க்கோதவேண்டிக்
கடிகொர்மாருதம்போல்முடிகிறாரே

வசனம்.

அகோதெப்படி யென்றால் இந்தப்பிரகாரமாய் பிரகலாதனசுவாமி தோத்திரஞ்செய்யும்போது யெரியானின்றஆயுதங்களெல்லாம் பின்னங்களாகமுரிந்து கல்சுவரிலே யெறிந்தக்லம்போலவும் பெரியோர்களுக்குச் செய்தயிடரைப்போலவும் யெதிர்த்து யெதிர்த்து ஓடிமல்லர்கள் மீதில்விழும்பயந்து அந்தமல்லர்கள் யிரணியனுக்குசசொல்லவேணுமென்று நடந்தாகள் அந்தசமையத்தில் தோழிமார்கள்போய் லீலாவதியம்மனுக்குச்சொல்லுகின்றவிதங்காண்க,

தோழிகள்சொல்விருத்தம்.

இ-ம்-பந்துவராளி.

வெட்டுவதுங்குத்துவதும்பார்த்திருந்தோம்
மெல்லியரோரல்வருமாய்விரைந்துவந்தோம்
மட்டவிழுங்குழல்சரியயிடைகள்நோக
வளர்ந்ததுகில்சறிந்திடவும்வாடியிந்த
கட்டின்மலர்மெத்தையின்மேற்படுத்திடாமல்
காசினியின்மேற்பிறண்டுஅழுதுநின்ற

வட்டமுலையெழிலீலாவதியேயுந்தன்
மகன்சேதியுள்ளபடிவழுத்துவோமே

வசனம்.

வாருமம்மாதாயே லீலாவதியே நீயெத்தவும் அழுதுவாடி மனது நொந்து மெலியவேண்டாம் இப்போது உன்மகனிடத்தில் நடந்த விருத்தாந்தங்களையெல்லாம் விசித்திரமாகச்சொல்லிக்கொண்டு வருகிறோம் நீமனக்களாமல் சந்தோஷமாகக் கேளுமம்மாதாயே

தோழிகள்சொல்-தரு-இ-ம்

பைரவி-தாளம்-ஆதி

பல்லவி.

அம்மம்மா அம்மம்மாலீலாவதியாரே கண்ட
அதிசயங்கேளும்பாக்கியவதியாரே

அநுபல்லவி.

உன்மகன்சொல்லெல்லாம்விளையாச்சே யிப்போ
உகந்துசொல்லுவோமுந்தன்மயல்போச்சே (அம்)

சரணங்கள்.

மல்லர்கள்கருவிவாளையடித்தாரே மடித்த
வாயிற்பற்களைநறநறெனக்கடித்தாரே
கொல்லுவேனென்றுவாளைப்பிடித்தாரே
கூர்வாள்தூளாய்ப்போகக்கொதித்துடித்தாரே (அம்)

குலத்தையார்பினில்வைத்துவிட்டாரே சூலங்கள
துண்டுதுண்டாகப்பொடிபட்டாரே
ஆலத்தைப்போலவேல்கள்தொட்டாரே வேலும்
அக்கணமுறியவோட்டமிட்டாரே (அம்ம)

அரிஅரியென்றிருந்தாப்பாலனே அந்த
அரிஅருளாலேநல்லுய்ந்தானே
பிரகலாதனுருவிலாயிருந்தானே
பிள்ளைக்கென்னதாட்டிபெத்ததாயானே (அம்ம)

லீலாவதிசொல்-விருத்தம்

இ-ம்-கல்யாணி

தோழியரிவ்வாறோதத்துயரெலாம்போக்குகின்ற
வாழுமாதவனேயென்தன்மனமழுவெலீந்திடாமல்
ஆழியிற்றுயின்றகண்ணா அண்ணலேமேகவண்ணா
யேழைபங்காளாகியுமென்மகன்றனைக்காப்பாயே

வசனம்.

அரிகரிநாராயணா கேசவாமாதவாகோவிந்தாமுகுந்தா வைகுண்டவாசா நீலமேகசுரூபா ஜனார்த்தனா முகுந்தா அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகா நித்தியநிரஞ்சனா மூத்திலும்மொருகுறைவாராமல் யென்மகனைக்காப்பாத்தி இரட்சியுமையாசுவாமி

மல்லர்கள்சொல்விருத்தம்

இ-ம்-பந்துவராளி

யெல்வுலகாளும்நீதி
யிரணியமன்னாகேளாய்
தெவ்வைக்கொல்லும்வேலும்
செஞ்சுடர்சூலம்வாளும்
கவலவேவுநீத்தோமுந்தன்
காதலன்மேல்படாமல்
செவ்வியோன்தியானத்தாலுஞ்
சிதைந்ததுபடைகளையா

வசனம்.

சரணஞ்சரணமையாசுவாமி இராஜபரமேஸ்வரா வும்முடைய புத்திரனைக்கொண்டுபோய் நிருத்தியசூலாயுதம் யீட்டிசக்கரம்வளதடிவேலாயுதம் இவைமுதலான ஆயுதங்களையெல்லாம் அவன்பேரில்விடுத்தோம் அப்போது அவன்செய்கின்ற தியானத்தினால் நாங்கள்விட்டபடைகளெல்லாம்வொன்றுநூறுகமூறிந்துப்போச்சுது ஆகையால் தேவரீர்யினியென்னகட்டளை யிடுகின்றீர்களோ அதைதிருவாய்மலர்ந்தருளினால் அப்படியேசெய்கின்றோம்சுவாமி.

இரணியன்சொல்விருத்தம்

இ-ம்-ஆனந்தபைரவி

இருட்டுசேர்ந்தடர்வனத்தி
லிவன்றனைக்கொல்லசொன்னால்
தொறட்டுவாள்வேல்களெல்லாந்
தூளாச்சுதென்றுசொன்னீர்
மருட்டியப்பையல்தனனை
மந்திரியாரேபொல்லாக்
காட்டுயர்மலைமேலேத்தி
கடகடென்றுருட்டச்சொல்வீர்

வசனம்.

ஆ ஆ வாருங்கள்மந்திரியார்களே இருளடைந்தக்கானகத்தில்கொண்டுபோய் சிறுபையலைக் கொல்லச்சொன்னால் அவன்பேரில்விடுத்தஆயுதங்களெல்லா முறிந்துதூளாய்போச்சுதென்றும் மிகதமல்லர்கள்சொன்னார்களல்லவா இப்போது அந்தபிரகலாதனனைக்கொண்டுபோய் காடுள்ள உயர்ந்தமலையின்பேரிலே யேத்திகடகடென்று வுருட்டச்சொல்லுங்கள் மந்திரியார்களே

மந்திரிகள்சொல்-விருத்தம்

இ-ம்-சங்கராபரணம்.

கொல்லுதற்கெளியனைக்
குழந்தையைக்கொல்லச்சொன்னால்
வல்லமையில்லாமூட
மல்லரோசொல்லக்கேளும்
சொல்லரும்பாசத்தாலே
சுருக்குடன்கட்டிவோங்கும்
கல்லுள்ளமலைமேலேத்திக்
கடகடென்றுருட்டுவீரோ

வசனம்.

கொல்லுதற்குமெத்த வெளிதானசிறுகுழந்தையைக் கொல்லும்ப

டியாகச்சொன்னால் அதுவுங்கள் கையினாலாகாதென்று வந்ததினாலுடத்த ன்மைபோன்ற மல்லர்களேகேளுங்கள் யிப்போது அந்தப்பிரகலாதனை ணைப்பிடித்து மணிக்கயத்தினால் லிருக்கக்கட்டிக்கொண்டுபோய் வுயர்ந்தமலையின்பேரிலேத்தி கடகடவென்று வுருட்டிவிடுங்கள் மல்லர்களே

மல்லர்கள்சொல்-விருத்தம்

இ-ம்-தன்னியாசி

அண்ணலேதேவர்
எண்ணியப்படியே
குண்ணின்மேலுருட்டி
திண்ணமாய்வருவோம்

மல்லர்கள்சொல்-விருத்தம்

இ-ம்-கல்யாணி

தந்தைசொற்கேளாத்தாலே
தரணியாள்மன்னன்சொல்லால்
உந்தனைமலைமேலேத்தி
உருட்டவேவந்தோமையா

வசனம்.

கேளுமையா பிரகலாதனே யிப்போது வுன்னுடைய தந்தையினுடைய வார்த்தையைக்கேளாதபடியினாலே யிந்தட்சணத்தில் கொடிதாகிய ஆக்கினைகள்செய்து வுயர்ந்தமலையின்பேரில் வுருட்டிவிடமகாராசன கட்டளையிட்டார் வாருமையாபிரகலாதனே.

பொதுசொல்-விருத்தம்

இ-ம்-ஆனந்தபைரவி.

கையொடுகாலுஞ்சேர்த்துக்
கயத்தினாலிருக்கக்கட்டி
வெய்யதோர்மலைமேலேத்தி
விருடனுருட்டும்போது
மையமோசேழுமுண்ட
மணிநிரஞ்சனனை

ஐயனேயென்றுதுன்பமாற்றுவான்
போற்றுவானே

வசனம்.

அநதசபையத்திலே மல்லரானவர்கள் பிரகலாதனசுவாமியை கையையுங்காலேயுஞ்சேர்த்து மணிக்கயத்திறுலிருக்கக்கட்டி ஆயிரம்யோசனையுள்ள மலேயின்பேரிலேத்தி வுருட்டுகிறபோது வையகமுண்டருளியவாயனேதூயனே அச்சுதனேகேசவனே மாதவனே முகுநதனே அரிநாராயணவென்று பிரகலாதன ஸ்வாமியார் தோத்திரஞ்செய்கின்ற விதங்காண்க.

பிரகலாதனன்சொல்

கொச்சகம்.

உரகவணேமேல்நடல்மேலோம்குகருணயருபோல்
வரகருணைவிழிதுயன்றவாருதியேமாதவனே
மாசுதமேபெருஞானவாழ்வேமணிவிளக்கே
அரிஅரியேகேசவனேஅற்புதனேயெங்கோனே

பிரகலாதனன்சொல்

தேவாரம்.

மாயனேபோற்றிபோற்றி
வரமதுதருவாய்போற்ற்
ஆயனேபோற்றிபோற்றி
அடியனுக்கருள்மீக்கொண்டு
தாயனேவருவாய்போற்றி
தசரதராசனீன்ற
சேயனேபோற்றிபோற்றி
சிறியேனைக்காப்பாய்போற்றி

தேவாரம்.

அரிரகுராமாபோற்றி
அடியவர்க்கெளியாய்போற்றி
கரிதனைக்காத்தாய்போற்றி
சஞ்சனைவதைத்தாய்போற்றி

விரிகடன்றுயின்ருய்போற்றி
விளாங்கனியெரிந்தாய்போற்றி
செருவினைவென்ருய்போற்றி
சீர்பதந்தந்தாள்போற்றி

### தேவாரம்.

இருவினைதுலைப்பாய்போற்றி

ஏகமானவனேபோற்றி
திருவொடுகருடனேருந்
தேவனேபோற்றியுன்பா
லுருகியாறுறைத்ததோத்ர
மூலகளந்தவனேபோற்றி
திருவடியெனக்குநல்குந்
தீனரட்சகனேபோற்றி

### பிரகலாதனன்சொல் ஜம்பை.

அரிஅரிகேசவாஅச்சுதாநந்தா
பரமஞானவிசாலாபக்தபரிபாலா
வென்னுளுமுக்தனிறுபாதாரவிந்தமலர்
வெண்ணுமலிருந்தகொடும்பாவியேனுனே

பின்னுமலிடித்தாப்போல்வீரமல்லர்கையில்சிக்கி
இன்னுளில்பாடுபடவெழுத்தின்வசந்தானே
வேறுகியுள்ளாகிமேலாகிகீழாகித்
தொறுதபரமானந்துய்யப்பரந்தாமா

குளைமாருதச்சுழலில்கழலுகின்றசருகனவே
வீரர்கையிலகப்பட்டுமெலியவசந்தானே
அலைகடலிற்றுயில்கினறஅச்சுதாநந்தனே
மலர்மாதுவீற்றிருக்குமணிமார்பினுனே

பலைகளினுஞ்செகவினிறும்வருந்திகட்டியுருட்டிவிட்டு
கொலைசெய்யநிற்பதெனனகுறைகள்செய்தேனே

பிரகலாதனன் சொல்-விருத்தம்

இ-ம்-நாட்டை.

மன்னவா கேசவா நாராயணா சௌரி
வனமாலி வாசுதேவா
மாநிலமளந்தவா வைகுண்டவாசனே
மாதாவா மணிமாலையா
யென்றுநின்றுமமே பன்னிநானுன்னிநு
மெள்ளளவிரக்கமிலையோ
என்னிடவதஷ்டமூனையே கொடியபாவியா
னென்னமுன்றுட்சேய்வினையோ
அன்னைதந்தையர்கள் போலாதரிப்பவர்களுனை
யல்லாமல்வேறுளாரெலோ
அபிஷேகமுடி கொண்டுவெறுமச்சமே தார
யாசுபரிவிரசையாசே
இன்னமில்லாதவட்டாக்கரத்துதெய்வமே
தீவினையகற்றியாள்வாய்
சீதாபிராமனேமாதாபிதாவெனச்
சிந்தைகுடிகொண்டகுருவே.

பொதுசொல் விருத்தம்

இ-ம்-கல்யாணி.

பஞ்சணைமெத்தைமேலும்
பனிமலர்வளிமேலும்
செஞ்சவேபிரண்டெழுந்தார்
செய்கைபோற்பிரகலாதன்
அஞ்சனிமேனிவள்ள
லருளினால்மேனிதன்னில்
யெஞ்சுதலில்லாமல்தா
னிருந்திட்டான்மகிழ்ந்திட்டானே

வசனம்.

அகோதெப்படியென்றால் பிரகலாதனசுவாமியை யிரணியமகாரா சன் வுத்தாரப்படிக்கிமல்லர்கள் காலுங்கையுஞ் சேர்த்துக்கட்டி வுபாந்த

மலையின்பேரில் வுருட்டிவிட்டார்கள் பிரகு அந்தஸ்ரீமந்நாராயணருடைய கிருபாகடாட்சத்தினால் மல்லிகைமுல்லைகை யிருவாட்சி செண்பகம் மருவுமரிக்கொழுந்து சாந்துசவ்வாது களபகஸ்தூரி பனிநீரால் தெளித்திருந்ததாகவும் மலர்களாபரப்பி யிருந்தவாசனைபொருந்திய பஞ்சணை மெத்தையின்பேரிலும் படுத்தும் யிரண்டுநித்திரைசெய்து யெழுந்த பாவனையாக மேனியில்லொருவடுவும் துகடுயில்லாதவராய் மனதில்மகிழ்ந்து ஆனந்தமாயிருந்தார்

மல்லர்கள்சொல்-விருத்தம்

இ-ம்-பந்துவராளி

பிள்ளைதன்பேச்சிதன்னில்
  பேதமையொன்றுமில்லை
கள்ளமோஜாலந்தானோ
  காரணமறியமாட்டோம்
தெள்ளியப்புதல்வன்மாளான்
  செய்வதோருறுதிதன்னால்
வள்ளலேநாங்கள்செய்யும்
  வகைதனைவுரைசெய்வீரே

வசனம்.

கேளுமையாசுவாமி ராசவல்லபரே தாங்கள்சொல்லிய வுத்தாரப்படிக்கி பிரகலாதனனை வுயர்ந்தமலையின்பேரில் வுருட்டிவிட்டும் அந்த பிள்ளைசரீரத்தில் லொருவடுவுமில்லாதிருக்குறான் யினிமேலெங்களாலே ஆகுங்காரியங்களைச் சொல்லுமையாசுவாமி

இரணியன்சொல்விருத்தம்

இ-ம்-தேசிக்தோடி.

பெருத்திடும்குழியிற்கட்டை
  பெருமலைப்போலேபோட்டு
திருத்தியாயிரங்குடத்து
  சிறந்தநெய்முழுதும்வார்த்து
நெருப்பதைமூட்டிவிட்டு
  நேருள்ளமைந்தன்றன்னை

அருப்பமாயகட்டித்தூக்கி
அனலிலேபோடச்செய்வீர்

வசனம்.

வாருங்கள்மந்திரிமார்களே வொட்டனா யழைப்பித்து பெரியக்குழியாகவெட்டி பலகைகள்போலே கட்டைகளைப் போட்டு ஆயிரங்குடம் நெய்வார்த்து அக்கினியை வளர்த்தி அதிலே அந்தப்பிரகலாதனைத் தள்ளிப்போடச் சொல்லுங்கள்மந்திரிமார்களே

மந்திரிகள்சொல்விருத்தம்

இ-ம்-ஸ்ரீகல்யாணி

கொலைசெய்மல்லர்களேயந்த
குழந்தையைக்கட்டி தூக்கி
இலகியநெருப்பில்போட்டு
இட்சணம்வதைசெய்வீரோ

மல்லர்கள்சொல் விருத்தம்

இ-ம்-மோகனம்.

பொட்டெனவெழுந்துமண்
டட்டியில்லாமல்
வெட்டிகைபிற்கொண்
டொட்டவேவருவீர்

ஒட்டன்சொல்விருத்தம்

இ-ம்-சங்கராபரணம்.

தாவியப்புலிப்போற்சீறி
தரணியாளிரணியமன்னன்
கூவியேயழைத்தபோது
கொடியமண்வெட்டிக்கொண்டு
ஆவலாய்சந்தியதுசெய்ய
அஞ்சாதப்பாவிக்காக
பாவினைக்குழிவெட்டொட்ட
மஞ்சனெனவருபவனே

ஒட்டன்சொல்விருத்தம்

இ-ம்-செஞ்சுருட்டி

அள்ளரியுலகாண்மன்ன
னைமுந்தபோதெழுந்திருந்து
கொள்ளிபோலகண்விழித்துக்
கூறுள்ளவாளெடுத்து
தெள்ளியப்புலவோருக்குத்
தீங்குசெய்பாவிக்காகப்
பள்ளமேவெட்டிக்கொட்ட
பரிசினென்பவனுநானே

ஒட்டன்வருகிறதரு

இ-ம்-கல்யாணி-தாளம்-அடசாப்பு

பல்லவி.

வொட்டன்வந்தானே-மண்வெட்டிகொண்
டொட்டன்வந்தானே

அநுபல்லவி.

பட்டணத்திற்வேலையுண்டோவென்றுதேடி
பாங்காய்வெண்பாட்டியுந்தானுமசக்கூடி
மட்டிகள்கூடிபோருமைகள்பேசினால்
காரிவாயில்மண்ணைத்தாமாளயாய்ப்போடும் (வொட்)

சரணங்கள்.

பாடும்புலவர்பரிசுக்கிடர்செய்யும்
பண்ணிகளைக்கும்பலாகமடக்கி
கோடாலிபால்துஷ்டர்வாயைப்பிளக்குமண்
கெட்டிக்கிட்டித்துள்ளகிஸ்டைசெய்யும்பொல்லா (வொட்)

பெண்டுகள்வெட்கிடப்பேசுங்கழுதைகள்
போக்கிரிநாய்கல்லவாக்கில்லாமூடரை
கண்டுபிடித்துஅடிக்குஞ்செருப்பத்தைக்
காலில்போட்டுக்கொண்டுவோலாயமாகவே (வொட்)

கொண்டவள்கையினில்தட்டைக்குடுத்து
கூர்வாங்கையெடுத்துப்பிடித்து

கண்டவர்களுடன் மூண்டம்போல்பேசியே
கள்ளப்பயல்களைத் தள்ளப்பள்ளம்வெட்டும் (வொ)

வெட்டன்சொல்விருத்தம்.

இ-ம்-தோடி.

இட்டமாயுங்கள்
கட்டளைப்படியோர்
மட்டமாய்க்குழியை
வெட்டினேனையா

மல்லர்சொல்விருத்தம்

இ-ம்-கௌளிபந்து

தாட்டியாய்க்குழியில்
மூட்டியநெருப்பில்
போட்டிவனுடலை
காட்டிடுவோமே

பிரகலாதன்சொல் தரு

இ-ம்-பைரவி-தாளம்-அடசாப்பு

கண்ணிகள்.

பூரிசைபோலுச்சதிரமாகக்
குழிவெட்டினார்-வுயிர்
பொருப்பெனவிறகுகள்
சட்டையுமுட்டையுங்கொட்டினார்
கோடகபாகவேஆயிரங்குடநெய்யை
வார்த்திட்டார்-அந்த
நெருப்பெங்குமுயர்வான
பாய்வெங்குமெழும்பவேயேத்திட்டார்
வடவனல்போலவேதுடிகொண்ட
நெருப்பினைநோக்கினார்-அழுது
பாமுனிவோர்களுந்தாயனைவருங்கண்
நீராக்கினார்

அடிமுதல்முடியளவாகியபூரண
அமலனே-நினைக்
தன்பிணலானந்தவாரியில்மூழ்கின்ற
நிமலனே

ஆளும்நாயகனேயந்தப்பாதகர்
நெருப்பினில்தள்ளினர்-அப்போ
அரியென்றுவீழவேதேவா
மனமிருந்துகித்துள்ளினர்
வாள்தண்டுசங்கொடுக்கமேந்தி
யகையனே-யிந்த
மண்ணினில்வாழுமுயிர்க்குயிராகிய
மெய்யனே

அன்பர்மனத்திவிலின்
பம்பொருந்தியசோதியே-யிந்த
அனல்வந்துயென்மேலே
கனல்கின்றதென்னவபாதியே
துன்பமும்யின்பமுமின்பரமே
யல்லால்வேறுண்டோ-யிந்த
தொல்லைநெருப்பினில்செல்லுபோலே
கவும்வாருண்டோ

பொல்லாதப்பாதகமல்லர்கள்கையினில்
சிக்கினேன்-சிக்கி
புழுங்கவும்அழுங்கவும்
நானென்னக்குறைகள்செய்தேனோ
கல்லாதப்பேருள்ளஞ்சொல்லாத
கோதண்டபாணியே-ஜக
காரணனேபரிபூரணனே
வந்துக்காருமே

அண்டமும்வானமுமிண்டுமிழ்ந்தருளிய
வாயனே-நினைற
அகிலமும்புவனமுமணுவுமாய்க்
காத்தருள்மாயனே-யென்று

தொண்டன்புகழ்ந்திடமண்டலம்
நீர்போலக்குவிர்ந்துதே சலங்
தோய்ந்துமுழுகிக்களை
பாய்ந்தவர்போலின்பம்வளர்ந்துதே

பிரகலாதனன்சொல்விருத்தம்

இ-ம்-நாட்டை

கட்செவியின்மீதிலேபள்ளிகொண்டவனுநீ
கஞ்சனைவதைத்தவனுநீ
கபடநாடகனுநீபாதிநாள்யானையைக்
காத்தருளபுரிந்தவனுநீ
பச்சைநிறமாகவேவளர்கின்றமாலுநீ
பாருலகளந்தவனுநீ
பதியுநீகதியுநியடியார்களுள்ளமதில்
பண்பாயிருப்பவனுநீ
இச்சையாயுந்தனற்பாதமேகதியென்று
மெண்ணுவோர்தங்களுக்கு
இகபரமிரண்டிலுன்மேலானவாழ்க்கையுட
னின்பங்கொடுப்பனுநீ
அச்சுதானந்தனேதேவரீரெந்தனுக்
கந்தரத்தானமாக
அன்பாகிவந்தெனக்குபதேசமதுசெய்த
வாதியேகோவிந்தனே

மல்லர்கள்சொல்விருத்தம்

இ-ம்-சோகவராளி

அக்கினியாலும்பிள்ளைக்
கவதிகளொன்றுமில்லை
இக்கணம்வோடிவந்தோம்
யென்னதான்செய்வோமின்னம்
இக்கெலாம்வென்றதோளாய்
சிறுவனுக்குடலிலொன்றுங்

தைக்கவேயில்லையென்று
சாத்திஞேம்சாத்திஞேமே

வசனம்.

வர்ருமையா சுவாமி இரணியேஸ்வரா தேவரீர்சொன்ன பிரகாரம் வுமது பிள்ளையாகிய பிரகலாதனனே கொண்டுபோய் அக்கினிக்குழியி லேதள்ளினேம் அப்போது அவன்பன்னீர்குளத்தில் மூழ்கியெழுந்தவ னைப்போல் யெழுந்தானையாசுவாமி

இரணியன்சொல்விருத்தம்

இ-ம்-ஆனந்தபைரவி.

சுட்ட துமில்லையென்றீர்
சுடுநெருப்புதனைப்பத்திக்
கட்டியேசிறையிலிட்டு
அவனையுங்கடித்துக்கொல்ல
அட்டதிக்கனைத்துந்தாங்கும்
அனந்தனைமுதலாய்பாபமை
பொட்டனவரவழைத்துப்
போக்குவாயுயிரைத்தானே

வசனம்.

வாருங்கள் மந்திரிமார்களே அந்த அக்கினிச்சுடாமல் வஞ்சனைசெ ய்தானல்லவா நல்லதாகட்டும் ஆனபடியினலே அந்த அக்கினிதேவனை ப்பிடித்து சிறையிலேபோட்டுவையுங்கள் அப்பால் இந்த திக்குகளை சுமக்கானின்றபாம்புகள் அனந்தன் சங்கன் பாலன் குளிகன்காற்கோட கன் வாசுகிபத்மனுபன் முதலானபெட்டுநாகங்களையும் விட்டுகடிப்பிக் கச்சொல்லுமந்திரிமார்களே

மந்திரிசொல்விருத்தம்

இ-ம்-செஞ்சுருட்டி.

கொடுமைபோஜனமதாயுட்
கொள்ளுமல்லாகளேயந்த
வடிவுளக்கினியைக்கட்டி

வந்துநிசிறையிலிட்டு
குடிபடநாகமெட்டுஞ்
சுருக்கினிலழைத்திப்போது
கெடியதாய்கடிப்பித்திப்போ
நிமிஷத்தில்வதைசெய்வீரோ

வசனம்.

வாருங்கள்மல்லர்களே அந்தஅக்கினியைப்பிடித்து சிறையில்வைத்துப்போட்டு பிறகு அஷ்டநாகங்களையு மழைப்பித்து இவனைக்கடிக்கவிட்டு இந்தட்சணத்தில் வைத்துவிடும்மல்லர்களே

மல்லர்கள்சொல்விருத்தம்

இ-ம்-சாவேரி

வடிவுள்ளவமைச்சரே
கொடியபாம்புகளை
இடியெனச்சீறி
கடினமாய்விடுவோம்

மல்லர்கள்சொல்விருத்தம்

இ-ம்-துஜாவந்தி

அக்கினிச்சிதாச்சீழி
ஆண்டவனிரணியன்றன்
இக்கெனக்கோபங்கொண்டு
செல்வனைக்கொல்லச்சொன்னார்
தக்கனென்முதலாம்பாம்பு
தன்னையுங்கையில்கொண்டு
இக்கணம்பிடாரநியு
மெங்கள்பின்னோடிவாராய்

பிடாரன்சொல் விருத்தம்

இ-ம்-கல்யாணி

ஜெகஜாலமோகனம்
திங்கானமாரணம்

வைகையுள்ள மூலிகை
மைச்சிமிழ்குளிகையும்
அகமுள்ள அஷ்டநாகமுங்
கொண்டு
தகமையாய்பிடாரன்
ருனும்வந்தானே

பிடாரன்வருகிறதரு

இ-ம்-சங்கராபரணம்

பிடாரன்வந்தானே-பாம்பு
பிடாரன்வந்தானே
அடாதுகளுவிலுமொடாதமதியானமுன்
விடாதசினமேமிகுபடாவர்மமெகொடு (பி)

மோகனவுச்சாடனமும்-தம்பன
லோகவைசியமாரணமும்-அஞ்சன
வாகுபெருகுளிகைகள்-நாகரீகக்கிழிகைகள்
சேகரமகிமையொடுபியாகரவசிகர (பி)

தண்டைவெண்டயமும்-கலீரென
மண்டியதிரவேதான்
மண்டலமும்விண்டலமும்
வெண்டிசையகண்டமொடு
உண்டருளுமண்டர்பதி
தொண்டிநிலைகண்டிடும் (பி)

கஞ்சுபொதிசங்குபாலன்-குளிகன்
வஞ்சரினமந்தாசிலன்வாசுகி
கெஞ்சிடவுமஞ்சிடவுமெஞ்சிவுந்துஞ்சிடவும்
விஞ்சையோடுசஞ்சிவிரள்மிஞ்சுகணாஞ்சித (பி)

பிடாரன்சொல்தரு

இ-ம்-செஞ்சுருட்டி-ஆதிதாளம்

கண்ணிகள்

சேடன்படம்விரித்தாடிக்கொண்டு
ஓடிவருவதும்பாருங்கள்
நிடியநான்முகத்தேடியமால்பதங்
கூடியதொண்டன்மீதிலே (சே)

தக்கனும்விழமதுகக்கிக்கொண்டு
உத்திரமாய்வருவதும்பாருங்கள்
தக்கிடதகுத்குத்திக்கிடவென்னட
முக்கியமால்தொண்டன்மீதிலே (சேடன்)

வளைவாயிற்றுளைவாயிதிறந்து
குளிகனும்வருவதும்பாருங்கள்
களைகான்மறையிற்றளிர்மேல்மருவிய
மொளிமான்றொண்டன்மீதிலே (சேடன்)

ஆசைகளெங்கும்வீசியவாள்கொடு
வாசுகிவருவதுபாருங்கள்
வீசிலேமீதும்பாகிலேமீதும்
வாசங்கொள்மாலதொண்டன்மீதிலே (சேடன்)

தங்கியவிஷமதுபொங்கிப்பல்பொடு
சங்கனும்வருவதைப்பாருங்கள
செங்கமலரசன்மங்கைமணாளனை
யெங்கனும்புகழ்தொண்டன்மீதிலே (சேட)

நிடியவாலால்சாடியகருங்காற்
கோடனும்வருவதுபாருங்கள்
யேடவிழ்துளபச்சூடியமாயனை
நாடியதொண்டன்மீதிலே (சேடன்)

பதுமனுவிஷமாப்பதுமனுங்கூடியே
கொதிகொண்டுவருவதுபாருங்கள்
சதுமறைபரவியஅதிவிதபரமனே
துதிசெய்யுந்தொண்டன்மீதிலே (சேடன்)

காந்திகாந்திசிந்திசிந்தி
பாய்ந்துவருவதைப்பாருங்கள்
சார்ந்துசார்ந்துதேருங்கள் களி
கூர்ந்துகூர்ந்துசோபிடும்பாலன்மேல் (சேட)

பொதுவிருத்தம்

இ-ட்-கல்யாணி

அட்டதிசைதாங்கிநின்றநாகமெட்டும்
அழுண்டழுன்றுகண்களனல்சொரிந்துபாய்ந்து
பட்டவிறும்பசுமலர்த்தார்மைந்தன்காலில்
மார்மீதில்கைமீதில்தோளின்மீதில்
தொட்டகழுத்தடிமீதில்முகத்தின்மீதில்
தூயபிணைநெத்தியின்மேல்தலையின்மீதில்
வட்டமதாயுள்விழிங்கித்தீண்டும்போது
வாழ்த்துவானரிநாமம்யேற்றுவானே

பிரகலாதனன்சொல்

கொச்சகம்.

நரகவழிபோகாமல்
நல்லவடியார்தமக்குப்
பரகதிதந்தாண்டருளும்
பங்கயககண்ணம்புயலே
விரகமொடுபூமாது
மேவுமணிமார்பமர்ந்த
அரிஅரிநாராயணனே
அற்புதனேயெங்கோனே

### பிரகலாதன் சொல்தரு

இ-ம்-புன்னாகவராளி-தாளம்-அடசாப்பு

கண்ணிகள்

அரிஅரிஸ்ரீநாராயணா திருவளருமணிமார்பா
ஆதியே பரஞ்சோதியே
முராஅரியகுருநாதரிந்தனையனை
முந்துடனே பரிந்தனே

சங்குசக்கரதரபாணி அம்பரசுரதலோலா
சற்குணா சல்லிற்குணா
பங்கஜசுபகரனே பெருங்குருப்பிறைந்தருள்பர
பார்த்தலே சனீக்கனு

தண்டுளபமாலையார்பா அண்டர்கள் பணிசரணா
சச்சுதா நந்தவுச்சுதா
புண்டரிகநாதனே பண்டுமறைத்துதிசெய்யும்
போதனே கனமிதனே

அரசனையிலேதுவினை பாராயகந்தவிலாச
லையலேனா அதிதனே
உரங்கொண்டுமிருசங்கு செய்கசபோவுனக்குமிது
உன்னலையோ தெற்றிஷன்னையோ

பார்த்தன்புழிதிலேரத்தார்த்தனெடியானொன்றெண்ணிப்
பாதகன் பிள்ளைதேருமல்
ஒக்குறையோ கண்ணனால் மாக்குதேவுனக்குபெங்கே
இக்கைதயோ நான்செய்பிக்கைதயோ

பன்னாபரனாமனைக்குழிக்குள்ளே நான்விழுக்குதுன்பம்
பகைகளோ விலைகொள்கைதோ
வள்ளலேவுன்னருள்செய்யவெள்ளானையிலுபடனம்
வல்லியோ சொல்லுதொல்லையோ

முண்டகத்தனைசுக்கலைகொண்டவோதயிதிலேனைத்த
யோசனே செருநினைத்து

கண்டகர்செய்யுங்கொடுமையண்டாமலெனதனையாளும்
காரணா பரிபூரணா

வேதத்தினமேலேவேதாந்தநாதத்தின்மேலேவிளங்கும்
மெய்யனே ஆழிகையனே
பாதத்தின்மிக்கவருட்பிரசாதத்தையென்சென்னிவைத்தாள்
பரமனே திருவிக்கிரமனே

பிரசலாதனன்சொல்

கலித்துறை

அன்றிலங்கைப்பதிவாழ்ந்த
ராட்சதரத்தனையுங்
கொன்றுமின்னப்படக்கோதண்ட
மேந்துஞ்செயவரதா
பன்னகமேலினும்பாற்கடன்
மீதினும்பள்ளிகொண்ட
மன்னுவடிமையைக்கா
வாதிமூலமகாதெய்வமே

பிரகலாதன்சொல்

கலித்துறை.

அனந்தனேமுதுகுருந்
தெய்வமேயெண்ணியுனைத்
தினந்தோத்திரித்துத்திரிகின்ற
வேழையின்றீங்ககற்றிக்
கனந்தேறுனதுகழலினைப்
போற்றிக்கவலையற
மனந்தானெக்களித்தா
ளாதிமூதமகாதெய்வமே

பிரகலாதனன்சொல்

கலித்துறை

சொல்லாததோவுன்றி
நாமநல்லுணர்சித்தியினி

நில்லாதகோவுன் றிருவடி
நின்னடியார்குறுதி
சொல்லாதோஜகாட்சகநிதி
தொடர்ந்திடின்மேல்
வல்லாளகண்டக்
யாதிமூலமகாதெய்வமே

பிரகலாதனன்சொல்விருத்தம்

இ-ம்-நாட்டை

பத்தியுள்ளப்பசுவீழ்ந்தாலுலகிலுள்ளோா
பாதவித்துமனமிரங்கியெடுப்பார்துஷட
புத்தியில்லாப்புலிதனக்கியாருதவிசெய்வார்
பிறவியெனும்பெருமடுவிற்பொய்யன்வீழ்ந்தோன்
வித்தகனேயெனக்கெவரோநின்னையன்றி
வெயிலொளிபோலுன்பாதம்விளங்கச்செய்வாய்
தத்தம்வளர்கோசலைநாடாளவந்த
ராமாவென்றுந்தனைநாடிப்பினேனே

மல்லர்கள்சொல்விருத்தம்

இ-ம-தன்னியாசி

அல்லல்செய்பாம்புகள்
பல்லுதிர்ந்தோட
வல்லமன்னர்முன்
சொல்லுவோம்வாரீர்

மல்லர்சொல்விருத்தம்

இ-ம்-பந்துவராளி

சேடனேடட்சாகந்
சேர்த்தவன்மேல்விடுத்தோம்
ஆடிகண்சிவந்துசீறி
ஆற்பரித்ததுசீடிக்க
வீடிவாய்பல்லுதிர்ந்து
விஷமெலாமடிர்தயாச்சு

ஓடிபோனேந்தித்தை
வுரைசெய்யவந்தோமையா

வசனம்

சரணஞ்சரணமையா இரணியீஸ்வரா தேவரீர் சொன்னவுத்தாரப் படிக்கி அஷ்டநாகங்களையும்விட்டு கடிப்பித்தோம் அந்தபாம்புகளெல்லாம் பல்லுகளிலேயிருந்த விஷத்தைக்கக்கும போது அமிர்தமாகத் தோத்தப்பட்டு பாம்பின்பற்களெல்லாம் வுதிர்ந்துப் போச்சுதையாசுவாமி.

இரணியன்சொல்விருத்தம்

இ-ம்-கல்யாணி

நாட்டிசையாவமெல்லாம்
நடுங்கினதறிவோம்நீங்கள்
தீட்டியாயுதமெடுத்து
தீவிரமாகச்சென்று
கீட்டிசைத்தன்னைத்தாங்கும்
கஜேந்திரனை வழைத்தபோது
கூட்டியேகுமாரன்றனை
கொல்லுவீர்கொல்லுவீரோ

வசனம்.

வாருங்கள்மந்திரிமார்களே இந்த அஷ்டநாகங்களும் அந்தசிறுவனையலைக்கலைக்கண்டு நடுநடுங்கிவோடிப்போய் விட்டதென்று சொன்னீர்களல்லவா நல்லதாகட்டும் இப்பவுங்கீழ்த்திசையில் வாசஞ்செய்யும்படியானகஜேந்திரனென்னும் யானையை அழைப்பித்து அதனகையில் இருப்புலக்கையைகொடுத்தும் அடித்தும் கொம்பினாலே முட்டையும் காலினாலே மெரித்தும் யிப்படியாகக் கொல்லும்படியாகக் கட்டளையிடுங்கள் மந்திரிமார்களே

மந்திரிசொல் விருத்தம்

மந்திரமல்லர்களே
இந்திரன்பாதனை

வந்திடச்செய்து
மைந்தனைவதைப்பீர்

மல்லர்கள்சொல்வசனம்

அப்படியேமகாபாக்கியமையாசுவாமி

மல்லர்கள்சொல்விருத்தம்

இ-ம்-கும்பகாம்போதி

கடலிநீர்வத்தித்தீயக்
　　ககனமும்புவனம்யாவும்
படிலெனவெடிக்கமன்னன்
　　பாரத்தெங்களோடுரைத்தார்
வடிவுள்ளப்பாலன்றனனை
　　வதைசெய்யமித்ராவுத்தன்
துடிபடயானைதன்னைச்
சுருக்கினிலனுப்புவாயே

வசனம்

வெங்களுடையஅரசனுத்தா ரப்படிக்கிமைந்தனை னப்பிரகலாதன் னைக்கொல்லவேண்டியதாய் வும்முடையானையை அதிகசுருக்காய் குடு மையாமகாராசனே

பொதுவிருத்தம்

இ-ம்-நாட்டை

நாட்டிநில்பொறிகள்நெந்தி
　　நடுங்கிடயிரணியநதான்
கிட்டிமைத்தன்னைத்தாங்கும்
　　கசேந்திரனையழைக்கும்போது
கேட்டிடப்பயங்கொண்டந்தக்
　　கெடியிருப்யானைதன்னை
ஒட்டியேபறப் [illegible]
　　உத்[illegible]

ஆனைவருகிறதரு

இ-ம்-புன்னாகவராளி-தாளம்-அடசாப்பு

பல்லவி.

மதயானையிதோவந்துதே-சினங்கொண்டு
மதயானையிதோவந்துதே

அநுபல்லவி.

மதயானையிதோயெங்கும
அதமாகவேவோடி
வந்துவந்துபின்வாங்கி
விந்தைமைந்தன்முகம்வாடி (ம

சரணங்கள்

ஙலைவீசிமுழிக்கி கைகளினாலெ
மலைமரங்களைநொறுக்கி
ஆலகாலவனல்போலகொடுமையன்றிபண்ணி
ஆக்கிரமச்செயிந்துசிறித்தாக்குவே னெனவேமண்டி (மத)

காலைநலம்பறித்துமுறம்போலக்
காதிரண்டையம்மெரித்து
நாலுப்பிறைகள்போலநாலுகொம்புகள்மின்ன
தக்கவெள்ளிமலைகாலால்மிக்கவேநடந்ததென்ன (ம)

மீரிமீரிச்செருக்கிமதங்களை
யாறுபோலபெருக்கி
வீருள்ளயிரணியன்சிறுவானெனஅஞ்சி
மிக்கசுண்டுகண்கள்செக்கச்சிவந்துமிக்ம (மத

பொதுவிருத்தம்

இ-ம்-சங்கராபரணம்

மூர்க்கமாய்வந்தயானை
மூதண்டகொளமெல்லாம்
யேர்க்கவேவயத்துள்வைத்த
யிறையவனபாதத்தியானம்

மார்க்கமேயிருந்தசெல்வ
மைந்தனை மிகவும்பார்த்து
ஆற்கிரமித்திடித்துநின்ற
வதனைபார்த்துரைசெய்வானே

பிரகலாதனன்சொல் விருத்தம்

இ-ம்-கும்பகாம்போதி

ஏந்தாய்பண்டோரிடங்காவிழுங்கா
மூந்தாநின்றமுதற்பொருளேயென்
றுந்தாநின்றனைத்தவஞேத
வந்தானென்றன்மனத்தினிலென்றன்

வசனம்

என்னுடைய கர்த்தனே அகிலாண்டகோடி பிரமாண்டநாயகா சர்வதி வ்யாபரா யென்னப்பனே யென்னையனே பூர்வகாலத்திலே- திரிகூடாசலமென்னும் பாவதத்திலே யிராநின்ற வொருதடாகத்திலே இருக்கு முதலையானது ஒருயானையைப்பிடித்துக்கொள்ள அந்தயானையானது ஆதிமூலமேயென்று கூப்பிட்டமாத்திரத்திலே தேவரீரெழுந்தருளி வந்து முதலையைச்சம்மாரஞ்செய்து யானையைரட்சித்ததுபோல் யென்னையும் யிவ்வேளையில் காத்துரட்சியுமையாசுவாமி

பிரகலாதனன்சொல்

விருத்தம்-இ-ம்-கல்யாணி

சிலமுனசேஷசயனுதிருப்பாற்கடற்
செல்வனேதசரதற்குக்
செல்வமகவாய்வந்துதித்தஸ்ரீராமனே
சீதாமனோகாந்தால்
கோலமுனசவிரணராமாநெடுந்தனுக்
கொண்டகோதண்டராமா
குணமாறுனைக்யபரிபாலராமாதனுக்
கோடியகிலெய்தராமா

ஆலகாலத்தைதரிக்காவணுதியர்தமை
    யழித்தசெயராமசோமா
அரிப்பிரியைஜானகிகனிட்டனுடனமுதுண்
    டயோத்திபட்டாபிராமா
மாலையணிராமனேயென்னையாள்கருடன்மிசை
    வல்வினையகற்றவருவாய்
மாயவதாரனேமித்ராபிராமனே
    யாதவாகோவிந்தனே

விருத்தம்

இ-ம்-தோடி

சந்தஞ்சந்திரனைக்கண்டவிருள்போலவுந்
    தழல்கண்டசருகுபோலும்
தபனனைக்கண்டபனிபோலவுஞ்சிங்கத்தைத்
    தந்திகண்டிடுதல்போலும்
வந்தனைசெய்யுந்தாசரைக்கண்டுவாழ்த்தவைகை
    வாராதமூடர்போலும்
வாடினேன்மாபாவிகேடுறுவண்ணம்
    மனதுவைத்தாளவேணும்
சொந்தமுமாங்கின்னநிலையிந்தவினையுநீபோய்
    சோரமலாளாவிடிற்
றொலையாதிங்கிந்தவினையுனக்குவருநான்சொன்னேன்
    துயரதையகற்றியருள்செய்
செந்திகிரியுஞ்சங்குதங்குபுயசாருண்ய
    தேசிகாயென்னையாள்வாய்
சிதாபிராமனேமாதாபிதாவெனச்
    சிந்தைகுடிகொண்டகுருவே

பிரகலாதன்சொல்

கொச்சகம்

நாற்கடல்சூழ்மண்ணுலகில்
நானுவிதங்கொள்ளாச்

நிற்கமுடனுண்டுமிழ்ந்த
செவ்வாயத்திருமாலே
மாற்கமிருதொண்டர்நெஞ்சில்
வாழ்வதுபோலென்னுளும்
பாற்கடலிலனந்தசயனிசை
பள்ளிகொள்ளுமெங்கோனே

பிரசலாதனன்சொல்தரு

இ-ம்-நீலாம்பரி-தாளம்-ஆதி

கண்ணிகள்

பாற்கடலிலனந்தன்வே
ளேற்கவேதுயின்றருள்செய்
பங்கயச்செங்கண்மாலே
அரி அரியே

மாற்காக்தொண்டர்
மனந்திற்கமாயுறைகின்ற
மாதவாகேசவா
அரி அரியே

மூந்தமுதலைப்பொண்ணுவைத்துநீ
ரட்சித்தயானை
மூளித்துசுளித்துகொண்டு
அரி அரியே

இந்தநாள்வஞ்சகரால்
யெந்தனைக்கொல்லயெண்ணி
இதோவந்துநிற்குதையோ
அரி அரியே

திருமாலேநீயென்று
மொருசிங்கமென்கமல

சித்தமுள்ளேயிருக்க
அரிஅரியே

வெறுவாமல்யானையென்முன்
வருவதுந்தானென்ன
விதியேதோவானறியேன்
அரிஅரியே

யெல்லாவுருவங்கொண்ட
வல்லோனேநீயிந்த
யானையுருவங்கொண்டே
அரிஅரியே

பொல்லாதப்பாவியென்றே
கொல்லவேநீயேவந்தால்
புண்ணியம்நான்செய்ததல்லோ
அரிஅரியே

அடியேன்செய்வினைதானோ
கொடிதானயானையுரு
வாகியேவந்ததுவே
அரிஅரியே

படிமீதிலென்னைக்கொல்ல
முடிகிவருவதும்நீ
பார்த்துக்கொண்டிருப்பாயோ
அரிஅரியே

யெவ்வுயிர்க்குயிரான
தெய்வமேபரமான
யேகநாயகமூர்த்தி
அரிஅரியே

அவ்வுயிர்க்குள்ளானொருவன்
வொவ்வுமோவொவ்வாதோ
அய்யனேமெய்யனே
அரிஅரியே

பிரகலாதனன்சொல்விருத்தம்

இ-ம்-ஆனந்தபைரவி

ஆமைகேணியும்வாலணிப்பிள்ளைகொம்பிலும்
ஆமென்றபழமொழிகள்போல்
அங்குரியுந்தமியனிங்குமாயகடலிடத்
தலையுந்துரும்புபோலும்
உளமைகண்டுவகையுறுசொற்பனம்போலுமே
லொன்றுமாயாமலடியேன்
உபயசெங்கமலபதநாடியுற்றதுவும்நி
யுண்மையுணாயாதகுணாயும்
சீமையிற்சொல்லிலோயாவருகைத்திடுவ
ஸ்ரீராமராமராமா
தேகியென்பாற்குதவிசெய்யாதபேரில்லை
திருமருவுசார்வபூபா
வீமமதகற்றியென்னைரட்சிக்கவேகருடன்
மீதேறியென்முன்வருவாய்
வேகாவையின்றருட்சிதாமிராமனே
மெய்ஞ்ஞானஜோதிமயமே

பிரகலாதனன்சொல் விருத்தம்

இ-ம்-தோடி

மண்ணாசைபெண்ணாசைபொன்னாசைமூன்றையும்
வாக்குமனநோக்கவில்லை
வைகுண்டவாசனேநின்றிருவடிக்கடியர்
வைக்தன்பான்வாழ்த்துதற்கு
கண்ணாவேதாவை நாவையாயோட்டிக்
கைகுவித்துனதுநாமம்
கனவின்மேலமைமூன்றையோவெனக்கூவியும்
கருணைபுரியாதிருந்தால்
என்னுருக்குஞ்ஞானமுடியைபாகவே
இனிபிரவிடேலென்மன்

இரவுபகலுன்பெருமையுன்மகிமையுன்னும
 மூன்றுஇருந்துண்டோ
விண்ணுடாகமகிழவெங்கருடன்மீதேறி
 விழிகளிடத்திடவருகுவாய்
வேதாவையீன்றருடசிதாபிராமனே
 மெய்ஞ்ஞானஜோதிமயமே

பிரகலாதனன்சொல்

விருத்தம்-இ-ம்-தேசிகதோடி

ஆதியந்தமுமிலாச்சங்கராறுகான்முகனு
 மகிலம்படைத்தழிப்பார்
அனந்தகல்யாணவரிபாவாசுதேவனே
 அன்னைபோன்மன்னுயிற்கும்
நிதிநெறிதவறுததாசாதிதாசற்கு
 நியபயசமயமென்ற
நேசற்குமுன்னின்றாட்சிக்கும்ரெட்சகனீ
 நின்னடியையாளுகினேன்
சோதியேசோதனைசெய்யாமலேப்படையுடன்
 றுளசிமணிமாமிற்றங்க
சுந்தரவிலக்குமிசமேதாய்பூமாரி
 துந்துமிமுழக்கத்துடன்
மேதினியிலெந்தனையிரட்சிக்கவேகருடன்
 மீதேறியென்முன்வருவாய்
வேதாவையீன்றருட்சிதாபிராமனே
 மெய்ஞ்ஞானஜோதிமயமே

பிரகலாதனன்சொல்விருத்தம்

இ-ம்-நாட்டை

அரசன்றுள்பெறறபேர்க்கல்லிலையொருவர்பகை
 யாவதில்லைகுறையொன்றில்லை
அதிகாரபேன்மையில்லாததில்லைநிதியில்லையோ
 டியாவருரும்வணங்காதில்லை

முரசமுடன்வாத்தியமுழங்காதகாலமிலை
　முறைமையறநெறிதவறிலை
ஆர்த்தண்யதிசையெனினுமிதிலெனக்கிச்சையிலை
　மோட்சத்தில்வாஞ்சையாகி
சரசகுணபிரசாசபாசினையளித்தளிசெய்
　சலசலோசனமாதவா
தனியானதிருநாமமினிதாய்நினைக்கவும்
　ஜன்மதீவினைதீய்க்கவும்
இரவிமதிதுதிபாவுபெரியகுலதெய்வமே
　யேழைபேற்கருள்செய்தாள்வாய்
எண்ணுமடியார்கள்கண்ணனைதேவனே
　யென்னையாள்ரகுராமனே

பிரகலாதனன்சொல் விருத்தம்

இ-ம்-பக்துவராளி

விதியினால்வருவதல்லாதுவேறென்றில்லை
　மேன்மையோர்சொல்லிதென்றால்
மேதினியிலுன்றனைப்பூசிப்பதேன்யாக
　வேதங்கள்வாசிப்பதேன்
மதியினால்விதியதனைவெல்லலாமென்றுமுன்
　மார்க்கண்டர்சரிதையோகம்
வான்சித்துமாலிபைமடக்கியாவருமகிழ
　வயதுபதினாறுபெற்றார்
நதியினாலுன்பதத்தென்[illegible]பலாந்து
　சொல்லிமுறையிட்டிருக்கினேன்
தொல்லைவினைக்கெதிர்[illegible]செய்யாமல்
　சுகமுடனிருக்கவருள்வாய்
எதிரிபாவித்தெனைக்[illegible]தெனிதபோ
　ஏழையுன்னடிக்கடிமையான்
யென்னுமடியார்கள்கண்ணனைதேவனே
　யென்னையாள்ரகுராமனே

பல்லர்கள்சொல்விருத்தம்

இ-ம்-கல்யாணி

ஆனைதனையவன்மீதில்விட்டபோது
    ஐயன்முகுந்தனைப்பார்த்துவணங்கியோடி
ஈனமாய்ப்போச்சுதென்றுமுடிகிவிட்டோம
    இருகோடும்வாழுத்தண்டெனவேயித்துப்
போனதுகண்டிந்தவதிசையங்கள்நாங்கள்
    பூமியிலேகண்டதில்லையெங்களகோவே
ஊனமொன்றுமுன்மகனுக்கில்லைஐயா
    உண்மையிதுநாங்கள்கண்டுவுரைசெய்தோமே

வசனம்.

கேளுமையா சுவாமி யிரணியபூபாலகா தேவரீர்சொன்னப்பிரகாரம் அயிராவதமென்னும்யானையைக்கொண்டுவந்து விட்டோம் அந்த யானையானது பிரகலாதனன்முன்னேபோய் தெண்டம்பண்ணி வோடிப்போச்சுதையாசுவாமி

இரணியன்சொல் விருத்தம்

இ-ம்-மோகனம்

வல்லமாதிரிகளோகேளீர்
    மலைபோலும்வட்டப்பாறுங்
கல்லிலேபிணைத்துக்கட்டி
    கடலிலேயழுத்திப்போட்டு
ஒல்லையிலோடிவந்து
    வுத்ததுசொல்லாவிட்டால்
செல்லுமிவ்வாளாலுங்கள்
    சிரசினைத்துணிப்பேன்பாராய்

வசனம்

வாருங்கள் மந்திரிமார்களோ வோர்மலைக்கிச்சமானக்கல்லைக்கொண்டுவந்து யிந்ததுஷ்டப்பையலை அறுதலில்வைத்து மல்கட்டாகக்கட்டிக்கொண்டுபோய் சமுத்திரத்தில் அழுத்திவிடும்படியாய் கட்டளையிடு

யிகன் அப்படிச்செய்யாமல் போய்விடுவாரானால் வுங்களையென்னுடை யவாளினாலே வெட்டிப்போடுவேன் மந்திரிமார்களே

மந்திரிகள்சொல் விருத்தம்

இ-ம்-பைரவி

கிடுகிடென் றுலகமஞ்சக்
கெற்சனை கொண்டுபல்லை
நடநடென் றேகடித்து
நிருபனுத்தாரஞ்செய்தார்
கொடியுளமல்லாகேளீர்
குழந்தையைக்கல்லில்கட்டி
கடலினிலழுத்திப்போட்டுக்
கடுகவந்துரைசெய்வீரோ

வசனம்.

கேளுங்கள்மல்லர்களே நமது மகாராசன் வுத்தாரப்படிக்கு அந்தபி ரகலாதனை பெருத்தக்கல்லில்சேர்த்து யிருக்கிக்கட்டி சமுத்திரத் தில் அழுத்திவிட்டு சீக்கிரத்தில்வந்துசேதிகள் சொல்லாவிட்டால்வு ங்களைமெத்தவும் ஆக்கினை செய்வோம்யிது சங்கதிவுங்கள் மனதில்கெ ட்டியா யிருக்கட்டுமல்லர்களே.

மல்லர்கள்சொல் விருத்தம்

இ-ம்-மோகனம்

கடிதுடனுலகாள்
கொடிநிருபன்னன்
வடிவுளமகனே
கடலில்தள்ளுநமே

மல்லர்சொல் விருத்தம்

இ-ம்-பந்துவராளி

அதிபதிகனகன்னன்
அருளையாயின்றெநிந்த

எதிரிலாப்பாலன்றன்னை
 யெழுகடலழுத்தச்சொன்னூர்
பதிபெருங்கப்பல்கொண்டு
 மரைக்காயானேகம்பேர்கள்
சதிருடன்கூடிநீங்கள்
 சலுதியில்வருகுவீரோ

வசனம்

வாருங்கள் மரைக்காயரே யெங்கண் மகாராசன் வுத்தாரப்படிக்கிபி ரகலாதனை கொண்டுபோய்சமுத்திரத்தில் அழுத்திப்போடும்படியா ப்பேத்திக்கொண்டு போகவேண்டியது ஆதலால் கப்பலேசிக்கிரத்தில் கொண்டுவாருங்கள் மரைக்காயரே

மரைக்காயர்சொல்தரு

இ-ம்-புன்னாகவராளி

தாளம்-அடசாப்பு

ஏலேலோயேலேலோ-தத்தெய்யா
ஏலேலோயேலேலோ
அலைகடலிதுயிலெழுந்த-ஆதி
அண்ணல்பதம்மனதிலெண்ணி
இலகுசிறுமதலைதனைக்-கொடிய
இரணியனூர்வலுமையினால்-மறிக்கு
மலையையொருகாலாக-வைத்துப்பிணைத்து
மைந்தனையும்அதுநடுவினில்வைத்து
பலகையால்சேர்த்ததொருகப்பலேயிழுத்து
பதறுமல்பாயமரஞ்சிதறுமல்நிருத்தி
நலமானசுக்கானைநன்றாயிருக்கி
நாட்டிமருசுத்தாணிபோட்டதில்முறுக்கி
நிலையானகயர்கொண்டுநேராயிருக்கி
நிசமானஅணிமுள்னேவசமாகச்சேர்த்து (ஏலே)

அரிமுகத்தோர்பணிமுகத்தோர்-முன்னே
அணிமுகத்தில்வந்துநின்றும்

கரிமுகத்தோரானரிமுகத்தோர்-முன்னே
கம்பமதிலுகந்துசெல்லும்-முடுக்கு
மருவானசுக்கானில்யிருவரைநிருத்தி
மைந்தனைக்கொண்டுவந்துஅதுநடுவில்வைத்து
விரிகடலில்தள்ளிடவும்அலைவந்துமோத
வீருனகப்பல்தடுமாறுமல்பாரும்
சரியாகவிதுபோரவேகமதுபாரும்
சமையமிதுசமையமிதுயிதுகொஞ்சந்தூரம்
கருங்கடலில்சுழலாமல்துரும்பெனவேநிருத்தி
கப்பல்விட்டுப்பாலகனைத்தப்பாமல்தள்ளும் (ஏலெ)

அரிமலைதுதிசெய்மைந்தன்-அவனை
அழுத்திவிட்டோங்கருங்கடலிற்
இரணியனைசிந்தைசெய்து-நீங்கள்
இனிதிரும்பவேணுமப்பா-முடுக்கு
வெயிகொண்டுபிசலெடுத்துக்கடலில்வருதப்பா
வீருனகப்பல்தடுமாறுமல்பாரும்
பெரியதிமிதிமிங்கலமும்பிசகாமல்கூடி
பெத்தசுபசெயுமந்தவேடிக்கைபாடி.
சரியானசிப்பிகளும்வாய்திறந்துபாடி
சந்தோஷமாய்களித்துநின்றுகொண்டாடி
பெருமையுடன்கண்டுகரைசேர்ந்துவந்தசேதி
போர்பெரியமன்னனுக்குவருமுறைசெய்ய (ஏலே)

மல்லர்கள்சொல் விருத்தம்

இ-ப்-பூரிகல்யாணி

தலைமைசேரண்ணமாரோ
 தகமையாய்கடலில்மூணும்
அலைதனிற்பார்க்கும்போது
 அதிசயமொன்றுசோர்

மலைதனில்பிணைத்துப்போட்ட
மைந்தனும்வலுமையாக
சலத்திநில்மிதந்துவார
சைகைகோல்தோணுதையா

வசனம்

கேளுங்கள அண்ணைமாரே கடலினமுனைம் அலையிற் ஒருஅதிசயம் சொல்லக்கேளீர் நமது மகாராசன வுத்தாரப்படிக்கி குழந்தையாகிய ப் பிரகலாதனை மலையிலேசேர்த்துக்கட்டிப்போட்டு வந்தோமே அவனுடையவலுமையினலேசலத்தினில் மிதந்துவருவதைப்போல்தோணுது அண்ணைமார்களே

மல்லர்கள்சொல் விருத்தம்

இ-ம்-காபி

அப்பனேயெமக்குச்
செப்புமைந்தனையே
கப்பலில்கொடுபோய்
யுப்புவில்கவிழ்த்தோம்

பிரகலாதனென்சொல்

கொச்சகம்

விரியுமைந்துபூதமுமாய்
மேவுங்கரணமுமாய்
வரியமுனைமூன்றுகி
மோங்கிநின்றுமொன்றுகி
தெரியுமறைப்பொருளாகிச்
சித்தாய்நிற்குணமானை
அரிஅரிநாராயணனே
அற்புதனேயெங்கோனே

பிரகலாதனன்சொல் விருத்தம்

இ-ம்-கேதாரகௌளம்

நாரணா போற்றி போற்றி
நான்மறைப்பொருளே போற்றி
காரணக்குருவாய்வந்தென்
கவலையைத்தீர்ப்பாய் போற்றி
வாரணந்தன்னைக்காத்த
மாதவா போற்றி போற்றி
சிரணிக்கிரங்கிவாழும்
ஸ்ரீரங்கநாதா போற்றி

தேவாரம்

இருவினை துலைப்பாய் போற்றி
யெகமானவனே போற்றி
திருவொடுமருடனேயுந்
தேவனே போற்றி யுன்பா
லுருகியாடனைத்துச்சேர்த்த
மூலகனிக்குவனே போற்றி
திருவடியெனக்குநல்கும்
சிதாமுருந்தாய் போற்றி

கலித்துறை

ஈரேழுலகினிலுன்னை
யல்லாமலெனக்கினிதாய்
பாரோர்புகழ்தெய்வமென்
பணியேன் பணியாதவனே
சீரோர்பொருந்தடியார்கள்
போற்றத்திருவுடனே

நேரோக்ருடன்முதுகேறி
வந்தென்னைரட்சிப்பாயே

கலித்துறை

இரைந்தேயுனதுதிருநாமம்
தன்னையிரவுபகல்
கரைந்தேமனதுகவலைவிண்டே
னென்னைக்காத்தருள்வாய்
விரைந்தேவருகவிதுவேளை
வேலைவெதும்பமணி
நிரைந்தேகருடன்முதுகேறி
வந்தென்னைரட்சிப்பயே

பிரகலாதனன்சொல்விருத்தம்

இ-ட்-நாட்டை

பாவியான்பொல்லாதகோவியான்பஞ்சமா
பாவியான்பெரியோர்களைப்
பணியாதபாவியானேன்பிறந்தேனேயோ
பார்க்கவேசுவரிலெழுதும்
ஒவியம்போலவேவுருவெடுத்தேனலால்
ஒருவர்க்குமென்னையிட்டு
ஒத்தாசையுதவிதானிதுவரையிலுண்டுமோ
உலகளந்தவனேயெனக்
கூவியேதமிழினூற்ரூ த்திரஞ்செய்தனன்
கோதண்டராமராமா
கோபாலகிருஷ்ணனேபாற்கடலிலேள்ளி
கொண்டிடும்கோவிந்தனே
ஆவிதானுடலைவிட்டகலுமுன்பாகநீ
அந்தாத்தானமாக
அன்பாகிவந்தெனக்குபதேசமதுசெய்த
வாதியேவைகுந்தனே

பிரகலாதனன் சொல்தரு

இ-ம்-நீலாம்புரி-கண்ணிகள்.

அரியே அரிநாராயணா
அமலாநித்தியநிமலா
கருமாமுகில்திருமேனிய
கண்ணாமணிவண்ணா
அருமாமறைப்பொருள்
மேவியஅறிவேபரகுருவே
திருமாதுறைமார்பா

செழுந்தீபாபத்பனாபா
உந்தன்செயலறியேன்
பொருண்குறியேன்வெகுசிறியேன்
எந்தன்மிடர்தீர்ப்பா

நினியாரோவருவாரோ
கந்தந்தருதுளவம்
புனைகருணாநிதிவருணா
அந்தந்தருகனவெஞ்சிலையாளா
கிருபையாளா

கடல்மேலரவணைமீதினில்
கருஞாயறுபோல
மடல்மேவுகண்டுயில்
கூர்ந்திடுமாலேயருளாலே
கடல்மேல்பெருந்தடல்மேல்கட்டி

கவிழ்ந்தார்மிதந்திடவே
அடியார்க்கருள்
அமலாவுன்போல்அரிணுமானேனே
அலைபொங்கியகடல்மீதினில்
ஆலந்தளிர்மீதே

கோலங்கொண்டமலர்கண்
டுயில்கூருர்பசுங்கொழுந்தாய்
காலந்தனைபோப்பாற்

கருங்கடலில்கவிழ்ந்தாலும்
பேலேயிதந்திடயானொரு
புநிதனுமானேனே
அடியாரடியார்தங்களுக்கடி
பணிவிடையும்
படிமீதிலெள்ளளவாகிலும்
பண்ணுந்திரமறியேன்
கெடியாயிதுக்குறியாய்
சொல்லுங்குணமேதுமில்லாதாய்
கெடியாயுந்தனடியேன்
மனப்பிலேயறிவாயோ

பிரகலாதனன்சொல்

தேவாரம்

பாம்பணைமிசைதுயின்ற
பக்தரட்சகனேதேவுண்
மடபுரண்டிசைகள்பாடும்
யெழிலுறுதுளபமார்பா
வீம்செய்தெனைக்கல்பூட்டி
விரிகடலமுழ்ந்திவிட்டார்
ஆம்பலர்கண்ணிபங்கா
அரிஅரிரட்சிப்பாயே

வசனம்

அரிஅரி பன்னகசயனா பக்தரட்சகா பரமபுருஷா பரந்தாமா ஜெகநாயகாபிராமா தொழியமல்லர்கள் கருங்கல்லிலென்னைசேர்த்து யிருக்கக்கட்டி யிக்கடலிலமுழ்த்தி விட்டார் இத்தருணத்தில் யிவ்வேழையின்மீது கிருபைகூர்ந்து ரட்சிக்கவேண்டும்சுவாமி

மல்லர்கள்சொல் விருத்தம்

இ-ம்-துஜாவந்தி

ஒன்னலர்வணங்கிபோற்ற
வுலகமீரேழுமாண்ட

மன்னவா சிறுவன் றன்னை
　மலைதனில் பிணைத்தேயந்த
　பன்னுமாழ்கடலில் போட்டோம்
பாலன்செய் அரிநாமத்தால்
　கன்னரக்கலமிதந்து
　கரைதனில் வந்ததையா

வசனம்

சரணஞ்சரணமையா சுவாமி இரணியேஸ்வரா தேவரீர் சொன்னவாக்கின்பிரகாரம் பிரகலாதனை சருப்பத்தோடே சேர்த்து இருக்கக்கட்டி சமுத்திரத்தில் போட்டோம் அவன் அரி அரியென்றுந் திருநாமத்தின் வலுமையினால் தெப்பலைப்போல் மிதந்து கரையிலே வந்துவிட்டானையா சுவாமி

இரணியன் சொல்விருத்தம்

இ-ம்-ராகம் ...

கனமும் புயமைந்தர்
　கண்டகரே கொக்கன்
பகைவனைப்போற்றிச்செய்யப்
　பையலைக்கயத்தால் கட்டி
தகைமைசேர்வலிக்கறனைத்
　தன்னிலே தூக்கிப்போட்டு
அகலுருமயானை பூட்டி
　அரைத்திடச் சொல்லுவீரே

வசனம்

ஆ ஆ ஆ ஆ வாருங்கள் மந்திரிமார்களே இகபூமி ஆகாயமுதல் பதினாலுலோகமும் அஞ்சும்படியாய் வலுமைபெற்றகண்டகரே அந்த கொடிய துஷ்டனை பிடித்து கறகரணத்தில் தூக்கிப்போட்டுமதம்பொருந்தியயானைகளைக்கட்டி அரைத்துப்போடச் சொல்லுங்கள் மந்திரிமார்களே

மந்திரிமார்கள்சொல்விருத்தம்

இ-ம்-பைரவி.

உயிர்களைவதைத்துத்தின்னு
 மொவ்வியகுலேனுரேர்கேளீர்
தயவிலாயிரண்யமன்னன்
 தன்னிடப்பாலன்றன்னை
வயமிகுகலக்காணத்தில்
 மதப்பட்டயானையைப்பூட்டி
அயல்படத்தூக்கிப்போட்டு
 அரைத்திடவுரைத்தானே

வசனம்

கேளுங்கள் மல்லர்களே தயவுதாட்சணியமில்லாத நமதுயிரணிய மகாராசருத்தாரப்படிக்கி அந்தப்பிரகலாதனை பயமிகுந்த கலக்காண த்தில் மதப்பட்டயானைகளைக்பூட்டி தூக்கிபோட்டுவிட்டுவந்து அதி சுசிக்கிரத்தில் சேதிசொல்லுங்கள் மல்லர்களே

மல்லர்கள்சொல் விருத்தம்

இ-ம்-நாதநாமக்கிரியை

சித்தங்கொண்டெழுந்தமன்னன்
 செப்பிடமொழியைக்கேட்டு
ஆத்தலாயிருந்தோமாகில்
 ஆக்கினையிடுவார்நம்மை
காத்துருமணிக்கயத்தால்
 கையுடன்காலுமாக
சேத்திவன்றன்னைக்கட்டிச்
 செக்கிநிலிடுவோம்வாரீர்

மல்லர்கள்சொல் விருத்தம்

இ-ம்-செஞ்சுருட்டி

திக்கெனகாலு
பக்கமும்வாரீர்
இக்கணத்திலினே
செக்கினிலிடுவோம்

பிரகலாதனன்சொல்

கொச்சகம்

துடருங்கருவிகளாய்
தோன்றாப்பெருவெளியாய்
கடலிலரவணைமிசையில்
கண்டுயிலுமாதவனே
இடர்வருத்துங்கலக்கரணத்
தெனையணுக்கவெவ்வினையு
அடராமல்காத்தருள்வாய்
அரிஅரிநாராயணனே

பிரகலாதனன்சொல்தரு

இ-ட்-பைரவி-ஏகதாளம்

பல்லவி

அரிஅரிஅரிஓம்நாராயணா
தானந்தவேதப்பாராயணா

அநுபல்லவி

புரகரிபலிதீற்குங்காரணா புண்ணிய
புருஷோத்தமஞ்ஞானபூரணா (அரி)

சரணங்கள்

ஆக்குமாரயணாகின்றாயே ஆக்கி
அழிக்குமாறனீயாகிச்சென்றாயே

போக்குமாரனுகிவென்றுயே-யுந்தன்
புதுமையாரறிவாரோவென்றுயே (அரி)

அடிமைபடைப்பதுனக்கருமையோ ஆளா
தவதிதருததென்னபெருமையோ
கொடியனுன்செய்யும்பவத்தொருமையோ யிந்தக்
கோலஞ்செய்தால்யென்னவருமையோ (அரி)

கல்லாதவனெஞ்சம்புன்மையோ யென்ன
கலங்கிநான்றவிப்பதும்டன்மையோ
யெல்லாம்பார்த்திருப்பதும்வண்மையோ இனி
யென்னசெய்வேனுன்னருள்வுண்மையோ (அரி)

கோடிகோடி சூரியப்பிரகாசனே-தொண்டர்
குடிகொண்டருள்வைகுண்டவாசனே
தேடிநான்முகன்காணுநேசனோ யுந்தன்
சித்தமென்பாக்கியம்ரிஷிகேசனே (அரி)

பொதுவிருத்தம்

இ-ம்-நாட்டை

ஆடியசெங்கடியும்லேர்பரிந்துபாய்ந்து
அரைக்குமூலக்கையுமுரிந்துகொக்கித்துள்ளி
ஒடிவலம்மையும்பரிந்துபூட்டும்யானை
யொண்கழுத்திலிகத்தடியுமூரிந்துதாளாய்
நீடுமெல்லர்மேல்விழுந்துமார்புந்தோளும்
நெரிந்தவர்கள்பயந்தொடிங்கிப்பிரகலாதன்
யேடவிழ்பூந்தாரான்முகத்தைநோக்கி
யேத்திஞர்குறையச்சொல்லிப்போற்றிஞரோ

மல்லர்கள்சொல் விருத்தம்

இ-ம்-சங்கராபரணம்

ஏதுநீகேள்பிரகலாதமணியேவாளா
லெரிந்துநெடுமலைசறட்டிக்கல்மேல்முள்மேல்

மீதுமுருட்டியுமணலில்போட்டும்பாம்பின்
விடயமீயந்தும்ஆனையின்காலிடரவைத்தும்
ஓதநெடுங்கடலில்விழக்கவிழ்த்துஞ்செக்கி
லுடலுறப்புவேறுகவறைத்துஞ்செற்றே
வேதனையில்லாதிருந்தவிபரமெல்லாம்
விளம்புவாயெங்களுக்குவிளம்புவாயே

வசனம்

அகோவாருடையா பிரகலாதன சுவாமியே தேவரீரை வாள்முதல்கொண்டு பலவிதமான ஆயுதங்களினாலே வெட்டியும் மலையின்பேரிலேற்றிகல்லுகள் கரடுகளிலேயும் வுருட்டியும் அக்கினிக்குழியில் தள்ளியும் அந்த நாகங்களைவிட்டு கடிப்பித்தும் திக்குராஜங்களையும்விட்டு முட்டிவைத்தும் மலைக்கல்லில்கட்டிகடலிலே அழுத்தியும் கலக்காணத்திலரைத்தும் இன்னம் அனந்தமான வேதனைகளைச்செய்தும் அந்தவேதனைகள்யாவும் எங்களுக்கு வுண்டாச்சுதே யல்லாமல் தேவரீருடைய சரீரங்களுக்கு ஒருவடிவும் லயமுமில்லாதிருப்பது யென்னமகத்துவத்தினாலேயோ யெங்களுக்குத் தெரியவராது ஆகையால் தாங்கள்யிவ்வேழைகள்மீதில் கிருபைகூர்ந்து அந்தவிபரத்தை அடியேன்களுக்குச்சொல்லவேணுமையாசுவாமி

தர்க்கதரு

இ-ம்-மத்தியமாவதி-தாளம் ரூபகம்

மல்லாகள்சொல்

ஒட்டும்பாசையுங்கூறி விட்டெறிந்தவாள்களெல்லாம்
கெட்டுமுறிந்ததைச்சொல்லாயிஷ்டகைபத்தனே

பிரகலாதனன்சொல்

தொட்டுவிடும்பஞ்சாயுதம்பெட்டெழுத்தின்மந்திரவாளால்
பட்டுமுறிந்ததுவல்லோதுஷ்டபல்லரே

மல்லர்கள்சொல்

முக்கணுருத்திரன்கையிலுக்குஞ்சூலம்விட்டால்நீயும்
நோக்கிடாதவிதஞ்சொல்லாய்முக்கியமைந்தனே

பிரகலாதனன்சொல்

முக்கண்ணனையிடர்தீர்த்தவிக்கிரமன்சிந்தையிருந்தால்
தக்கம்வந்திடாதல்லவோதுக்கமல்லவோ

மல்லர்கள்சொல்

மஞ்சுடர்மலைமீதேத்திதுஞ்சவேயுருட்டமேனி
அஞ்சிடாதவிதஞ்சொல்வாய்கொஞ்சுமைந்தனே

பிரகலாதனன்சொல்

கஞ்சனைமேற்பள்ளிகொண்டோன்செஞ்சொல்லருளெனக்கு
பஞ்சணையானதல்லோவஞ்சமல்லவோ

மல்லர்கள்சொல்

வடவனல்போலயிருங்கொடியநெருப்பில்தள்ள
மடியாதவகைசொல்லாய்வடிவுள்ளமைந்தா

பிரகலாதனன்சொல்

நெடியமாயவனருள்படியும்பரமானந்தக்
கடலில்வாழ்க்திட்டேனல்லோநொடியில்மல்லவோ

மல்லர்கள்சொல்

முடிக்கும்பாம்புகளெட்டுங்கடிக்கவுந்தன்மேனி
துடிக்காதவகைசொல்வாய்வடிவுள்ளமைந்தா

பிரகலாதனன்சொல்

கடிக்கும்பாம்பிணையாணைப்படிக்கும்புகழுமிர்தம்
குடிக்குமகிமையல்லோகடிக்கும்மல்லவோ

மல்லர்கள்சொல்

அங்கமீதுபாயவிட்டவெங்கனல்மதயானை
மயங்கியோடும்விதஞ்சொல்லாயிங்குமைந்தனே

பிரகலாதனன்சொல்

வெங்களுவைவதைசெய்தசெங்கண்மாயனும்ருபச்
சிங்காதத்தினலல்லோபங்கமல்லவோ

மல்லர்கள்சொல்

செப்பியமலையில்கட்டிக்குப்புறக்கவிழ்த்தநீரில்
வெப்படிமிதந்ததுசொல்லொப்புமைந்தனே

பிரகலாதனன்சொல்

இப்புவியுண்டாலின்மூன்னாள் அப்புவில்மிதந்தோன்பாதந்
தெப்பமானசெயலல்லோயிப்போமல்லவோ

மல்லர்கள்சொல்

தந்திரத்தாலனைத்திடுமந்திரக்கல்காணமது
னைக்குபோனவழிசொல்வாய்மூத்திமைந்தனே

பிரகலாதனன்சொல்

இந்திராஜாலமோமாயன்மந்திரச்சக்கரத்தினால்
சிந்திமுறிந்ததுவல்லோசந்தைமல்லவோ

மல்லர்கள்சொல்

உந்தனையிவ்விடர்செய்துசிந்தையழிந்தோமேநாங்கள்
உய்ந்துபோகும்வழிசொல்லாய்வந்தமைந்தனே

பிரகலாதனன்சொல்

உய்ந்துபோகும்வழிவேண்டில்வெந்தன்மொழிதலைகொண்டால்
தந்திடுமின்பமல்லோசொல்லந்தமல்லவோ
தாட்டிழாயலங்கன்மாயன் பூட்டிமருள்கொண்டினியே
யாட்டிநால்வந்துவல்லோவாட்டிமல்லவோ

பிரகலாதனன்சொல்

வெண்பா

பேணுங்கள் தப்பிப்பிழைக்கவென்றாலுள்ளன்பு
பூணுங்களென்சொல்புகலுங்கள்-ஆணுங்கள்
அஞ்சக்கரத்தானை ஐயந்தவிழ்த்தாண்ட
அஞ்சக்கரத்தானரேடி

வசனம்

வாருங்கள்மல்லர்களே நீங்கள்பிழைக்கும்பொருட்டுயான்சொல்லு இன்ற வார்த்தையை யுருதியாகப்பிடித்துக்கொண்டு கேளுங்கள் அதெ ன்னவென்றால் பஞ்சாட்சரமுடைய மாமயிலனுக்கு பிட்சைதவிழ்த் தருளிய காத்தனுகிய நாராயணனுடைய பாதாரவிந்தத்தை வுள்ளன்பி னாலே பூசனைசெய்யுங்கள்மல்லர்களே

பிரகலாதனன்சொல்

வெண்பா

அடியாரடியானேயானென்றாற்பாவம்
பொடியாங்கதியாம்புகழாம்-கொடியாரோ
அல்லிரோங்கள் அரிநாமமென்றுசொல்ல
வல்லிரோயான்வணங்குயர்ல்

வசனம்

இன்னஞ்சொல்லுகின்றேன்கேளுங்கள் மல்லர்களே நிச்சரானுலு ம் அடியார்களுக்கு அடியேனுவேனென்று வசனிக்கப் பட்டார்களேயா னல் அவர்களுடைய பாவங்களெல்லாம் பொடிப்பொடியாய்போய் சாயு ச்ரியப்பதவியென்னும் பிறவாதநெறியை யடைவார்கள் மல்லர்களே

மல்லர்கள்சொல் விருத்தம்

இ-ம்-கல்யாணி

அடல்மிகு அண்ணமாரே
  அரிமலர்பதத்தைப்போற்றும்
வடிவுள்ளபாலன்றன்னை
  வதைசெய்யநினைத்தோமாகில்
மடிவதுநிச்சயமென்று
  மனதினில்நினைக்குதப்பா
கடினமன்னவனுக்கிந்தை
  கழறுவோம்வருகுவீரே

வசனம்

வாருக்களண்ணமார்களே இந்தக் குழந்தையுக கொல்லவேணுமென்று நினைத்தால் அவன்செய்கின்ற தியானத்தினாலே நாம்விடுகின்ற ஆயுதங்களெல்லாம் நம்மையேயெதிர்த்து பகைத்துக்கொள்ளுகின்றது ஆதலாலிந்த சமாச்சாரத்தை மகாராசராகிய இரணியபூபனுக்குச் சொல்லுவோம் போவோம்வாருங்களண்ணமாரே

மல்லர்கள்சொல் விருத்தம்

இ-ம்-மோகனம்

தரணியீரேழுங்காக்குந்
  தவளவெண்குடையாய்போற்றி
இரணியவேந்தேயின்னம்
  யெங்களைவிடுத்தீரானால்
மரணமேசித்தியாகும்
  வலித்துபார்த்தபின்வந்தோம்
கருணையான்மைந்தன்சேதி
  காட்டுவோங்காட்டுவோமே

வசனம்

கேளும்மகாராசனே யினிமேலெங்களை மைந்தனை வதைசெய்யும் படியாய் விடுத்தீரானால் நாங்கள்வுயிர்தப்பி வரமாட்டோம்அதோகதிய டைந்திடுவோம் யெங்களால்முடியாது யிப்போது வுயிர்தப்பிவந்தே வெகுபிரயாசை அதின்விபரத்தை தெரிந்தமாத்திரம் சொல்லுகின்றோம் கேளும்பூபதியே

மல்லர்கள்சொல்தரு

இ-ம்-நாட்டை-தாளம்-அடசாப்பு

*பல்லவி

சொன்னசொன்னப்படிநாங்கள்
யென்னசெய்துமவனுடல்
துலேபாமலேவுயிர்
நிலேயாச்சே

அநுபல்லவி

இன்னமுந்தண்டனேசெய்யச்சொன்
னதினாலினிமேலே
யெங்களாலாகுமோ (சொ)

சரணங்கள்

விட்டவிட்டகணேயெல்லாங்
கெட்டுமுறிக்தேயெதிர்த்து
மேலேவிழுந்துதுயிர்தி
ஜாலவித்தையே
பட்டபாடெல்லாமுனக்குக்
கட்டுரைக்கமுடியாது
பார்த்தபோதல்லவோ
மெய்யாய்தோத்துமெர்தையே (சொ

அட்டியில்லாவுடலெழுத்து
வெட்டையும்பனிரண்டையும்
அய்யிரண்டீனாயுமாறும்
பையவோதவே
ஒட்டியிருக்கியப்பா
சக்கட்டுகளெல்லாமறுத்து
ஒன்றநாரானதுகண்டோம்
யின்றுபோதவே (சொ)

மூன்னமோதுமுயிரெழுத்தும்
பன்னிரண்டாமுடலெழுத்தில்
முன்னெழுத்தைநானினுலே
யூணியோதியே
அன்னவன்பிரகலாதன்
வுன்னும்போதுபடையெல்லாம்
அழலின்முன்போட்டுவைத்த
விழலின்சோதியே (சொ)

கைமுறிச்தோங்கால்முறிச்தோ
மறைத்திடும்போதுகலக்
காண்முறிக்கதுஞ்சொல்லவேணுமோ
பொய்யோஅயயனே
அதனுலேநாங்கள்
கையும்வாதையிலும்நீரே
ஆக்கினைசெபவதேதல்ல
யோக்கியமெம்பனே (சொ)

அண்டாண்டபுவனமும்
யெண்டிசையுமகண்டமும்

மாண்டருளிநெடும்புகழ்
பூண்டதேவனே
தண்டருள்மணிமாபா
சண்டையுத்தண்டகெம்பீரா
சரணமுந்தன்சரணமெங்க
ளிரணியவேந்தே (சொ)

பொதுவிருத்தம்

இ-ம்-கேதாரம்

வடித்துவடித்திந்தவகைமல்லர்கூர
வாயூடுஞ்செவியூடுமூக்கினூடும்
பொடித்தகனல்வழிந்தொழுகுங்கண்ணினூடும்
புகையெழும்பிஅண்டமெல்லாம்பரந்துவிம்ம
துடித்தகனாளெழும்புப்புகையோவென்று
சுருதிநான்முகனுமனத்தெண்ணங்கொள்ள
இடித்தயிடிப்போல்வாயுமுளரியாத்து
வெழும்பினனிரண்யனெஞ்சப்புழுங்கினனே

வசனம்

இந்தப்பிரகாரமாக மல்லர்கள்வந்துதங்கள் குறையைச்சொல்லிமுறையிட்டமாத்திரத்திலே வாயிலும்செவியிலும் மூக்கிலும்கண்களிலும் புகையானது குபுகுபுயென்று யெழும்பி அண்டகடாகத்தில் முட்டி சத்திய லோகத்திலே விளங்காநின்ற பிரமதேவனானவன் யிதென்ன யுகாந்தகாலத்திலே ருத்திரமூர்த்தி சகலபிரபஞ்சங்களையுஞ் சங்காரஞ் செய்து யெரிக்கின்றபோது யெழும்பாநின்றபுகையோ யிதுவென்று ஆச்சரியங்கொள்ளும்படியாய் இடி இடித்தாற்போல்வாய் விட்டு கற்சித்து இரணியன் புலம்புகிற விருத்தப்பாடியென்றால்

இரணியன்சொல்தரு

கண்டா-தாளம்-ஆதி

கண்ணிகள்

துற்சனப்பிள்ளையாலே
மூச்சகமும்பணியும்
துலக்குமென்கீர்த்திக்கு
கெடாச்சேஅய்யோ
கொச்சையில்லாகுலத்தை
நிச்சயமாயழிக்கும்
கோடாலிகாம்புபோல்
வாச்சுதேஅய்யோ
நண்டுசிப்பிவேய்கதலி
கொண்டகருவாலது
நாசமாகுமேயென்ற
வகைப்போலேஅய்யோ
துண்டனிவனுலெந்த
மண்டலமும்பாவி
சொல்லும்போழித்தானே
யினிமேலேஅய்யோ
அமரர்முதலல்லோர்க்கும்
விமலனெயவனைக்
கவமான்மிவனுலே
வரலாமோ அய்யோ
சமையுமென்னுண்மைக்கஞ்சி
நிமிஷத்திலேயொளிக்குஞ்
சதிமூவர்கேட்டால்
தாலாமோஅய்யோ

கொல்லுவேனென்றபோது
பொல்லாதென்றேவிலக்கி
கூறும்லீலாவதிக்கும்
பகையாச்சே அய்யோ
நல்லதென்றுங்கேளாமல்
கொல்லுமென்றேநகைமை
காரியற்குமெத்த
நகையாச்சே அய்யோ
கடலுமல்லரும்பாம்பு
மிகுகனிருநெருப்பும்
கரியமால்தனக்குற
வாய்போச்சே அய்யோ
நெடியகல்காண்மூ
டடியோடோமுறிந்துதே
நினைத்துக்கொண்டாலிது
பெருமூச்சே அய்யோ

இரணியன்சொல்விருத்தம்

இ-ம்-மத்தியமாவதி

அன்னூராயிரங்கோடி
அமைச்சரோகேளுமிந்தச்
சின்னதோர்பையனாலே
சேதமென்னுயிற்காமென்று
யென்னிடமனதிற்றோணு
திவன்றனைக்கொல்வதற்கு
மன்னும்யோசனையிப்போது
வகையுடன்சொல்லுவீரே

இரணியன்சொல்தரு

இ-ம்-மோகனம்-தாளம்-ஆதி

பல்லவி

வாருங்கள்மதிமந்திரிமார்களே-இவனை
மடிக்கவேவகைசொல்லுவீர்களே

அநுபல்லவி

பாருங்களிவன்மாயன்
பேருமூருஞ்சொல்லிப்
பழித்தானேவொழித்தானே
பகைத்தானேமிசத்தானே (வாரு)

சரணங்கள்

படையெல்லாமிவன்மார்பில்விடவிடமறைந்துதே
பாணமுமறைக்குங்கல்காணமுமழிந்துதே
விடமெல்லாமழுதாச்சேகடலெல்லாந்திடலாச்சே
வீணாச்சோணாச்சேவீறாச்சேதூறாச்சே (வாரு)

தேவர்கள்கைசெய்யலாவதுமாச்சுதே
திருமாலேயிவனாலேபரமாகிப்போச்சுதே
பாவியுயிரைக்கொல்லயாராலுமில்லையே
பாடாச்சேகேடாச்சேபழியாச்சேயிழிவாச்சே (வாரு)

அளந்தாலுமொருசாணுவளந்தாலுங்காணுமோ
அவன்சொல்லேமெய்யாகத்துவந்தணைத்தோணுமோ
தளங்கொண்டுவயித்தியக்களங்கொண்டுஜெயிப்பதோ
சுக்கியமோமுக்கியமோதருமமோகருமமோ (வாரு)

மந்திரிகள்சொல்விருத்தம்

இ-ம்-மத்தியமாவதி

தயவிதில்மனஞ்செல்லாமல்
தரணியையாண்டமன்று

செயமதுண்டானபோது
நீங்கொருநாளுமில்லை
பயமதுண்டானபோது
பணிந்தவாபகைவாரவர்
இயலுடன்கண்டுணாக்க
யெந்தனலாகாதையா

வசனம்

தயவினிலுந்தாட்சணியத்திலு மனதுசெல்லாமல் யித்தாணியை யாண்ட மகாராசேனேகேளும் வுலகத்தில் ஜெயமூண்டானபோது பய மொன்றுமில்லை பயமது வுண்டாகுங் காலத்தில் நம்மைப்பணிந்தவருக் கு நாம்பணிந்து பயப்படுவதாகும் ஆதலால் இதைகண்டுணாக்க யெந்த னல் முடியாதையாசுவாமி

இரணியன்சொல்விருத்தம்

இ-ம்-தேசிகதோடி.

யெதிரியாரொந்தனுக்கு
யிகமத்தியமந்தரத்தில்
யெதிரிலாதுலகையாண்டே
னென்வயத்துதித்தபையல்
யெதிரிபேருரைக்கவந்தா
னிவனையென்செய்வோமென்றால்
யெதிரியாய்ப்பேசவந்தா
யினியுன்னைவதைசெய்வேனே

வசனம்

வாருங்கள்மந்திரிமார்களே இந்தயிகமத்திய அந்தரத்திலும்யெட் சகர் கின்னரர்-கிம்புருடர் காந்தருவர் முதலான பதினாலுலோகத்திலும் யெனக்குச்சத்திராதிகளில்லை அப்படியிருக்க நம்மிடவயத்தில் பிறந்த பையல் யென்னிடப்பெயர் சொல்லாமல் யென்யெதிரியின் பெயரை சொ

லீனுகின்ருன் யிப்பேற்பெற்கொர்நலினை யென்னசெய்பலாமென்றுகே ட்டால் நீங்கள்தானே யெதிரியாயப்பேசுகின்றீரல்லவா ஆ ஆ ஆ ஆ கன்றுயிருக்கின்றது துன்முகமந்திரிவுன்னை யிந்தவாளினாலே இரு ண்டாக வெட்டிப்போடும் படியான கோபம்வருகின்றது நல்லதாகட்டு மந்திரிகளே

மந்திரிசொல்விருத்தம்

இ-ம்-பந்துவராளி

மதிகதிர்மண்ணும்விண்ணு
மயங்கிபோய்நிங்கியேங்க
வதைசெய்வேனென்று
திரும்வாள்கையிலெடுத்தீர்மன்ரு
யெதிரிலாக்கோபம்வேண்டாம
யென்கையிலிவனைக்கூட்டி
கதியிலாநரகிற்றள்ள
கட்டளையிடுகுவீரோ

வசனம்

இந்தசந்திரசூரியாக்கள் வானம்பூமியாவும் நடுங்கியேங்கயெங்களை வதைசெய்வேனென்று கையில்வாளைப்பிடித்து யிரணியேய்ஸ்பரா நாங் களசெய்தகுற்றத்தை மன்னித்துரட்சியும் இப்போது யெதிரியில்லாம ல் கோபம்வேண்டாம் யிந்தபாலனை யெமனிடத்தில் வொப்பினைத்துக தியில்லாதநரகக்குழியில் தள்ளிவரும்படியாய் கட்டளைசெய்வீர்மகார சனே

இரணியன்சொல்விருத்தம்

இ-ம்-சங்கராபரணம்

அக்கினிக்கண்ணுறிக்க
அனல்கண்ணுடுகைக்குங்கண்ணு
திக்கெலாந்செயித்துவந்த
ந்ேதிரணிரக்கண்ணுகேளாய்

இக்கணஞ்சென்று அந்த
யெமனை நானழைத்தேனென்று
தக்கதோர கொலுவுக்கிப்போத
வன்றனை அழைத்துவாரீர்

வசனம்

ஆரடா அடாகாவலாளிகளே அடா அக்கினிக்கண்ணு அடா அன ல்கண்ணு அடா புகைக்குங்கண்ணு அடா திக்குவிஜையம் பெற்றசிரோ ணிதக்கண்ணு இங்கேவாருங்கள் அடாநீங்கள் இந்தட்சணமே போயி யெமன்றனைக்கண்டு நானழைத்ததாகச்சொல்லி அதிகசீக்கிரமத்துக்கு ள் அழைத்துவாருங்கள் காவலாளிகளே

பந்திரிசொல்விருத்தம்

இ-ம்-பைரவி

கடினமாயேவல்செய்யுங்
கஞ்சுகிசொல்லக்கேளாய்
படியினைதன்னிலந்தப்
பையலைக்கொல்வோமென்றால்
கொடியவல்லாயுதத்தால்
குறைந்திடாதிவனைக்கொல்ல
கெடியதோரெமனைத்தானும்
நிமிஷத்திலழைத்துவாராய்

வசனம்

அடாவாடாகஞ்சுகி இந்ததிரிலோகாதிபதியான யிரணியமகாராச ன் அழைக்கிறானென்று அந்தயெமனை அதிகதுரிதத்திலழைத்துவாரு ம் பிள்ளாய்கஞ்சுகி

கட்டியன்சொல்விருத்தம்

இ-ம்-கல்யாணி

கடினமன்னவனுர்
அடியிணைப்போற்றி
துடிபடவெமனை
கொடியினிலழைப்பேன்

கட்டியன்சொல்விருத்தம்

இ-ம்-ஸர்துமாயக்கிரியை

தெண்டிசைக்குரிய
சண்டனேவுன்னை
கண்டகரழைத்தா
ரிண்டுநீவருவாய்

பொதுவிருத்தம்

இ-ம்-பந்துவராளி

இண்டிடித்ததுபோல்சீறி
யிரணியமன்னனை
கண்டகனழைத்தாரொன்று
காவலனுரைத்தபோது
தெண்டிசைதன்னிற்கேட்டு
தினகரன்குமாரனை
சண்டனும்கடுக்கமுற்று
ஐனுதியாய்வருகின்றுனே

எமன்வருகிறதரு

இ-ம்-ஆனந்தக்களிப்பு-தாளம்-அடசாப்பு

பல்லவி

எமதர்மராஜன்வந்தானே கீர்த்தி

அநுபல்லவி

யவையுமிரண்ய்பூபன்சமூகத்தில்தானே (எமதர்ம)

சரணங்கள்

இளம்பிறைப்போலவேபல்லும்மண்ணி
லெவ்வுயிராயும்வாயால்கவ்வியேமெல்லும்
தளங்கொண்டயிடிபோலேசொல்லும் இந்த
தரணியிற்கொடியோனாதர்மத்தால்வெல்லும் (எம)

எருமைக்கிடாவினிலேறி-நம்மை
என்னத்துக்கழைத்தானென்றெண்ணியேகூறி
கருமலைப்போலவேமீறி நின்ற
காலமாசமூர்த்தெண்டுஞ்சூலமூர்த்தேரி (எம)

அங்குசமவாளுடனீட்டிவேலு
மணிபழுவளைதடிதுணிவுசெய்தோட்டி
கிங்கிலியரவனைக்கூட்டி யெங்கும்
கெடிகொண்டயிரணியன்கொடியைப்பாராட்டி (எம)

எமன்சொல்விருத்தம்

இ-ம்-தோடி

இரணியராஜபூபா
பிணையடிசரணமையா
திரமுடனுந்தன்பாதஞ்
சென்னிமேற்சூட்டிக்கொண்டு
அருள்பெறும்காயேன்றன்னை
அன்புடன்பொருளாயெண்ணி
வரவழைத்திட்டசேதி
வாய்மலர்ந்தருள்செய்வீரோ

வசனம்

சரணஞ் சரணமையா சுவாமி யிரணியேஸ்வரா அடியேனை பொருபொருளாகயெண்ணி அழைப்பித்தகாரியத்தை இன்னதென்று தமது திருவாய்மலர்ந்து சொல்லவேணுமையாசுவாமி

இரணியன்சொல்விருத்தம்

இ-ம்-ஆனந்தபைரவி

நல்லதுசொன்னாயேமா
நான்சொன்னமொழிகேளாத
புல்லியசிறுவன்றன்னைப்
பிடித்துங்கட்டிக்கொண்டு
சொல்லியரவுரவாதி
தோதகநரகிற்தள்ளி
எல்லையில்லாதகாலம்
மருஞ்சிறைப்போடுவாயே

வசனம்

வாரும்பிள்ளாய் யெமதர்மராஜனே இப்போது நமக்குமகாசந்தோஷமாச்சுது இந்தப்பிரகலாதனைப் பிடித்துப் பாசத்தினாலேகட்டிக்கொண்டுபோய் ரவுரவாதி நரகத்தில் தள்ளிப்போடும்பிள்ளாய்

எமன்சொல் விருத்தம்

இ-ம்-காட்டை

தேவரீர்தவம்போல்முன்னாள்
செய்திடுதேவத்தினாலே
பூவலையத்திலுள்ளப்
பொருளினிலொன்றுஞ்சாகான்
காவலன்றன்னைநாயேன்
கட்டியேபோகலாமோ
பேவினதெல்லாங்கேழ்ப்பே
னென்செய்வேனெளியேனானே

வசனம்

கேளுமையா சுவாமி இரணியேஸ்வரா தேவரீர்வொன்றிலுஞ் சாவில்லாமல் வெப்படிவரம்பெத்தீரோ அதுபோல் முன்னாளிலே வொன்றிலுஞ்சாவில்லாமல் வரம்பெற்றவனைப்போல் தோணுகின்றது ஆகையால்நான்யிந்தப்பிரகலாதனை வெந்தவிதத்திலே கட்டிக்கொண்டு போவேன் இப்போது தேவரீர் வெப்படிக்கி ஆக்கியாயிக்கின்றீரோ அப்படியே நடத்துக்கொள்ளுகின்றேனையாசுவாமி

இரணியன்சொல்விருத்தம்

இ-ம்-மோகனம்

உக்தனாலானமட்டு
முபாயங்கள்செய்துப்பார்த்து
தந்திர மூடினேகட்டி
தகைத்துநிபிடித்துக்கொண்டு
அந்தவஞ்சகனைப்பொல்லா
அருநரகத்திற்தள்ளி
விக்கையாய்நல்லசேதி
வந்தெனக்குறைத்திடாயே

வசனம்

வாரும்பிள்ளாயேமா இந்தபொல்லாததுஷ்டனை வுனனாலே யாகை துர்விதவுபாயத்தினாலே பிடித்துக் கட்டிக்கொண்டுபோய் ரவுரவாதிநரகத்திற்றள்ளிபின்பு அந்தசமாச்சாரம்நமக்கு அனுப்பும்பிள்ளாயேமா

எமன்சொல்தரு

இ-ட்-பைரவி-தாளம்-ஆதி

இந்தவிதியெனக்கென்று
வந்ததென்ருல்நானினி
யென்னசெய்குவேன்
ஐயையோ

தந்தரமுடனேபிடித்து
வந்தனூரில்போறென்று
காட்டி யென்னை வோட்டினானே
ஐயையோ

அந்தமுநிமார்க்கண்டனால்
சுந்தரசேகரனுதைப்புண்
ணரிவமொறலியே
ஐயையோ

பிக்தியொருதுன்மதனால்
நக்திகேசுரன் றன்னாலே
பெத்தபேருமெத்தவுண்டே.
ஐயையோ

சக்கிலிப்பெண்ணைப்புணர்ந்த
முக்கியவரசர்மன்ன
தன்னாலேமுன்னாலே
ஐயையோ

உக்கிரகிங்கிரர்பட்டு
யிக்குவலையங்களிலே
ஓடுமிடக்தேடியுங்காணேன்
ஐயையோ

பண்டுமுனிதுருவாசன்
தொண்டனம்பரிடனாலே
பட்டதுயர்மட்டுமிதமோ
ஐயையோ

அண்டருலகப்பிசுப்பும்
யெண்டிசையுமொடியிடர்

ஆனதும்கானழிவேனே
ஐயையோ

மூப்புராப்புணர்ந்தபரதற்
கிடைாவுனதுமுழு
மூடனுனவேடனையும்
ஐயையோ

தற்பரனுரணிகொண்ட்
கற்பனுவல்பாகவதஞ்
சாத்துங்கதைப்பார்த்ததுண்டோ
ஐயையோ

அண்டரபெருமான்
சரணத்தொண்டர்கள்பெருமகிமை
யாராலுந்தேரவசமோ
ஐயையோ

கண்டயிரணியனென்னைக்
கொண்டுபோகச்சொல்லிவிட்ட்
காரியமும்வீரியமாமோ
ஐயையோ

ஆண்டவனமைத்திரம்
பூண்டவர்மனக்கோணினால்
அண்டபிண்டமண்டலமெல்லாம்
ஐயையோ

இண்டன்கலங்குமென்றுவென்று
மறைசொல்லுமொழி
ராகிவேறுகி
ஐயையோ

வெய்யனிரணியற்கஞ்சி
பொய்மனதுகொண்டுவாரோன்
வெங்கோபந்தங்காமலே
ஐயையோ

பையரவமேற்றுயின்ற
அய்யனேயென்னையிப்போது
பட்சமுடன் ரட்சிக்கவேணும்
ஐயையோ

பொதுவிருத்தம்

இ-ம்-கல்யாணி

மாலியக்தவிதம்புலம்பிப்பின்றுமக்த
மைந்தனிருப்பிடங்கண்டாயந்துசூழ்ந்த
விரலுடநாரணமந்திரகோட்டைகண்டான்
விளங்கியசக்கரங்கண்டான் கமலமேவும்
இறைவனுருதோத்தமதில்கண்ணிக்கண்டான்
இலங்குமதிசையம்வேணதல்லாங்கண்டான்
சிரமுளசிங்கிரவதனநதன்னைப்பார்த்து
சிந்தைமகிழ்ந்தேயுகந்துசெப்புவானே

வசனம்

இந்தப்பிரகாரமாக யெமதர்மராஜனனவன் புலம்பிக்கொண்டு பிரகலாதன சுவாமியிருக்குமிடத்திலே வந்து பாக்கும்போது அங்கங்கே ஸ்ரீநாராயண மந்திரத்தினலே கோட்டையும் சங்குசக்கரத்தினலே காவலும நாராயணனைப்போல் திவ்வியமாகிய ரூபமும் இன்னமநேக்மான அதிசயங்களுங்கண்டு நிற்கின்றசமையத்திலே பிரகலாதன சுவாமியானவர் சொல்லுகின்றனிதங்காண்க

பிரகலாதனன்சொல்

கொச்சகம்

காலாகாலங்கடர்ந்தக்
காட்சியற்குங்காட்சியதாய்
மேலானதத்துவமாய்
மேவுஞானமுமாய்
சாலோகசாமீப
சாரூபசாயுச்சியமென்னும்
நாலாம்பதமாகும்
நாராயணனமே

பிரகலாதனன்சொல்தரு

இ-ம்-சோகவராளி-ஏகதாளம்

அகிலாண்டகோடிபிர்மாண்டநாயகாசரணம்
நித்தியானந்தநிற்மலரூபாதயாநிதிசரணம்
சகலஜனரட்சகதற்பரநாராசரணம் மிக்க
தத்துவமுடிவினிலற்புதமானவாசரணம்
பக்தபாரதீனபாபவிமோசனசரணம் ஹரி
பங்கஜலோசனமங்களசுபகராசரணம்
சுத்தபவுத்திரஅகளங்காநிற்மலாசரணம் ஜக
ஜோதியானந்தநாராயணஹரிசரணம்

எமன்சொல்விருத்தம்

இ-ம்-மோகனம்

றவுரவாகும்பிப்பா
கார்த்தபரணவதரணி

கலைசேர்விந்துபாணு
கடியசூசரவுகந்தா
கமிருகிரிமிபோசா
கவிசுவகிதனுயிந்த
உவமையிலதிசயத்தை
உத்திரீர்பார்த்திடரோ

வசனம்

அடாவாரும்பிள்ளாய் ரவுரவா அடாகும்பிபாகா அடாசத்தூபாணு அடாவைதரணி அடாவிந்துபாணு அடாசூகாமுகா அடாவுகாந்தா அடாகிருமிபோசனு அடாசுவிதனு இந்தபிரகலாதன சுவாமியைச்சூழ்ந்து கொண்டிருக்கின்ற கோட்டையைப்பாரத்தீர் சளாசங்குசக்கரங்காவலாயிருக்கின்றதும் பார்த்தீர்களா ஸ்ரீமன்னாராயணனைப்போல் திவ்வியரூபமும் இன்னம் அனேக அதிசையங்களையும் பாருங்கள்பாருங்கள்

எமன்சொல்தரு

இ-ம்-பியாகு-தாளம்-அடசாப்பு

கண்ணிகள்

கீட்டிசைவாசலிலேபிணைவங்காட்டுங்
கொத்தளம்பாராய்
தாட்டித்தென்கிழக்கில்கராக்கீட்டுங்
கொத்தளம்பாராய்
தெண்டிசைவாசலிலேடகாரக்தூாஸ்டுங்
கொத்தளம்பாராய்
ஒன்றாகிருதிமூலைககாரஞ்சென்றுங்
கொத்தளம்பாராய்
மேற்றிசைவாசலிலேககாரந்தோத்துக்
கொத்தளம்பாராய்
காற்றுருபெருமூலையகாரம்போத்துங்

கொத்தளம்பாராய்
வடதிசைவாசலிலேகோரம்படியுங்
கொத்தளம்பாராய்
அடவுசெய்வடகிழக்கில்பகாரக்குடிசை
கொத்தளம்பாராய்
சங்குசக்கரங்காவல்கீழ்வாசல்பொங்கிய
வெழிலையும்பாராய்
செங்கண்மாலணிதொண்டன்தென்வாசல்தங்கிய
தொழிலதைப்பாராய்
காதண்டம்வளைத்தெய்யமேல்வாசலில்
கோதண்டம்நிலைப்பாராய்
ஒதஞ்செயகூரயில்வாள்வடக்குவாசல்
நிதஞ்செய்நிலைப்பாராய்
மாதவன்குறிகளெல்லாமருள்பிரக
லாதனுருவம்பாராய்
வேதப்பொருளாகுமிவனின்வாயில்
வோதியப்பொருள்பாராய்
மாலரிதுயில்போலேயிவன்யோக
கோலத்தின்பொருள்பாராய்
இப்படியானத்திலேமல்லரோ
வெப்படிப்போவோமே
தப்பியேயோடுவதேமல்லரோ
கற்பதம்பெறலாமே
அல்லவென்றேபோனால்நம்மையெல்லாங்
கொல்வதுமெய்யாமே
நல்லவற்கிடர்நினைத்தோர்பெரும்வாழ்வு
நில்லுமோநில்லாதே

மல்லர்கள்சொல்விருத்தம்

இ-ம்-ஆசாவேரி

புவிதனிலுள்ளோர்செய்யும்
புண்ணியபாவங்களெல்லாம்
அவமிலாமலேயெடுத்து
அண்ணலேசொல்லக்கேளீர்
மவுனமாய்த்தவஞ்செய்வோரு
மைந்தனைப்போலேயிந்த
குவலயந்தன்னில்காணோம்
கொற்றவாயெங்கள்கோவே

வசனம்

சரணஞ்சரணமையா சுவாமி யெமதர்மராசனேஇந்தலோகாதிலே கத்திலே யிப்பேர்ப்பட்ட தவங்கள்செய்த பேர்களையுந் தர்மஞ்செய்தப் பேர்களையும் நாங்கள் கண்ணால்கண்டதில்லை அய்யாசுவாமி

எமன்சொல்விருத்தம்

இ-ம்-மத்தியமாவதி

மண்டலங்கடுங்கவாழு
மல்லரேசொல்லக்கேளீர்
மண்டுமாமறையேயோதும்
பாலகன்முகத்தைப்பார்த்து
தெண்டனிட்டிறைஞ்சியேமன்
திருவடிதலைமேற்சூடி
இண்டவன்போனானென்று
யிரணியற்குரைத்திடரே

வசனம்

வாருங்கள்மல்லர்களே பிரகலாதனென்னுங் குழந்தைசெய்கின்ற நியானத்தினாலே யெமன்கண்டு நடுக்கமுற்று வோடிப்போனானென்று வுங்கள் மகாராசனுக்குச் சொல்லுங்கள்மல்லர்களே

மல்லர்கள்சொல்விருத்தம்

இ-ம்-நாட்டை

அரனரிவானோரஞ்ச
 அமர்செய்துவென்றதோளாய்
குறையிலோமறையேயோதுங்
 குமாரன்செய்யரிகாமத்தால்
மாலிதானடுநடுங்கி
 வணங்கியேயோடிப்போனான்
இறைவனேயிக்தசேதி
 யியம்பினோந்தேவரீர்க்கே

வசனம்

சரணஞ் சரணமையாசுவாமி இரணியமகாராசனே பிரகலாதனனிடத்தில் போய்குத்திபிரதட்சணம்வந்து நமஸ்காரஞ்செய்துப்போட்டு நடுக்கமெடுத்து ஓடிப்போய் விட்டானையா சுவாமிமகாராசனே

இரணியன்சொல்விருத்தம்

இ-ம்-தேசிகதோடி

குன்றுமுருநெருப்பாலுமலையினாலுங்
 கொடியானையினாலும்விஷத்தினாலும்
இன்றமுருகறக்காணத்தாலுஞ்சாகா
 திருப்பையல்தனையெமனக்கொடுப்போவென்றுஞ்

தன்மூமுமுமாலியும்வஞ்சனையேசெய்தான்
தக்கவனையேபிடித்துசிறைபோடுங்கள்
கொண்டுவந்துயென்முன்னோஞ்சையூட்டிக்
கொடுஞ்சமட்டிக்கொண்டடித்துக்கொல்லுவீரே

வசனம்

ஆ ஆ ஆ ஆ வாருங்கள் மல்லாகளே இப்போது யெமனும் வஞ்சனைசெய்து வோடிப்போய் வி[illegible] [illegible] [illegible] அந்த[illegible] னைப்பிடித்துவந்து சிறையிலேபோட்டு வையுங்கள் இப்பவும் அந்தபையலே யென்முன்கொண்டுவந்து அவனுக்கு நஞ்சைகொடுத்துஆயிரம்பேர்மல்லர்கைகளில் சம்மட்டிபைகொடுத்து அடியேலடி அடித்து கொல்லுங்கள்மல்லர்களே

மல்லர்கள்சொல்விருத்தம்

இ-ம்-பக்துவாரளி

தேவர்கள்முநிவாஞ்சத்
திகழிரணியனுஞ்சிறி
கூவியேவுரைத்தசொல்லால்
குலேயெல்லாம்நடுங்குஇப்போ
தாவியேசம்மட்டிவாஞர்
தகமையாயெடுத்துக்கொண்டு
பாவியாயிரம்பேர்மல்லர்
படபடென்றேடிவாரீா

மல்லர்சொல்விருத்தம்

இ-ம்-செஞ்சுருட்டி

துட்டரோய்யாசன்
கட்டளைப்படிக்கு

ஒட்டிவன் தலையில்சம்

மட்டிகொண்டடிப்பீர்

பிரகலாதனன்சொல்

கொச்சகம்

கொண்டல்வும்மந்திரத்தை

கோலமுறுமத்தாக்கி

வேண்டிரல்சேர்வாசுகியே

வோங்குங்கயறுக்கி

தெண்டிரைநீர்தாழியினில்

சேர்த்துக்கடைந்துவந்து

அண்டருக்கமுதளித்த

அச்சுதனேயெங்கோனே

பிரகலாதனன்சொல்-தரு-இ-ம்

காதராமக்கிரியை-தாளம்-ஆதி

கண்ணிகள்

அண்டருக்கமுதளித்த

அச்சுதனே நஞ்சைக்

கண்டகருண்ணசொன்னரே

அச்சுதனே

யெம்மட்டுத்தயவில்லையோ

அச்சுதனே தலைமேல்

சம்மட்டியால்மோதுராரே

அச்சுதனே

இந்தவிதிக்கென்னசெய்வே
னச்சுதனே மனம்
கொந்துகலங்குவேனே
அச்சுதனே

பரதகர்கையினிற்சிக்கி
அச்சுதனேபொல்லா
வாதனைக்கிடமானேனே
அச்சுதனே

மல்லர்விடுட்படையெல்லாம்
அச்சுதனே அன்று
புல்லெனவேசெய்து
வைத்தாய் அச்சுதனே

மூந்துமலைமேலுருட்ட
அச்சுதனே உடலை
பந்துபோலேபண்ணிவைத்தா
யச்சுதனே

செந்தழலில்தள்ளும்போது
அச்சுதனேஅதை
சந்தனம்போலாக்கிவைத்தா
யச்சுதனே

கஞ்சளிக்கும்பாம்புதன்னை
அச்சுதனே யெனக்கு
தஞ்சமூதளிக்கவைத்தா
யச்சுதனே

கொல்லவந்தயானைதன்னை
அச்சுதனே யெனக்கு

நல்லவணக்கஞ்செய்துவைத்
தாயச்சுதனே

அலைகடலில்தள்ளும்போது
அச்சுதனேயெனக்கு
மலையுங்கப்பலாகச்
செய்தாய் அச்சுதனே

தீதொன்றுமில்லாமல்
காத்தாயச்சுதனே நா
னேதுபகாரஞ்செய்தே
னச்சுதனே

செக்கிலெனையாட்டும்போது
அச்சுதனே உடல்
நைக்கவேயில்லாமல்
காத்தாய்அச்சுதனே

சண்டனவந்தபோதே அரி
அச்சுதனேயெனக்கு
தெண்டனிட்டுப்போகச்
செய்தாயச்சுதனே

பிரகலாதனன்சொல் விருத்தம்

இ-ம்-பியாகு

எழுவேன்றமியேன்மனத்துருகி
மயவேனிறைவாந்திருநாமம்
தொழுவேனெழுகாதிருகாத்தான்
றுதிப்போனைவாற்றுணையடிக்கீழ்
விழுவேனுபயபதத்தெளியேன்
விழிமேற்கண்ணீர்சொரிந்திடச்சோர்ந்
தழுவேனழுவாக்கதிபெறவே
அய்யாவடியேனைக்காப்பாயே

பிரகலாதனன்சொல்விருத்தம்

இ-ம்-முகாரி

மெய்யாவினைகளொருகோடி
சிறியேன்செய்துமிகுத்ததனல்
செய்யாகியதேவனதுபத
மேவாதிருந்தேன்வீணனாய்
பொய்யாகியபேருடலதனைப்
புகழ்ந்தேனற்பாபபொருளெனவே
ஐயாதுய்யாகதிபெறவே
அன்பாவென்னைக்காப்பாயே

பிரகலாதனன்சொல்விருத்தம்

இ-ப்-சஹானா

விரிவாகியபேருலகமதின்
மேதாவியர்சொற்சாத்திரத்தை
பரிவாய்ப்படித்தேன்பயனுணர்ந்து
பதமேற்பணிந்தேன்பலன்பெறவே
குருவாய்நீவந்தெனதுகுறை
குறைபத்தீரத்தாள்குணமுடையாய்
அருவாய்வருவாய்கதிபெறவே
அரங்காவடியேனைக்காப்பாயே

பிரகலாதனன்சொல்விருத்தம்

இ-ப்-சோகவராளி

ஆருறவுயாருதவியாருதுணையாருபகை
யம்புவியிலெந்தனுக்கு
ஐம்புலனொடுங்கியேயுன்பதம்வணங்கவே
அறிவெனுந்தீபமேற்றி
சேருமிடமேயறிந்தென்னைச்செறித்துலகில்
திவவியசப்பன்னவாழ்வும்

தேசசமயங்களும்பலமனிதர்செய்கையுஞ்
சிந்தைதனில்யான்மறந்து
பாருலகிலுன்னிருபதாம்புயத்தடிமையாய்ப்
பணிபிற்பணிந்தேற்றவும்
பத்திவிசுவாசமாய்நம்புமடியேனுடைய
பழவினைதொழித்தாளவும்
மேருநிகரானபுஜகருடன்மூதுகேறியென்
விழிக்கெதிரொழுந்தருளுவாய்
வேதாவையீன்றருட்சிதாபிராமனே
மெஞ்ஞானஜோதியயமே

பிரகலாதனன்சொல் விருத்தம்

இ-ம்-சங்கராபரணம்

பொல்லாதவேளையோசொல்லாதகாலமோ
பூர்வம்யான்செய்தவினையோ
பூதபேதத்தில்வளர்மாமாயையாசையாற்
பொய்யானவாழ்வைநம்பி
உல்லாசமாகவேவுண்பதுமூடுப்பதுவு
மோயாமலிரவுபகலும்
உறங்குவதல்லாதுனது திருநாமமந்திரத்தை
யுன்னுவதெல்லாமறந்து
எல்லாமறிந்தவாசன்போலும்வாயாற்பிதற்றி
யீடொருவரில்லையென்றே
இறுமாந்திருக்கின்றவேழையேனெனைநீ
யிப்போதுரட்சிக்கவே
வல்லாண்மையானபுயசெங்கருடன்மீதேறி
வல்வினையகற்றவருவாய்
மாயாவதாரனே சிதாபிராமனே
மாதவாகோவிந்தனே

பிரகலாதனன்சொல்விருத்தம்

இ-ம்-நாட்டை

போகபோக்கியமாகயில்லறமிருந்துன்னை
பூசைபுரிவோரனந்தம்
புலனைத்தடக்கியேமலையேறிமாதவம்
புரியுமுனிவோரனந்தம்
சேகரமதாதவேநல்லடியாராயவந்துன்
சேவைசெய்தோரனந்தம்
இக்குவேறில்லையென்றக்கரையினுன்னுடைத்
தீர்த்தங்கள்வோரனந்தம்
மோகமுடன்அஷ்டாட்சரத்தையுளம்வைத்துன்னு
மோனமுனிவோரனந்தம்
முத்திக்குயாவரும்பணிவர்யான்முழுமூடன்
முண்டகக்கரணருளவே
வாகுபெறுசெங்கருடன்மீதேறிநாயினேன்
வல்வினையகற்றவருவாய்
மாயாவதாரனே சிதாபிராமனே
மாதவாகோவிந்தனே

பிரகலாதனன்சொல்விருத்தம்

இ-ம்-பைரவி

ஆனாலுமென்கொடுமையநியாயமநியாய
மகிலத்திலென்போலிலை
அநீதமாய்மதனுக்குமனுக்கும்வாணா
ளவத்திலொப்பித்ததல்லால்

ஊனுறுமுடலைவிட்டுயிர்போகுமுன்னமுன்
னலவாப்பெரும்பதத்தை
யுருமதிஞனருளினற்கண்டுண்மைநாடா
துலைத்தபெருயாய்கையதனுல்
கானனதென்றதோரானைவப்பேய்கொண்டு
நன்மார்க்கவழிவிட்டபின்
காயினுங்கடையானகாயினேனுன் கருணை
காட்டினேநாட்செல்லுமுன்
வானடர்பண்ணடர்பணியவெங்கருடன்மிசை
வல்வினையகற்றவருவாய்
மாயாவதாரனேசிதாபிராமனே
மாதவாகோவிந்தனே

இரணியனசொல்விருத்தம்

இ-ம்-தோடி.

ஜெகமிந்தபதினாலுக்குத்
தேவனென்றெனைத்துதிக்கும்
வகைதனையறிந்துமியும்
வண்மையாயெனைத்தொழாமல்
பகையுளஅரிநாமத்தைப்
பண்ணுவதாலேயிப்போ
உகந்துவாளெடுத்துனாலோ
னுன்னைநான்கொல்லத்தானே

வசனம்

ஆ ஆ ஆ அடாவாடாபிரகலாதனே இந்தப் பதினாலுலோகத்திலு மென்னை தெய்வமென்று துதிப்பதையும் அறிந்திருக்கும் பென்னுடை

பவல்லமையும் நிதிமையும் தெரிந்திருந்தும் பென்னைத்தொழாமல்பென்னுடைய பகைவனுடைபராமத்தை தொழுவதினாலேஇப்போது வுன்னைக்கொல்ல வேண்டியதாய் வாளெடுத்துவருகிறேன் பாரும்பிள்ளாய்

பிரகலாதன்சொல்விருத்தம்

இ-ம்-பந்துவராளி

வந்ததோர் தந்தையேநின்
   மலரடிப்போற்றிசெய்தேன்
எந்தனுருமிலை ம்கொல்ல
   வெண்ணினீவந்தாயானுல்
உந்தனுலென்னைக்கொல்ல
   வொவ்வுமோவுலகமெல்லாந்
தந்துகாத்தளிக்குமாயன்
   ருனவனீயோஅய்யா

வசனம்

சரணஞ்சரணமையா யென்தந்தையாகிய சுவாமி வேதரீர்யென்னைக்கொல்ல வேணுமென்று யெழுந்தபடியினாலே சாவலோகனுயகரான நாராயணன் தானே வுன்னைப்போலே ரூபங்கொண்டுவந்தாரோ தெரியேனையா சுவாமி

தாக்கதரு-இ-ம்-கல்யாணி

தாளம்-ரூபகம்

இரணியன்சொல்

ஆரடாவுலகங்கள் படைத்தவாழித்தவர்
யானல்லால்வே றுண்டோமைந்தாவே
பாரடாமூவருமியாவருமெனையிப்போ

பணிவதுமறியாயோமைந்தாவே

பிரகலாதனன்சொல்

யெவ்வுலகங்களுமெவ்வுயிர்களுந்தானாய்
யெங்கெங்குமுளோர்குராளெங்கோவே

செவ்வையாகவேயெள்ளிலெண்ணெயும்போலுமிகந்
திகழ்பவனரிஅரியெங்கோவே

இரணியன்சொல்

யெங்கெங்குமேயுனக்குந்
தங்கியஅரியானால்
யென்முன்னேகாட்டுவாய்
மைந்தாவே

பிரகலாதனன்சொல்

யென்கண்ணில்பாற்பதற்கு
யெங்குமிருக்குமண்ணல்
வுன்கண்ணில்காண்பானோ
யெங்கோவே

இரணியன்சொல்

யென்முன்கண்டாலல்லோ
வுன்சொல்லுமெய்யாகும்
பேன்வீணேபிதற்றாய்
ஜமைந்தாவே

பிரகலாதனன்சொல்

பிதற்றாயென்றந்த
மதத்திலேசொன்ன
பேச்சுக்குள்ளிருக்குரா
னெங்கோவே

இரணியன்சொல்

பேச்சிலிருப்பானானால்
வாச்சயிந்தத்தூணிலும்
பிரியாமலிருப்பானோ
மைந்தாவே

பிரகலாதனன்சொல்

தூணிலும்துரும்பிலும்
சொல்லிலும்பின்னுமெங்கும்
காணவுங்காண்பாய்கா
ணென்கோவே

இரணியன்சொல்

காணவுந்தூணிலே
காணாமல்போனாலுந்தன்
வாளாலேநான்கொல்வேன்
மைந்தாவே

பிரகலாதனன்சொல்

கொல்லவொன்றாலாகுமோ
வல்லவன்காணாவிட்டால்
வல்லுயிர்யானேமாய்ப்பே
னென்கோவே

இரணியன்சொல்

மாய்ப்பேனென்றுரைத்தாயுன்
மனதிலேயமில்லாமல்
மாயன்காணமாட்டானோ
மைந்தாவே

பிரகலாதனன்சொல்

காணாமல்போனாக்கால்
வாழ்விறுக்கிச்சைசைத்து
வீணவன்தொண்டனானேனே
வென்கோவே

இரணியன்சொல்

தொண்டனாவுன்னையும்
அரியையுந்தூணிலே
கண்டால்நான்விடுவேனோ
மைந்தாவே

பிரகலாதனன்சொல்

விட்டிடுவேனென்றால்
சுட்டிடும்நெருப்பினைத்
தருமம்பாலென்னசெய்யலாம்
வெங்கோவே

இரணியன்சொல்விருத்தம்

இ-ம்-சங்கராபரணம்

பேருருமூலகுள்ளோரும்
வென்பெட்ரோத்திவாழ்வார்
மூவர்களானபேரும்
முனிவர்கள்முதலாயுள்ளோர்
தேவரோயல்லால்வேறே
செப்புதற்கொருவருண்டோ
கோவமேவருகுதுன்னை
கொண்ணுநான்திண்ணுவேனே

வசனம்

அடாவாடாபிரகலாதனு வுலகத்தோர்க்கும் மும்மூர்த்திகளுக்கும் தேவர்களுக்கும் முனிவாமுதலானபேர்களுக்கும் நானே தெய்வமென்றுவென்னை யெவ்வேளையுந் தோத்தரித்து பிரார்த்தனை செய்துக்கொண்டு யிருப்பது முனக்குத் தெரியும்நீயும்யென்னைத்தொழாமல்வேரொரு தெய்வமென்றுசொன்னு யல்லவா ஆகையால் ஆ ஆ ஆ ஆ யிப்போது வுன்னுடைய வுயிரைக்கொண்ணு பட்சணஞ்செய்யவேண்டி யெனக்கு மிகுந்தகோபம் வருகுதுபாரடாபயலே

பிரகலாதனன்சொல்விருத்தம்

இ-ம்-நாட்டை.

உலகத்தானும்பலவேறுயிர்
கடந்தானுமுளனுர்
அளவிலாவுயிர்கடோறும்
அங்கங்கேவுதிக்கின்றானும்

மலினிவெழியுமுள்ளி
    லெண்ணையுமட்டுங்கொள்வான்
கலகிருேம்புகழும்பத்தி
    முத்தியுமரிதானையா

வசனம்

இந்தவுலகத்தையெல்லாம் வுண்டுபண்ணி வுதில்சகலசிவராசிகளை யும் யேற்படுத்திப்பின்னும் அந்தந்த வுயிர்கடோரும் தானேயிருக்கின் றவருமாய் நீரிலும் நெருப்பிலும் பெள்ளிலும் யெண்ணையிலும் தா னே யிருக்கின்றவருமாய் இந்தவுலகத்தோாகள் புகழ்ந்துகொண்டாடு ம்படியான பத்தர்களுக்கும் பத்திமுத்தியளிக்கின்ற அரியென்னும் ஸ்ரீ மன்னாராயணன்தான் அய்யனே

இரணியன்சொல்விருத்தம்

இ-ம்-மோகனம்

செப்பமாயிந்தவார்த்தை
    திறமதாயெந்தனோடு
ஒப்பிலாப்பொருள்தவடாறும்
    வுரைப்பவனவனேயென்ருய்
மைப்பெருமிந்ததூணில்
    மாதவனென்னுள்ளன்
    இப்பொழுதிருப்பானோதா
னென்னடாவுரைசெய்வாயே

வசனம்

ஆ ஆ ஆ ஆ அடாவடாபிரகலாதனு அந்த அரியானவன்யெங்கே யிருப்பானென்றுகேட்டால் யெங்கும் நிறைந்திருப்பானென்று சொன்

ணயல்லவா அப்படி மாயாவதாரனுயிருக்கும் கள்ளன் இந்ததூணிலே யிருப்பானோ சொல்லடாபயலே

பிரகலாதனன்சொல்விருத்தம்

இ-ம்-பூரிகல்யாணி

சாணினுமுழத்தினுள்ளும்
 அணுவினிற்சதகூறிட்ட
கோணினுமுளன்மாமேரு
 குன்றினுமுளநின்ற
தூணினுமுளநிசொன்ன
சொல்லினுமுளநித்தன்மை
 காணுதுயிவடந்தோறும்
காண்பவனரிதானையா

வசனம்

வாருமையா வென்னுடைய பிதாவாகிய சுவாமியே அந்த அரியானவர் யெங்கேயிருக்கிறுரென்று கேட்டீரே சாணினு முழத்தினுந்தூணிலும் துரும்பிலும் வுள்ளிலும் பிரம்பிலும் யெங்கெங்குந்தானுயிருப்பானையாசுவாமி

இரணியன்சொல்விருத்தம்

இ-ம்-யோகனம்

உம்பற்குமெனக்குமொத்திவ்
 வுலகெங்கும்பாக்துளானைக்
கம்பத்தின்வழியேகாணக்
 காட்டுவாய்காட்டாவிட்டால்
கும்பத்தின்கரியைக்கொண்ண
 கொடியசிங்கத்தைப்போலுன்

செம்பொத்தகுரிதிதேக்கி
வுடலையுக்தின்னுவேனே

வசனம்

ஆ ஆ அடாவாடா பிரகலாதனு தேவர்களுக்கும் வுனக்கும் உலகமெங்கும் நிறைந்திருக்கின்றவனல்லவா அவனை இப்போது இந்தகம்பத்தின்பேரிலே காட்டாமல் போனுயாகில் இந்தட்சணத்தில் வுன்னைக்கொண்ணு தின்னுவேன் பாராய்பிரகலாதனு

பிரகலாதனன்சொல்விருத்தம்

இ-ம்-தோடி

யென்னுயிருன்னுல்கொல்ல
யெளியதென்றன்பியான்முன்
சொன்னவன்தொட்டதொட்ட
யிடந்தோருந்தொன்றுனுகில்
யென்னுயிர்பானேமாய்ப்பேன்
யிதமகிதங்கடந்த
அன்னவர்க்கடிமைநானு
மல்லவிரயிந்திடமோ

வசனம்

கேளும்யென்பிதாவே யென்னைக்கொல்லுகிரத்துக்கு வுன்னுலே ஆகுமோ ஆகாது ஆனுல்நீதொட்ட தொட்டயிடங்களிலே தோணுமல் கண்ணுக்குங்காணுமல் போவாரோயாமாகில் அவருக்கு நான் அடிமைஅல்லவென்று யென்னுடைய வுயிரையானே மாய்த்துக்கொள்ளுவேன் தந்தையே

பிரகலாதனன்சொல்விருத்தம்

இ-ம்-மோகனம்

உலகரட்சகனும்யியுயிர்கள்ரட்சகனும்நி
யுன்செயலலாதொன்றிலே

உந்தனற்கிருபை தானெந்தனுக்கில்லையோ
வுயிர்த்தொகையில்நானில்லையோ
மலையமலைபோனெடும்வல்வினைவளைந்தென்னை
வாட்டுதேபேயாட்டுதே
மாருதத்துன்பமும்பிடர்களும்மென்மேலும்
வருமென்றபயமாட்டுதே
கலவரமதானமனமொருநிலையினிற்கவிலை
கர்மிக்கோர்திக்குமில்லை
கைவிடலோவின்னன்பருன்னைநம்பரினிக்
கனகாம்பரமணிதரா
வலமைபெருசெங்கருடன்மீதேறிகண்காண
வல்வினையகற்றவருவாய்
மாயாவதாரனே சீதாபிராமனே
மாதவாகோவிந்தனே

பிரகலாதனன்சொல்விருத்தம்

இ-ம்-கல்யாணி

சயமானசாயுச்சியபதவியானடையவே
தொல்லுலகிலுன்னினிதமும்
துதிசெய்துமதியினுக்குறுதிமொழியிவ்வேளை
செல்லுமென்றுனைநம்பினல்
அயனாமைத்தபடிபயனாகவனுபோக
மாமென்றுமவ்வவாினை
அனுபவித்திடவேண்டுமென்றுகெதிசொல்லுமறைக்
ளலவிழ்முறையிடுவதாலே
பயமானபாவியேன் பயனென்றுமுன்மையாற்
புணித்தாதிமூலமென்றே

பாடினேன்வாடினேன்செய்வதொன்றேரிலாப்
பதிதனைக்கைவிடாதே
ஜெயகருடகேதனச்சங்குசக்ரதரா
திவ்யனையகற்பியாள்வாய்
சிதாபிராமனேமாதாபிதாவெனச்
சிந்தைகுடிகொண்டகுருவே

பொதுவிருத்தம்

இ-ம்-மத்தியமாவதி

மைந்தனிதுசொன்னவிவ்வில்கோபங்கொண்டு
மண்டுமெரிகண்சொரியவிமைகள்தீய்
செந்தழலாலடவியும்போய்கடலில்வீழ
திங்களொடுகதிரவனுந்திகைத்துவோட
சிந்துரஞ்சேர்மதக்களிற்றின்கண்கள்மூடத்
திக்கெல்லாமதிரமுடிசேடன்ருழ
சுந்தரஞ்சேர்நெடுங்கையையண்டமட்டுந்
தூக்கினன்மணித்தூணைத்தாக்கினனே

விருத்தம்

இ-ம்-பைரவி

நசைதிர்க்கிலங்கப்பொங்கி
நனமுகன்றென்னதக்கான்
விசைதிரக்குருமிவீழ்ந்த
தென்னவோதூணின்வேண்டி
இசைதிரந்தமைந்தனையன்
யேத்தினனேத்தலோடும்
திசைதிரந்தண்டந்தீரி
சிரித்ததுநெங்கண்சியம்

விருத்தம்

இ-ம்-ஆனந்தபைரவி

இடித்ததோர்சனியனென்ன
யிருள்உலிக்கண்கள்சிவி
அடித்ததூணத்துநின்று
ஆடகப்பசும்பொன்னண்டம்
வெடிப்பமால்வரைப்பணிப்ப
வெடிபடநகைத்துவெய்தின்
வடித்தபூக்துளபமாலே
வாரிபிரந்தரம்மா

வசனம்

இந்தப்பிரகாரமாக பிரகலாதன சுவாமியானவர் சொன்னமாத்திரத்திலே அண்டரொண்டமெல்லாம் அதிர்ந்துகுலுங்க ஆற்பரித்து தூணையிரணியனானவன் தன்கையினாலே அடித்தமாத்திரத்திலே அந்த தூணிலேயிருந்து அகிலாண்டகோடி பிர்ம்மாண்டநாயகராகிய ஸ்ரீமன் நாராயணமூர்த்தி நரசிம்மரூபமாக யெழுந்தருளி வருகிறவிதங்காண்க

தரு-இ-ம்-சங்கராபரணம்

ஏகதாளம்

கண்ணிகள்

அண்டரொண்டகள்குலுங்க
மண்டலயேழுங்கலங்க
விண்டலயேழும்விலங்கவே வெடித்தநகை
கொண்டுநரசிம்மம்வந்ததே (அண்ட)

அஷ்டதிக்களந்ததோரும்
தொட்டவீரதண்டைதாளும்

வெட்டுமொண்டுநகைவாளுமே வெடித்தநகை
விட்டுநரசிம்மம்வந்துதே (அண்ட)

அஷ்டகாசம்ஆர்ப்பரிப்பும்
வட்டமானகண்ணெரிப்பும்
மட்டில்லாக்கோபத்தெரிப்புமே வெடித்தநகை
விட்டுநரசிம்மம்வந்துதே (அண்ட)

வானமெங்குங்கையளாவி
தானவர்களைத்துளாவி
போனகமாய்கிளாவியே வெடித்தநகை
யாளநரசிம்மம்வந்துதே (அண்ட)

பிரகலாதனன்சொல்

தேவாரம்

நாமறுதிருருவனென்ற
நல்லறிவாளராலும்
தேடினான்முகனுமாலுக்
திருப்பாதத்தினைத்துதித்தேன்
ஆடினான்புகூர்க்கு
அறத்தினேயறத்தின்செங்கை
ஆடினான்றுதிக்கவந்த
தாயனேநின்றாள்போற்றி

தேவாரம்

அசலினையக்கருள்வாய்போற்றி
ராக்சனைவதைத்தாய்போற்றி
முகினிறத்தோனேபோற்றி
மூர்த்தியேபோற்றிராஜ
மகனைவந்தாய்போற்றி
மாயவாசெவ்வாயாபோற்றி
ஜெகமுண்டதாதாபோற்றி
தேசிகாபோற்றிபோற்றி

தேவாரம்

நாரணாபோற்றிபோற்றி
நரசிம்மரூபாபோற்றி
காரணக்குருவாய்வந்தென்
கவலைதீர்ப்பாய்போற்றி
வாரணந்தனைக்காத்த
மாதவாபோற்றிபோற்றி
சிரணிந்திரங்கிவாழும்
திருவடிசரணம்போற்றி

தேவாரம்

மாயனேபோற்றிபோற்றி
வாமனதருவாய்போற்றி
ஆயனேபோற்றிபோற்றி
யடியனுக்கருள்வாய்போற்றி
தாயனேவருவாய்போற்றி
தசரதராசனீன்ற
சேயனேபோற்றிபோற்றி
ஸ்ரீரங்கநாதாபோற்றி

பிரகலாதனன்சொல்

கொச்சகம்

கார்க்கதுவவெஞ்சினத்தால்
காக்கநெடுங்கைமலைமுன்
ஆர்க்குலவுதுயிலெழுந்து
அஞ்சலஞ்சலென்றுவந்தேன்
தார்க்கருணைவாருதியே
தண்ண[illegible]தேபருஞ்சுவையே
யார்க்கும்பார்க்கெந்தனையாள்
பரம்பரனேயெங்கோனே

பிரகலாதனன்சொல்

சூர்ணிகம்

நாராயணாசரணம்மாதவாசரணம் ஸ்ரீகுணளினதளனேத்திராசரணம் நாகசயனாசரணம் மேகவர்ணாசரணம் காகரிதுவாசாசரணம் ஸ்ரீதானசங்கு சக்ராயுதாசரணம் சனார்த்தனாசரணம் யெழில்சேர் திருமாபாசரணம் முயலருளாளாசரணம் தேவாதிதேவா சரணம் பாரெலாம்வுண்டுமிழ்வாயாசரணம் பரபிர்மரூபாசரணம் பரமசுந்தராசரணம் அமலனிமலபத்தபரிலனாசரணம் விராட்சதரிகாலாகறுபசரணம் விஜயவேதவேதாந்தனே சரணம் வேங்கடாசலரட்சகாமங்களாசரணம் ஸ்ரீநரசிம்மாசிம்மா சரணம் சரணம்

பிரகலாதனன்சொல் விருத்தம்

இ-ம்-பந்துவராளி

பொருளேசுவையேயவரசமே
புலனேபொறியெபுலனறிவா
மருளேதெளிவேவனமலையே
வளர்வேகுறைவேமயங்குகின்ற
இருளேயொளியேகதிர்மதியே
யேகமேபரமேயென்றுறையும்
அருளேயமுதேகதிபெறவே
யரங்காவடியேனைக்காப்பாயே

விருத்தம்

இ-ம்-காட்டை

இணையேதளர்வேவணங்குனர்க்கு
மிசைவேயிசேமேயெனக்குவருந்
துணையேயறிவேமறைமொழியுந்
சொல்லேபொருளேசுகமுடையா
குணமேமனமேயருளுடைய
குணநேயமுதேயனந்தனேயும

அணைமேற்றுயிலும்மணிவிளக்கே
அன்பாயடியேனைக்காப்பாயே

விருத்தம்

இ-ம்-பியாகு

உரமேபகையேயுடலுயிரோ
யூனேயுறவேயுறுதியுள்ளத்
திரமேதுதிப்போதமக்கிரங்குந்
தேவேபிறவிப்பயமறுக்கும்
பரமேகதியேயெனக்கிரங்கும்
பண்பேயிமையோர்பணியும்வினைக்
காமேயமுதேகதிபெறவே
ஐயாவடியேனைக்காப்பாயே

பொதுவிருத்தம்

இ-ம்-கேதாக்கௌளம்

பிளந்ததுதூணுமங்கே
பிறந்ததுசியபின்னர்
வளர்ந்ததுதிசைகளெட்டும்
பகிரண்டமுகிலனைத்தும்
அளந்ததப்புரத்துச்செய்கை
ஆரித்தனையவல்லார
கிளந்ததுககனமுட்டக்
கிழித்ததுகீழுமேலும்

வசனம்

வளர்ந்தபெருமையெப்படியென்றால் நுக்கிரநரசிம்ம மூர்த்தியாய்த் தூணைப்பிளந்து கொண்டு பிரம்மாண்டசோளகை முகடுருவிவளர்ந்து யெட்டுதிக்குகளையும் அடக்கிக்கொண்டு நின்றபெருமையை பிரம்மதேவனாலும் ஆதிசேடனாலுஞ் சொல்லமுடியாதையாசுவாமி

பொது விருத்தம்

இ-ம்-பைரவி

வகிற்படுத் துரிக்கும்பத்தி
வாய்களைப்பிளக்கும்வன்றோ
ஞகிற்படுத் துரிக்குஞ்செந்திக்
கண்களைத்தோன் றுஞ்சுத்தி
பகிற்படக்குடலைக்குய்யும்
பசையறப்பிசையும்பல்லால்
ஞகிற்புலக்கோரதம்மை
வுயிர்களைவுறக்குமன்றே

வசனம்

பின்னையும் நரசிம்மமூர்த்தி யெழுந்தருளியவிதம் யெப்படியென்றால் வொவ்வொருராட்சதர்களுக்கு வொவ்வொருமுகமும் இரண்டுகையுமாகி இநதப்படி ஆயிரங்கோடி வெள்ளம் ராட்சதர்களையும் சங்காரம் பண்ணிமுப்பத்து முக்கோடி தேவர்கள் நாற்பத் தெண்ணாயிரம் ரிஷிகள் சத்தசமுத்திரங்கள் அண்டரண்டபகிரண்டங்களும் நடுநடுங்கித் தத்தளிக்கும்படியாய் கோபங்கொண்டு இரணியன்மேல் சன்னதராய் திரும்புகின்றபோது பிரகலாதனசுவாமியானவர் இரணியனைப்பார்த்து சொல்லுகின்றவிதங்காண்க

பிரகலாதனன்சொல்தரு

இ-ம்-கல்யாணி தாளம்-அடசாப்பு

பல்லவி

இதுநல்லசமையமையா
தரிசனஞ்செய்ய
இதுநல்ல
சமயமையா

அதிவிதப்பரம்பொருளாகியபரவன்
உதையஞ்செய்திருக்கிறார்வுனக்காகவேயவர் (இ)

சரணங்கள்

ஆணவத்தின்மலைக்கூடு-நிச்சயமென்றால்
அதுவல்லபெருங்கேடு
வீணாமாய்லைகயில்வீழ்ந்துநீமயங்காதே
காணாதபேரின்பங்காணலாந்தியங்காதே (இ)

செய்தகுத்தமும்பொருக்கும் முன்னேசெய்த
தீவினைகளையருக்கும்
பையரவணைமீதுபள்ளிகொண்டருள்வானை
தெய்வநாயகனைத்திருவருள்புரிவோனை (இ)

அடியவர்கெளியானை பரம்பொருள்
ஆகியவொளியானை
நெடியோனைப்பணிந்தாக்கால்நிதிறம்பதியும்வரும்
வடிவானபரஞானமதியுங்கதியுந்தரும் (இ)

இரணியன்சொல் விருத்தம்

இ-ம்-தோடி

யேளிதமினைத்தாய்பிள்ளாய்
யிலங்கியதூணில்வந்த
கோளரிருபத்தானை
கொடுமையாய்க்கட்டியெந்தன்
வாளுக்குதெண்டம்பண்ண
வைப்பேனுன்பயலெயிந்த
நாளினிலவனைக்கொண்ணு
நான்பகைதீர்ப்பேன்பாராய்

வசனம்

ஆ ஆ ஆ ஆ அட ஈவாடா பிரகலாதனுயென்னை சற்றுகிலும் பாராமல் யென்னுடைய பலாபலத்தையு மறியாமலும் யென்னையேளிதமா

கச் சொல்லதந்தாயே ஆ ஆ அந்தகொளரியான சிங்கத்தையும் வுன்னை யும் கொண்ணுவெந்தன் வாளுக்குத் தெண்டம்பண்ணச்செய்து வென துதம்பியைக் கொண்ணப் பகையைம் தீர்த்துபோடுகிறேன்பாரும் மிள் ளாய்

இரணியன்சொல்தரு

இ-ம்-காட்டை-தாளம்-ரூப்கம்

பல்லவி

இரணியசூரனும்நரசிங்கசாமிமுன்
னெதிர்த்துக்கொண்டானே

அநுபல்லவி

அரணகிரணமேரு
தனைமேல்நடத்தென்ன
ஆயிரங்கதிர்கள்போலே
தூயமணிமுடியின்ன (இ)

சரணங்கள்

தண்டுமழுமேல்சூலம்வாங்கினான் வச்சிரங்
கொண்டகேடையங்கையில்தாங்கினான்
அண்டமுகடுமட்டும்போங்கினான் காது
குண்டலத்தவிழ்தோளும்வீங்கினான்
யெண்டிசைமுகடுமெண்டியதிர்ந்திட
வண்டகோளகைவிண்டுபிதிர்ந்திட
கொண்டதாரகைபிண்டுபிதிர்ந்திட
கண்டதேவர்மள்மண்டிசிதைந்திட (இ)

இடசாரிவலசாரிசுழண்டிட்டான் பொங்கும்
வடிவாணன்பாலவசுழண்டிட்டான்
படியும்பொடியாகவேவுழண்டிட்டான் பல்லில்
கடியாலுதடுத்தின்றுமுழன்யிட்டான்
கெடியபல்களும்கெடியமிலேகளும்
கெடியகடல்களும்கெடியதிடல்களும்
கெடியதிசைகளும்கெடியகதிர்களும்

நெடியகரிகளுட்கெடியதிர்ந்திட (இ)

வீரவெண்டையங்காலில்பூட்டினன் மணி
வீரவாகுவல்லையம்மாட்டினன்
வீரப்பட்டமனதில்சூட்டினன் இடையில்
வீரமணிக்கச்சுடன்கூட்டினன்
கோரதாகரிமனதுவியந்திட
சூரரெவாகளுமுறுதியங்கிட
ஆரபரிமளமாாயிலிலங்கிட
வீரவிஜையவிலாசந்துலங்கிட (இ)

பொருவிருத்தம்

இ-ம்-சங்கராபரணம்

ஆயவன்றன்னைமாயன்
அக்கியின்னவன்பொற்கோயின்
வாயலின்மிசைக்கவான்மேல்
வயிரவாளுகரின்வாணி
மீயெழுத்திருந்துபோக
வெயில்விரிவயிரமார்புத்
தீயெழுப்பினந்துநீக்கி
தேவர்கள்கடுக்கந்திர்த்தான்

பொதுவிருத்தம்

இ-ம்-பூரிகல்யாணி

வடலனாயனல்போற்பொங்கி
வந்ததோர்சிங்கந்தானும்
அடலரக்கன்றன்கையால
ளாவுயேதாவிபத்தி
மடிதனில்போட்டுக்கொண்டு
வ[illegible]மதன்னிகத்திருலே
குடலினைப்பிடுங்கிமாலை
கொண்டதுகோபத்தோடே

பொதுவிருத்தம்

இ-ம்-ஆனந்தபைரவி

அண்ணலெனுமிரணியனைச்சிங்கங்கொண்ணு
　　ஆக்ரமஞ்செய்திருக்கும்போதளவிலோங்கும்
விண்ணவரும்முனிவர்களும்யீசனோடும்
　　வேதனெனும்வாசனுமிகமகிழ்ந்து
கண்ணியநாக்குரிமோகைமுழக்கியோங்க
　　மயர்தவர்கள்கூத்தாடியாடிப்பாடி
மண்ணுலகில்பூமழைகள்பொழிந்துவாழ்த்தி
　　மாயவனார்பக்கலிலேவருகின்றாரோ

வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப் பிரகாரமாக இராஜாதிராஜனாய் விளங்கியிராநின்ற இரணியமகாராஜனை ஸ்ரீமன்னாராயண மூர்த்தியானவர் நரசிங்கரூபகங்கொண்டு அவனைக்கொண்ணு அவனுயிரைவிண்ணுலகத்திற் கேத்திமகாவுக்கிரசுரூபாய் விளங்கிய அட்டகாசஞ்செய்யுந் தருணத்தில் விண்ணுலகத்திலுள்ள சுருள் முப்பத்துமுக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிரங்கோடி ரிஷிகளும கருடகாந்தருவர்சித்தியவித்தியாதரர்களும் கின்னரர் கிம்புருடரும் பிரமன்யீசனோடுங்கூடிதுந்துமிமுழங்கவும் பூமழைபொழியவும் ஆனந்தத்தோடுங்கூத்தாடிபாடி அவரவர்கள் மனதுகளிகூர்ந்து ஸ்ரீமன்னாராயணருடைய பக்கத்தில்வருகின்றவிதங்காண்க

தேவர்கள்வருகிறதரு

இ-ம்-சங்கராப்ரணம்-தாளம் அடசாப்பு
பல்லவி

தொண்டனுக்காய்நின்ற
கொண்டல்வண்ணனைக்காண
அண்டர்தேவர்தார்

அநுபல்லவி

பண்டமறைபுகழ்கொண்டிடுமீசனும்
நண்டெனவேவெள்ளைநந்திதனிலேறியே (தொண்ட)

சரணங்கள்

இந்திரன்மாதவனும்பிர்ம்மருடன்
வெண்டிசைப்பாலகரும்
சந்திரசூரியரும் வசுககள்
சதுமறைமுனிவோரும்
அந்தரத்துந்துமிவந்துநிறைந்திட
கந்தனுந்தநிமுகனுஞ்சிறந்திட (தொ)

மூப்பத்துமுக்கோடிதேவரெல்லாம்
அற்புதமாய்கொண்டாடி
செப்பியமறைநீடி சித்தர்களெல்லாஞ்
சோர்க்குசங்கீதம்பாடி
மைப்புயல்கொண்டகோபமெப்போதணியுமென்று
ஒப்பிலாபதத்தில்தூவகற்பகமலரைக்கொண்டு (தொ)

பொதுவிருத்தம்

தோனறியவமார்வேந்தன்
தொழுதிடவருகிற்போனர்
வூனறியக்கோபச்செந்தி
வுலகெலாம்பறந்துமூட
தாண்டவிழ்களபச்சிங்கஞ்
சிறியேபார்க்கும்போது
வான்றினிலோடிநின்று
வணங்கியேபோற்றுவாரோ

வசனம்

இந்தப்பிரகாரமாக தேவர்கள்யாவரும் அருகில்வரும்போது நரசிங்கமூர்த்தி வுக்கிரசுருபமாயிருப்பதையாவர்கள் கண்டார் பின்பு அந்தநரசிங்கமூர்த்தி வந்தவர்களைப்பார்க்கயாவரும் லோடிவானத்தில்நின்றுஸ்தோத்திரஞ்செய்கின்றவிதங்காண்க

தேவர்கள்சொல் தரு

இ-ம்-ஆனந்தபைரவி-தாளம் ஆதி

பல்லவி

அரிகரிநாராயணநரசிம்மஅவதாரா

அநுபல்லவி

பரிபூரணதயாளாபரமானந்தசுரூபா

சரணங்கள்

ஆதிமுடிவுமில்லோனே
சோதியாகியநல்லோனே
பாதகந்தீர்க்கவல்லோனே
தாதவிழ்பூங்கையில்லோனே (அரி)

பைந்துளபமாலையானே
சுந்தரப்பொன்சோலையானே
உந்துதிரைவேலையானே
செந்திருசோலீலையானே (அரி)

நரகரியுருவம்பூண்டாய்
இரணியனுடலைக்கீன்றாய்
கருணைதந்தெம்மையாண்டாய்
சரண்மிகுந்தகோபம்வேண்டாம் (அரி)

பிரமன்சொல் கொச்சகம்

தன்னைப்படைப்பதுவுந்
தானேயெனுந்தன்மை
பின்னைப்படைப்பதுவே
காட்டும்பெரும்பெருமை
உன்னைப்படைத்தாய்
நீயொன்றுமுயிர்ப்பான
என்னைப்படைத்ததற்
பின்னிருபீற்காளாயே

பிரமன்சொல் கொச்சகம்

பல்லாயிரங்கோடியண்டம்பணிக்கடவுள்
இல்லாதமொக்குளினிதோன் றுமானின் னுழையே
யெல்லா வுருமாய்நின்றக்காலிவ்வுருவம்
வல்லேபடைத்தால்வரம்புண்மைவா ற்றதோ

பிரமனசொல்

கொச்சகம்

பேரையொருபொருட்கே பலவகையார்போதத்தோன் றும்
தாரநின்னமதமியோர்பிரரில்லை
யாரைப்படைக்கின் றதாரையளிக்கின் ற
தாரையழிக்கின் றதையாவறியேனே

பிரமன்சொல்

கொச்சகம்

நின் னுள்ளேயென்னை
யிருத்தாய்நியல்லால்
தென் னுள்ளேயப்பொருளு
யெங்குமாய்நின் றனே
பின் னுவேன் முன் னிவென்
யெந்தைபெருமானே
பொன் னுளேதென்பியதோர்
போற்கலனைபொல்கின்றே

பொது விருத்தம்

இ-ம-காட்டை

மறையவன் றுதித்துங்கோப
மாறுதசெயலைநோக்கி
ஞாகம் கமலமேவும்
நாயகிதன்னைப்பார்த்து
பொறையிலாவண்ணங்கோபம்
போக்குவாயென் றுசொல்ல

இறையவன்மார்பில்வாழும்
யிலட்சுமிவருகின்றாளே

வசனம்

இப்படியாகபிர்ம்மதேவனானவர் தூரத்திலே நின்றுவெகுவாகத் தோத்திரஞ்செய்தும் சுவாமியின் கோபம் ஆறாதபடியினாலே பிரம்மதேவன் லட்சுமியைப்பார்த்து நரசிம்மரூபமான ஆண்டவருடைய கோபத்தை நீயே ஆத்தவேணுந்தாயேயென்று மிகுந்த வுபசாரவார்த்தையைச்சொன்னமாத்திரத்தில் லட்சுமிவருகிற விதங்காண்க

இலட்சுமிதேவிவருகிற தரு

இ-ம்-மோகனம்-தாளம்-ஆதி

பல்லவி

பங்கயமலர்மாதுவந்தாள் நரஹரிமுன்
மங்கயமலர்மாதுவந்தாள்

அநுபல்லவி

கொங்காருமலர்சென்றுசெங்கைமீதிலேகொண்டு
குங்குமகளபவிதங்கள்மணக்கமிழ்
கொங்கையிலங்கியமங்களசுபகர (பங்க)

சரணங்கள்

சகலலோகமும்பெத்ததாயார் முகுந்தன்மனைத்
தாமன்மோர்பினின்வாழும்நேயாள்
சகலபரிபூரணசதுரிநித்தியகல்யாணி
சதுமறைபரவியபதயுகளநிமலி
நிதமெனையருளியபதிவிரதனவிமலி (பங்க)

துரியாதீதத்தில்வாழுஞ்சோதிதாமரைவீடு
தொன்றுஞ்சுந்தரமான ஆதி
பிரியமலென்னோனாளுஞ்சாதகமாகவேயாக
பெருகியவருள்மொழிதரவருமலர்விழி
நிறைமனோகாதல்சுரபிகுருகுமிழ்மொழி (பங்க)

வேதப்பொருளாகியசெல்விநான்முகனுக்கும்
வெண்டும்பொருளுந்தருங்கல்வி
காதவிக்துவுமானவேதிபரமஞான
நாயகிவனமயில்சாயகிமதுரித
வாயகியடியார்கள்தாயகியாகிய

இலட்சுமிசொல்விருத்தம்

இ-ம்-மத்தியமாவதி

உலகெலாலம்படைத்துநின்ற
வுயர்சதுமுகனேகேளாய்
நிலையுள்ளமுனிவர்வானோர்
நிறைந்திடுஞ்சபையிலுப்போ
அலகிலாவண்டபிண்டந்
தப்பரங்கடந்தவண்ணல்
இலகியகோபமாற்ற
யெந்தனலாகாதையா

வசனம்

வாருமப்பா பிர்மதேவனே இந்தஅண்டாண்டசராசரங்களையும் விழுங்கும்படியான விஸ்வரூபங்கொண்ட அந்தஸ்ரீமன்நாராயணருடைய கோபத்தைதணிக்க இப்போது யென்னால் ஆகாதப்பாபிர்மதேவனே

பிர்மதேவன்சொல்விருத்தம்

இ-ம்-முகாரி

இலக்குமிதானும்பார்த்து
யெந்தனலாகாதென்று
கலக்கமேகொண்டுஅந்த
கமலையுமஞ்சிநின்றாள்
புலக்குறியுன்னாலல்லோ
புகுந்ததுபிரகலாதா

அலக்களிக்கோபமாக
அனுக்ரகஞ்செய்குவாயே

வசனம்

கேளுமப்பா பிரகலாதனே யிப்போது லட்சுமிதேவியாகிய தாயார் சொன்னதுயென்னவென்றால் அந்த ஸ்ரீமன்னாராயணருடைய கோவத்தை ஆற்றுகிறதற்குயென்றால் யெவ்வளவு முடியாதென்றுசொல்லிவிட்டாள் ஆகையால் இப்போது அந்த அகிலாண்டகோடி பிரமாண்டநாயகருக்கு கோவம் வுன்னைபத்திவந்தபடியினால் அகோரகோவத்தை நீதான் யெப்படியாவது ஆற்றவேணுமப்பா பிரகலாதனே

பிரகலாதனன்சொல்

கொச்சகம்

அரியும்அரியும்போற்ற
அடர்ந்தெழுந்தகண்ணனே
அரியுருவம்பூண்டாத
அச்சுதனேமாதவனே
அரியுருவமாகவந்து
ஆண்டருளும்புண்ணியனே
அரிசச்சிதானந்தா
அற்புதனேயெங்கோனே

பிரகலாதனன்சொல்

தேவாரம்

ஊரும்நீபேரும்நீ
யெம்முறைவுநீயறிவுநீயிப்
பாருநீயுயிர்கட்கெல்லாம்
படியளப்பவனும்நீயே
தேருனதருளாலுந்தன்
திருவருளளித்தாட்கொள்ளும்
ஆருமற்றேறர்க்குநீயே
வுரங்கமாநகருள்ளசனே

பிரகலாதனன்சொல்

தேவாரம்

இத்தலந்தன்னி
சன்மமெடுத்தெடுத்தலுத்தேயாமல்
நித்தமுமுந்தன்
பாதமிணைவிளுற்போற்றிசெய்தேன்
சித்தமதிரங்கியுந்தன்
திருவருளளித்தாட்கொள்ளும்
அத்தனேயென்னைக்காப்பா
யரங்கமாககருள்ளானே

பிரகலாதனன்சொல்

தேவாரம்

வஞ்சனையானகூது
மாயையும்பிறவிநோயும்
எஞ்சியவெனைத்தொடாம
லிணைமலர்பதம்பணிந்தேன்
செஞ்சிலைவளைத்தாராமா
திருவருளளித்தாட்கொள்ளும்
அஞ்சினேனென்னைக்காப்பா
யரங்கவாககருள்ளானே

பிரகலாதனன்சொல்

கலித்துறை

இ-ம்-பைரவி

விண்டலம்பூமியும்வேதனும்
வேந்தனும்விண்ணவருஞ்
சஞ்சனுங்கண்டுமனக்
தளர்காலையிற்சஞ்சிவியைக்
கொண்டனுமான்வந்துயிர்தரக்கோ
குல்கூத்தினைக்கண்

கண்டருள்விண்டவனே
யெனைக்காத்தருள்கார்வண்ணனே

பிரகலாதனன்சொல்

கலித்துறை-இ-ம்தோடி

பொய்மாய்கையாகப்
புரிந்திடுமிந்திரசித்தனும்
[illegible]
செத்தழல்வானிளிடுத்தகிகங்
கொய்வாயெனத்தப்பிமே
லன்புகொண்டழிழ்கோலமலர்க்
கைவாளியீந்தவனே
யென்னைக்காத்தருள்கார்வண்ணனே

பிரகலாதனன்சொல்

கலித்துறை-இ-க்-தேசிகதோடி

இனிதானசிதைசிறை
நீக்கியண்டரிடர்போக்கியேற்
றனியாமிலங்கைவிபீஷணற்
காகித்தருக்கோடிசென்
றுனிதாமுகிலனைங்கண்டு
ஜயஞ்சொல்லியுமபர்மகிழ்
கனியாமூதுண்டவனே
யெனைக்காத்தருள்கார்வண்ணனே

பிரகலாதனன்சொல்விருத்தம்

இ-௫-பத்துவராளி

துன்பப்பிறவிக்கடலதனைத்
தொலைத்தேனிந்திக்கணையேயி
இன்பப்பெருக்கானந்தவெள்ள
வெளியேனருந்தற்கிரவுபகல்
தென்புற்றுன்றன்றிருநாமத்
தினைவேத்தித்தேன்பெற்றிமொய்கல்

அன்பற்கருமே கதிபெறவே
அரங்காவடியேற்கிரங்காயே

பிரகலாதனன் சொல்விருத்தம்

இ-ம்-மத்தியமாவதி

பழுகேன்கிரியாரிணக்கபதைப்
பாவந்தருமின்ருர்தீனக்கண்
டிழுகேனென்றனிருதயத்தி
லெளியேனின்னைப்பிடித்தபிடி
கழுகேன்வழுகேன்கிருபைசெய்வாய்
நாராயணனேனனமாலே
அழுகேபுகழுங்கதிபெறவே
அரங்காவடியேற்கிரங்காயே

பிரகலாதனன்சொல்தரு

இ-ம்-பியாகு-தாளம்-ரூபகம்

பல்லவி

அரிஅரிசச்சுதானந்தா
அரிஅரிஇஜியானந்தா

அநுபல்லவி

அரிஅரிபூரணா அரிஅரிகாரணா
அரிஅரிஆரணா அரிஅரிநாரணா

சரணங்கள்

அரிஅரிசத்துவகுணா அரிஅரிதத்துவகுணா
அரிஅரிமாதவா அரிஅரியாதவா
அரிஅரிகேசவா அரிஅரிவாசவா (அரி)

அரிஅரிதற்பரானந்தா அரிஅரிசிற்பரானந்தா
அரிஅரிஅச்சுதா அரிஅரிவுசுதா
அரிஅரிசத்தியா அரிஅரிநித்தியா (அரி)

அரிஅரிஅமலானந்தா அரிஅரிவிமலானந்தா
அரிஅரிசற்குணா அரிஅரிநிற்குணா
அரிஅரிஅற்புதா அரிஅரிதற்பதா (அரி)

பிரகலாதனன்சொல்

பரணி-இ-ம்-பந்துவராளி

திருசேர்ந்திலங்குமணிமார்பா
தேவர்க்கிடர்தீர்த்தருள்தீபா
மருவாவொளிசேர்துளபணிந்த
மாயாவெனைக்காரரிகரியே
அரிமாதவனே அச்சுதனே
யன்பர்மனத்திலுச்சிதனே
வரிசேர்கண்ணிப்பங்காநீ
வந்தேயெனைக்காரரிகரியே

பிரகலாதனன்சொல் பரணி

இ-ம்-சோகவராளி

சுருதியறியாபழம்பொருளே
துரியாதிதத்தெழுஞ்சுடரே
கரியாமாலேகேசவனே
கமலக்கண்ணாஅரிகரியே

பரணி

என்னுளந்தன்பதம்போற்றி
இரங்கித்துதித்துதினம்வாழ்த்தி
பன்னவறியாமிகுகொடிய
பாவியெனையாளரிகரியே

பரணி

வோராயுள்ளாய்கீழ்மேலாய்
மெய்யற்குகந்தஜெகச்சாலா
தோராதெழுந்தபரந்தாமா
தாயாவனெக்காரரிகரியே

பரணி

சூனாயாருதச்சுழலில்
சுழன்றுசருகைப்போதுமுன்று
வீராகையிற்சிக்கவென்னை
மேன்மைச்செய்த அரிஅரியே

பரணி

காட்டுமுள்மேல்மலைகெவியில்
கானாடக்தசூழ்புவியில்
உருட்டமனதுமெலியாமல்
யிருக்கச்செய்தாயரிகரியே

நரசிம்மச்சொல் விருத்தம்

இ-ட்-கல்யாணி

அஞ்சலென்றெறுந்தயென்னை
அகங்குழைந்துருகிவாடி
கஞ்சஞன்மலர்கைகொ
லென்கழலிணைபுல்கிக்கொண்டு
வெஞ்சினமெல்லாம்போக்கும
விற்குணப்பிரகலாத
மஞ்சனேநினைத்துக்கேட்ட
வரமெலாந்தருகுவேனே

வசனம்

வாருமப்பாபிரகலாதனே இப்பொழுது நம்முடைய திருவடிக்குமல ர்களினாலே அற்சனை செய்து தோத்ரம்மிகுந்த வுருக்கமாய்செய்து நம் முடையகோவத்தை ஆற்றியபடியால் இப்போது வுனக்குயென்ன வரம் வேண்டும் அதனையெனக்கு சொல்லுமப்பாய்குழந்தாய்

பிரகலாதனன்சொல்

சொச்சகம்

மையமுகமும்வானகமும்
மைத்துமுள்ளபேருலகும்
மூய்யவெடுத்துண்டுமிழ்ந்த
உத்தமனேநித்தியனே
கைதன்னிரசங்காழிகார்முகம்
வான்தண்டுகொண்ட
அய்யநாசிம்மா
அற்புதனேயெங்கோனே

பிரகலாதனன்சொல்தரு

இ-ம்-ஜம்பை

ஐயையநரசிம்மா ஐயையநரசிம்மா
பையரவமீதுவளர்பரமநரசிம்மா
மாய்கையெனும்பெருங்குழியி
லழுந்துங்கருவியைப்போல்
மயங்கியேதியங்கவும்வசமோநரசிம்மா
பேயனென்சொன்னமொழிபிசகாமலே நானும்
மீளச்செழுந்துவந்தருளும்பெரியநரசிம்மா

வெம்பிறவிக்கடல்தனில்வினையென்னுஞ்சுழியில்
விழுந்தரும்பெனசுழலவிதியோநரசிம்மா
கம்பத்தினிலேயெழுந்துகசடனொருபொருட்டாக
கருணைதரவந்தருளுங்கடியநரசிம்மா
பொல்லாதகொடும்பாவிக்காட்டிலேபுகுந்துயென்னை
வல்லரவர்செயுங்கொடுமைபோதும்நரசிம்மா
யெல்லாருங்காணயிந்தபுல்லனையோர்பொருட்டாக
இருந்தூணிலெழுந்தருளும்பிளையவாநரசிம்மா
காட்டானையுண்டவிளாங்கனிபோலவேயானும்
கசடாலலைப்புண்டுகழிந்தனநரசிம்மா
கொட்டாலத்துளிர்மீதுகுறைகடலின்மீதெழுந்து
குழந்தைபோல்தவிழ்ந்தருளுங்கோரநரசிம்மா

பிரகலாதனண்சொல்விருத்தம்

இ-ம்-கல்யாணி

காட்சியாய்நின்றுபயகமலப்பதந்தனைக்
காணும்வகைதேடும்வழியும்
காணுமனக்குறையினுற்கவலைகொண்டயர்வு
கண்டுநின்றேமாறியும்
வீட்சணகடாட்சமுடமெய்யனபருக்கடிமை
வேலைசெயவேசாறியுப
வீணனமாயமோகத்தினுல்வாணுள்
விடுப்பதோமெய்காட்சியே
தாட்சியாய்கோடிபிழைசெய்தாலுமெள்ளளவு
தாட்சணியமென்பதிலையோ
சர்வஜனரட்சகதயாளுநியில்லையோ
தற்காக்கநல்லசமயம்

மாட்சிபெறவாச்சுதென்றேகருடன்மீதேறி
வல்வினையகற்றவருவாய்
மாயாவதாரனேசிதாபிராமனே
மாதவாகோவிந்தனே

பிரகலாதனன்சொல்விருத்தம்

இ-ம்-கௌளிபந்து

மைப்புயல்வண்ணாபோற்றி
மரகதமணியேபோற்றி
செப்புதற்கரியநரசிம்ம
சொரூபாபோற்றி
இப்புவிதனிலெதாதை
யெண்ணாமலுமக்குச்செய்த
தப்பிதம்பொருத்துவுந்தன்
தனிப்பாதந்தருகுவாயே

வசனம்

அரிஅரிநாராயணா அச்சுதானந்தாமுகுந்தா பதுமநாபா ஜனார்த்தனா கோவிந்தா நிலமேகசுரூபாமாதவா பக்தவச்சலா முராஅரிஆபத்பாந்தவா தினதயாளா பரமபுருஷா அடியேனுடைய பிதாவாகிய இரணியமகாராஜன் தங்கள் திருவடிக்கு அறிந்தும் அறியாமையுந்தெரிந்தும் தெரியாமையும்பார்த்தும் பாராமலும் ஆருகுற்றம் நாறுபிழைகள் செய்திருப்பதை இப்போது தேவரீர்கொண்டு மனம்பொருந்து அடியேங்களுக்குச் செவ்வையான தங்கள் திருவடித்தாமரையின்கீழ் வீற்றிருக்கும் கிருபை யருளவேண்டுமையா சுவாமி

நரசிம்மம்சொல்விருத்தம்

இ-ம்-ஆனந்தபைரவி

தப்பெலாம்பொருப்பாயென்ற
தனையனேசொல்லக்கேளாய்

செப்பமாங்கொடியோன்செய்த
செய்கையாலவனுக்கிப்போ
அப்பனேநீபிறந்ததாகை
யாலிருபத்தொன்று
ஒப்பிலாகுலத்துளளோரு
முயர்ந்தவீடெய்துவாரோ

வசனம்

கேளாய் பிரகலாதனு நீபிறந்தபடியினாலே வுன்குலத்தோர் இரு பத்தொருதலமுறைவரைக்கும் நல்லகதியடைவார்கள் ஆகையால் வுன்னு டையபிதாவுக்கு இனிமேல் வொருகுறைவுமில்லை யப்பாபிரகலாதனு

நரசிம்மம்சொல்விருத்தம்

இ-ம்-ராட்டை

இன்னமுங்கேளாய்மைந்தா
யிருநூத்தெண்பத்துநான்கு
துன்னியயுகங்களிந்த
தொல்லுலகெல்லாங்கீர்த்தி
மன்னவனாகிநீயே
வாழ்ந்துபின்னெனதுபாதந்
தன்னையேயுமக்குநாமுந்
தருவதுதிண்ணமாமே

வசனம்

கேளும்பிள்ளாய் பிரகலாதனு யிருநூத்தெண்பத்து நாலுயுகம்வ ரைக்கும் யிந்தபூமியில் ராஜரீகஞ்செய்துபோகபோக்கியசவுக்கியங்களை

அடைந்துகிர்த்திப்பிரதாபமாயிருந்து அப்பால் நம்முடையதிருவடியை தெரிசனம்பண்ணக் கடவாயப்பா பிரகலாதனே

நரசிம்மசொல்தரு

இ-ம்-பைரவி-தாளம்-ஆதி

பல்லவி

வைடம்தாயித்தாவேணடியவரமெலலாந்
தந்தேன்பிரகலாதா

அநுபல்லவி

வந்தேதிருவடிகொண்டாய்
தலைமீதே
சிந்தாகுலமினியுண்டோ
வுனக்கிப்போதே (வைட)

சரணங்கள்

இருநிலப்பாப்பெல்லா
மொருகுடையேற்றியே
யொருசதுர்யுகமெட்டுங்
காத்து
அருமறைமுனிவர்க்கு
வருந்துன்பந்தீர்த்து
அவர்களோநானென்றே
செவ்வையுடன்போற்று (வைட)

இந்தகுலமனைவந்தன
நாலேயிருபத்தோரா

குலத்தோரெலரு
மென்மேலே
வந்துபடாமடைந்தாரோ
யொருக்காலே
வாழுநான்றந்தைக்கித்
தாழ்வுண்டோயினிமேலே (மைக்)

கொல்லெனின்குலத்துள்ளோ
ரெல்லோருமெத்த
குறைகள்செய்தாலு
மடியார்கள்மேலேமுந்த
நல்லைசொன்னேனமக்
கிதிமேலித்த
நானிலத்திலுண்டோ
மானவனீயேசொந்த (மைக்)

பொதுவிருத்தம்

சங்கராபரணம

இப்படிமாயவன்கூறிவரங்களீய்ந்து
இருக்கும்போதண்ணல்மினந்திர்ந்தானென்றே
மைப்படியுறூங்குழலாயென்னையாண்ட
வனசமலர்திருமாதுமருங்குவந்தாள்
செப்பரியதிசைமுகனுந்தேவர்கள்தோணுஞ்
சித்தர்களும்பத்தர்களுஞ்சேர்ந்துவந்தே
அப்பனையென்றவர்கள்வணங்கிப்போற்ற
அகமகிழ்ந்துகடைக்கண்ணோக்கருளினாரோ

வசனம்

அகோதெப்படி யென்றால் பிரகலாதனுக்கு ஸ்ரீமன் னாரா
ர்த்தியானவர் அனேமவரங்களைக்கொடுத்து சந்தோஷகரம

பிருக்குஞ்சமயத்தில் இலட்சுமி தேவியானவள் சுவாமியின் பக்கத்தில் வந்தபோது சுவாமியானவர் அந்தமகா லட்சுமியைப் பக்கத்திலழைத்துதன்னுடைய துடையின்பேரில் வைத்துக்கொள்ளவே அப்போது பிரமதேவனும் தேவேந்திரனும் சுருள் முப்பத்துமுக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிரங் கோடி ரிஷிகளும் கின்னர் கிம்புருடர் நாரதர் தும்புருவர் முதலானபேர்களும்பார்த்து மகாசந்தோஷமா யிலட்சுமிதேவியென் நரசிம்ம அவதாரமாய யெழுந்தருளியிருக்கின்ற தாயெல்லோரும் வந்து யெதிர்நின்று சரணஞ்சரணம் பிரவற்கோநாராயணா முகுந்தா யாதவா கேசவா தீனதயாளா பக்தவச்சலா பரமபுருஷா ஜனார்த்தனா இலட்சுமி சமேதாவென்று யாவரும் தோத்திரஞ்செய்த மாத்திரத்திலே அப்பொழுது ஸ்ரீமந்நாராயணருக்கு மிகவும் ஆனந்தசந்தோஷமாய் சகலதேவர்களுக்கும் கிருபாகடாட்சம் மென்மேலும் அருளினா பிறகு பிரகலாதனைப்பார்த்து சொல்லுகின்ற விதம்யெப்படியென்றால்

பொதுவிருத்தம்

இ-ம்-கல்யாணி

ஐயனேபிரகலாதா
அருளுமுன் றந்தைக்கேற்கச்
செய்கடனமர்ந்துசெய்யுஞ்
சுரப்புனிசெய்யென்றேவ
பொய்யிலாமைந்தனானும்
புருதனைருளும்வண்மை
செய்கடன்முடித்தான்மாயன்
திசைமுகர்க்கருளினாரே

வசனம்

வாருமப்பா பிரகலாதனே யிப்போது வுன்னுடைய தகப்பனுக்கு [illegible] யெல்லாஞ்செய்துவாருமென்று அனுப்பவே [illegible] வார்த்தையை சிரமேற்கொண்டு அப்ப [illegible] மகாதிவ்வியமாகிய ஒருவிமானத்தி [illegible] கொண்டு சங்குகள் தவுண்டைமல்லாரி தேவதுந் [illegible] முழக்கவும் மயானக்கிறகைகள் மத்துமுண்டான சடங்குகளெல்லா நடத்திக்கொண்டு பிரகலாதனன் மருபடியும் இலட்சுமி தேவியையும் நரசிம்மமூர்த்தியையும் வந்துகண்டு இருகரங்களையுங்கூப்பி சிரசின்மேல்வைத்து அஞ்சலி அஸ்தராய்நின்று தெண்டஞ்செய்து பிரார்த்திக்கும்போது சுவாமியானவர பிரமதேவனைப் பார்த்து அனுக்கிரகஞ்செய்கின்றார்

பொதுவிருத்தம்

இ-ம்-பூரிகல்யாணி

நம்முடையதொண்டன்
பிரகலாதனனுக்கு
கதிர்முடிசூட்டுகென்று
நயந்துகூறிச்
செம்மைமலரானுடனே
தேவதேவன்
திருத்தியதன்னுலகத்திற்
சென்றனப்பால்
இம்மையினுமறுமையினு
மென்பிரகலாதன்

பிமையவர்கள்மலர்மாரி
　பொழிந்துபோற்றி
நம்மையெல்லாம் புரந்தருளும்
　நம்பிச்செங்கோல்
நாட்டினான்வேதன்முடி
　சூட்டினானே

வசனம்

சுவாமியானவர் தன்றொண்டனாகிய பிரகலாதனுக்கு முடிசூட்டும்படியாகச் சொல்லிவிட்டு இலட்சுமி தேவியுடன்கூடி தன்ஸ்தானத்துக்குப்போயினார் பிற்பாடு பிர்மதேவனானவர் சுவாமியின்கட்டளைப்படிக்கி சகலதேவர்களும் போற்றவும் புஷ்பமாரிபெய்யவும் தேவதுந்துமிமுழங்கவும் பிரகலாதனுக்கு மகுடஞ்சூட்டி கையிற் செங்கோல் கொடுத்து பெருமைசெய்கின்ற விதம்யெப்படியென்றால்

பொதுவெண்பா

என்றுவரமருளியெவ்வுலகங்கைகூப்ப
முன்றின்முரசுமுழங்கிமுடிசூட்டி-பின்ற
வமரானவோரும்நேர்ந்திவனுக்கென்று
பெருமையொருமைப்புரிகின்றான்
பிரகலாதனுக்குதேவர் முடிசூட்டுகின்றதரு

இ-ம்-புன்னாகவராளி

பல்லவி

திருமுடிகொண்டானே
பிரகலாதன்
திருமுடிகொண்டானே

அநுபல்லவி

பெரியோர்க்கும்பேர்வைக்கும்

அரியிணை தனில்மெய்க்கும் (இரு)

சரணங்கள்

அந்தணர்முனிவோர்கள்போகவிவேகியர்

அயிய வேதவேதியர்வரியனுன் மறைபாட

இந்திரனமரர்கள்மந்தாமலர்தூவ

வெங்கையுமூர்வசிமான் விழியரம்பைய

ரெழில்நடமாட வித்தியாதரர்

மொழியிசைப்பாட நாற்றிசையுள்ள

சிந்துவுங்கங்கையுமூலசரணபதியுஞ்

செழ்வியதலத்திலுள்ள திவ்யதீர்த்தமுமென்று

இந்தமுகம்பிரந்துவந்துமெட்சகர்காதா

மெந்தன்முலைமாதர்காந்திமணித்தீபங்க

ளேந்தியேவரவே நாரதாவீணை

தோந்திசைதாவேமண்டலமுள்ள

மெய்தெந்தேசமும் அந்தந்தாசரும்

எந்தமிடந்தோரும்வந்துகைகுவிக்கவே (இருமு)

அங்காரகாசியபன்கௌசிகன்கௌதமன்

அகஸ்தியன்புலஸ்தியன்வசிஷ்டனத்திரியுடன்

மங்களபூரண கலசங்களேந்தியே

வெங்குமாசிர்வாதம்மெங்கும்வாய்மையுடன்

வந்தவர்மொழிக்க மந்திரிமார்கள்

பக்தியாயிருக்கராக்கவமுனி
புங்கவன்வளத்திடுபேரிகையும்ஒருசெய்யும்
பொழிந்த அக்கினிவளர்ந்தழைக்துமேலெழும்பலும்
நங்கையாளரவமங்கையாகவேவரு
நாதங்களுடனேசங்கீதங்கள்பாடியும்
நாட்டியமிடவே யெவ்வுலகொரு
கூட்டங்களிடவே வுலகமுழு
நல்லவருள்பெருவெல்லார்ஜெயமென்று
சொல்லும்கட்டியவோசையெல்லையிட்டுமுலவு (இருமு)
வாசவனுடன் அஷ்டபாலரும்வசுக்களும்
வந்தவரவரவர்தன் திசையிருக்க
வீசியேகதிரோனும்மதியோனுமிருபாலும்
விளங்குங்குண்டலம்போல்வளங்கொண்டிருக்க
மதிவெண்குடை மேல்கவரிவீசும்
மங்கையர்தாவவிராசலில்
மீசுரமாமுடைவான்கரந்தாங்கள்
மேளமுந்தாளமெக்காளமுமோங்கவும்
காசினிவளம்பமும்நவமணியாரமும்
கற்பகமாலையும்பொற்புயமீதிலே
டவுளாபூட்ட சந்திரபன்னீர்
அடவுடனுட்ட வுறன்பகிழக்
ாதவுடனேசெம்பூதமளர்ந்தபொற்

பாதமிருந்தசிறமீதுவேதனுர்வைக்கும் (இருமு)

பொதுவிருத்தம்

இ-ம்-கல்யாணி

திருவடிபணிந்துசெல்வன்
செங்கண்மாயவனைப்போற்றி
ஒருகுடைநிழலிலெல்லா
முலகமும்பிறந்துகீர்த்தி
தருவபிரோசனென்னுந்
தனயனைப்போற்றேமின்பம்.
பெருகிளேமகிட்சிகூர்ந்து
பிரபலமாயிருக்கின்றனே

வாழிவிருத்தம்

இ-ம்-தேசிகதோடி

அந்தணர்முனிவர்வாழி
அரசர்செங்கோலும்வாழி
சிந்தையில்லகியமார்கள்
னின்றிதிப்பெருகிவாழு
செத்திருவளருஞ்செல்வஞ்
செழுங்குடியோாகள்வாழி
இந்தமானிலத்துள்ளோர்கள்
யெவர்களும்வாழிதானே

வாழிவிருத்தம்

இ-ட்-ஆனந்தபைரவி

சக்கரமேந்துமண்ணல்

தகுந்தொண்டுநெறியும்வாழி

முக்கியமாகத்திங்கள்

மும்மழைப்பொழிக்குவாழி

இக்கதைப்படிப்போர்வாழி

யெழிலுடன்கேழ்ப்போர்வாழி

மிக்கவேடிப்போர்வாழி

பேதினிவாழிதானே

மங்களம் மங்களம்

பிரகலாதனானுக்குமங்களம்

இ ர ணி ய நா ட க ம்

முற்றிற்று